'பதிவுகள்' 27 கட்டுரைகள்

(தொகுதி இரண்டு)

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்"

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதைத்தாரக மந்திரத்துடன், எழுத்தாளர் வ.ந.கிரிதரனை ஆசிரியராகக்கொண்டு மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெளியாகும் இணைய இதழ் 'பதிவுகள்' (பதிவுகள்.காம்). 'பதிவுகள்' இணைய இதழில் வெளியான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மின்னூற் தொகுப்புகளாக வெளியாகும். இது அவ்வகையில் வெளியாகும் இரண்டாவது கட்டுரைத்தொகுப்பு..

'பதிவுகள்.காம்' வெளியீடு!

அக்டோபர் 2020

பதிவுகள் © 2020

உள்ளே..

1.மூத்த எழுத்தாளர் நகுலன் மறைவு! நகுலனின் நினைவில்! - வெங்கட் சாமிநாதன் -
2. கு. அழகிரிசாமி! - வெங்கட் சாமிநாதன் -
3. யூமா வாசுகி முதல் சு.சமுத்திரம் வரை! - வெங்கட் சாமிநாதன் -
4. பூமியிலிருந்து தள்ளிவிடுவது! - அ.முத்துலிங்கம் -
5. தமிழ் நாட்டுக் கலைகளின் சீர்மையும் சீரழிவும் - இன்றைய சித்திரம்! - வெங்கட் சாமிநாதன் -
6. நூல அறிமுகம்! ஆலவாய் - சரித்திரத்தின் ஊடே ஒரு நெடும் பயணம் - வெங்கட் சாமிநாதன் -
7. டானியல் நினைவலைகள்...! - - வி. ரி. இளங்கோவன் -
8. நீர்வை பொன்னையன்: எண்பது வயதிலும் மனிதநேய எழுத்துப் பணி துறக்காதவர் சாகித்தியப் பரிசு கிடைக்காத சிறந்த மூத்த படைப்பாளி எம்கே.முருகானந்தன்
10. பெப்ருவரி 10 பிரெக்ட் நினைவு தினம்! பேற்றோலட் பிரெக்ட் நினைவுகளில்... - சந்துஸ் -
11. குவாண்ட புளுகுகள்! --ரோஸாவசந்த்_
12. தமிழ் சூழலுக்குள் ஆய்வு முறைமைகளும் கருத்துக்கட்டுமானமும்! -ப.வி.ஸ்ரீரங்கன் -
13. பெண் ஏன் அடக்கப் பட்டாள்..? ஏன் ஒடுக்கப் பட்டாள்..? - சந்திரவதனா செல்வகுமாரன்
14. கே.டானியலின் 'பஞ்சமர்' பற்றியதொரு பார்வை. - கே.எஸ்.சிவகுமாரன் -
15. தமிழ் இலக்கியப் புனைவுகளும் வர்க்கக்கோடுகளும் க. சண்முகம்
16. பாவம் செய்தவர்கள் ·பர்ஸ்ட் க்ளாஸ¤க்குப் போவார்கள்! - பா.ராகவன் -
17.(ஆல)காலச்சுவடா? - எம் வேதசகாயகுமார் -
18. ஒரு புளிய மரத்தின் கதை - ஒரு காலங்கடந்த பார்வை - ஸ்ரீதரன் -।
19. "ஜே. ஜே.: சில குறிப்புகள்": சிறு குறிப்புகள்! - ரமணிதரன் -
20. கனவுகளுடனும் கற்பனைகளுடனும் காற்றோடு கரைந்த படைப்பாளி! புலோலியூர் க. சதாசிவம்! - (பிறப்பு: 20.3.1942 ல் மறைவு:14.09.2004) - எம்.கே.முருகானந்தன் -
21. குந்தவை என்ற எழுத்தாளர் - இரா.முருகன் -
22. கவிஞர் அறிவுமதியுடன் ஒரு பேட்டி...... புதியமாதவி, மும்பை.
23. பாரதியின் பிரபஞ்சம் பற்றிய நோக்கு. -வ.ந.கிரிதரன்-
24. பாரதி ஒரு மார்க்ஸியவாதியா? - வ.ந.கிரிதரன் -
25. உலகப் பயங்கரவாதப் பூச்சாண்டியும் வர்க்கப்போரும்--மூன்றாவது உலகப்போராய் நடைபெறும் மூலதனக்காப்பு யுத்தம்! -ப.வி.ஸ்ரீரங்கன் -
26. ஹெரால்ட் பின்ட்டரின் அமெரிக்கக் கால்பந்து : தொகுப்பும் மொழியாக்கமும் ரா.பாலகிருஷ்ணன் மற்றும் யமுனா ராஜேந்திரன்! - யமுனா ராஜேந்திரன் -

1. மூத்த எழுத்தாளர் நகுலன் மறைவு! நகுலனின் நினைவில்! - வெங்கட் சாமிநாதன் -

நகுலன் மறைந்துவிட்டார் என்று எனக்குத் தகவல் வந்தது செல் தொலைபேசியில் குறுஞ்செய்தியாக. அனுப்பிய உபகாரி யார் என்று தெரியாது. பின் ஒரு கவிஞர், திலகபாமாவிடமிருந்து செய்தி வந்தது. மறு நாள் ஹிந்து பத்திரிகையில் நகுலனின் மறைவு பற்றி செய்தி வந்திருந்தது. எந்த தமிழ் பத்திரிகையும் நகுலனின் மறைவு தமிழகத்திற்குத் தரப்படவேண்டிய செய்தி எனக் கருதியதாக எனக்குத் தகவல் இல்லை. ஹிந்து பத்திரிகைக்கு தமிழ் எழுத்தாளர் ஒரு பொருட்டாவது, அவர் சினிமாப் பாடல்கள் எழுதுபவராக இருந்தால் தான் சாத்தியம். வாலியும், மு.மேத்தாவும். வைரமுத்துவும் தான் ஹிந்து பத்திரிகை அறிந்த தமிழ் எழுத்தாளர்கள். லா.ச.ராவைக்கூட ஹிந்து பத்திரிகைக்கு தெரியாது. லா.சு.ரங்கராஜன் என்பவைத்தான் லா.ச.ரா என்று நினைத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கு கனி மொழி கவிஞர் என்று தெரியத் தொடங்கியுள்ளது, கவிதை சம்பந்தப்படாத அவரது மற்ற பொதுக்காரியங்களுக்காக, விழா நடத்துதல், திறப்பு விழாக்கள் போன்றவைக்காக. அதாவது கட்சிப் பிரமுகரான பிறகு, அவரைக் கவிஞராகக் கண்டுகொள்ளப் படுகிறார். கட்டாயம் கவிஞர் கனிமொழி என்று தான் சொல்கிறது வழக்கமாகியுள்ளது. மலையாள பத்திரிகைகளில் நகுலன் மறைவு ஒரு முக்கிய செய்தியாக விரிவாக பதிவாகியுள்ளதாக எனக்குச் சொன்னார்கள். கேரளம் போல் நாமும் அது செல்லும் அதே தடத்தில் செல்லமுடியுமா என்ன? நமக்கென ஒரு நீண்ட வரலாறும், பண்பாட்டுச் சிறப்புகளும் தனித்வமும் இல்லையா என்ன? ஒரு கவிஞரை முதல்வராகக் கொண்டுள்ள நாடல்லவா தமிழ் நாடு! கேரளத்துக்கு, அல்லது வேறு எந்த மாநிலத்துக்காவது இத்தகைய சிறப்பு உண்டா? ஆக, நம் செயல்பாடுகளும் வேறு குணத்ததாகத் தான், நம் தமிழ் மணம் பரப்புவதாகத்தான் இருக்க முடியும்.

சோகம் என்னவென்றால், நகுலன் தனது எண்பத்தாறாவது வயதில், உடல் க்ஷீணமுற்று, இறந்த போது, சுமார் 45 வருட ஒரு நீண்ட காலம் தமிழில் கவிதை, விமர்சனம், நாவல், என்று பல துறைகளில் தன் பெயர் பதித்து வந்துள்ளார். ஆங்கிலத்திலும் அவர் கவிதைத் தொகுப்புகள் வந்துள்ளன. 60-களிலிருந்து பல கவிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் அவர்களின் ஆரம்ப காலங்களில் நகுலன் தந்த உற்சாகமும் ஊக்குவிப்பும் ஆதரவாக, அங்கீகாரமாக பயன்பட்டுள்ளது. பதவி உயர்வைக்கருத்தில் கொள்ளாது, திருவனந்த புரத்தில் கல்லூரி ஆசிரியராக இருந்து கொண்டே, அந்த வட்டார எழுத்தாளர்களுக்கு மரியாதைக்குரிய மூத்தவராக இருந்துள்ளார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர் நிறைந்த படிப்பும் பாண்டித்யமும் பெற்றவர். பழந்தமிழ் இலக்கியங்களிலும் நல்ல படிப்பும் ஞானமும் பெற்றவர். ஞானம் என்று நான்

சொல்லும்போது பொருள் அறிந்து தான் சொல்கிறேன். வெற்றுத் தகவல் சேகரிப்பு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளோர் தமிழ் பல்கலைக் கழங்கங்களை நிரப்பியுள்ள சூழலில், ஞானம் என்ற சொல்லை நகுலனின் பண்டைத் தமிழ் இலக்கியத் தேர்ச்சியின் சந்தர்ப்பத்தில் உபயோகப்படுத்தித் தான் ஆகவேண்டும். அவர் கவிதைகளே இதைச் சாட்சியப் படுத்தும். அவ்வகையில் அவர் கவிதைகள் அவர் ஆளுமையைச் சொல்லும் தனித்வம் பெற்றவை.

நகுலன் அப்படி ஒன்றும் தமிழ் எழுத்தாளர் சாதியைச் சேர்ந்தவர் என்று சொல்லிவிட முடியாது. அவர் எழுத ஆரம்பித்தது, எழுத்து பத்திரிகையில். எழுத்து பத்திரிகை இல்லையெனில் அவரை நாம் அறிந்திருப்போமா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். எழுத்து இல்லையெனில் வேறொன்று என்று வாதிடலாம். அந்த வேறொன்றும், அது போன்ற எத்தனையோ வேறொன்றுகள், எழுத்து பத்திரிகையின் பாதிப்பில் பிறந்தன தான். எழுத்துவின் பாதிப்பற்ற எந்த பத்திரிகையிலும் அவர் எழுதவில்லை. அவருக்கு அவற்றில் இடமிருக்காது, என்னும்போது, எழுத்துவின் கண்டுபிடிப்பாகத்தான் அவரைக் கொள்ள வேண்டும். என் ஞாபகத்தில் அவரது 'கொல்லிப் பாவை' கவிதை தான் நகுலனை எனக்கு அறிமுகப்படுத்தியது. உரையாடல்கள், நாவல், விமரிசனம் என்று அவர் பலவாறாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும், 'கொல்லிப்பாவை' நகுலன் தன்னை சிறப்பாக ஒரு கவிஞராக வெளிப்படுப்படுத்திக் கொண்டுள்ளார் என்று எனக்கு இன்றும் தோன்றுகிறது.

கவிதை தவிர மற்ற எல்லாவற்றிலும், விமர்சனம், கட்டுரைகள், நாவல்கள் போன்ற எல்லாவற்றிலும், நமக்குக் கிடைப்பது, நகுலன் படித்த புத்தகங்கள், சந்தித்த எழுத்தாளர்கள், அவர்களுடனான அவரது அவ்வப்போது மாறும் உறவுகள், கசப்புகள், மறைமுக தாக்குதல்கள், கிண்டல்கள் போன்ற சமாச்சாரங்கள் நிறைந்திருக்கும். எழுத்துலகமும், எழுத்தாளர்களும் நகுலனும் தான் அவர் நாவல்களின் கதா பாத்திரங்கள். பெயர்கள் கற்பனையேயானாலும், யாரைச் சொல்கிறார் என்று படிப்பவர்க்கு நன்றாகவே தெரியும். தெரியாது போகும் அளவுக்கு அதை மறைப்பதில் நகுலனுக்கு அக்கறை இல்லை. மறைமுகமாகத் தாக்கினாலும், தாக்கப்படுபவருக்கு அது தான் தான் என்று உறைக்காவிட்டால் அதில் என்ன சுவாரஸ்யமிருக்க முடியும்? நகுலனின் ஒவ்வொரு நாவலைப் படிக்கும் போதும், நகுலனின் உறவுகள் மற்ற எழுத்தாளர்களோடு இருக்கும் அவ்வப்போதைய வெட்ப தட்பங்களைச் சொல்லும். ஒரு நாவலில் கண்ட வெட்ப தட்பம் அடுத்த நாவலில் தொடரும் என்பது நிச்சயமில்லை. உறவுகள் கெட்டிருக்கலாம். அல்லது சமாதானம் அடைந்திருக்கலாம். கற்பனைப் பெயர்கள் மறைப்பதால், யாரும் இதில் தப்புவதில்லை. இந்த விசித்திர உலகத்தைப் பற்றி நகுலனின் நாவல்கள் விஸ்தாரமாகச் சொல்வதற்கு மேல், நீல பத்மனாபனின் தேரோடும் வீதியும் ('மறைந்து தாக்குதல், வத்தி வைத்தல் காரியங்களைச் செய்யும் கே.எச்.கே') ஆவணப் படுத்தும். இன்னும் சிலரும் (நகுலன் நாவலில் வரும் ஹேமசந்திரன், நீல பத்பனாபன் நாவலில் வரும் மதிரமூர்த்தி) நாவலாக அல்ல, கவிதை வடிவில்

நகுலனுக்கு பிரதி உபசாரம் செய்துள்ளனர். சுவாரஸ்யமான மனிதர் நகுலன். அவரது இப்பரிமாணமும் சுவாரஸ்யமானது தான்.

எழுத்தாளர்களையே பாத்திரங்களாக வைத்து நாவல் எழுதியவர்கள் உலகில் வேறு எங்கும் உண்டா? நகுலன் தான் அதைச் செய்துள்ளார். இதன் காரணமாக அவரது நாவல்கள் பிரசுரம் பெறுவதில் சிரமம் இருந்திருக்கிறது. பெரும்பாலும் அவர் தானே தான் வெளியிடவேண்டியிருந்திருக்கிறது. இருப்பினும் அவர் சளைத்தவரில்லை. தனிமையும் அதன் சோகமும் தான் அவர் எழுத்துக்கு பெரிய காரணிகள் என்று சொல்லவேண்டும். இதற்கு சாட்சியம் அவர் எழுத்துக்களில் நீங்கா இடம் பெறும் 100 அல்லது 200 மிலி, பின் ஒரு கற்பனைப் பாவை, 'சுசீலா'. இரண்டும் அவரது தனிமையின் சோகத்தைத் தணித்தவை. ஜெயதேவருக்கு சாருஷீலே, நகுலனுக்கு சுசீலா.

ஆனால் தமிழ் இலக்கிய உலகின் விசித்திர குணம், நகுலன் தன் எழுத்துலக விவகாரங்களையே சம்பாஷணைகளாகவும், பாத்திரங்களாகவும் படைத்து தன்னைத் திருப்திப் படுத்திக்கொண்ட நாவல்களை, தமிழுக்கே உரிய அ-யதார்த்தம் என்றும் நான்-லீனியர் எழுத்தென்றும், மந்திர யதார்த்தம் என்றும், போஸ்ட் மாடர்னிஸம் என்றும் வரும் லேபிள்களில் ஒன்றை நகுலனுக்கும் தந்து மகிழ்ந்துள்ளது. இது நகுலனைப் பாராட்டும் செயல் என்று கொள்ளாமல், லேபிள் காரர்கள் தம் கூடாரத்துக்கு ஆள் சேர்க்கும் சமாசாரம் என்று தான் கொள்ள வேண்டும். எம்.வி.வெங்கட் ராமின் காதுகள் மந்திர யதார்த்த நாவலாகிப் போன கதை தான். கடைசிக் காலத்தில் ஏதோ ஆசைப் பட்டு பொன்னாடை போர்த்தி விட்டுப் போகிறார்கள். அவர்கள் ஆசையைக் கெடுப்பானேன் என்று நகுலன் எண்ணியிருக்கக் கூடும். 'நான் எதையோ நினைத்து எதையோ எழுதப் போக, அதுக்கு இப்படி ஒரு பொன்னாடையா!' என்று அவர் நமுட்டுச் சிரிப்போடு இருந்திருக்கக்கூடும். நகுலனின் நமுட்டுச் சிரிப்பு அவரது முத்திரை.

இப்படி ஒரு சித்திரம் பெற்றுள்ள ஒரு மனிதர் எப்படி இலக்கியமே, இலக்கிய விசாரமே தன் வாழ்வின் ஒரே லக்ஷ¢யமாகக் கொண்டு வாழ்ந்த க.நா.சு விரும்பி சந்திக்கும் சம்பாஷிக்கும் மனிதராக இருந்திருக்கிறார் என்று யோசிக்கத் தோன்றும். ஒரு நல்ல சம்பாஷணைக்காரரான க.நா.சு. 'தான் சம்பாஷிக்க விரும்பும் இரண்டு பேர்கள் என மௌனியையும் நகுலனையும் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். எத்தகைய பாராட்டு இது! நகுலனிடம் இந்த விஷமத்தனங்கள் எல்லாம் மீறிய பரிமாணங்களும் இருக்க வேண்டும். அது தான் அவர் கவிதைகளை அவரது சிறப்பான இலக்கிய வெளிப்பாடாக்கியிருக்கிறது என்றும் நினைக்கத் தோன்றுகிறது. 1960 எழுத்து பத்திரிகையின் கொல்லிப் பாவையிலிருந்து தொடங்கி கடைசியாக அவர் எழுதிய கவிதைகளில் எனக்குப் பிடித்த 'இவர்கள்' வரை அனேக நல்ல கவிதைகள் நகுலனை முக்கிய கவிஞராக, தமிழ் கவிதைக்கு தன் வழியில் புதிய கவித்வ வடிவங்களை நமக்குத் தந்துள்ளார். நம் பழைய யாப்பு வடிவங்கள் போலல்லாது, புதுக் கவிதையில் ஒவ்வொரு

நல்ல கவிதையும் தன்னில் ஒரு புது வடிவத்தைக் கொண்டிருக்கும் என்பது என் கருத்து. அத்தோடு நகுலனின் சாரத்தையும் அது சொல்லும். இந்த நகுலன், 1960 ஆக இருந்தாலும் சரி, கடைசி வருடங்களில் தன்னில் தன் தனிமையில் முடங்கிக் கிடக்கும் நகுலனாலும் சரி, ஒருவரே தான். அவரின் சாரம் தான். முழுதையும் மேற்கோள் காட்ட முடியாது. ஒரு சில வரிகள் போதும்.

காத்திருந்தேன் என்ற தலைப்பு அதற்கு. இந்த தலைப்பை முக்கியமாக கவனிக்க வேண்டும்:

"மீண்டும் வீதியில் யாருமில்லை
வெறும் தனிமை
வெகு துலைவில்
வேகம் குறைந்து வரும்
டாக்ஸி என் வீடும் வரும் என்று
நம்பிக்கையின்
வேதனை தாங்கி,
நான் வாழ மனந்தூண்ட
நான் வறிதே வீற்றிருக்க
வந்த வண்டி
என் வீடு தாண்டிப் போகும்."

இந்த தனிமையும் காத்திருத்தலும் தான் நகுலன். அவர் வாழ்ந்திருந்த 84 ஆண்டுகள் முழுமையுமான நகுலன். பின் கடைசி வருடங்களில் எழுதிய கவிதைகளில் ஒன்று: தலைப்பு இவர்கள்:

"உதட்டளவில் பேசுகிறார்கள். மனமறிந்து
பொய் சொல்கிறார்கள். ஒரு கணத்தில்
சொன்னதை அடுத்த கணத்தில் மறந்து
விடுகிறார்கள். எதிரில் இருப்பவன்
பிரக்ஞையின்றி தங்களைப் பற்றியே
பேசிக்கொண்டிருக்கிறார்கள். வயிறு
காலியானாலும் வீடு நிறைய சாமான்
களை வாங்கி வைக்கிறார்கள். உடமை
கருதி செத்துக் கொண்டிருக்கும் ஒருவன்
முன், "இவன் ஏன் இன்னும் சாகமாட்
டேன்" என்கிறான் என்று பொறுமை
இழந்து நிறகிறார்கள். எல்லாவற்றிலும்

அதிசயம் என்ன வென்றால் இவர்கள்
தங்களைப் போல் நல்லவர்கள் இல்லை
என்றும் சொல்லிக் கொள்கிறார்கள்

இவர்களுடன் தான் உறவுகளை
வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது
நாம் வாழும் உலகில் தான் இவர்களும்
வாழ்கிறார்கள். ..."

நகுலனது கவித்வ ஆளுமையின் சாரம் இது. காத்திருப்பும், கசப்பும். எல்லாமே இப்படித்தான் இருக்கும் என்றில்லை. தனிமை பேசும் கவிதைகள் ஆத்மார்த்தமானவை. சிறப்பானவை.

அவரது கவிதைகள் சிறக்கக் காரணம், அவரது வெளிப்பாடும் மொழியும் மிகச் சிக்கனமானவை. அனேக சமயங்களில் அவர் சொல்லவந்தது முழுதையும் சொன்னதாக இராது. எங்கோ தத்துத் தாவுவது போலவும், சொல்ல மறந்து விட்டது போலவும், தோன்றும். நாவலில், விமர்சனங்களில் 'மனுஷன் ஏன் இப்படி எழுதுகிறார்? என்று நம்மை நினைக்கத் தோன்றும் விட்டு விட்டுத் தொடரும், தொடர் அறுந்து தாவும் சிந்தனை, கவிதையில் நமக்கு இட்டு நிரப்பிக்கொள்ளும் இடை வெளிகளைத் தரும்.

நில்
போ
வா

வா
போ
நில்

போ
வா
நில்

நில் போ வா

என்று நவீன விருட்சத்திற்கு எழுதிய கவிதை போல நிறைய உண்டு. என்ன எழுதியிருக்கிறீர்கள் என்று அழகிய சிங்கர் நகுலனைக் கேட்டு திருப்பிவிட முடியாது. பின் நகுலனின் எதிர்வினை எப்படி இருக்கும் என்று சொல்ல முடியாது. இவ்வளவுக்கும்

அவரது கடைசி வருடங்களில் நகுலனது கவிதைகள் பெரும்பாலும் நவீன விருட்சத்தில் தான் வெளிவந்த மாதிரித் தெரிகிறது.. வீம்புக்கு வினோத சூத்திரங்களை உருவாக்குவார். ஒரு கவிஞர் (நல்ல கவிஞர் தான் அவர்) தாகூரை காப்பியடிக்கிறார் என்று தெரிந்ததும், நகுலன் தரும் வாதம்: இது;"மொழிபெயர்ப்பு (மொழிபெயர்ப்பு என்றால்) 1:1 அல்ல" என்று வாதிப்பார். இந்த பிரம்ம சூத்திரத்திற்கு யார் பாஷ்யம் எழுதுவது?. விஷமத்தனம் என்று தோன்றும். இது தான் நகுலனின் முழுமை என்பதல்ல.

பொதுவாக, தத்துவார்த்தமாக இலக்கியம் பற்றி, கவிதை பற்றி பேசும் போது, நகுலன் மிக சிறப்பாகவும், ஆழமாகவும், உண்மையாகவும் பேசிவிடுகிறார்: இந்த கவியுள்ளம் தான் அவர் கவிதைகளை சிறப்பான சிருஷ்டியாக்கிவிடுகின்றன என்று தோன்றுகிறது: ஒரு சில வரிகள் மாத்திரமே.

"கவிதை எழுப்பும் பரவச நிலையை வார்த்தைகளிலிருந்து பிரிக்க முடியாதென்றால், கவிதையின் வார்த்தைகள் நமது உப-போத மண்டலத்தில் ரீங்கரிப்பதற்கு ஒரு காரணம் ஓசை."

"என் அனுபவத்தில் எந்த உயர் கவிதையிலும் உச்ச கட்டம் என்பதில் ஓர் அபூர்வ எளிமை, ஆழம், தெளிவு இருக்கின்றன.

"அடிப்படையாக இரு விஷயங்கள் -அனுபவம் - உருவம் (வெளிப்பாடு மூலம் எழுவது). எங்கு அனுபவம் வெளிப்பாடு - மூர்த்தண்யம் அடைகிறதோ அங்கு இலக்கியம் பிறக்கிறது"

பின் ராஜாராவின் வார்த்தைகளை நினைவு படுத்துகிறார் ஒர் இடத்தில்.

"இலக்கியம் நிசப்தத்தின் அடிப்படையில் பிறந்து சப்தம் மூலம் உருவாகி மீண்டும் நிசப்தத்தில் லயிப்பது."

இவற்றின் சாட்சியங்களை நகுலனின் கவிதைகள் பெரும்பாலானவற்றில் காணலாம். விமர்சன வாக்கியங்களில் ஆங்காங்கே காணலாம்.அந்த நகுலனைத் தான் க.நா.சு தான் விரும்பிய நகுலனுடனான் சம்பாஷணைகளில் கண்டாரோ என்னவோ. நகுலனது நாவல்களிலோ, அவரது விஷம வேடிக்கைகளிலோ நிச்சயமாக இல்லை. இருந்தாலும், அவரது ஆரம்ப வருடங்களில் அவருக்குப் பிடித்த கவிஞர்களை அவர் உற்சாகப்படுத்தி ஆதரவளித்தார். அவரிடமிருந்து இவர்கள் பெற்றது நிறைய. ஆனால், இப்படி கொடுப்பவர்களுக்கெல்லாம் எப்போதும் நேர்வது போல, அவர் உற்சாகப்படுத்தி அங்கீகரித்தவர்கள் எவரிடமிருந்தும் நகுலன் பெற்றது ஏதும் இல்லை. அது மிக வருந்தத் தக்க விஷயம். ஆனால் தமிழ் எழுத்தாளர்கள் வேறு எப்படி நடந்து கொள்வார்களாம்? ஏது சாட்சியம்? அதே சமயம் நகுலன் விடாப்ப்பிடியாக தொடர்ந்து முன் வைத்த ஷண்முக

சுப்பையா மறைந்த பிறகு அவர் போன இடம் தெரியவில்லை.

அறுபதுகளில், நகுலன் குரு§க்ஷத்திரம் என்று ஒரு இலக்கியத் தொகுதியை வெளியிட்டார். தம் செலவிலேயே. வேறு யார் வெளியிடுவார்கள் தமிழ் நாட்டில்? அதில் அன்று அவர் தான் முக்கியமானவர்களாகக் கருதியவர்களின் படைப்புக்களைத் தொகுத்துள்ளார். அப்போது க.நா.சு எழுதியது எனக்கு நினைவுக்கு வருகிறது. "தமிழ் நாட்டில் இரண்டு முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. 'சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு ஒன்று. இது மிகுந்த கோலாகலத்தோடு ஆடம்பரமாக நிகழ்ந்தது. மற்றது, நகுலனின் 'குரு§க்ஷத்திரம்' தொகுப்பு. வெகு அமைதியாக, அனேகர் கவனத்திற்கு வராது நிகழ்ந்தது. இருப்பினும், தமிழுக்கு உருப்படியாக ஏதோ செய்தது என்றால் அது நகுலனின் 'குரு§க்ஷத்திரம்' தான்," என்று எழுதினார்.

இப்போதும், சுமார் ஐம்பது வருட காலம் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் கவிதைக்கும் வளம் ஊட்டிய 86 வயது மனிதரை நாம் இழந்து விட்டதை பற்றி தமிழ் இலக்கிய உலகம், பத்திரிகை உலகம் கண்டு கொள்ள வில்லை. தமிழகம் செய்யத் தவறியதை, எங்கோ அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் தான் 'விளக்கு' பரிசு தந்து கௌரவித்தார்கள். மலையாளத்தவர்கள் கூட தம்மிடையே வாழ்ந்த தமிழனுக்கு 'குமரன் ஆசான்' பரிசு கொடுத்தார்கள் என்று நினைவு எனக்கு .என் நினைவு சரிதானா? இதெல்லாம் செய்வார்கள். தண்ணீர் தான் தரமாட்டார்கள்.

vswaminathan.venkat@gmail.com
பதிவுகள், யூன் 2007 இதழ் 90

2. கு. அழகிரிசாமி! - வெங்கட் சாமிநாதன் -

கு.அழகிரிசாமி (1923-1970) என்றொரு தமிழ் எழுத்தாளர் இருந்தார். அந்தக் காலத்தில் சிறுகதைகள் எழுதியவராக அறியப்பட்டார். அவரைப் பற்றி நம்மில் சிலருக்கு நினைவு இருக்கலாம். இளைய தலைமுறை அவர் பெயரைக் கேள்வி கூட பட்டிருக்க மாட்டார்கள். 1950 களின் ஆரம்ப வருடங்களில் நான் ஒரிஸ்ஸா மாநிலத்தின் புர்லா என்ற அணைகட்டு முகாமில் இருந்த போது இரண்டு புத்தகங்கள் சக்தி காரியாலயத்தார் வெளியிட்டவை, அந்தக் காலத்துக்கு மிக அழகாக, ஆசையுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு புத்தகங்கள் வெளிவந்தன. ரகுநாதன் கதைகள், அழகிரிசாமி கதைகள் என இரண்டு சிறுகதைத் தொகுப்புகள். அப்போது அழகிரிசாமி அப்படி ஒன்றும் பிரபலமான எழுத்தாளர் இல்லை தான். முப்பது வயதில் அதிகம் எழுதாத, அதிகம் தெரியவராத ஒரு எழுத்தாளருக்கு அப்படி ஒரு சிறப்பான வரவேற்பு நம் வெளியீட்டாளர்களிடமிருந்து கிடைத்துள்ளது பற்றி இன்று யோசிக்கும்போது எனக்கு ஆச்சரியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது தான். அவ்வளவு அழகாக செய்நேர்த்தியுடன் அக்காலத்தில் சாதாரணமாக யாருக்கும் பிரசுரம் கிடைத்ததில்லை என்று தான் நினைக்கிறேன். அதற்கு சில வருடங்களுக்குள் கு. அழகிரிசாமி பற்றி க.நா.சு. பேச ஆரம்பித்து விட்டார். அழகிரிசாமியின் 'திரிவேணி', 'ராஜா வந்தான்' கதைகளைப் பற்றி அவர் சிறப்பித்துப் பேசியிருக்கிறார். அதிகம் அறியப்படாத, பேசப்படாதவர்களைப் பற்றிப் பேசி ஒரு சிறிய வட்டத்திற்குள்ளாவது சிறப்பாக எழுதுகிறவர்கள் என்று தாம் கருதுகிறவர்களைப் பற்றி கவனத்தைத் திருப்பச் செய்திருக்கிறார். ஆனால், க.நா.சு வேகூட யார் என்று நினைவூட்ட வேண்டிய காலம் வந்துள்ளது.

தான் மறந்துவிட்ட மறைந்த பெரியவர்களுக்கு சிலை எழுப்பி ஆண்டுக்கு ஒரு முறை மாலை சார்த்தி சொற்பொழிவாற்றி பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துத் தலைப்பை உறுதிப் படுத்திக்கொள்ளும் தர்மத்தின் வழி என்று சொல்லத்தான் தோன்றுகிறது. ஆனாலும், சாகித்திய அகாடமியின் பதிப்புகள், கு.அழகிரிசாமி கதைத் தொகுப்பு ஒன்றும் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் கு.அழகிரிசாமி பற்றி ஒரு சிறிய புத்தகமும் வெளிவந்துள்ளது, அவரது இளமைக்கால நண்பர் கி.ராஜநாராயணன் சாகித்திய அகாடமியின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகித்த காரணத்தாலும் இருக்கலாம். எத்தனையோ பேர் என்னென்னவோ தமக்குச் செய்து கொள்கிறார்கள். ராஜநாராயணண் தம் நண்பரை நினைவு கொண்டு செய்த காரியம் நட்புக்கும் இலக்கியத்திற்கும் செய்த சேவை என்று சொல்லவேண்டும்.

கு.அழகிரிசாமி சிறு கதை எழுதியவராகவே அறியப்பட்டார். மலேயாவுக்கு அவர் சென்று தமிழ் முரசு ஆசிரியராக பணிபுரிந்த காலம் அவர் அங்கு அழைக்கப்பட்டதும், அறியப்பட்டதும் சிறு கதைக் காரராகத்தான். கு.அழகிரிசாமிக்கு இடைக்கால பிரபந்தங்களிலும் கம்பனிலும் இருந்த ஈடுபாடு க.நா.சு வுக்கு தெரியும் அந்த

ஈடுபாட்டுக்கும் க.நா.சு.விடம் நிறைந்த மரியாதை இருந்தது. அது பற்றி அவர் எழுதியுமிருக்கிறார். க.நா.சு. பெயரையே நான் திரும்பத் திரும்பச் சொல்லக் காரணம், கு.அழகிரிசாமி பெயரை அவரைத் தவிர அவர் அளவுக்குப் பிரஸ்தாபித்து பேசியவர் வேறு யாரும் எனக்குத் தெரியவில்லை.

கு.அழகிரிசாமி பற்றி சாகித்ய அகாடமி பிரசுரத்திற்காக எழுதியிருப்பவர் வெளி. ரங்கராஜன். நாடகங்களில் அதிக ஈர்ப்புக் கொண்டவர். வெளி என்ற ஒரு பத்திரிகையை நாடகத்திற்கென்றே நடத்தியவர். சாகித்திய அகாடமியிடமிருந்து இம்மாதிரியான வாய்ப்புக்களைப் பெற்று எழுதியுள்ளவர்கள் புத்தகங்களைப் பார்க்கும் போது பொதுப் பணித்துறையிடமிருந்து சாலை போடும் குத்தகை பெற்றது போன்ற சமாசாரமாகத் தான் இதையும் பார்க்கத் தோன்றும். அப்படி நினைபெழுந்தால் குற்றம் சொல்வதற்கில்லை. ஆனால், ரங்கராஜனின் இப்புத்தகம் விதி விலக்கானது. தனக்குக் கொடுக்கப்பட்ட பணிக்கு நியாயம் செய்திருக்கிறார் என்று தான் நான் நினைக்கிறேன். இப்படிப்பட்ட விதி விலக்குகள் தான் நடைமுறைக்கு சாட்சியம் சொல்கின்றன.

பெரும்பாலும் அக்காலத்தில் கூட சிறு கதைக்காராக மட்டுமே தெரிய வந்த கு.அழகிரிசாமியின் மற்ற பரிமாணங்களைப் பற்றியும் ரங்க ராஜன் நிறைந்த ஈடுபாட்டுடன் எழுதியிருக்கிறார். அழகிரிசாமியின் ஆளுமையின் முழுமை நம்மை அழகிரிசாமியை வியப்புடன் எத்தகைய உயர்ந்த மனிதர் தன் குறுக்கிய கால வாழ்க்கையை எவ்வளவு இடர்பாடுகளிடையேயும் எவ்வளவு அழகும் அன்பும் துலங்க வாழ்ந்துள்ளார் என்று நினைக்க வைத்து விடுகிறது. இலக்கிய உலகில் உறவு கொண்டவர்களோடும், நண்பர்களோடும், இவற்றுக்கெல்லாம் வெளியே எதிர்ப்பட்ட எதிர்படாது தம் வழிச் சென்றவர்களோடும் சரி எத்துணை ஆதரவோடும் அன்புணர்ச்சியோடும் நெருங்கு உணர்ந்து வாழ்ந்துள்ளார் என்பது சாதாரணமாக எழுத்தாளர் கலைஞர் பட்டயம் சுற்றிக்கொண்டு நம்மைச் சுற்றியுள்ளோரிடம் இன்று நாம் காணமுடியாத குணங்கள். இவையெல்லாம் அழகிரிசாமியின் தனித்வ குணங்கள் என்ற நிச்சயத்தோடு அன்றைய கால கட்ட சூழலையும் ஒரு வேளை நாம் காரணம் காட்டலாம். ஒரு வேளை தான்.

அவர் எழுதும் கதைகளும் அப்படி ஒன்றும் லக்ஷக்கணக்கில் இல்லை, ஆயிரக் கணக்கில் கூட வாசக கூட்டத்தைச் சொக்கி மயங்க வைக்கும் குணம் எதுவும் கொண்டதில்லை. வெகு சாதாரணம் என்று வாசகர்கள் சொல்லக்கூடும் கதைகள் தான். ஏது சம்பவங்கள், உணர்ச்சி மிகும் கட்டங்கள், அலங்கார நடைகள், கவர்ச்சிமிக்க வர்ணணைகள் இப்படியான மசாலா எதுவும் அற்றது. அவர் சொன்ன கதையைத் திருபச் சொல்வது கூட கஷ்டம். மொத்தத்தில் உப்புச் சப்பற்ற என்று தான் சொல்லக் கூடும். எம்.டி. ராம நாதனின் அடித் தொண்டை கரகரப்பை அவர் குரலின் மலைப்பாம்பு ஊர்தலைக் கேட்க எத்தனை பேருக்குப் பிடிக்கும்? இப்படியெல்லாம் பட்டாசு வெடிகளோ, பட்டாடை பளபளப்புகளோ, அவரிடம் இருந்ததில்லை. வெகு சாதாரண மனச்

சலங்களை, சத்தம் எழுப்பாது, வெகு சாதாரண வார்த்தைகளில் எழுப்பி மனத்தில் லேசான அதிர்வுகளை எழுப்பி விடுவார். அதிர்வுகள் நம் மனத்தில் தான் மெல்ல மெல்ல எழும்பித் தளும்புமே தவிர அவர் எழுத்தில் அவை மெல்லிய அலைகளாகத்தான் இருக்கும். எப்படித் தான் எழுதினாரோ என்று இருக்கும். மற்றவர் கைகளில் சப்பென்று போய்விடக்கூடியவை அவர் எழுத்தில் வாசிப்பவர் மனதில் கரைசலைக் கிளப்பிவிடும்.

கதைகள் என அவர் அதிகம் எழுதியவருமில்லை. எழுதும் வாய்ப்புக்களும் மன நிலையும் அவருக்கு இருந்ததில்லை. பத்திரிகையில் துணை ஆசிரியராக இருந்தால் என்ன நடக்கும்? என்ன சாத்திய மாகும்? சக்தி, பிரசண்ட விகடன் போன்ற பத்திரிகைகளில் இருந்த போது கட்டுரைகள் எழுதியது தான் அதிகம். நிறையவே எழுதியிருக்கிறார் என்று இப்போது தெரிகிறது. அவை கவனிக்கப்படவில்லை என்பதும் தெரிகிறது. அதிலும் அழகிரிசாமி தன் ஆளுமையை நன்கு பதித்துள்ளார் என்பதும் தெரிகிறது. அவற்றிலிருந்து மாதிரிக்கு ஒன்றை சற்று விரிவாகவே தரவேண்டும்.

சென்னையில் காலை நேரத்தில் கேட்கு இரண்டு குரல்களைப் பற்றி எழுதுகிறார். ஒன்று மொக்கு மாவு விற்கும் ஒரு பெண். இரண்டு முள்ளங்கி விற்கும் இரண்டு சிறுவர்கள்: அவரே சொல்லட்டும்.

"ஏக காலத்தில் 'முள்ளங்கி, முள்ளங்கி' என்று கூவுவது காலைக் காற்றில் கலந்து சிறிது தூரம் பிரயாணம் செய்து, நான் குடியிருந்த வீட்டின் மாடியில் ஏறி, ஜன்னல் வழியாக ஏதோ தெய்வ சுரங்களை மிழற்றிக்கொண்டும் என் அறைக்கு வரும். மற்றொரு குரல் தெய்வக் குரலே தான். ..இந்தப் பெண் மொக்கு மாவு என்று கூவும்போது அந்தச் சொல்லில் ஒரு எழுத்துக்கும் மற்றொரு எழுத்துக்கும் இடையில் எத்தனையோ அழகான இனிய அசைவுகள். விம்மியும் மெலிந்தும் ஒலி வெளிப்படும்போது எத்தனையோ நெளிவுகள், அதை விவரித்து புரிய வைக்க முடியாது. எந்த சங்கீத வித்வானாலும் அது போல கூவிக் காட்ட முடியாது........ஏதோ ஒரு பறவை தன் மழலை முற்றாத குரலில் தாயைப் பார்த்துக் கூவுவது போல இவள் குரல் கேட்கும்......இவளை வெகு நாட்கள் வரை நான் பார்க்கவில்லை. ஒரு நாள் அதிகாலையில் எழுந்து இவள் வருகைக்காக நான் தெருவோரத்தில் வந்து நின்றுகொண்டேன். ...அவளும் வழக்கம் போல வந்தாள். சுமார் 25 வயதுடைய பெண். அழுக்கு புடவை. சிக்கு விழுந்த கூந்தல். மொக்கு மாவைத் துளாவியதால் வெள்ளைப் பொடி அப்பிய விரல்கள். குரலுக்கேற்ற அழகியல்ல அவள். அத்துடன் அருகில் நின்று கேட்கும்போது, அந்த குரலில் இருந்த சுகம் முக்கால் வாசி மறைந்தும் விட்டது. அந்தக் குரல் காற்றோடு கலந்து, காற்றோடு அசைந்து, எங்கெங்கோ முட்டி, எத்தனையோ கரகரப்புகளை உதறிவிட்டு, அனேக எதிரொலிகளைப் பின்னணி இசைகளாக ஏற்றுக் கொண்டு என் அறையில் புகும்போது தான் இனிமையாக இருந்தது. காற்றில் கலந்த ஒலியின் மகிமை இது.

இப்படி நீள்கிறது அந்தக் கட்டுரை. ஓசைகளையும் சங்கீதம் பற்றியும் கவிதை பற்றியும் எழுதும் போது, வார்த்தைகள் குழைந்து குழைந்து வடிந்தோடி வருகிறது அவர் பேனாவிலிருந்து என்று தான் தோன்றுகிறது. மேலே நான் முழுவதையும் கொடுக்கவில்லை. முன்னும் பின்னும் மட்டுமல்ல, இடையிலும் வெட்டியிருக்கிறேன். அழகிரிசாமியின் கட்டுரைகள் அத்தனையும் நமக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். சங்கீதம் பற்றிய அவர் உணர்வுகள் அவராகவே கேட்டுக் கேட்டு தன்க்குள் பக்குவப் படுத்திக்கொண்டவை. அது அவரதே. இதில் அவருக்கேற்ற சகா ராஜநாராயணன். இன்னொன்று சகாயம் பக்கத்திலேயே விளாத்திகுளம் சுவாமிகளின் காருகுருச்சி அருணாசலத்தின் ஸ்பிரசன்னங்கள். ஒரு இடத்தில் அவர் மிக காரசாரமாக சங்கீத பண்டித உலகம் ஒருமனதாக ஏற்றுக்கொண்டிருப்பதை மறுக்கிறார். மேளகர்த்தா ராகங்கள் 32 தான். அதற்கான தன் வாதங்களையும் வைக்கிறார். "காந்தாரத்துக்கு சதுஸ்ருதி ரிஷபத்தையும், நிஷாதத்துக்கு சதுஸ்ருதி தைவதத்தையும் சேர்த்துக்கொண்டு கனகாங்கி என்று ஒரு ராகத்தை உண்டாக்கினார். ரிஷபம் எப்படி காந்தாரம் ஆகும்?" என்று கேட்கிறார். மற்றவர்களைப் போல இதில் ஜாதி புகுவதில்லை. புகுவது வாதம்.

இப்படி தான் ரசனையும், தன் அனுபவமும் தான் வழிகாட்டலாகக் கொண்டு பல கேள்விகளை, சமூகம் ஏற்றுக் கொள்ளாத கேள்விகளைக் கேட்கிறார். காரைக்கால் அம்மையாரையும் திருவாசகத்தையும் கவிதையாக ஏற்றுக்கொள்ளும் அவர் பெரிய புராணத்தையும் திருவிளையாடற்புராணத்தையும் ஏற்பதில்லை. கம்ப ராமாயணத்தை கவிதையாக ஏற்கும் அவர் மனதுக்கு நம்மாழ்வார் பாசுரங்கள் கவிதையாகப் படுவதில்லை. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துக்கு முறையான பதிப்பு கொணர்வதில் மனம் செல்கிறது அவருக்கு. தனிப்பாடல்களில் அவருக்குப் பிடித்தவற்றைத் தொகுக்கிறார். அழிந்து வரும் பதங்களைத் தேடி அலைகிறார். தஞ்சையைச் சேர்ந்த தாசி ஒருவரிடமிருந்து பழம் பரதப் பதங்களைச் சேர்த்து புதுமைப் பித்தனுக்கு அனுப்புகிறார். கீர்த்தனங்களை விட பதங்களில் ராகத்தின் பாவங்கள் தோய்ந்திருக்கப் பார்க்க முடிகிறது என்கிறார். இப்படி அவர் தனக்கு எனச் சேர்த்துக்கொண்ட ரசனையும் பார்வையும் அவரதே. அவற்றில் அனேகம் வழமைக்கு மாறானவை. Unorthodox and unconventional.

ராஜநாரயணனுக்கும் சுந்தர ராமசாமிக்கும் அவர் எழுதிய கடிதங்கள் பிரசுரமாயுள்ளன. எதிர்கால பிரசுரம் கருதி எழுதும் முன்னதாகவே மனத்துக்குள் வெட்டி, பட்டி வைத்து தைத்து ஜாக்கிரதையாக தயாரிக்கப் பட்ட அலங்காரங்கள் அல்ல அவை. தான் விரும்பும் தோற்றத்தை தரவல்லதாக அல்ல, உண்மையான அழகிரிசாமியின் மனக்குரலைப் பதிவு செய்தவை அவை. அவர் தன் வாழ்க்கையில் சந்திக்கும் ஏமாற்றங்களையும், போராட்டங்களையும் பற்றி நாம் அறிவது அவர் தம் நண்பர்களுக்கு முக்கியமாக ராஜநாராயணனுக்கு எழுதியுள்ள கடிதங்களிலிருந்து தான். வேறு எங்கும் அவர் சொல்லிக்கொள்வதில்லை. அவரை அறிந்தவர்கள் அவர் கஷ்டங்களை அறிந்தவர்கள் இல்லை. அவர் கதைகள், கட்டுரைகள் அதைச் சொன்னதில்லை. எவ்வளவுதான்

கஷ்டங்கள் அவரை வருத்தினாலும், மகிழ்ச்சியாகவே, அவர் தன்னைக் காட்டிக் கொண்டார். அவ்வளவுக்கிடையிலும் அவர் தன் ரசனைக்கேற்ப வாழ்ந்து கொள்ள முடிந்திருக்கிறது. அவரது ரசனைக்கு "தூங்கு மூஞ்சி மாமா" என்று எழுப்பும் குழந்தைகள் இருந்தால் போதும். "மொக்கு மாவு" என்று கூவும் அழகே இல்லாத ஒரு அழுக்குப் புடைவைப் பெண்ணின் தெருக் கூவல் முட்டி மோதி அவர் அறைக்கு வரும்போது அது உதய கன்னியின் கீதமாக மாறிவிடும். கிட்டப்பாவின் எவரனி ஆயிரம் தடவை கேட்டாலும் அலுப்பதில்லை. பன்னிரண்டு மைல் நடந்து விடிய விடிய ராஜரத்தினத்தின் தோடியும், திருவீழி மிழலையின் 'ஸ்வர ராக ஸ¤தா" கேட்க இருக்கும் போது எத்தனை வருத்தும் வாழ்க்கையும் இனிமையாகி விடுகிறது. கொஞ்சம் சம்பளம் கிடைத்தாலும் போதும், தேவியும் டி.கே.சி. யும் இருக்கும் போது அவர்கள் கவிதை பற்றி அளவளாவ இருக்கும் போது என்று எண்ணத் தோன்றுகிறது. முக்கூடற்பள்ளு வைத் தேர்ந்தெடுப்பவருக்கும் விறலிவிடு தூதுவும் விலக்கல்ல. ஆனந்த குமாரசுவாமியும் அன்னி பெஸண்ட் அம்மையாரும் விலக்கல்ல.

ரசனையும் இன்பமும் வசதிகளினால் வருவதல்ல. அவரது கதைகள், கட்டுரைகள், கடிதங்கள், அவர் தேர்வு செய்து கொண்ட இடைக்கால பிரபந்த இலக்கியங்கள், சங்கீதம் எல்லாம் சேர்ந்து தான் அழகிரிசாமி. எளிமையிலும் வாழ்வை ரசித்து மகிழும் ஆளுமை அவரது.

கு. அழகிரிசாமி (வெளி. ரங்கராஜன்) சாகித்ய அகாடமி, குணா பில்டிங்ஸ், 443 அண்ணா சாலை, சென்னை-18:123 பக்கங்கள் விலை ரூ 25.

swaminathan_venkat@rediffmail.com /24.11.06

பதிவுகள், பெப்ருவரி 2007 இதழ் 86

3. யூமா வாசுகி முதல் சு.சமுத்திரம் வரை! - வெங்கட் சாமிநாதன் -

கடந்த 40 வருஷங்களாக அவ்வப்போது பத்திரிகைகள் கேட்க எழுதியவை இங்கே தொகுக்கப் பட்டுள்ளன. எல்லாமே இவைதான் என்றல்ல. எழுதித் தொகுக்கப்பட்டு வந்துள்ளவை போக எஞ்சியுள்ளவற்றில் இவை ஒரு பகுதி. இன்னும் மிஞ்சியிருப்பவை இப்போதைய அவசரத்திற்கு கையிலகப்படாதவை. அவை அத்தனையும் ஆங்கிலத்தில் இருப்பதால் இப்போது உடனே சேர்க்க இயலாமல் போயுள்ளது. அவற்றில் கரிச்சான் குஞ்சு, கோபி கிருஷ்ணன், க.நா.சு, 1970 களில் சென்னையில் இருந்த இலக்கிய சங்கம் தொகுத்த கோணல்கள், தி.ஜானகிராமன் ஆர். ஷண்முக சுந்தரம் என்று நிறையப் பேர் உண்டு. சேர்க்க முடியாமல் போவது எனக்கு வருத்தம் தருவது தான். ஆனால் என்ன, அடுத்த தொகுப்பு வருமானால் அதில் சேர்த்துக் கொண்டால் போயிற்று. அதற்கிடையில் ஆங்கிலத்தில் உள்ளவற்றை மொழிபெயர்த்துக்கொண்டிருக்க வேண்டும். இது மட்டுமல்ல, இன்னும் நாடகம், நாட்டியம், செய்திப்படம் என்பன தவிர பொதுவான இலக்கியப் பிரச்சினைகள் பற்றியும். பார்க்கலாம்.

இப்போதைக்கு, 'யூமா வாசுகியிலிருந்து......'என்று நான் இத்தொகுப்பின் தலைப்பைத் தொடங்குவது ஒரு கோட்டின் தொடக்கத்தைக் குறிக்க. சு.சமுத்திரம் அக்கோடு முடியும் புள்ளி. இக்கோட்டை பலவாறாக அர்த்தப் படுத்திக்கொள்ளலாம். இதன் பல நிலைகளில், பரிமாணங்களில் பலவும் உண்டு. வண்ணங்களில், தரும் சுவாரஸ்யத்தில், எழுத்துத் திறனில், இலக்கிய நோக்கில். தான் பெற்ற அனுபவத்திலிருந்து அர்த்தம் பெறப்படுகிறதா, அல்லது வெளியிலிருந்து பெற்ற அர்த்தம் அந்த அனுபவத்திற்குள் திணிக்கப்படுகிறதா, என்று பலவாறாக அவரவர் பார்வைக்கேற்றவாறு பொருள் கொள்ளலாம்.

யாரையும் எதையும் இப்படித்தான் பார்க்கவேண்டும், இப்படித்தான் பொருள் கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியாது. எத்தனை மனித ஜீவன்கள் உண்டோ அத்தனை பார்வைகள் இருக்கும். இருக்கவேண்டும். நாமெல்லாம் என்ன அச்சு வெல்லமா, ஹமாம் சோப்பா? குணம், மணம், உருவம், நிறம் எல்லாம் ஒரே மாதிரியாக இருக்க. இருப்பினும் இப்படி நிர்ப்பந்திக்கும் குணம் நம்மை விட்டு நீங்க மாட்டேன் என்கிறது.

நான் பிறக்கும் போதே சங்கிலிப் பிணைப்புடன் பிறந்தவன். சாதி. மற்றவர்களுக்குக் கொடுக்கப் பட்டுள்ள குண்டாந்தடி. அதை நான் மறந்தாலும் மற்றவர் மறப்பதில்லை. அதெப்படி மறப்பார்கள்? அது தான் அவர்களுக்குக் கிடைத்த வலுவான ஆயுதமாயிற்றே, என் சுதந்திரப் போக்கு பிடிக்காதவர்கள் என்னைத் தாக்க. பின் நானே என் வளர்ச்சியில் ஏற்றிக் கொண்ட சுமைகள். அவையும் என்னை எதிரியாக்கி விடுகின்றன.

சென்னை வந்த புதிது. "நான் சோலை சுந்தரப் பெருமாள். உங்களைப் பார்க்கவேண்டும்"

என்ற தொலை பேசிக்குரல் கேட்டது. வாருங்கள் என்றேன். புதிய அறிமுகம். ஒரு நாள் அந்தி நேரம். வந்தார். அவருடைய தஞ்சைச் சிறுகதைகள் தொகுப்பைக் கொடுத்து அதுபற்றி என் கருத்தைச் சொல்லவேண்டும் என்று சொல்லிப் போனார். பெரிய தொகுப்பு. அதில் என்னையும் க.நா.சு வையும் நாலு சாத்து சாத்தியிருந்தார். மூன்று நான்கு இடங்களில். அவருடைய சார்பு முற்போக்கும் திராவிட இயக்கமும்.
அதற்கு ஆதாரமாக அவர் என்னைப் பற்றி கூறியிருந்ததும், என் கருத்துக்கள் என மேற்கோள் காட்டியிருந்ததும் முற்றிலும் தவறானவை. உண்மையில்லாதவை. ஆனாலும் தொகுப்பின் பெரும்பகுதி இலக்கிய பூர்வமானது. அவருடைய உழைப்பிற்கு சாட்சியாக முன்னிற்பது. அவரது சித்தாந்த கொள்கைச் சார்புகளும் கூட சோலைய கைபிடித்து இழுத்துச் சென்றிருக்கின்றன தொகுப்பில். எதையும் மறைக்கவில்லை. இரண்டையும் தெளிவாகச் சொல்லி எழுதினேன். அவர் எனக்களித்த மண்டகப்படியை மறந்து விட்டதாகவும் சொல்லியிருந்தேன். அன்றிலிருந்து இன்று வரை அவர் எழுதும் ஒவ்வொரு புத்தகம் பற்றியும் நான் எழுத வேண்டும் என்று வற்புறுத்துவார். பின் அந்த மதிப்புரைகளை யெல்லாம் தொகுத்து புத்தகமாக வெளியிடுவார்.
அத்தொகுப்புகளில் என் கருத்து மாத்திரம் தனித்து நிற்கும். ஏனெனில் என்னைத் தவிர மற்றெல்லோரும் அவருக்குச் சார்பான அரசியல் சார்புடையவர்கள். அவர் எனக்கு நண்பர் தான். இந்த தொகுப்பிலும் அவரது இரண்டு நாவல்களைப் பற்றி நான் எழுதியவை சேர்க்கப்பட்டுள்ளன. சோலை பொறுத்ததை அவரது மூத்த முற்போக்கு அன்பர், தமிழ்ச் செல்வனால் பொறுக்க இயலவில்லை. நான் ஏதோ தெருவில் 'சிவனே' என்று நடந்து போய்க்கொண்டிருக்கும் தோழர் சோலையை வீட்டுக்குள் இழுத்து வைத்து அடித்துவிட்டது போல கோபம் கொண்டு எனக்கு கட்டைப் பஞ்சாயத்து செய்துவிட்டார். இந்த அன்பர் சிறுகதை ஒன்றை நான் மிக விரும்பி சாகித்ய அகாடமியின் ஹிந்தி வெளியீட்டுக்குத் தயாரித்த இன்றைய தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பில் சேர்த்தேன். கதையின் பெயர் பாவனைகள். எழுதியவர் தமிழ்ச் செல்வன். அவர் பாவனைகள் கதையைப் பார்த்த கணம், தமிழ்ச் செல்வன் ஒரு முற்போக்கு என்பதைப் பொருட்படுத்த எனக்குத் தோன்றவில்லை. ஆனால் தமிழ்ச் செல்வனுக்கு என் இலக்கிய நேர்மை ஒரு பொருட்டல்ல. நான் முற்போக்குச் சார்பற்று இருந்தது அவரது பகைமைக்குப் போதுமானதாக இருந்திருக்கிறது. மேலும் சோலையின் பெருந்திணை நாவலைப் பற்றி என்னிடம் எழுதி வாங்கி சோலைதான் உங்கள் நூலகம் பத்திரிகைக்கு பிரசுரத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால் தமிழ்செல்வன்? சரி, நான் ஒருத்தன் அவர் அணியில் சேர்ந்து சீருடை அணியாவிட்டால் என்ன நஷ்டம்? நோ. தப்பு. எல்லோரும் கட்டாய ராணுவ சேவை செய்யவேண்டுமென்கிறார்கள். இது தான் தமிழ் நாடு. அதன் அறிவு ஜீவிகள். எழுத்தாளர்கள். யாருடைய குரலும் சற்றும் வேறுபட்டு விடக்கூடாது.

எழுத்தாளர் சமுத்திரம்சு.சமுத்திரம் பற்றி எழுதியது அவர் சாகித்திய அகாடமி இலக்கியப் பரிசு பெற்றதை முன்னிட்டு அகாடமியின் Indian Literature -ல் எழுதியது. அதன் ஆசிரியராக அப்போது இருந்தவர் D.S. ராவ், லா.ச.ரா பற்றி நான் எழுதிக் கொடுத்ததிலிருந்து என்

நண்பர். என் எழுத்தை மிக விரும்புகிறவர். நான் எழுதித் தான் ஆக வேண்டுமென்று கட்டாயப் படுத்தினார். விருப்பமின்றி நண்பரின் கட்டாயத்திற்காக எழுதினேன் அவர் பல வருடங்களுக்கு முன் சாகித்ய அகாடமி பரிசு பெற்ற தெலுங்கு எழுத்தாளர் ஒருவரைப் பற்றி மட்டமாக எழுதப் போக வேலையிலிருந்து நீக்கப்பட விருந்தார். அவரைக் காப்பாற்றியது டாக்டர் ராதாகிருஷ்ணன் என்று சொல்லப்பட்டது. அப்படியிருந்தும் மறுபடியும் ஆபத்தோடு இன்னொரு விளையாட்டில் இறங்குவதா? அவர் வேலை பாதிக்கப்படக்கூடாது என்று ஒரு வார்த்தை கூட பாதகமாக இல்லாது மறைமுகமாக கிண்டலாகவே சமுத்திரத்தின் எழுத்தைப் பற்றியும் பரிசு பெற்ற புத்தகத்தைப் பற்றியும் எழுதினேன். அதைப் பிரசுரிக்க என் நண்பர் வேலையில் இல்லை. சாகித்ய அகாடமி தலைமையோடு வேறு தகராறு செய்துகொண்டு அவரே வேலையை விட்டுப் போனார். வேறொருவர் வந்து நான்கு மாதங்கள் ஏற்ற ஆசிரியப் பொறுப்பில் என் எழுத்துக்கு அறுவை சிகித்சையெல்லாம் நடந்து பிரசுரம் பெற்றது. 'சாமிநாதனே என்னைப் பாராட்டிவிட்டார். மற்றவர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை' என்று சமுத்திரம் சொல்லிக்கொண்டிருந்தார்/எழுதியிருக்கிறார் என்று கேள்விப் பட்டேன். அந்தக் கட்டுரையும் இத் தொகுப்பில். எத்தகைய பாராட்டு அது என்பதை எல்லோரும் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இதெல்லாம் எப்படியோ போகட்டும். சு.சமுத்திரத்தின் எதிர்பாராத மரணம், அந்த விபத்து வேதனை மிகுந்தது. விபத்தில் அடிபட்டுக்கிடந்த சமுத்திரம் உடன் கையில் பணமில்லாத காரணத்தால் அவர் கவனிப்பாரற்றுக் கிடந்தார் ஒரு மருத்துவ மனையில் என்ற செய்தி, கேட்பவர் இரத்தம் உறையச் செய்யும் செய்தி தமிழ் நாட்டின் கோரமுகத்தையே காட்டிற்று. நிறைந்த அரசியல் செல்வாக்கும் வசதிகளும் கொண்ட மனிதருக்கே அந்த கதி. உயிருடன் இருந்த வரை தன் உரிமைகளுக்கும் தனது உரிமை என்று அவர் நினைத்துக் கொண்டவற்றிற்கும் உரக்கக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தவர் அவர்.

இதுதான் என் தமிழ் நாடு. இங்கு நான் தொகுத்துள்ளவை அந்தப் புத்தகங்களைப் பற்றி மாத்திரம் சொல்வன அல்ல. என் சமூகத்தைப் பற்றியும் மக்களைப் பற்றியும் சொல்லும். அது தான் எனக்கும், என் நாட்டுக்கும் மக்களுக்கும் இந்த எழுத்துக்களுக்கும் நான் செய்து கொள்ளும் நியாயம்.

வெங்கட் சாமிநாதன்/ 29.11.06: யூமா வாசுகி முதல் சமுத்திரம் வரை: (கட்டுரைத் தொகுப்பு): வெங்கட் சாமிநாதன்: எனி இந்தியன் பதிப்பகம்: 102, எண். 57, பி.எம்.ஜி. காம்ப்ளெக்ஸ், ஸௌத் உஸ்மான் ரோட், தி.நகர், சென்னை-17

swaminathan_venkat@rediffmail.com

பதிவுகள், மார்ச் 2007 இதழ் 87

4. பூமியிலிருந்து தள்ளிவிடுவது! - அ.முத்துலிங்கம் -

அந்த இளைஞனுக்கு வயது 19. அவன் அயர்லாந்தில் இருந்து அமெரிக்காவுக்கு பெரும் கனவுகளோடு வருகிறான். அவனே சொல்கிறான்,' என் ட்ரங்குப் பெட்டியில் ஒன்றுமில்லை. உடம்பில் ஒன்றுமில்லை. மூளையிலும் ஒன்றுமில்லை. அப்படி இங்கே வந்து இறங்கினேன்.' உண்மையில் அவனுடைய ட்ரங்குப் பெட்டியில் அவன் அயர்லாந்தில் தந்திசேவகனாக வேலை செய்தபோது கிடைத்த சம்பளத்தில் பாதியை கொடுத்து வாங்கிய பழைய சேக்ஸ்பியர் நூல் ஒன்று இருந்தது.

அமெரிக்காவில் கூலி வேலைசெய்து காசு சம்பாதிக்கிறான். எப்படியும் படிக்கவேண்டும் என்பதுதான் லட்சியம். பல சிரமங்களுக்கு மத்தியில் நியூயோர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிக்கும்போது ஒரு சம்பவம் நடக்கிறது. விரிவுரையாளர், அவர்கள் வீட்டிலே உள்ள ஒரு பொருள் பற்றி சிறு கட்டுரை எழுதிவரும்படி பணிக்கிறார். மற்ற மாணவர்கள் டிவி, பேஸ்போல் மட்டை, கையுறை, கார் என்ற தலைப்புகளில் எழுதியபோது இவனால் ஒரேயொரு பொருளைப் பற்றித்தான் சிந்திக்க முடிந்தது.

கட்டில்! நான் சிறுவனாய் இருந்தபோது என்னுடைய அம்மா, நானும் என்னுடைய மூன்று தம்பிகளும் படுத்து உறங்குவதற்கு ஒரு கட்டில் வேண்டும் என்று தொண்டு நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பம் செய்தார். அவர்கள் பழைய கட்டில் ஒன்றைத் தருவதாகச் சொன்னார்கள். என் அம்மா புதுக் கட்டில் கிடையாதா என்றார். அவர்கள் இல்லை என்றார்கள். ஏதாவது வியாதி தொற்றிவிடும் என்று அம்மா பயந்தார் போலும். விடாப்பிடியாக இந்தக் கட்டிலில் ஒருவரும் சாகவில்லை என்று உறுதி கூறமுடியுமா என்று கேட்டார். தொண்டு நிறுவனக்காரருக்கு கோபம் வந்துவிட்டது. 'அம்மா, உங்களுக்கு வேண்டாமென்றால் தள்ளி நில்லுங்கோ. மற்றவர்களைக் கவனிக்கவேண்டும்.'

அம்மா சரி சரி என்று வீட்டுக்குப் போய் அவசர அவசரமாக கடைசித் தம்பியின் தள்ளுவண்டியை தள்ளிக்கொண்டு வந்தார். எங்களுக்கு தந்த மெத்தையில் குதிரை மயிர் நீட்டிக்கொண்டு நின்றது; கட்டிலும் மூன்று பாகங்களாக பிரிந்து கிடந்தது. வண்டியில் வைத்து கட்டில் துண்டுகளை வீதி வழியாக தள்ளி வருவதற்கு அம்மாவுக்கு வெட்கம். இரவிலே வரமுடியுமா என்று கேட்டார். தொண்டு நிறுவனக்காரர் மறுத்துவிட்டார்.

மூன்று தடவை மேலும் கீழுமாக அலைந்தோம். உடைந்த தள்ளுவண்டி வீதிகளில் கோணலாய்ப் போய் சிரமம் கொடுத்தது. அதை இன்னும் மோசமாக்கியது மெத்தைக்கு கீழே இருந்து வந்த தம்பியின் அழுகை. வீடு வந்ததும் மெத்தையை மேலே இழுத்துப் போக அப்பா உதவி செய்தார். ஆனால் அவர் இரண்டு மைல் தூரத்தில் இருந்த தொண்டு நிறுவனத்துக்கு வர மறுத்துவிட்டார். அவர் வடக்கு அயர்லாந்துக்காரர்; அவருக்கு

கூச்சமாக இருக்கும். அவருடைய ஊரில் கட்டில் கொண்டு வருவதற்கு வேறு வழிவகைகள் இருக்கலாம்.

இந்தக் கட்டுரை அவருடைய வாழ்க்கையை திசை திருப்பி விடுகிறது. விரிவுரையாளர் கட்டுரையை வகுப்பிலே வாசித்துக் காட்டி சிலாகித்து பேசுகிறார். மாணவனுக்கு தன் தரித்திரத்தை பகிரங்கப் படுத்தியதில் வெட்கம் இருந்தாலும் பெருமை பிடிபடவில்லை. முதல் முறையாக அமெரிக்காவில் அவனுக்குள் நம்பிக்கை முளைக்கிறது.

பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலை தேடி அலைந்து, இறுதியில் ஆசிரியப் பணியை ஒப்புக் கொள்கிறார். இதுதான் முதல் பள்ளிக்கூடம்; இதுதான் முதல் வகுப்பு. இங்கே மாணவர்கள் மிக மோசமாக நடந்துகொள்வார்கள் என்று மட்டும் அவர் எச்சரிக்கப்பட்டிருந்தார்.

ஆனால் அவர் கண்ட காட்சிக்கு அவர் தயாராக இருக்கவில்லை. வகுப்பிலே ஒருவராவது தன் ஆசனத்தில் அமர்ந்திருக்கவில்லை. இவரையும் ஒருவரும் பொருட்படுத்தவில்லை. பெரும் சண்டை அங்கே நடந்துகொண்டிருந்தது. கூரை உயரத்தில் பல பொருட்கள் பறந்தன. பயிற்சிபெற்ற ஆசிரியரான இவர் வாயிலிருந்து வெளிப்பட்ட முதல் ஆசிரிய சத்தம் 'ஏய், ஏய்' என்பதுதான். ஆனால் சண்டை நிற்கவில்லை. மேலும் உக்கிரமாகிறது. பறந்த பல பொருட்களில் ஒன்று இவர் முன்னே வந்து விழுகிறது. சாண்ட்விச். இவர் சாவதானமாக அதைப் பிரித்து சாப்பிடுகிறார். உடனேயே சத்தம் அடங்கியது. எல்லோரும் திகைத்துப்போய் இவர் சாப்பிடுவதைப் பார்க்கிறார்கள். சாண்ட்விச்சுக்கு சொந்தக்காரனுடைய வாயும் திறந்திருக்கிறது. அந்த திறந்த வாய்க்குள் போகவேண்டிய சாண்ட்விச் இவருடைய வாய்க்குள் போய் முடிகிறது.

சாண்ட்விச்சை சாப்பிட்டபோது தான் படித்த கிராமத்துப் பள்ளிக்கூடத்தை நினைத்துக் கொண்டார். அங்கே அவருடைய ஆசிரியர் தோடம்பழத்தைக் கொண்டுவந்து வகுப்பறையில் தோல் உரித்து சாப்பிடுவார். மிக நல்ல மாணவனுக்கு அன்று அந்த தோல் பரிசாகக் கிடைக்கும். மாணவர்களுக்கிடையில் தினம் சண்டை நடக்கும், அந்த தோலை சாப்பிடுவதற்கு. அந்த தோலிலும் பார்க்க இந்த சாண்ட்விச் ருசியாகவே இருந்தது. தலைமையாசிரியர் முன்பு இவர் நிற்கிறார். குற்றம், காலை ஒன்பது மணிக்கு வகுப்பில் மதிய உணவை சாப்பிட்டது. அன்று முதல் நாள் என்றபடியால் இவர் மன்னிக்கப்படுகிறார்.

இரண்டாவது நாள். மாணவர்கள், பாடத்தை எப்படியாவது கடத்த வேண்டும் என்று இவரிடம் கேள்விமேல் கேள்வி கேட்கிறார்கள்.

- நீங்கள் எங்கேயிருந்து வருகிறீர்கள்?
- அயர்லாந்து.

- அங்கே என்ன இருக்கும்?
- ஆடுகள்.
- அயர்லாந்தில் அழகான பெண்கள் இல்லையா?
- இருக்கிறார்கள்.
- அங்கே பெண்களுடன் நீங்கள் வெளியே போவீர்களா?
- இல்லை, ஆடுகளுடன்.

இரண்டாம் நாளும் தலைமையாசிரியர் முன் நிற்கிறார். 'எனக்கு முறைப்பாடு வந்திருக்கிறது, நீங்கள் ஆடுகளைப் பற்றி தரக்குறைவாகப் பேசுகிறீர்கள் என்று.'

இரண்டு நாட்களில் இரண்டு மன்னிப்புகள். இப்படி ஆரம்பித்த இவருடைய ஆசிரிய வாழ்க்கை நியூயோர்க்கில் 30 வருடங்கள் தொடர்கிறது. நாலு பள்ளிக்கூடங்களிலும், ஒரு கல்லூரியிலும் கடமையாற்றிய தன் அனுபவத்தை ஒளிவு மறைவின்றி வாசகருடன் பகிர்ந்து கொள்கிறார். இவர் எழுதிய புத்தகத்தின் பெயர் Teacher Man; ஆசிரியருடைய பெயர் Frank McCourt. அவர் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்தபோது அவரை யாரும் கண்டுகொள்ளவில்லை. சமுதாய அடுக்கில் ஆகக் கீழ்மட்டத்தில் இருந்தார். அவருக்கு கிடைத்த கட்டளை மாணவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவேண்டும். பயத்தைப் பரப்ப வேண்டும். பரீட்சை வைக்க வேண்டும். விடைத்தாள்களை திருத்த வேண்டும். பாரங்களை நிரப்பவேண்டும். வாரத்தில் ஐந்து நாட்கள், நாளுக்கு ஐந்து பாடங்கள். முப்பது வருடங்கள். 12,000 மாணவர்கள்; 33,000 வகுப்புகள்.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற எட்டு வருடத்தில் அவர் Angela's Ashes என்ற புத்தகத்தை எழுதுகிறார். அப்போது அவருக்கு வயது 66. அதுவே அவருடைய முதல் புத்தகம். அது புலிட்சர் பரிசை வென்றது. National Book Award ஐயும் பெற்றது. அதைத் தொடர்ந்து 'Tis என்ற புத்தகத்தை எழுதுகிறார். இரண்டுமே சுயசரிதைப் புத்தகங்கள். திடீரென்று அவருக்கு உலகப் புகழ் கிடைக்கிறது. வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியை சந்திக்கிறார். போப்பாண்டவரை சந்திக்கிறார். ரேடியோ, பத்திரிகைகள், இலக்கிய இதழ்கள் போட்டி போட்டுக்கொண்டு அவரைப் பேட்டி காணுகின்றன. விளையாட்டு வீரர்களுக்கும், நடிக நடிகையருக்கும், அரசியல்வாதிகளுக்கும் ஒதுக்கப்பட்ட தொலைக்காட்சி இவரைப் பேட்டி காண்கிறது. பள்ளிக்கூடப் பாடத்திட்டம் பற்றி இவரிடம் அபிப்பிராயம் கேட்கிறார்கள். நம்பமுடிகிறதா? கேவலம், ஒரு பள்ளி ஆசிரியரிடம் கேட்கிறார்கள்.

ஒரு முறை பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்த கோமாட்டி Sarah Ferguson இவருடைய செவ்வியை பதிவு செய்தார்.

-'நீங்கள்தான் நான் பேட்டிகாணும் முதல் எழுத்தாளர்.'

-'நீங்கள்தான் என்னுடைய முதல் கோமாட்டி.'

நியூயோர்க் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக கடமையாற்றும்போது இவர் அனுபவித்த வறுமை சிறுவயதில் அயர்லாந்தில் அனுபவித்ததைவிட மோசமானதாக இருக்கிறது. அவர் இருந்த அறையில் ஆகக்குறைந்த அடிப்படை வசதிகளே இருந்தன. சுடு தண்ணீர் கூடக் கிடையாது. கட்டணம் செலுத்தாததால் ஒரு முறை மின்சாரத்தை வெட்டிவிடுகிறார்கள். குளிரில் விறைத்து இறந்து போய்விடுவார் என்று பட்டது. இவரிடத்தில் மின்சாரத்தில் வேலை செய்யும் போர்வை இருந்தது. கீழ்வீட்டு நண்பரிடம் கெஞ்சி, அவருடைய மின்சார இணைப்பில் போர்வையை சூடாக்கி அதற்குள் படுத்துக் கொள்கிறார். பல மாதங்கள் அப்படியே காலம் தள்ளிய பிறகுதான் மின்சாரக் கட்டணம் கட்டுகிறார்.

இன்னொரு முறை இவரிடம் கையில் 48 சதம்தான் இருக்கிறது. சாப்பிட்டால் ரயிலுக்கு காசு போதாது; ரயில் கட்டணம் கொடுத்தால் பட்டினி கிடக்கவேண்டும். (புதுமைப் பித்தனுடைய 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' கதையிலும் இப்படி ஓர் இடம் வரும்.) இவர் மூளையிலே ஓர் எண்ணம் தோன்றுகிறது. மாணவர்களிடம் அவர்கள் படிக்கவேண்டிய புத்தகம் ஒன்றை வாங்குவதற்காக பணம் சேகரித்து அந்தக் காசை ரயில் செலவுக்கும், உணவுக்கும் பயன்படுத்துகிறார். ஒரு வாரமாக இப்படி சமாளிக்கிறார். பிறகு சம்பளம் கிடைத்ததும் மாணவர்களுக்கு புத்தகத்தை வாங்கிக் கொடுக்கிறார்.

அவருடைய மாணவர்கள் வாய் திறந்தால் உலகத்து மூடத்தனத்தின் கூட்டுத் தொகை ஒரு படி கூடும் என்று சொல்கிறார். அவர்களைச் சமாளிப்பதற்கு சிறப்பான பயிற்சி தேவை. சக ஆசிரியர்களுக்கு இப்படி ஆலோசனை வழங்குவார். 'வகுப்பிலே நீங்கள் படிப்பிக்கும்போது உங்களுக்கு உதவி செய்ய ஒருவருமில்லை. ஒரு சக்திக்கு எதிராக வகுப்பிலே 125 சக்திகள். அவை எந்த நேரத்திலும் வெடிக்க தயாராக இருக்கும் குண்டுகள். அவர்கள் இளையவர்கள். அவர்களுடைய வேலை பெரியவர்களை இந்த பூமியில் இருந்து தள்ளிவிடுவது. உங்கள் வேலை பூமியில் இருந்து விழாமல் தப்புவது.'

மக்கோர்ட் ஒரு பள்ளிக்கூடத்திலும் நிலைப்பதில்லை. அடிக்கடி வேலையிலிருந்து நீக்கப்படுவார். வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்க அவருக்கு தெரியாது. அதிகாரிகளைக் கண்டாலும் பிடிக்காது. பள்ளிக்கூடத்து விதிகளை உடைத்தபடியே இருப்பார். சீவார்ட் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கும்போது அவருடைய மனைவி கர்ப்பமாக இருக்கிறார். ஆகவே வேலை போய்விடக்கூடாது என்பதில் எச்சரிக்கையாக செயல்படுகிறார். இருந்தும் ஒருநாள் தலைமையாசிரியருடன் மோதல் ஏற்படுகிறது.

'ஆ, மக்கோர்ட். உங்கள் மனைவி கர்ப்பம் என்று அறிகிறேன்.' 'ஆமாம், கர்ப்பம்தான்.'

'ஆண் குழந்தையா, பெண் குழந்தையா பிடிக்கும்?'
'எதுவாயிருந்தாலும் பரவாயில்லை.'
'பரவாயில்லையா? இரண்டுக்கும் இடையில் வந்தால் என்ன செய்வீர்?'
'ஒன்றும் செய்யமாட்டேன். அதை வளர்த்து தலைமையாசிரியர் ஆக்குவேன்.'

சொல்லவே தேவையில்லை. வெகு சீக்கிரத்தில் மக்கோர்ட்டின் வேலை பறிபோய்விடுகிறது.

ஸ்டூவ்சென்ற் உயர்நிலைப் பள்ளியில் படிப்பித்தபோதுதான் இவர் மிகவும் பிரபலமாகிறார். ஏனென்றால் இவர் படிப்பிக்கும் முறையில் சித்திரவதை கிடையாது. மாணவர்கள் சுயமாக சிந்திப்பதை ஊக்குவித்தபடியே இருப்பார். வீட்டு வேலைகளோ, பரீட்சைகளோ எப்போதாவது ஒன்று இருக்கும். இங்கே இவருக்கு முழு சுதந்திரம் கொடுத்திருந்தார்கள். இவருடைய வகுப்பிலே சேர மாணவர்களிடம் ஒரே போட்டி. அவர்கள் தொகை நூற்றுக்கு மேலே போய்விடும். ஆசனங்கள் இல்லை. சிலர் ஜன்னல் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு படிப்பார்கள்.

கற்பிக்கும்போது அலுப்பு தரக்கூடாது என்று மக்கோர்ட் எப்போதும் புதிய வழிகளை புகுத்தியபடியே இருப்பார். ஒரு நாள் மாணவர்களிடம் அவர்கள் வீட்டு சமையல் குறிப்புகளை கொண்டுவரச் சொன்னார். சமையல் குறிப்புக்கும் இலக்கியத்துக்கும் என்ன சம்பந்தம்? இவர் சமையல் குறிப்புகளில் இருந்து புனைவு இலக்கியம் கற்றுக் கொடுத்தார்.

இன்னொரு நாள் தனக்கு வந்த மன்னிப்பு கடிதங்களை எல்லாம் சேகரித்தார். 'பதினாறு சக்கர ட்ரக் வண்டி எங்கள் வீட்டுக் கூரையில் ஏறிவிட்டது.' 'மேல் வீட்டுக்காரரின் பைப் உடைந்து கீழ் வீடு நிரம்பிவிட்டது.' 'ஆங்கில நோட்டுப் புத்தகம் ரயில் வண்டியில் நூறு மைல் தூரம் போய்விட்டது.' மன்னிப்புக் கடிதம் எழுதுவதில் மாணவர்களின் கற்பனையை எட்டாத உயரத்துக்கு தூக்கிவிடுவார். சோதனைக்கு அவர் தரும் தலைப்பு 'ஆதாம் மன்னிப்புக் கேட்டு கடவுளுக்கு எழுதிய கடிதம்.'

குழந்தைகள் பாடலையும் விட்டு வைக்கவில்லை. கவிதை ரசனை என்பதை அங்கேயிருந்து ஆரம்பித்தார். Little Bo Peep தன்னுடைய ஆட்டைத் தொலைத்துவிட்டாள். பரவாயில்லை, ஆடுகளை சும்மா விடுங்கள், அவை தானாகவே வீட்டுக்கு வரும். அவருடைய மாணவர்களுக்கும் அது பொருந்தும். மாணவர்களை தொந்திரவு செய்யாதீர்கள். நெருக்காதீர்கள். போதிய அவகாசம் கொடுத்தால், அவர்கள் தானாகவே சிந்தனையை வளர்த்துக்கொள்வார்கள்.

ஒரு நாள் ஒரு மாணவியின் தாயார் இவரைப் பார்க்க வருகிறார். 'என் மகள் உங்கள்

வகுப்பில் படிக்க ஆசைப்படுகிறாள். நான் விதவை. அவளுக்காக என்னவும் செய்வேன். தயவு செய்து ஓர் இடம் கொடுங்கள். வேண்டுமானால் ஓர் இரவு உங்களுடன் கழிக்க எனக்கு சம்மதம்.' இப்படி பல சம்பவங்களை புத்தகம் முழுக்க சுவையுடன் சொல்லிக்கொண்டே போகிறார்.

ஒரு பள்ளிக்கூட ஆசிரியரின் முப்பது வருட வாழ்க்கையில் என்ன சுவாரஸ்யம் இருக்க முடியும்? இருக்கிறது. ஆச்சரியம் என்னவென்றால் மக்கோர்ட்டால் சாதாரணமாக ஒரு வசனம் எழுதமுடியாது. தேய் வழக்குகள், தேய்ந்த வார்த்தைகள் வராது. என்ன சொன்னாலும் அதை புதுவிதமாக, மனதில் தைக்கும்படி சொல்லிவிடுகிறார்.

இன்னொரு காரணம் அவர் பெயரிலேயே இருந்தது. Frank. எதையும் வெளிப்படையாகவே சொல்கிறார். ஒளிவு மறைவே கிடையாது. சுயசரிதை எழுத்துக்கு இது மிகவும் முக்கியம். அவருடைய உள்வாழ்க்கைக்கு எங்களை அழைத்துச் செல்லும்போது ஆரம்பத்திலேயே ஒருவித அந்நியோன்யத்தன்மை கிடைத்து, அவர் சொல்லும் அனைத்தையும் நம்புகிறோம்.

அவரிடம் காணப்படும் நகைச்சுவை; கூர்த்தமதி. உடனுக்குடன் அவர் கொடுக்கும் பதிலடிகள் நூல் முழுக்க விரவியிருக்கும். எழுத்தில் எளிமை. இவருடைய மாணவர் ஒருவர் பெரிய பெரிய வார்த்தைகளை எல்லாம் புகுத்தி கட்டுரை எழுதுவார். இவர் குறுக்காக வெட்டி 'எளிமை' என்று எழுதுவார். மாணவருக்கு கோபம் வரும். எத்தனை அகராதிகள் பார்த்து, எத்தனை பெரிய வார்த்தைகளை அவர் இணைத்திருக்கிறார். அகராதியில் ஒரு பெரிய வார்த்தை இருந்தால் அதை எப்படியும் அந்த மாணவர் தூக்கி வசனத்தில் போட்டுவிடுவார்.

'எளிமையாக எழுது. ஒரு பெரிய வார்த்தை இருந்தால் அது தன்பாட்டுக்கு இருந்துவிட்டு போகட்டும். உன் எழுத்துக்கு பெரும் எதிரி செயற்கைத்தன்மை' என்று அவரை வழிப்படுத்துவார்.

மக்கோர்ட் இயற்கையாகவே நல்ல கதை சொல்லி. எதைச் சொல்லவேண்டும், எந்த ஒழுங்கில் சொல்லவேண்டும் என்பது அவருக்கு கைவந்தது. அவர் விவரிக்கும் சம்பவங்கள் சிரிக்கவைக்கும் அதே சமயத்தில் ஏதோ ஒரு விதத்தில் உங்கள் அடிமனதைப் போய் தொட்டுவிடும். மக்கோர்ட்டுக்கு இப்போது வயது 75. மூன்று புத்தகங்கள் எழுதிய களைப்பில் ஓய்வாக இருக்கிறார். விரைவில் நாவல் ஒன்று எழுதப் போவதாக அறிவித்திருக்கிறார். சமீபத்தில் நிருபர் ஒருவர் அவரைப் பேட்டி கண்டபோது அவரிடம் வெளிப்பட்ட எள்ளலும், நகைச்சுவையும் எப்பொழுதும்போல் இன்றைக்கும் கூராகவே இருக்கிறது. 'உங்களுக்கு, நீங்கள் எழுதிய Teacher Man புத்தகம் பிடித்திருக்கிறதா? 'பிடிக்கவில்லை. சுத்தமாகப் பிடிக்கவில்லை. ஆனால் வெளியீட்டாளருக்கு

பிடித்திருக்கிறது. எடிட்டருக்கு பிடித்திருக்கிறது. வாசகருக்கும் பிடித்திருக்கிறது.'
'உங்களுக்கு பிடித்த எழுத்தாளர்கள் யார்? 'சேக்ஸ்பியர், ஜேம்ஸ் ஜோய்ஸ், மார்க் ட்வெய்ன். ஆனால் நான் என் படுக்கைக்கு பக்கத்தில் வைத்திருப்பது P.G.Wodehouse தான்.'
'உங்களுடைய Angela's Ashes புத்தகத்தை உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் பாடப் புத்தகமாக வைத்திருக்கிறார்கள், தெரியுமா?' 'நல்லது. தயவுசெய்து அவர்களிடம் சொல்லுங்கள் அதில் பரீட்சை வைக்கவேண்டாம் என்று. அது ஒரு சித்திரவதை ஆயுதம் அல்ல; மகிழ்ச்சியூட்டும் புத்தகம்.' 'உங்கள் புத்தகத்தை மேலோட்டமாகப் படிக்கக்கூடாது. நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள் என்பதை அடி ஆழத்தில் கண்டுபிடிக்கவேண்டும்.'
'அப்படியா! அதைக் கண்டுபிடித்ததும் எனக்கும் சொல்லுங்கள்?'

Frank McCourt's Angela's Ashes..ஒரு படைப்பு அதைப் படைத்தவரிலும் பார்க்க உயர்ந்ததாக இருக்கவேண்டும் என்று சொல்வார்கள். எந்தவொரு படைப்பாளியைப் பார்க்கும்போதும் எனக்கு அப்படியான உணர்வுதான் தோன்றும். அவருடைய படைப்பு அவரை மிஞ்சியதாகவே இருக்கும். மிகச் சில படைப்பாளிகள் தங்கள் படைப்புகளிலும் பார்க்க சிறந்த ஆளுமையுடன் காணப்படுவதும் உண்டு. ஆனால் •பிராங்க் மக்கோர்ட்டைச் நான் சந்தித்த இரு தடவைகளும் அவர் இந்த விதிகளுக்குள் அடங்கவில்லை. அபூர்வமான ஒருவராகவே காணப்பட்டார். அவருடைய பேச்சு, அவர் எழுதிய புத்தகம் அளவுக்கு அதே சுவாரஸ்யத்துடன் இருந்தது. கேள்விகளுக்கு பதில் அளித்தபோது சபை விழுந்து விழுந்து சிரித்தது. பதில் நகைச்சுவையாக மட்டுமில்லை, அறிவை தூண்டிவிடுவதாகவும் இருந்தது.

அவரிடம் புத்தகத்தில் கையெழுத்து வாங்கினேன். சேர்ந்து படம் பிடித்துக் கொண்டேன். முற்றிலும் வேற்று ஆளாக இருந்தார். அவர் புத்தகங்களில் காணப்பட்ட கனிவும், நேசமும் அவரிடம் இல்லை. முகத்தில் வெறுப்பும், சலிப்பும் மட்டுமே எஞ்சி இருந்தன. நான் சந்தித்த மனிதர், அவருடைய புத்தகத்தை படிக்கும்போது என் மனதிலே நான் எழுப்பிய உருவம் அல்ல.

பல சமயங்களில் எனக்குத் தோன்றும் ஒரு எழுத்தைப் படைத்தவரை சந்திக்காமல் இருப்பதே உத்தமம் என்று. இனிமேல் மக்கோர்ட்டை எங்கே கண்டாலும் அவர் இருக்கும் திசைக்கு எதிர் திசையில் போவேன். இவர் புத்தகத்தை எங்கே கண்டாலும் உடனேயே வாங்குவேன்.

amuttu@gmail.com
பதிவுகள், ஜனவரி 2007 இதழ் 85

5. தமிழ் நாட்டுக் கலைகளின் சீர்மையும் சீரழிவும் - இன்றைய சித்திரம்! - வெங்கட் சாமிநாதன் -

பழமையின் பிடிப்பிலேயே புதிய பிம்பங்களை உருவாக்கி நம்மைத் திகைக்க வைக்கும் வித்யா சங்கர் ஸ்தபதிதமிழகக் கலைச் சூழல் பற்றி எழுதுவது சிக்கல்களிலும் முரண்களிலும் அகப்பட்டுத் தவிப்பதாகும். கலைவடிவங்கள் அத்தனையும் ஒரு சீரான கலை உணர்வால் பேணப்படுவதில்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு வித சூழல்களால் ஆக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன. அழிக்கப்பட்டு வருபவை ஏதோ மகோன்னத வாழ்வு வாழ்வதாக பெருமை பேசப்பட்டு வருகின்றன. தம் கலைப் பண்புகள் அதிகம் பாதிக்கப்படாது ஏதோ தன் பாட்டில் தம்மைக் காத்து வரும் கலைகள் கலை உணர்வின் தாக்கத்தால் தான் தொடர்ந்து ஜீவிக்கின்றன என்றும் சொல்லமுடியாது. இப்படி பொதுப்படையாகச் சொல்லிச் செல்வது முரண்களையும் சிக்கல் களையும் தெளிவாகச் சொல்வதாகாது. ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லவேண்டும்.

ஒரு பொதுவான பாகுபாட்டில் இக்கலைகளின் வாழ்நிலையைக் கொண்டு இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம் முதலாவது, மரபார்ந்த நீண்ட வரலாறு கொண்ட வடிவங்கள். மற்றது புதியன ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் இம்மண்ணில் அறிமுகப்படுத்தவை.

ஒரு உதாரணத்தோடு இதை விளக்கலாம்: நீண்ட பாரம்பரியம் கொண்ட ஒன்று: சங்கீதம். புதிய கலைவடிவம் ஒன்று; சினிமா. இரண்டிலும் நான் நேர் எதிர் துருவங்களின் கோடியில் இருக்கும் இரு உதாரணங்களையே எடுத்துக் கொள்கிறேன். எம்.டி.ராமனாதனின் சங்கீதம் ஒரு புறம். மிகவும் பண்பட்ட, நுண்ணிய சங்கீத ரசனை கொண்டவர்களையே கவரும் குணம் கொண்டது இது. இதற்கு எதிராக மகோன்னத வெற்றி என்று கொண்டாடப்படும் ஒரு தமிழ்த் திரைப்படம். எதிலுமே ஒன்றும் அறியாத பாமரனானாலும் சரி, நல்ல சங்கீத உணர்வு கொண்டவரானாலும் சரி, இருவரது சினிமா பற்றிய எதிர்வினைகள் ஒரே தரத்ததாக, தமிழ்க் கலைச் சூழலில் இருப்பது ஒரு முரண் வினோதம். திரைப்படம் என்றால் காசு கொடுத்துப் பார்க்கும் வெகுஜனங்களின் அதம பொது ரசனைதான், எல்லோருடைய ரசனையும். "என்னய்யா படம் எடுத்திருக்கே?" என்று யாரும் கேள்வி கேட்கலாம். அது நியாயம் தான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகிறது.

ஆனால், இதற்கு எதிராக, நிரம்ப படித்த அறிவாளியும் சரி, பாமரனும் சரி, எம்.டி. ராமனாதனின் சங்கீதத்தைப் பற்றி அபிப்ராயம் சொல்லும் தகுதி தனக்கு இருப்பதாக நினைக்கக் கூட மாட்டார்கள். "அதெப்படிங்க, அதெல்லாம் ரொம்ப பெரிய விஷயம் இல்லிங்களா? சங்கீதம் தெரியாம அது பத்தி எல்லாம் எப்படிங்க பேசறது?" என்பது தான் ஒருமித்த அபிப்ராயமாக தமிழ் நாடு முழுதும் இருக்கும். அது சினிமாவுக்குள் நுழைந்ததும்,

அவ்வக்கால வெகுஜனம், மாறிவரும் ரசனைக்கேற்ப, தனக்கு அந்த தகுதி வந்துவிட்டதாக கருதுகிறது. நாற்பதுகளில் படித்தவனும், பாமரனும் ரசித்தது, (சந்தையில் வியாபாரம் முடிந்து இரவு ஆட்டம் பார்த்துத் தன் கிராமத்துக்குத் திரும்பும் வண்டிக்காரன் பாடிக்கொண்டும் போக, நான் கேட்டது) "அப்பனைப் பாடும் வாயால் பழனி ஆண்டி சுப்பனைப் பாடுவேனோ?" வாக இருந்தது. இருபது வருஷங்களுக்குப் பின் அது சற்று மாறியது. அறுபதுகளில் அவர்கள் ரசித்துக் கேட்பது "போனால் போகட்டும் போடா" வாக இருந்தது, இன்று அது "அண்டங்காக்கா கொண்டைக்காரி"யாக இருக்கிறது.' இன்று தமிழ்த் திரைப்படம், கலை உணர்வையே, அது எத்தரத்தினதாக இருந்தாலும் சரி, அதை தனக்கு எதிரியாக நினைக்கிறது. கலை உணர்வு அலட்சியப்படுத்தப்பட வேண்டிய ஒன்று என்று நினைக்கிறது. எவ்வளவு அதிக பட்சமான மக்களை ஈர்ப்பதையும் அவர்களின் உடனடி கிளுகிளுப்புக்கு தீனி போடுவதையுமே தனது ஒரே இலக்காகக் செயல்படுகிறது. சினிமாவின் ஆரம்ப காலத்திலிருந்து அதன் தரம் படிப்படியாக தேய்ந்து இன்று அது தரத்தின் அடிமட்டத்திற்கு போனது மட்டுமல்லாமல், சாதாரண பொதுப்புத்தி கூட ஏற்க இயலாத ஒன்றாக ஆகியுள்ளது. தமிழ் நாடு என்றுமே 'சினிமா' என்ற சாதனத்தைக் கலைவடிவாக புரிந்து கொண்டது இல்லை. இருந்த போதிலும், ஆரம்ப காலங்களில் அதில் ரசிக்கக் கூடியதாக, இன்றும் கூட நம்மை மகிழ்விக்கும் குணம் உள்ள ஒன்றாக இருந்தது. காரணம், அதில் அந்நாட்களில் பிரதான அம்சமாகக் கருதப்பட்ட சங்கீதம் தான். அது கேவலப்படுத்தப்படாத காரணம், மறுபடியும், சங்கீதத்திற்கு இருந்த பாரம்பரியமும், மரபும் தான்.

சங்கீதத்திற்கு அதன் செவ்விய தளத்தில் (in its classical form) ஒரு நீண்ட பாரம்பரியமும் வரலாறும் உண்டு. இரண்டாயிரம் வருடங்களுக்குக் கூட அதை நீடிக்கலாம். இதை விவரம் தெரிந்தவர் மட்டுமல்ல, எதெற்கெடுத்தாலும் மக்களை முன் வைக்கும் அரசியல் கட்சிகளும் ஒப்புக்கொள்ளும். காரணம், இன்றைய கர்னாடக சங்கீதத்தின் அன்றைய வடிவை இன்று நாம் தமிழிசை என்று சொல்கிறோம். தம் அரசியலை அதன் ஆதாரத்தில் கட்டமைக்கும். மிக நியாயமான கோரிக்கையாக, தமிழில் பாடவேண்டும் என்பார்கள். திருவாரூர் மும்மூர்த்திகளுக்கும் முன் இருந்த மும்மூர்த்திகளை ஏன் மறந்தீர்கள் என்பார்கள். இதில் சாதி அரசியல் இருந்தாலும் சங்கீதத்தின் செவ்விய தளம் கேள்விக்குள்ளாகவில்லை. ஏனெனில் அது இன்றைய இவர்களது உருவாக்கம் இல்லை. அதன் செவ்வியத் தொன்மை பெருமைக்குரிய தாகிறது.

'மோகனம் வேண்டாம், ஏற்றப்பாட்டு பாடு, அது தான் மக்களைச் சென்றடையும்' என்று யாரும் அன்று சோனதில்லை. மோகனம் என்று நீங்கள் இன்று சொல்வதை அன்று முல்லைப் பண் என்றார்கள் என்று தான் மறுப்பு எழும். பெயர்களைப் பற்றிய பிரச்சினை இல்லை. செவ்விய வடிவத்திற்கு ஆபத்திருந்ததில்லை. நாடகங்களிலும் சரி, பின்னர் வந்த சினிமாவிலும் சரி, சங்கீதம் சங்கீதமாகத்தான் இருந்தது. முன்னூறு வருடங்களுக்கு முன் புரந்தர தாசரிடமிருந்து பெற்ற சிந்து பைரவி 'வெங்கடேச

நிலையம், வைகுண்டபுர வாசம்", அறுபது வருடங்களுக்குப் பின்னரும் எம்.எஸ் குரலில் அது சினிமாவில் "காற்றினிலே வரும் கீ தம்" ஆயிற்றே ஒழிய குணம் மாறவில்லை. "க்ருபயா பாலய சௌரே" என்று வெளிப்படும் சாருகேசி,....சினிமாவுக்கு ஒரு கேளிக்கையாக வந்தால் கூட சாருகேசியாகத்தான் இருந்தது தியாகராஜ பாகவதரின் "மன்மத லீலையை ..." பாட்டில் கூட. தியாக ராஜ பாகவதர் என்னும் முறையாக சங்கீதம் கற்றுக்கொள்ளாத, வெகுஜனப்ரிய சினிமா பாடகர் கூட "கா..கா... கா" பாடியிருப்பார் என்று நினைக்கமுடியாது. அவர் உயிரோடு இருந்தார். மதிப்புகளின் சரிவு அவர் ஜீவிய காலத்திலேயே தொடங்கியாயிற்று. ஆனால் அந்த சரிவு தொடர்ந்து இன்றிருக்கும் நிலையில், கர்நாடக சங்கீதத்தின் புகழ் வாய்ந்த பாடகர்கள் கூட, சினிமா அழைத்தால், சமரசம் செய்துகொள்ளத் தயாராகத்தான் இருக்கிறார்கள். சமரசம் எவ்வளவு கீழே என்பது அவரவர் மனப்பண்பைப் பொறுத்தது. அன்றைய பாபநாசம் சிவன், (இந்த நூற்றாண்டில் இவருக்கு இணையானவர் அல்லது அடுத்த படியில் உள்ளவர் என்று ஒரு வாக்கேயகர்த்தாவை நான் காணவில்லை) கூத்தாடிகள் கூடாரம் என்று அக்காலங்களில் நிந்திக்கப்பட்ட சினிமாவில் கால் பதித்தாலும், அவர் பாபநாசம் சிவனாகத்தான் இருந்தார். அவர் சினிமாவுக்குச் செய்த பங்களிப்பு அவருடைய பாடல்களும், இசையும், சினிமாவிலிருந்து பிரித்தாலும் தனித்தே அவை தம் செவ்வியல் குணத்தை சற்றும் இழக்காதவை.

ஆனால் இன்று எவ்வளவு புகழ் வாய்ந்த கவிஞரே ஆனாலும் அவரிடம் கொடுக்கப்படும் மெட்டுக்கு சொல்பவர் சொல்படி வார்த்தைகளை இட்டு நிரப்புகிறவர்தான். ரஹ்மானே இசையமைத்திருக்கலாம். பாட்டு எழுத வந்தவர் "ருக்குமணீ, ருக்குமணீ" என்று விளித்து முதல் இரவு என்ன நடந்தது என்று கேட்டு ஒரு டஜன் கிழவிகள் நடனமாடும் பாடலாக அது இட்டு நிரப்பபடும். அவர் எப்படியும் கேட்டபடி மாற்றிக் கொடுப்பார். அது தணிக்கைக்கு இரையாகாமல் இருக்கவேண்டும். சினிமாவில் அவர் கவிஞரும் இல்லை. இசையும் அது மக்கள் கூட்டத்தின் இன்றைய ரசனையைச் சொல்வதாக இருக்கும்.

ஆனால் கர்னாடக இசை, முன் சொன்னது போல இன்றும் வாழ்கிறது. சினிமாவின் பாதிப்பு அதற்கு ஆளாகும் பாடகர்களிடமிருந்து தமக்கு வேண்டியதைப் பெற்றுக்கொள்கிறதே அல்லாது கர்னாடக இசையை ஏதும் பாதகமாக பாதித்து விடவில்லை. கர்னாடக இசைக் கலைஞர்களுக்கு இன்று ஆதரவு பெருகியுள்ளது. உலகம் பூராவும் தென்னிந்தியர் வாழும் இடங்களில் எல்லாம் அவர்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. அவர்கள் ஒரு ராஜரத்தினமாகவோ, மதுரை மணியாகவோ இருக்கவேண்டும் என்ற அவசியல் இல்லை. துறையில் ஒரளவு பெயர் பெற்ற கலைஞர் வருடா வருடம் வெளிநாடு செல்லாதோர் மிகக் குறைவாகவே இருப்பர். சென்னையின் டிஸம்பர் விழாப் போன்று, அல்லது திருவையாறு தியாக ராஜ உத்சவம் (திருவையாற்றில் மட்டுமல்ல, இப்போது அது தமிழர் இருக்குமிடமெல்லாம் நிகழ்கிறது) போன்று அதற்கு இணையாக, அதன்

பிரும்மாண்டத்திலும் செல்வாக்கிலும், வேறு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன். "தமிழ் நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் சங்கீதம், நாட்டியம் பயிலும் குழந்தையைப் பார்க்கலாம்" என்பது பொதுவாக வங்காளிகளிடையே நிலவும் அபிப்ராயம். இது சற்று மிகைப்படுத்தப்பட்ட உண்மை என்று சொல்லவேண்டும். தமிழ் நாட்டில் செவ்விய கலைகளாக, சங்கீதத்திற்கும் நடனத்திற்கும் உள்ள ரசனையின் வியாபகமும் ஆதரவும், இந்தியாவில் வேறு எங்கும் எந்த செவ்விய கலைக்கும் இல்லை.

கர்னாடக சங்கீதம் அழியவில்லை. இன்றைய சினிமாவை மீறி, அரசியலை மீறி ராக்ஷஸ பலம் கொண்ட தொலைக்காட்சியையும் மீறி, அது தன்னைக்காத்துக் கொண்டுள்ளது சற்று நம்ப முடியாத ஆனால், சந்தோஷம் அளிக்கும் ஒன்று தான். காரணம் அதன் பாரம்பரியம் மிகப் பழமையானது. ஆழ வேரூன்றியது. மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன தான். முன்னர் போல அது ஜமீந்தார்களையும் கோவில்களையும் சார்ந்து வாழவில்லை. சபாக்கள், அரசு, மக்கள் என அதன் புரவலர்கள் மாறியுள்ளனர். காலமாற்றத்தின் விளைவு. யாரும் வறுமையில் வாடுவதில்லை. ஆனால் மகாராஜபுரம் விஸ்வநாதய்யர், திருவாடுதுறை ராஜரத்தினம் பிள்ளை, புல்லாங்குழல் மகாலிங்கம், மதுரை மணி அய்யர், எம்.டி. ராமனாதன் போன்ற கலைஞர்கள் இந்த தலைமுறையில் இல்லை. கர்னாடக சங்கீதம் ஒரு நாதோபாசனை என்று சொல்வதுண்டு. இன்று கர்னாடக சங்கீதம் உள்ள நிலையில் அதை நாதம் என்றோ உபாசனை என்றோ எவ்வளவுக்கு சொல்லமுடியும், எவ்வளவு பேரிடம் இதைக் காணமுடியும் என்பது எனக்கு சந்தேகமே. இவ்வளவு செல்வாக்கும் ஆதரவும் இருந்த போதிலும், இன்று அது பாடுதல் (performance) என்ற அளவிலேயே இருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது. அதை மீறி நாதத்தில் நம்மையோ, பாடுபவர் தம்மையேவோ மறந்து திளைக்கச் செய்யும் ஒரு அனுபவமாக(experience) எழுச்சி பெறுவது என்பது கிடைப்பதில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால், கற்ற காரணத்தால், செய்யுள் இயற்றத்தெரிகிறது, ஆனால் கவிதை பிறப்பதில்லை என்பது போலத்தான்.
இத்தகைய மீறலை, நிகழ்ச்சி அனுபவமாக எழுச்சி பெறுவதை நான் சில சமயங்களில், ஓ.எஸ் அருணிடம், சஞ்சை சுப்பிரமணியனிடம் கண்டிருக்கிறேன். அனேக மற்ற சமயங்களில், ' கச்சேரி எவ்வளவு நன்னா அமைஞ்சுட்டது பாத்தியா? என்பது போலத்தான் ஒரு உணர்வு. ஒரு கிஷோரி அமன்கரோ, உஸ்தாத் அமீர் கானோ, குமார் கந்தர்வாவோ பாடும்போது ஏற்படும் அனுபவ மெய்சிலிர்ப்பு வெகு அரிதாகத்தான் கர்னாடக சங்கீதத்தில் இன்று கிடைக்கிறது. ஸ்வரங்கள் ராகமாவது போல, ராகம் ஒரு நாத உலகமாக, ஒரு தவமாக, தன்னை மறந்த லயிப்பாக, சஞ்சாரமாக அனுபவ மாற்றம் பெறுவதில்லை. சங்கீதம் இரண்டு மணிக்கான நிகழ்ச்சி நிரலாக, மாறியுள்ளது. பாடகர்கள் தம் குரலைப் பற்றிக் கவலைப் படுவது என்பது முன்னரும் இருந்ததில்லை. இன்றும் இல்லை. தனக்காகப் பாடுவது, மற்றோர் கேட்பது என்பது இன்றைய நடைமுறையில் இல்லை. குமார் கந்தர்வாவின் மகன், ஏதோ ஒரு கிராமத்தில் ஒரு காளி கோயிலில் தங்கி பூஜை செய்வதும், கோயிலைச் சுத்தப்படுத்துமாக நாட்களைக் கழிப்பவர், பெயர் மறந்து விட்டது, எப்போதாவது யாராவது அழைத்தால்

படுவது என்று வாழ்க்கை மாறியுள்ளது அவருக்கு. அப்படி இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. அந்த மனம் வேண்டும். யாரும் தன் கவனத்தைக் கெடுத்தால், மனம் சரியில்லை என்றால், மேடையை விட்டு எழுந்து விடும் கிஷோரி அமன்கரின் சங்கீத அர்ப்பணிப்பு சங்கீதத்திற்குத் தேவை. சடங்காக உள்ள ஒன்று பூஜையானால் நல்லது. குறைந்தது அது அர்ப்பணிப்பாக, தன்னை மறத்தலாக அல்லது ஒரு பங்கு பெறும் அனுபவமாகவாவது ஆவது நல்லது. அப்போது தான் அது கலையாகும். இல்லையெனில் பயின்ற தொழில் தான்.

எல்லைகளை மீறி தன் செல்வாக்கைப் பெற்றுள்ளது. இது பெற்றுள்ள செல்வாக்கு வேறு நடன வடிவிற்கு இதுகாறும் இல்லை. சமூகத்தின் பழிப்புகளை மீறி இதை மீட்டுக் கொடுத்ததற்கு நாம் ருக்மிணி அருண்டேலுக்கும், ஈ.கிருஷ்ண ஐயருக்கும் நன்றி சொல்லவேண்டும். இந்த நடன வடிவம் நமக்கு அளித்த கலைஞர்கள், பால சரஸ்வதி, யாமினி கிருஷ்ணமூர்த்தி இருவருக்கும் ஈடானவர்களை வேறு எந்த இந்திய நடன வடிவமும் தந்ததில்லை. எதையும் மிகைபடக்கூறும் தமிழரின் இயல்பு தான் என்னிடமும் காணப்படுகிறது என்று ஒரு குற்றச் சாட்டு எழக்கூடும். ஆனால் இது உண்மை. அதே சமயம் நடனம் ஒரு மொழி, வெளிப்பாட்டு மொழி என்று தெரிந்து கொண்டால், இம்மொழியைக் கற்றுக் கொண்டவர்கள், கற்றுக் கொடுக்கப்பட்டதோடேயே தேங்கி விட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது. அதன் சாத்திய எல்லைகளை விஸ்தரிக்கவில்லை. கற்றுக்கொண்ட எல்லைகளை மீறவில்லை.

ஆங்காங்கே சில விதிவிலக்குகள் காணப்படுகின்றன. ஜஸ்டின் என்பவர் மதுரைக் காஞ்சியை நாட்டிய நாடகமாக ஆக்கினார். ஒரு பாதிரியார், ·ப்ரான்ஸிஸ் பார்போஸா என்பவர், மும்பையில் உள்ள சந்திரசேகரிடம் பரதநாட்டியம் பயின்றவர். 'பைபிளிலேயே நாட்டியம் பற்றி பேசப்பட்டுள்ளதே, முன்னர் தேவாலயங்களில் நடனம் ஆடப்பட்டதே, பரதமும் பக்தியின் வெளிப்பாடுதானே', என்று அவர் சிந்தனை செல்ல, கேரள சிரியன் கிருஸ்தவரான தேவசியாவின் கிறிஸ்து பாகவதம் என்னும் சமஸ்கிருத கிரந்தம் அவருக்குக் கைகொடுத்தது. பைபிள் கதைகளையும் சங்கீதப் பகுதிகளையும் பரதமாக்கினார். தில்லியில் நான் இருந்த போது அங்கு ஜமுனா என்னும் கலைஞர் வள்ளலாரின் பாடல்களுக்கு நடனமாடினார், பரதத்தின் கட்டமைப்புக்குள்ளே. வள்ளலாரை எடுத்துக் கொண்டது தான் பாதை மீறல். பின்னர் டெல்லியிலேயே, அமெரிக்காவிலிருந்து தாய் நாடு திரும்பிய தமிழ்ப் பெண்மணி ஒருவர், நடனக் கலைஞர் தான், (பெயர் ஞாபகமில்லை, அனேகமாக அனீதா ரத்னமாக இருக்கக்கூடும்) ஏ.கே ராமானுஜத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பில் சங்க அகப்பாடல்களுக்கு நடன வடிவம் கொடுத்து ஆடியதாகப் படித்தேன். தமிழ்ப் பெண், பரதம் ஆட மூலப்பாடல்கள் தமிழிலேயே இருக்க ஆங்கில மொழிபெயர்ப்பை ஏன் எடுத்துக் கொண்டார் என்பது தெரியவில்லை. இப்படி பல முயற்சிகள் அவ்வப்போது நிகழ்ந்தாலும், தமிழ் நாட்டில் பரதம் அதன் பழம் வடிவத்திலேயே, கற்றுக்கொடுக்கப்பட்ட பாணியிலேயே

நிகழ்த்தப்பட்டு வருகின்றது. நிகழ்ச்சியாகத்தான் (performance), இருக்கிறதே ஒழிய expression ஆக, சிருஷ்டிபரமாக ஆகவில்லை. இது பற்றி சொல்லப்படவேண்டிய நல்ல விஷயம் இது தான். பெயர் பெற்றுவிட்ட சிலர் இதை சினிமாத்தன நடிப்பாக்கியதும் மற்றும் சிலரிடம் இது வெறும் தேகப்பயிற்சியாகியுள்ளதும் இங்கு சொல்லப்படாமல் விடுபட்டுள்ளது. சங்கீதம் போலவே, அதனளவுக்கு இல்லாவிட்டாலும், பரதமும் உலகம் முழுதும் தன் செல்வாக்கை வியாபித்துள்ளது.

பரதம் போகட்டும். எந்த கலைஞனும் தன் அனுபவத்தை, தான் கற்ற கலை மூலம் வெளிப்படுத்த முயல்வது, தன் இன்றைய அனுபவத்தைச் சொல்வதுஎன்னும் வகையில் நடனத்தைக் கையாளும் பாதைகளை யாரும் தேர்ந்து கொள்ளவில்லை. கர்னாடக சங்கீதம் போல பரதமும் காப்பாற்றப்பட்டு வாழ்ந்து வருகிறது. சிருஷ்டி பரமாக என்று சொல்வதற்கில்லை.

இனி நாடகம் பற்றிப் பேசலாம். நாடகம் என்பதும் புதிய வரவு தான். 19-ம் நூற்றாண்டு இறுதி வருடங்களில் பம்மல் சம்பந்த முதலியார் இருபதாம் நுற்றாண்டு நாடகத்திற்கு வித்திட்ட ஆரம்பங்கள் பற்றிப் பேசும் போது அது தெருக்கூத்து போல சதங்கை கட்டி வாத்தியங்களோடு பாட்டுக்களின் ஒத்திகையோடு தான் ஆரம்பித்தது என்கிறார். அது மாறியது சென்னை வந்த ·பார்சி நாடகங்களின் தாக்கத்தால் தான் என்கிறார். அதற்கு முந்தி நடிகர்கள் நடித்து கதை நிகழ்த்தும் நாடகம் பற்றி தமிழர் ஏதும் அறிந்ததில்லை. அக்காலத்திலும் நாடகங்கள் அவற்றில் இடம் பெறும் இசைக்காகத்தான் பெயர் பெற்றன. பெரிய பாடகர்களின் பாட்டைக் கேட்கத்தான் மக்கள் குழுமினார்கள். அவை நாடகங்களாக இருந்ததில்லை. இசை நாடகங்களாக, ஆபெராக்களாகத்தான் இருந்தன. கதை என்னவாக இருந்தாலும், எந்த இடத்திலும் சம்பந்தமில்லாத, ஆனால் அந்த பாடகரின் தம்க்குப் பிடித்த பாட்டைப் பாடச்சொல்லி நிர்ப்பந்திப்பார்கள். திரும்பத் திரும்ப "once more" கூச்சல்கள் எழும். அந்த நாடகங்கள் மறைந்த சுவடு இப்போது காணப்படுவதில்லை. ஆனால் இருபதுகளில் முப்பதுகளில் கிட்டப்பா பாடிய பாட்டுக்கள் இன்றும் கேட்பது ஒரு சுக அனுபவமாக இருக்கும். "கோடையிலே இளைப்பாறிக்கொள்ள......" வுக்கு இன்றும் உயிர் உண்டு. வருடங்கள் எண்பதுக்கு மேல் ஆகிவிட்டன. ஆனால் அந்த நாடகங்கள் பாமரத்தனமானவை, அதன் மற்ற எல்லா அம்சங்களிலும். நேற்று வரையிலும் இதே கதை தான். நாடகம், ஆபெராவாக இருந்தது. பக்தி போதனை செய்தது. விடுதலைப் போராட்ட ஆயுதமாக இருந்தது. திராவிட இயக்க, அரசியல் பிரசார மேடையாக இருந்தது. மக்களை கிளுகிளுக்க வைக்கும் சிரிப்பு தோரணமாக இருந்தது. நாடகமாக அது என்றுமே தமிழ் நாட்டில் இருந்ததில்லை

இன்னும் ஒன்று, அக்காலங்களில் நாடகங்களை ஓரளவிலாவது கலை அனுபவமாக்கியது

அதன் இன்றியமையா அம்சமாக இருந்த சங்கீதம் தான். மற்ற எதுவும் பொருட்படுத்தத்தக்கதாக இல்லை. எல்லாமே ஒரு பாவனைதான். நடிப்பும் ஒரு பாவனைதான். பின்னாட்களில் ஏற்பட்ட ஒவ்வொரு மாற்றமும், நாடகத்தை ஒரு கலை சார்ந்த ஈடுபாடாக்கவில்லை. ஒரு நாடகாசிரியரைக்கூட அது தந்ததில்லை. கடைசியாக அது பெற்ற அவதாரம், சிரிப்பு தோரணம். அதுவும் இன்று இல்லை.

எழுபதுகளில் எழுந்த எளிய விழிப்புணர்வு எளியதாகவும் பலமற்றதாகவுமே ஆகியது. அப்படித்தான் இன்றளவும் உள்ளது. இந்திரா பார்த்த சாரதி, ந.முத்துசாமி போன்றோர் முயற்சிகள் எவ்விதத்திலும் தமிழில் கலாபூர்வமான நாடக இயக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை. சிரிப்பு தோரணமாக இருந்த நாடகம் ஒரு பரிதாபம் என்றால், அதனிடத்தில் வந்துள்ள நவீன நாடகம் அதன் பாவனையான seriousness-ம் பரிதாப உணர்ச்சியை எழுப்புவதுதான். துக்கம் அளவுக்கு அதிகமானால் அது பைத்தியக்காரச் சிரிப்பாக வெளிப்படுவதில்லையா? சந்தோஷம் அதிகமானால், கண்களில் நீர்வழிய அழுகை வந்துவிடுவதில்லையா? சிரிப்பு தோரணமாக தரப்படும் நாடகம் பரிதாப உணர்வைத் தந்தது போல, நவீன நாடகத்தின் அதி தீவிர serious பாவனைகள் நமக்கு சிரிப்பாகிப் போகின்றன. காவாலம் நாராயணப் பணிக்கரைப் பார்த்துப் போட்டுக்கொண்ட சூடு என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் எடுத்துக் கொள்ளும் பாஸரின் நாடகங்களுக்கு கூடியாட்ட உடல் மொழி, பேச்சு மொழி பொருத்தமாக இருக்கலாம். அதற்கு ஒரு பாரம்பரியம் இருக்கிறது. அவரும் வெகு கவனமாக அந்த குறுகிய வட்டத்தை விட்டு வெளியே கால் வைப்பதில்லை. ஆனால், தமிழ் நாட்டின் நவீன நாடகக் காரர்கள் உருவாக்கிக்கொள்ளும் உடல் பேச்சு மொழிகளுக்கு பாரம்பரியமும் இல்லை. அவர்களே உருவாக்கிக்கொண்ட இலக்கணமும் இல்லை. அவை வெறும் பைத்தியக்கார அங்க சேஷ்டைகளாகத்தான் சீரழிகின்றன. பேச்சும் அப்படியே. இதை எதிர்த்து யாரும் வாய் திறப்பதில்லை. நாடகக்காரரும் சரி, பார்வையாளரும் சரி வாலறுந்த நரி பார்த்த தெய்வ தரிஸனமாகத்தான் நவீன நாடகம் ஆகியுள்ளது. அதைப் பார்த்து வாலறுத்துக்கொண்ட மற்ற நரிகளும் உண்மையைச் சொல்வதில்லை. அனேகமாக எல்லாத் துறைகளிலும் தமிழ் நாடே வாலறுந்த நரிகளின் நாடாகிவிட்டதோ என்று தோன்றுகிறது. இந்த நரிகள் எல்லாமே தெய்வத்தைத் தரிசிப்பதாகத் தான் சொல்கின்றன.

இதிலும் ஒரு விதி விலக்கு. எந்த சித்தாந்தத்தையுமோ, நாடக பத்ததியையுமோ தன்னைக் கட்டுப்படுத்தாமல், தான் இயக்க எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நாடகத்திற்கும் அதற்கேற்ற வடிவையும் மொழியையும் தீர்மானித்து, இதுகாறும் தான் இயக்கிய எந்த ஒரு நாடகத்தையும் முன்செய்ததைப் போல் செய்யாது, ஒவ்வொன்றையும் ஒரு புது வடிவில் தருபவராக உள்ள செ.ராமானுஜம். ஏதும் கிடைக்காத போது மொழிபெயர்த்தோ, தழுவியோ, அல்லது தானே எழுதியோ தனித்து இயங்கி வருபவர் அவர்.
அவற்றில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியது, 'வெறியாட்டம்" ட்ராய் நகரப் பெண்களின் அவலத்திற்கு அவர் கொடுத்த ஒப்பாரி வடிவம். ஒற்றை மரம் தோப்பாகாது. ஒற்றை

ராமானுஜம் தமிழ் நவீன நாடகத்தின் போக்கையோ குணத்தையோ மாற்றிவிட முடியாதே.

முப்பதுக்களில் பேசும் சினிமா வந்தது, அப்போதிருந்த (ஆபெராவாக இருந்த) நாடகங்கள் தான் திரைப்படமாகின. அதிலும் பாட்டே முதலிடம் வகித்தது. நன்கு பாடத்தெரிந்தவர்களே சினிமாவில் நடிக்க எடுத்துக் கொள்ளப்பட்டனர். ஜி.என். பாலசுப்பிரமணியம், மகாராஜபுரம் விஸ்வனாத ஐயர், எம். எஸ் சுப்புலக்ஷ்மி, என். சி. வஸந்த கோகிலம் எம்.எம்.தண்டபாணி தேசிகர் போன்ற அன்றைய சங்கீதப் பெருந்தலைகள் சினிமாவுக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் தம் சங்கீதத்தைத் தான் சினிமாவுக்கு எடுத்துச் சென்றனர். சினிமா தான் சினிமாவாக இல்லையே ஒழிய அவர்களும் சங்கீதமும் தம் குணத்தை ஆளுமையை மாற்றிக்கொள்ளவில்லை. எப்படி புதிய வடிவான நாடகம், நாடகம் என்ற கலைவடிவாக மலரவில்லையோ அது போலவே, தமிழ் மண்ணுக்குப் புதிதாக வந்த சினிமா என்ற புதிய சாதனம், கலை வடிவாக உணரப்படவுமில்லை. பேணப்படவுமில்லை. அது ஒரு வியாபார, முழுக்க வியாபார சாதனமாகத்தான் கருதப்பட்டது. இன்று வரை அதன் கதி அதே தான். அன்று சினிமாவுக்கு வந்த வியாபாரிகளுக்கு அன்றைய சமூகம் கொண்டிருந்த சில தர்மங்கள் இருந்தன. வியாபாரத்திற்கும் ஒரு தர்மம் உண்டு என்று நினைத்தனர். "சம்பாதிக்கத்தான் வந்திருக்கிறோம். அதற்காக எதையும் செய்வது என்றில்லை" என்று தாம் மீறக்கூடாத வரையப்படாத ஒரு கோடு ஒன்று இருந்தது. இன்று அந்த மதிப்புகள் சரிந்து விட்டன.

ஆனால், சினிமா புதிய வரவு. அது தொடக்கத்திலிருந்தே வியாபாரிகளின் கைக்குப் போனது. இன்று அது சூதாட்ட குணம் கொண்ட பெரு வியாபாரமாகியிருக்கிறது. பல கோடிகள் பணம் போட்டு பலமடங்கு அதிக கோடிகள் உடனடியாக வசூல் செய்யப்படவேண்டிய நிர்ப்பந்தத்தை தானே உருவாக்கிக்கொண்டு ஒரு சூதாட்டமாக உள்ள ஈடுபாடாகியுள்ளது இது. ஆனால் ஆகவே, கடுகு உளுத்தப்பருப்பு மிளகாய்ப்பொடி என்ற தாளிக்கும் ரீதியில், கால்கள் தம்மிச்சையில் தாளம் போடும்படியான டான்ஸ், பாலியல் குறிப்புகளோடான பாட்டு, நாட்டுப்புற மெட்டு, மூன்று நான்கு சண்டைக் காட்சிகள், அவையும் நம்ப முடியாமலும், பிரமிக்கத்தக்கவையாகவும் இருக்கவேண்டும். பின் கதை ஒரு கிராமத்தானைப்பற்றியதோ, உள்ளூர் தாதாவைப்பற்றியதோ எதுவானாலும், டோரண்டோ, சிங்கப்பூர், நைஜீரியா, ·ப்ராங்க்பர்ட், நயாகரா நீர் வீழ்ச்சி அல்லது டென்மார்க்கில் ஒரு வீதி என்று டான்ஸ் ஆடும் பாட்டின் ஒவ்வொரு வரிக்கும் மாறிய இடம், மாறிய உடைகள் என்று நாலைந்து டான்ஸ் என்னும் ஒரு அவலட்சண கூத்தாட்டம். நான் நினைப்பதுண்டு, வெளிநாட்டு வீதிகளில் இப்படி ஒரு டான்ஸ் ஆடுகிறார்களே, வெட்கமாக இருக்காதா என்று. வெளி நாடு என்ன நம்மூரிலேயே, 45 வயது ஆண் பள்ளிப் பையனாக கால் சராயும், வாட்ட சாட்டமான இளமையின் பூரிப்பு கொண்ட நடிகை பள்ளிப்பெண்ணாக குட்டை ஸ்கர்ட் அணிந்து கொண்டு பத்திருபது அதே தரத்து மாணவ மாணவிகள் சூழ, "தரூவ்வ்வீவிய்ய்யா.. மாட்ட்டீடீய்ய்யா?.. என்று ஒரு

அலங்கோல நடனமாடுவது வெட்கம் தரும் காரியமாக இருக்காதா? இது ஒரு உதாரணமே. ஒவ்வொரு படத்திலும் இம்மாதிரி மூன்று அல்லது நான்கு ஜடம்கள் இருக்கும். "குண்டக்கா, மண்டக்கா" இல்லையெனில், "தள்ளாதே, தள்ளாதே, தாவணியைத் தள்ளாதே", இல்லையெனில் "சின்னவீடா வரட்டுமா, பெரிய வீடா வரட்டுமா?" இதென்ன பைத்தியக்காரத்தனம்? இதைப் பத்து லட்சம் பேர் பார்க்கமாட்டார்களா? எப்படிய்யா நான் வெளீலே தலை காட்டறது? என்று கேட்கமாட்டார்களா என்று நினைத்துக் கொள்வேன். இது நிறைய பணம் வசூலித்து விட்டால், இவர்கள் முதல் தர "கலைஞர்கள்" ஆகி விடுகிறார்கள். இந்த ஒரு பாட்டு, ஒரு நடனம், ஒரு ஜோடி நடிகர்கள் பற்றிய விஷயம் அல்ல. தமிழ் சினிமா முழுதுமே இப்படியான ஒரு மன அமைப்பு தயாரித்து சந்தைக்கு வைக்கும் பண்டமாக ஆகியுள்ளது. ஒவ்வொரு வருஷமும் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய்கள் இப்பண்டங்களைத் தயாரிக்க வீணாகின்றன என்று கேட்கும்போது மனம் வேதனைப்படுகிறது. இவ்வளவு குப்பைகளில் ஒரு அடி நீள ·ப்ரேம் கூட அருவருப்பு தராத, பொதுப்புத்தியைக் கேவலப்படுத்தாததாக கிடைக்காது.

இன்று தமிழ் சினிமா மற்ற எதையும் விட மிக முன்னேறிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. தொழில் நுட்பத்தில் இந்தியாவில் தமிழ் சினிமாதான் முன்னிற்பதாகவும் சொல்லப்படுகிறது. க்ரா·பிக்ஸ் என்றால் உலகத்தின் பல நாடுகளிலிருந்து எல்லோரும் குவிவது சென்னைக்கு என்று சொல்லப்படுகிறது. ஒவ்வொரு படத்தைப் பற்றி அது எப்படி என்ன புதிய தொழில்நுட்பத்தில் எவ்வளவு சிரமப்பட்டு எடுக்கப்பட்டது என்று சொல்லி கேட்பவரை அசத்திவிடுகிறார்கள். இங்கு ஒரு படம் திரையிடப்படுவதற்கு முன் கனடாவில், சிங்கப்பூரில், பாரிஸில் உள்ள தமிழருக்கு அது விசிடி யாக கிடைத்துவிடுகிறது. இப்படி ஒரு முன்னேற்றம். 75 வருட கால தமிழ் சினிமாவிற்கு ஒரு காட்சியைக் கட்டமைப்பது, ·ப்ரேமிங் என்றால் என்ன என்பது தெரியாது. காட்சி பூர்வமான கதை சொல்லல் என்றால் என்ன என்று தெரியாது. தமிழ் சினிமாவுக்கும் தமிழ் வாழ்க்கைக்கும் எந்த உறவும் இருப்பது இல்லை. முற்றிலும் அன்னியப்பட்ட ஒரு தொழிலாக தமிழ் சினிமா ஆகியுள்ளது. தமிழ் சினிமாவில் இப்போது தொழில் திறமை வாய்ந்த தொழில் நுட்ப வல்லுனர்கள் வந்துள்ளனர். நல்ல ஓவியக் கலைஞர்கள், தோட்டா தரணி, பி. கிருஷ்ணமூர்த்தி போன்றோர் art direction-க்கு வந்துள்ளனர். தமிழ் சினிமாவில் art direction என்றால் ப்ரும்மாண்டமான சம்பந்தமில்லாத செட்கள் அமைப்பது தான். சிறந்த காமிரா கலைஞர்கள் தம் திறமையைக் காட்ட கதையில் விஷயம் இருப்பதில்லை. நல்ல picture postcard காட்சிகளை உருவாக்கிக்கொடுத்துப் போகிறார்கள். இவற்றைத் தான் இன்றைய பெருந்தலை visual treatment என்று சொல்கிறார். ஒரு அடிப்படையான விஷயம். தான் சொல்லவந்த விஷயத்தை எப்படி திறமையாக சொல்வது என்ற கேள்விக்கு பதில் அளிப்பது தான் தொழில் நுட்பம். சிறந்த தொழில் நுட்பம் தன்னை மறைத்துக் கொள்ளும். நான் மதிக்கும் ஒரு தமிழ் சினிமா இயக்குனர், சொல்வார்: 'தமிழ் சினிமாவில் தொழில் நுட்பம் பிணத்துக்குச் செய்யும் அலங்காரம்' என்று. இன்றைய தமிழ் இலக்கியத்தில் தாம் வித்தியாசமானவர் என்று பெயர் வாங்கியவர்கள்

தமிழ் சினிமாவுக்கு வந்துள்ளனர். அவர்கள் தமிழ் சினிமாவில் தம் முத்திரை பதிப்பதற்குப் பதிலாக, தமிழ் சினிமா முத்திரையைத் தான் தமக்குப் பச்சை குத்திக் கொண்டுள்ளனர். இந்தக் கூடாரத்துள் நுழைவதற்கு முன் எதையெல்லாம் கேவலமாக, கேலியாகப் பேசினார்களோ அவற்றில் இப்போது அவர்கள் ஐக்கியமாகிவிட்டார்கள். காரணம் கொள்ளை கொள்ளையாகக் கிடைக்கும் பணம். முன்னர் கூத்தாடிகள் கூடாரம் என்று சினிமா இழிவு படுத்தப்பட்டது. அதில் ஜி.என்.பி. எம்.எஸ். பாபநாசம் சிவன், எம்.எம்.தண்டபாணி தேசிகர் போன்ற கலைஞர்கள் நுழைந்து தம் முத்திரை பதித்து தம் தடங்களை கௌரவப்படுத்தினார்கள். இன்று அந்த கூடாரம் கலைஞர்கள் உலகமாகச் சொல்லப்படுகிறது. அந்த கூடாரத்தில் இப்போது நடப்பது கூத்தாட்டமாகத் தான் இருக்கிறது. உள்ளே போகிறவர்கள் தம் அடியாளங்களை இழக்கிறார்கள். அவர்கள் தடம் தெரிவதில்லை.

அறுபதுகளில், ஜெயகாந்தன் தன் 'உன்னைப் போல் ஒருவன்' கதையைப் படமெடுத்தார். தன் வழியில். தன் பொதுப்புத்தியும் இலக்கிய உணர்வும் காட்டிய வழியில். அது ஒரு திருப்பமாக இருந்தது. மிக எளிய குறைந்த செலவிலான நேர்மையான ஒரு முயற்சி. அதைத் தொடர்ந்து ஜெயகாந்தன் ஒன்றிரண்டு படங்கள் முயன்றார். முதல் படத்தில் அவருக்கு இருந்த சமரசமற்ற துணிச்சல் மற்றவற்றில் இருக்கவில்லை. ஸ்தாபிதமாகிவிட்ட பெரிய முதலைகளின் மறைமுக எதிர்ப்புகளை அவரால் சமாளிக்க முடியவில்லை என்று தோன்றிற்று. இந்த முதல் அடிவைப்பு மற்றவர்களால் பலத்துடன் தொடரமுடியவில்லை. திக்கற்ற பார்வதி, பசி, போன்ற மிக எளிய முயற்சிகள் பின்னர் ஜெயபாரதியின் 'குடிசை', 'நண்பா, நண்பா', பூமணியின் 'கருவேலம்பூக்கள்', மகேந்திரனின் 'உதிரிப் பூக்கள்', என்று சொல்லிக்கொண்டு போகலாம். சுமார் நாற்பது வருடகால நீட்சியில் (ஜெயகாந்தனின் 1964-ன் உன்னைப்போல் ஒருவனிலிருந்து 2006 வரை) இப்படி ஒரு டஜன் படங்களை அதிகமாகக் குறிப்பிடலாம். இவற்றில் காட்சி பூர்வமான சலனம், குறிப்புணர்த்தல், யதார்த்தமான சித்தரிப்பு, அடங்கிய நடிப்பு, இயல்பான வாழ்க்கை என்று சினிமா என்று வகைப்படுத்தக்கூடிய குணங்களை வைத்துக்கொண்டு மதிப்பிட்டால், இவை எல்லாம் அங்கங்கு இந்த நிபந்தனைகளை ஒரளவுக்கு நிறைவேற்றுவன தான். ஆனால் நான் சினிமா என்று தொடங்குவதென்றால், பாலு மகேந்திராவின் 'வீடு' என்ற படத்துடன் தொடங்குவேன். அது ஒன்று தான் நான் குறிப்பிட்டுள்ள குணங்களை அதிக அளவு கொண்டுள்ளது. ஆனால், அவரும் இந்த ராக்ஷஸ் வியாபார உலகத்தில் கால் ஊன்ற முடியவில்லை. பல படங்களில் தன் சமரசங்களை எவ்வளவுக்கு குறைக்கமுடியும் என்று முயல்கிறார் தான். ஆனால் அந்த சமரசங்கள் தமிழ் ஜனங்களிடம் பலனளிப்பதில்லை. படம் முழுதும் தமக்கு வேண்டியதையே அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால் தான், வெளிநாட்டு படப்பிடிப்பு, நடனங்கள், வித விதமான ஆடை மாற்றங்கள், சண்டைக் காட்சிகள்(அதுவும் நிஜ சண்டையாக தோன்றக்கூடாது. கிட்டத்தட்ட நடனம் போல சர்க்கஸ் போல choreographed movements உள்ளவையாக இருக்கவேண்டும்) பாலியல் குறிப்புகள் கொண்ட

உரையாடல்கள், ஆடைகள், நடனங்கள், பாட்டுக்கள் எல்லாம் இருக்கவேண்டும். வினியோகஸ்தர்கள் கேட்பது, எத்தனை சண்டைக்காட்சிகள், வெளிநாட்டு படப்பிடிப்புகள்? என்று. ஒரு ரம்யாவை சம்பந்தமில்லாமல் மூன்று நிமிடம் ஆட வைத்துச் சேர்த்தால் அது பயனில்லை. பாலு மகேந்திரா மலையாளத்தில் படம் எடுக்கும் முறை வேறு. தமிழில் அது வேறு. மோகன் லாலும், மம்மூட்டியும் தமிழுக்கும் மலையாளத்திற்கும் தனித்தனி நடிப்பு பாணிகளைக் கையாள்கிறார்கள்.

ஒரு கட்டுண்ட பார்வையாளரைத் தயாராகப்(a ready captive audience) பெற்றுவிடும் தொலைக்காட்சிகள் கூட சினிமாவின் அலங்கோலத்தையே ஒவ்வொரு வீட்டுக்கும், குடிசைக்கும் தினம் தினம் எடுத்துச் செல்கின்றன. சினிமாவின் விளம்பர அங்கமாகியுள்ளது. சினிமா அல்லது கட்சிப் பிரசாரம் என்ற இரண்டு காரியங்களையே அது செய்கிறது. ஷியாம் பெனிகலின் 'பாரத் ஏக் கோஜ்' போன்றோ, 'மூசிக்கி ஏக் கோஜ்' போன்றோ ஒன்றை எந்த தமிழ் தொலைக்காட்சியிலும் பார்க்கக் கிடைக்காது. இனி வரும் என்றும் எதிர் பார்க்கமுடியாது. தமிழ் தொலைக்காட்சி தன் முன் ஒரு குடும்பத்தின் நாலைந்து பேர் ஒரு அறையில் 5 அல்லது 6 அடி தூரத்தில் இருப்பவர்களாக நினைப்பதில்லை. ஒரு பெரிய மக்கள் கூட்டமே தொலைக்காட்சிப் பெட்டியின் முன் இருப்பதாகத் தான் எண்ணி அவ்வளவு இரைச்சலும்,

தமிழில் எதுவும் மிகைப்படுத்தப்பட வேண்டும். எங்களுக்கு பந்தாக்கள் மிக தேவை. தமிழினமே கல் தோன்றி மண் தோன்றாக்காலத்தில் முன் தோன்றி மூத்த குடி. இங்கு எல்லாரும் கலைஞர்கள். கவியரசுக்கள், கவிப்பேரரசுகள், கவிக்கோக்கள், புன்னகையரசி, இலட்சிய நடிகர், மக்கள் திலகம், புரட்சி நடிகர், வித்தகக் கவிகள், தமிழினத் தலைவர்கள், உவமைக் கவிஞர்கள் இத்யாதி இத்யாதி. பெற்றோர் இட்ட பெயரைச் சொல்வது பண்பற்ற செயலாகிவிடும். எங்கள் தமிழ் தொலைக்காட்சிகள் நிறைய புலம்பும். அழும். இரைச்சலிடும். தமிழ் சினிமாவின் நீட்சி தான். அதற்கென தனி வாழ்வு கிடையாது. சினிமா இல்லையென்றால் தொலைக்காட்சிப் பெட்டிகள் எந்த வீட்டிலும் உயிர் பெறா.

இனி மிகுந்தது, அதிகம் சொல்ல இல்லாதது தமிழ் நாட்டின் நாட்டுப்புற கலைவடிவங்கள். இவற்றில் மிக முக்கியமானது, ஒரு சக்தி வாய்ந்த நிகழ்த்துக் கலை என்று சொல்லத்தக்கது தெருக்கூத்து. தெருக்கூத்து அதன் கிராமீய வடிவில் கோவில் சார்ந்து இருப்பதன் காரணமாக ஜீவித்திருக்கிறது. தில்லி அகாடமிகளின் காருண்ய பார்வையால், இவை கிராமத்தின் திரௌபதி அம்மன் கோயிலை விட்டு வெளியேயும் கால் பதித்தது. இந்தியா ஏற்பாடு செய்யும் கலைத் திருவிழாக்களின் அழைப்பு பெற்று ஐரோப்பா, ரஷ்யா என உலகம் சுற்றியும் வந்துள்ளது. மத்திய அரசின் மான்யமும் விருதுகளும் பெறுகிறது. ஜீவித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். நடேசத் தம்பிரான், கண்ணப்ப தம்பிரான் போன்ற பெரும் கலைஞர்கள் இதைச்

சிறப்பித்திருக்கிறார்கள். ந.முத்துசாமி கூத்துப் பட்டறை தோன்ற ஆதர்சமாக இருந்திருக்கிறார்கள்.

இவ்வளவு கவனமும் ஆதரவும் பெறாவிட்டாலும், இன்னமும்கோவில் சார்ந்து இருப்பதால், பொம்மலாட்டம் ஒரு சில இடங்களில் ஜீவித்திருக்கிறது. ஆனால் பொம்மலாட்டக்காரர்கள் அதையே சார்ந்து இருக்கமுடிவதில்லை. நிலமோ அல்லது வேறு எதுவுமோ தான் அவர்களுக்கு ஆதரவு. நாடகம் தோன்றியபோதே தெருக்கூத்து, பொம்மலாட்டம் போன்ற கிராமீய கலைகள் ஆதரவிழக்கத் தொடங்கிவிட்டன. சினிமாவும், தொலைக்காட்சியும் அனேகமாக எல்லாக் கிராமியக்கலைகளையும் அழித்து விட்டன என்று தான் சொல்லவேண்டும். தோல் பொம்மலாட்டம் பற்றிய குறிப்புகள் தமிழ் இலக்கியத்தில் 10-நூற்றாண்டிலிருந்து காணப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் அது தன் கடைசி மூச்சில் விழுந்து கிடக்கிறது என்று தான் சொல்லவேண்டும். மரப்பாவைக்கூத்து கோவில் சார்ந்திருப்பதால் கிடைக்கும் கொஞ்சம் ஆதரவும் தோல் பொம்மலாட்டத்திற்கு இல்லை.

வேடிக்கையாக, நாட்டுப்புற பாடல்கள் மாத்திரம் அதன் மாறிய கொச்சை வடிவில் தமிழ் சினிமாவை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளன. "மன்மத ராசா, மன்மத ராசா", "ஓடிப் போய் கல்யாணம் கட்டிக்கலாமா, கல்யாணம் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா" போன்றவற்றிற்கெல்லாம் பிறப்பிடம் நாட்டுப்புற மெட்டுக்கள் தாம். ஒரு காலத்தில், "வள்ளிக்கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும், உள்ளம் உருகுதடீ கிளியே" கிராமீய மெட்டின் அறிமுகமாக இருந்தது. இன்று அதன் அவதாரம் வேறாக இருக்கிறது.

ட்ராஸ்கி மருதுவின் ஓவியமான 'விதியே விதியே'தமிழ் நாட்டின் கலைச் சூழலில் எனக்கு மகிழ்ச்சி தரும் ஒரு பகுதியைப் பற்றிச் சொல்லி மகிழ்ச்சியோடு முடிக்கத் தோன்றுகிறது எனக்கு. புதிதாக கடந்த 40 வருடங்களில் ஏற்பட்டுள்ள மெதுவான மாற்றம் - ஓவியம், சிற்பம். சென்னையில் கலைக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டு அதற்கு முதலில் வங்காளத்திலிருந்து ராய் சௌதுரி, பின்னர் கே.சி.எஸ். பணிக்கர், தனபால் போன்றோரின் தலைமையில் படிப்படியாக மெதுவாக ஏற்பட்டுள்ள மாற்றம் இது. தமிழ் நாட்டில் தொடர்ந்து நம் கண் முன்னே கலை உணர்வூட்டும் வகையில் சிற்பங்கள் தான் கோவில்களில் உள்ளன. ஓவியத்திற்கு அத்தகைய தொடர்ச்சி இல்லை. சற்று முந்தியது என்று நாயக்கர் கால சுவரோவியங்கள், அதற்கு முன், மறைந்திருந்து வெளித்தெரிந்த தஞ்சை கோயில் ஓவியங்கள் அதற்கு முன் சித்தன்ன வாசல் என்று பல நூற்றாண்டுகள் இடைவெளி கொண்ட ஒன்றைப் பார்க்கலாம். ஒவியமோ சிற்பமோ கற்க வந்தவர்கள் இவற்றை திரும்ப நினைவு படுத்திக் கொள்ளலாம். அப்படித்தான் ஒவியக் கல்லூரி மாணவர்கள் செய்தார்கள். தில்லி, மும்பை யில் நடந்தது போன்று, ஐரோப்பிய தாக்கத்தைப் போலிசெய்ய யாரும் தயாரில்லை. அப்ஸ்ட்ராக்ஷன், க்யூபிஸம், என்றெல்லாம் அவர்கள் சிந்தனை

செல்லவில்லை. தமிழர்கள் தங்கள் உருவச் சார்பை விடத் தயாராயில்லை. முதலில் கோவில் சிற்பங்களை, சுவரோவியங்களை பிரதி செய்யும் ஒரு கட்டம் தாண்டி, ஒவ்வொருவரும் தன் மொழியை, தன் பாணியை உருவாக்கிக் கொண்டனர். அதற்கு நீண்ட காலம் தேவையாக இருந்தது. சில முக்கியமான, நாம் கர்வம் கொள்ளத்தக்க பெயர்கள் முன் நிற்கின்றன. ராமானுஜம், மனம் பேதலித்த சமூகத்தோடு ஒட்ட முடியாத தோற்றம் அளித்த தன் தனிப்பட்ட உலகை உருவாக்கிக்கொண்ட கனவுலக மனிதர். தன் மண்ணில் கால் அழுத்தமாக பதித்து தன் கிராமீய ஏக்கமும், வறுமையும், வான் நோக்கி வாழும் மனிதனை உணர்வுகளை சிற்பங்களாக்கும் தக்ஷ¢ணாமூர்த்தி, வெகுகாலம் தான் ஒரு மாஸ்டர் ஆகிவிட்ட கோட்டுச் சித்திரங்களைக் கைவிட மறுத்து இப்போது ரூபங்களிலிருந்து பிறந்த அரூபங்கள் படைக்கும் ஆதிமூலம், பூனைகளையே தன் வற்றாத கற்பனை ஊற்றாகக் கொண்ட பாஸ்கரன், எல்லா தளங்களிலும் கால் பரப்பியுள்ள பி.கிருஷ்ணமூர்த்தி, ட்ராட்ஸ்கி மருது, பழமையின் பிடிப்பிலேயே புதிய பிம்பங்களை உருவாக்கி நம்மைத் திகைக்க வைக்கும் வித்யா சங்கர் ஸ்தபதி இப்படி பலர்,. சினிமா, பத்திரிகை உலகம், இலக்கியத்தோடான உறவாடல், என்று பல திசைகளில், பரிமாணங்களில் தம் தாக்கத்தை காணவைக்கின்றனர்.
தமிழ் மண்ணில் இதெல்லாம் நிகழ்கின்றனவா என்று நான் சில சமயம் திகைத்துப் போகிறேன். இந்த நிகழ்வு நான் முன் சொன்ன வகைப்பாடுகளில் அடங்காதது. ஆனால் என்ன? எனக்கு மகிழ்ச்சி தான்.

வெங்கட் சாமிநாதன்
vswaminathan.venkat@gmail.com
பதிவுகள், ஜூலை 2007 இதழ் 91

6. நூல அறிமுகம்! ஆலவாய் - சரித்திரத்தின் ஊடே ஒரு நெடும் பயணம் - வெங்கட் சாமிநாதன் -

ஆலவாய் - சரித்திரத்தின் ஊடே ஒரு நெடும் பயணம்ஆலவாய் என்ற பழம் பெயரின் தலைப்பில் நரசய்யா மதுரை மாநகரத்தின் கதையைச் சொல்கிறார். கதையைத் தொடங்கும் முதல் பக்கத்திலேயே, முதல் வரியிலேயே "மதுரையும் தமிழும் ஒன்றாகவே பிறந்து வளர்ந்துள்ளன, இவற்றின் மூலத்தைத் தெரிந்து கொள்வது கடினமாகும்" என்று மிகச் சரியாகவே சொல்லித் தான் தொடங்குகிறார். நாம் தமிழ் படிக்கத் தொடங்கும் போதே, தமிழின், தமிழ் இலக்கியத்தின் தொடக்கமாக மூன்று சங்கங்களோடு தான் தொடங்குகிறோம். அவற்றில் கடைச் சங்கமாவது கற்பனையில்லை என்பதற்கு தமிழ் இலக்கியம் தொடங்கும் சங்க நூற்கள் சாட்சியம். மதுரை சங்கங்களோடும் சங்கங்களை ஆதரித்த பாண்டிய மன்னர்களோடும் தொடர்பு கொண்டது. மதுரை கபாடபுரம் என்றும், ஆலவாய் என்றும் நமக்குப் பழக்கமான பெயர்களில் அறியப்பட்டது. இதன் சரித்திரத்தை மதுரையைச் சுற்றியுள்ள தமிழ் ப்ராஹ்மி கல்வெட்டுக்கள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டுக்கு இட்டுச் செல்லும். வால்மீகி ராமாயணமும், வியாசபாரதமும் கூட பாண்டியர்களைப் பற்றியும் கபாடபுரத்தைப் பற்றியும் பேசுகின்றன. இன்னமும், அத்தொன்மையில் மதுரையைப் பற்றி பெரிப்ளஸ் என்னும் நூலும், ப்ளினி, மெகஸ்தனீஸ் போன்றாரும் பதிவு செய்யக் காண்கிறோம். ஆக, இத்தகைய தொன்மையிலிருந்து இன்று வரை, 2009 வரை என்றே சொல்வோமே, மதுரை தமிழர் வாழ்வில் மையமான, செல்வாக்கான இடம் பெற்றிருக்கிறது. அன்றிலிருந்து இன்று வரை ஒரு தொடர்ந்த சரித்திரம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகம் நீளும் ஒரு சரித்திரம் கொண்டுள்ளது மதுரையின் சிறப்பு. இதைச் சுற்றி, புராணங்கள், சரித்திரங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், கோயில்கள், சிற்ப வளங்கள், நீளும் மன்னர் வம்சாவளிகள் என இத்தனை சிறப்புக்கள் கொண்ட ஒரு நகரம் என வேறு எதைச் சொல்லமுடியும்?

தமிழும் இலக்கியமும் வளர்த்த சங்கங்கள் மதுரையில் மையம் கொண்டதால், சங்க காலத்தில் மதுரையைத் தம் பெயரின் முன் வைத்து தம்மை அடையாளம் காட்டிக்கொண்டனர் எண்ணற்ற புலவர். மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், மதுரை ஈழத்து பூதந்தேவனார், மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் எல்லாம் நமக்குத் தெரியவந்த பழக்கமான பெயர்கள். ஆனால் இது போல் மதுரை தமிழ் நாயனார், மதுரைக் கூத்தனார், மதுரைக் காடாத்தனார், என எண்ணற்ற புலவர் வரிசையைக் காணலாம். இது மதுரையின், தமிழின் ஒரு சிறப்புக் கூறு. சம்பந்தர் சமணர்களோடு வாதிட்டு வெற்றி கொண்டது இம்மதுரையில் தான். மாணிக்கவாசகர் அமைச்சராக விருந்ததும் இங்குதான் அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம் தான். மதுரையைச் சிறப்பிக்கும், அதை மையமாகக் கொண்டுள்ள இலக்கியங்கள் என்றால், சங்கப் பாடல்கள், புறநானூறு, சிலப்பதிகாரம், மதுரைக் காஞ்சி, பரிபாடல் திருமுருகாற்றுப்படை

என்றெல்லாம் தொடங்கி அவற்றைக் கடந்து, திருவிளையாடற்புராணம், சுந்தர பாண்டியம் என்றெல்லாமும் கடந்து மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் என எத்தனையோ நூற்றாண்டுகள் பரந்து கிடப்பவை. சரித்திரமோ, முற்காலப் பாண்டியரில் தெரியவரும் முதல் பெயரான ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என கி.பி.50-75 தொடங்கி பிற்காலப் பாண்டியர், சோழர், பின்னர் விஜயநகர மன்னர்கள், பின் நாயக்கர்கள், நவாப்புகள், தஞ்சை மன்னர்கள், ஆங்கிலேயர்களை எல்லாம் கடந்து இன்று கி.பி. 2009 வருடத்திய மு.க.அழகிரி வரை பட்டியல் நீளும். எத்தனை சமண குகைகள், படுக்கைகள் மதுரையைச் சுற்றி! எத்தனை கல்வெட்டுகள் தமிழ் ப்ராமியிலும், வட்டெழுத்திலும்!, எத்தனை செப்பேடுகள்!. கோவில்களில் திருப்பெருங்குன்றம், அழகர் மலை, மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் எல்லாமே 6-நூற்றாண்டிலிருந்து சங்கப்பாடல்களிலும் ஆழ்வார் பாசுரங்களிலும் தேவாரத்திலும் பாடப் பெற்றவை. எதைத் தொட்டாலும் ஒரு இடையறா தொடர்ச்சி.

மதுரை ஆலய நக அமைப்புஇக்கோயில்கள் இன்றும் வாழும் வழிபாட்டு ஸ்தலங்கள். தொல்பொருள் துறையின் போர்டு ஒன்று கடமைக்குத் தொங்கும், நம் அலட்சியத்தில் அழிந்து வரும் புராதனங்கள் இல்லை அவை இன்று 2009-ல் நாம் மீனாட்சி அம்மன் கோயிலின் உட்சென்று சன்னதி அடைந்து வணங்கி நின்றால் அந்த மீனாட்சி அம்மன், 2000 ஆண்டுகளுக்கு முந்திய அர்த்த சாஸ்திரம் "நகரத்தின் மத்தியில் கோயில் கொண்டிருக்கும் மதுரைத் தெய்வம்" என்று சொல்லும் மீனாட்சி அம்மன் தான். எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டன! நரசய்யாவே ஒரு இடத்தில் சொல்கிறார்: "கோவிலின் ஆடி வீதியை ஒரு தடவை சுற்றி வந்தோமானால் பல யுகங்களைக் கடந்து வந்த பிரமிப்பு ஏற்படும்......அத்துடன் சரித்திரத்துப் பக்கங்களையும் நமக்கு அறிமுகப் படுத்தி வைக்கின்றன"

இத்தனை பெருமைகளுக்கும் சிறப்புகளுக்கும் இடையில், இன்னும் ஒரு இடையறாத சரித்திர பதிவையும் மதுரையைப் பற்றிச் சொல்லவேண்டும். இதுவும் பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்து வருவது. இஸ்லாமிய கொள்ளை, ஆக்கிரமிப்பு, வன்முறை, பலவந்த மதமாற்றம். இதன் தொடக்கம் மதுரையைப் பொறுத்த வரை மாலிக் கா·பூர் மதுரையைக் கொள்ளை அடித்துச் சென்ற கி.பி. 1311. எல்லா இஸ்லாமிய படையெடுப்பு, கொள்ளை, கொலைகளையும் போல மதுரை சூறையாடப்பட்டது, அரச வம்சத்தில் நிகழ்ந்த சகோதரப் பொறாமைக் காய்ச்சல் மூத்தவன் வீரபாண்டியனை வீழ்த்த, இளையவன் சுந்தரபாண்டியன் மாலிக் க·பூரை உதவிக்கு அழைக்கிறான். வேறென்ன வேண்டும்! இதுவே சரித்திரம் முழுதும் திரும்பத் திரும்ப நிகழ்கிறது. மதுரை சூறையாடப்பட்டது ஒரு முறை அல்ல. இருமுறை அல்ல. நாயக்கர் காலம் வரை. சரித்திரம் முழுதும். இதே சரித்திரம் வெவ்வேறு ரூபங்களில் இன்னமும் நம்மை அலைக்கழிக்கிறது. சரித்திரம் பற்றியும் மனித இயல்பு பற்றியும் ஒன்று சொல்வதுண்டு. சரித்திரத்திலிருந்து நாம் எதையும் கற்றுக்கொள்வது இல்லை என்பதைத் தான் சரித்திரத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும்

ஒரே பாடம். இதன் நிரூபணத்தை இன்றைய தமிழ் சரித்திரமே நமக்குச் சொல்லும்.

மதுரை பெற்றுள்ளது போன்ற ஒரு நீண்ட சரித்திரம் வேறு எந்த வாழும் நகரத்திற்கு உண்டு? தில்லிக்கு உண்டு. இந்திர ப்ரஸ்தம் என்ற இதிகாசப் பெயரிலிருந்து தொடங்கி இன்று வரை நீளும்தான் அதன் சரித்திரம். ஆனால் அதிலும் சில இடைவெளிகள். வாரணாசிக்கு இல்லை. இன்றைய வாரணாசியும் விஸ்வநாதர் கோயிலும் மீனாட்சி அம்மனும் திருப்பரங்குன்றம் முருகனும் போல தொன்மை கொண்டவையல்ல. பெயரைத் தவிர. பலமுறை இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டது அந்தக் கோயில் முஸ்லீம் அரசர்களால், முன்னதன் அடையாளம் தெரியாது.

உலகப் பரப்பிலேயே ரோம், ஏதென்ஸ், ஜெருசலேம், பாக்தாத் பாஸ்ரா என்று ஒரு சில பெயர்கள் தான் மனதில் நிழலாடுகின்றன. நீண்ட சரித்திர பதிவும் உணர்வும் கொண்ட ஒரு பழமையான நாகரீகம் என்னும் சீனாவில் கூட பெய்ஜிங்கின் தொன்மை ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு மேல் இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் மதுரை பற்றிச் சொல்லமுடிவது போல, இன்னமும் வாழும் காஞ்சீபுரத்தின், திருவரங்கம்-திருச்சி என்ற இரட்டை நகரத்தின் சரித்திரத்தையும் ஆறாம், எட்டாம் நூற்றாண்டுகளிலிருந்து தொடங்கலாம்.. திண்டுக்கல், வேலூர் ஒரு முன்னூறு வருட சரித்திரம் எழுதப் படக்கூடியது தான்.

மதுரை நகர அமைப்பு

ஒரு சர்வ தேச நாடக விழாவில், இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த நடிகையும் இயக்குனருமான ஒருவர் சொன்னார். "எங்கள் நாட்டின் ஒவ்வொரு கல்லும் ஒரு நீண்ட சரித்திரம் சொல்லும்," என்று. சில வருடங்களுக்கு முன் கள்ளிக்கோட்டைக்குப் போயிருந்தேன். கடைத்தெருவில் ஓரிடத்தில் எஸ்.கே.பொற்றெக்காடின் உருவச்சிலை வைக்கப்பட்டிருந்தது. "எஸ்.கே. பொற்றெக்காட் அடிக்கடி நடமாடிய தெரு இது. அதன் நினைவாகத்தான் இங்கு அவர் சிலை" என்றார் எனக்கு ஊரைச் சுற்றிக் காட்டிக்கொண்டிருந்த அந்த நண்பர். .வியப்பும் மகிச்சியுமாக அவரைப் பார்த்தேன். அவர் தொடர்ந்து, "ஆனால் தமிழ் நாட்டில் ஒவ்வொரு ஊரும் ஒரு சரித்திரம் சொல்லும். எங்களுக்கு அது இல்லை" என்றார். இல்லாது போன வருத்தம் அவருக்கு. இருந்தும் அதன் பெருமை அறியாத அலட்சியத்தில் அதை இழந்து கொண்டிருக்கும் வருத்தம் எனக்கு.

இப்புத்தகத்தை நரசய்யா எழுத நேர்ந்தது, முன்னர் அவர் எழுதிய கடல் வழி வணிகம், மதராஸ் பட்டினம் போன்ற நூல்கள் எழுதத் தூண்டியதும் இச்சரித்திர உணர்வு தான். இவை எதிலும் அவர் ஏதும் ஆராய்ச்சி செய்து இது வரை காணாத செய்திகள் எதையும் வெளிக்கொணரவில்லை. அதுவல்ல அவர் காரியம். .இப்புத்தகங்களில் அவர் கொண்டு சேர்த்துள்ளது எல்லா சரித்திரச் செய்திகளும் சான்றுகளும் ஏற்கனவே எண்ணற்ற

இடங்களில் சிதறிக்கிடப்பவை தான். பல்வேறு கட்டங்களில், மெகஸ்தனீஸ், இபின் படூடா போன்ற யாத்திரிகர்களின் பிரயாண நூல்களில், சங்க இலக்கியங்களில், கல்வெட்டுக்களில், அரசாங்க கெஜட்டியர்களில், செப்பேடுகளில், சாசனங்களில், பல்வேறு நூலகங்களில் இலக்கியங்களில், ஹாலாஸ்ய மகாத்மியம் மற்றும் அதன் தமிழாக்கமான பல்வேறு திருவிளையாடற் புராணங்களில், ஸ்தானிகர், தல வரலாறுகளில், சங்க கால நாணயங்களில் இப்படி பல மூல ஆதாரங்களிலிருந்து கிடைப்பவற்றையெல்லாம் தேடிச் சென்று ஒன்று சேர்த்து அவற்றை சாதாரண வாசகனுக்கு எளிதாகவும் சுவாரஸ்யமாகவும் அவர் சொல்கிறார். இதுவே மிகப் பெரிய காரியம் தான். தற்கு உழைப்பு மாத்திரம் இருந்தால் போதாது. சரித்திர உணர்வின் உந்துதன் வேண்டும். எங்கு எதைத் தேடுவது என்ற தகவல் அறிவும் வேண்டும்.

மதுரையின் கதை பல்வேறு கட்டங்களாகச் சொல்லப்படுகிறது. ஆரம்ப இரண்டு நூற்றாண்டுகளிலான சங்க காலம், பின்னர் இருண்ட காலம் எனச் சொல்லப்படும் களப்பிரர் காலம்,- இது சமணர்களும் பௌத்தர்களும் செல்வாக்கு பெற்றிருந்த காலம், அதைத் தொடர்ந்த பாண்டியர் காலம் கி.பி. 550 லிருந்து கி.பி.966 வரை. பின்னர் சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மதுரை சோழ மன்னர்களில் ஆட்சிக்குட்பட்டிருந்தது. சோழப் பேரரசின் பொற்காலம். அவ்வப்போது சிங்களவர் துணையுடன் பாண்டிய மன்னர்கள் போர் தொடுத்தாலும், சோழப் பேரரசின் கீழேயே அவர்கள் ஆளுநர்களாகத்தான் இருக்க வேண்டி வந்தது. ராஜராஜன் காலத்தின் இலங்கையும் சோழர் ஆட்சியின் கீழ்தான் இருந்தது. ஆனால் கி.பி.1160 லிருந்து சுமார் 200 வருட காலம் பாண்டிய வம்சம் மதுரையை மீட்டது. இந்த ஆட்சி மாற்றங்கள் நாட்டின் நாசத்துக்கும் பேரழிவுக்கும் இட்டுச் செல்லவில்லை. சோழரோ பாண்டியரோ, கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் மான்யங்களைப் பற்றியும் கட்டிட விரிவாக்கங்களைப் பற்றியுமே பேசுகின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் கிழக்குக் கோபுரத்தைக் கட்டுவித்தவன் முதலாம் சடைய வர்மன் சுந்தர பாண்டியன். ஆனால் பின் வந்த பாண்டியர்கள் காலத்தில், பராமரிப்பின்றி திருப்பணியின்றி சீரழிகின்றன. அரச குடும்ப சகோதரச் சண்டையில் வருந்தி அழைக்கப்பட்ட மாலிக் க·பூரின்கொள்ளை தொடங்குகிறது (1311 ஏப்ரல் 13 செவ்வாய்கிழமை). கோயில் சன்னதியைத் தவிர மற்றவையெல்லாம் இடிபடுகின்றன. 1317-ல் ஹாஸன் என்ற ஹிந்துவாக இருந்து முஸ்லீமாக மாறிய குஸ்ரு கான் மறுபடியும் மதுரையைக் கொள்ளைஅடிக்கிறான்.

1372-ல் தான் மதுரை கம்பண உடையார் என்பவர் கோவிலை புதுப்பிக்கிறார். மதுரை 1370 வரை இஸ்லாமிய கொள்ளை-கொடூர ஆட்சியோ தப்பிக்க முடிவதில்லை. விஜய் நகர் மன்னர்கள் மதுரையைக் கைப்பற்றி தம் ஆட்சிக்கீழ் கொணரும் வரை.
விஜயநகர் மன்னர்/நாயக்க மன்னர் காலத்தில் மதுரை நகரும் கோவிலும் விரிவும் வளமும் பெறுகின்றன. முதலில் விஜய நகர மன்னர்களின் ஆட்சியின் கீழும் பின்னர் அவர்கள் மேலாண்மையை உதறி சுதந்திரமாகவும் நாயக்கர்கள் ஆட்சி 1732-1736-ன்

மீனாட்சி என்னும் அரசியின் காலம் வரை நீள்கிறது. திருமலை நாயக்கர் காலத்தில் நிறைய கட்டிடப் பணிகள் நடைபெறுகின்றன. சோழர் காலத்திற்குப் பிறகு இதுவே மதுரையின் பொற்காலமும் ஆகும். கடைசிக் கால நாயக்கர்கள் இஸ்லாமியர்களின் தொல்லையிலிருந்து தப்ப அவர்களுக்கு அவ்வப்போது கொடையும் கப்பமும் அளித்து வந்தனர். பெயர் பெற்ற மங்கம்மாள் காலத்தும் அப்படித்தான்.

உறவினர் சதியால் நாடு நாசமடைவதன் கொடூரம் மீனாட்சி காலத்தில் நடந்தது. மீனாட்சி தத்தெடுத்த பிள்ளையின் தகப்பனே ஆர்காட் நவாப் சந்தா சாகிப்பை மதுரையைப் படையெடுக்க அழைத்தான். ஒரு கோடி ரூபாய் பெற்றுக் கொண்டு தன் படையெடுப்பதில்லை என்று மீனாட்சிக்கு குரான் மீது கைவைத்து சத்தியம் செய்தான். ஆனால் சந்தா சாஹிப் தன்னை அழைத்த பங்காரு திருமலையையும் கொன்று மீனாட்சியையும் சிறை பிடித்தான். மீனாட்சி விஷம் உண்டு சிறையில் தற்கொலை செய்து கொண்டாள். சந்தா சாகிப்பின் முடிவும் இப்படிக் கொடூரமாகத் தான் முடிகிறது. காரணம், குரான் மீது கைது பொய் சத்தியம் செய்தவனுக்கு உரிய முடிவுதான் என்று முஸ்லீம்களே சொன்னார்களாம். இப்படி நாயக்கர் வம்சமும் முடிவுக்கு வந்தது. இடையில் ஹைதர் அலி, திப்பு சுலதான் என்றெலாம் சரித்திரம் கடந்து 1801-ம் வருடம் மதுரை ஆங்கிலேயருக்கு கை மாறியது.

ஆங்கிலேயர் வசம் மதுரையோ கோவிலோ சீரழியவில்லை. நாசமடைந்தது சீரமைக்கப்பட்டது. விரிவாக்கப்பட்டது. அந்த சரித்திரம் நமக்குத் தெரிந்தது தான் மதத்தின் பெயரில் நாசவேலைகள், கொலை கொள்ளை என்பது அவர்கள் கொள்கை அல்ல.\

நரசய்யா தம் மதுரையின் இரண்டாயிரம் ஆண்டு கதையை வெறும் ஆண்ட மன்னர்களின் பட்டியலாகச் சொல்லவில்லை. பாண்டிய சோழ, நாயக்கர் வம்சங்களின் கதையும் அல்ல. இந்த அணிவகுப்பின் சரித்திரத்தோடு மதுரையின் கதையே மையமாகிறது. புற மாற்றங்கள் மதுரையையும் அதன் சுற்றையும் பாதித்து அழித்த அல்லது வளப்படுத்திய சிறப்புச் செய்த கதையையும் சொல்லிச் செல்கிறார். சுருக்கமாக, எளிமையாக.

இந்த நீண்ட கதையில் நான் இதற்கு முன் அறிந்திராதவற்றில், மிகவும் சுவாரஸ்யமானவை சிலவற்றைச் சொல்லத் தோன்றுகிறது எனக்கு. அவற்றில் சிலவற்றைச் சொல்வது நான் எழுதியவற்றைப் படிப்பவர்கள், இத்தோடு நில்லாது நரசய்யாவின் புத்தகத்தையும் படிக்கத் தூண்டும் என நினைக்கிறேன்.

கி.பி.1160 லிருந்து கி.பி.1360 வரையிலான 200 வருடங்களில் முப்பது பாண்டிய மன்னர்கள், ஜடாவர்மன், விக்கரம பா ண்டியன் சுந்தர பாண்டியன் என்ற பெயர் குழப்பம் கொடுக்கும் மன்னர் கால நிகழ்வுகளையும் மன்னர்களையும் சரியாக அடையாளம் காண உதவுவது பஞ்சாங்க குறிப்புகள் தாம் என்று சொல்கிறார் ஆய்வாளர் சேதுராமன்.

(அனேகமாக எல்லாக் கல்வெட்டுக்களும் சாசனங்களும் இப்படித்தான் எழுதப்படுகின்றன.(உ-ம்)" வாட்டை கற்கடக நாயிற்றி வெள்ளிக்கிழமை பெற்ற ஆயிலெ(ய)த்தினான்று சூ(ற்)றிய கிரண வேளை(ள)க் (கு)றை கிராணம் பற்றின அன்று முதலாக
இக்கல(ம்)....

எல்லா மெய்கீர்த்திகளுக்கும் ஒரு முத்திரை இருக்கும் தீக்ஷ¢தர் கிருதிக்கு 'குரு குஹ" என்றிருப்பது போல. 'பூதல வனிதை" என்று தொடங்கினால் அது சடையவர்மன் குலசேகரன்(1237-1266) மெய்கீர்த்தி. 'பூவின் கிழத்தி' என்று தொடங்கினால் அது சடைய வர்மன் குலசேகரன் (1190-1218) மெய்கீர்த்தி. பூதல மடந்தை என்று தொடங்கினால் அது சடைய வர்மன் குலசேகரன் (1162-1177) மெய்கீர்த்தி. இன்றைய தமிழ் எழுத்தாளர்கள் போல் இவர்களுக்கும் பெண் பெயர்களில் ஒரு மோகம் போலும்.

இதற்கு மாறாக ஒரு கல்வெட்டில் ஸ்ரீரங்க பெருமாளே தன் கைஒப்பத்தைக் கொடுத்துள்ளார்.

".....கோயில் ஸ்ரீரங்க விமான மதலான பலவிமானங்களும் சுந்தர பாண்டியன் திருமதிலும் கோபுரமும் பொன்வேந்து நமக்குப் பூண ஒருபடியாக ஆபரணங்களும் ஏறச் சிவிகையும் பல பொற் பணிகளும் செய்கையாலே......

இக்கல்வெட்டில் நிறைய நமக்கு-கள் வருகின்றன. இரண்டு வரிகள் நான் தந்தது உதாரணத்திற்கு.

பழங்காலத்தில் ஜேஷ்டா தேவிக்கு (மூதேவிக்கு) கோயில்கள் இருந்தன. திருப்பரங்குன்ற குகையில் ஜேஷ்டைக்கு கோயில் உண்டு. பூஜைகள் இப்போது இல்லையென்றாலும். கி.பி. 11-12 நூற்றாண்டுகளில் ஜேஷ்டா தேவி மூதேவியாக வணங்கப்படும் தெய்வ அந்தஸ்தை இழந்து விடுகிறாள்.

மாலிக் க·பூர் செய்த நாசத்தில் மீனாட்சி கோவிலின் 14 கோபுரங்கள் கொண்ட மதிற்சுவர்கள் இடித்துத் தள்ளப்பட்டன.

மூக்கறுத்தல் என்ற சொல் தமிழில் ஒரு அணி என்றே நினைத்தேன் இது வரை. அது தவறு. "(மூக்கை அறுப்பது அக்காலத்தில் எதிரிக்குத் தரப்படும் அவமானச் சின்னம்). "மைசூர் அரசன் சிறையிலிடப்பட்டவர்களின் மூக்குகளை அறுக்கச் சொன்னான். படைவீரர்களோ, வழியில் கண்ட பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லோர் மூக்குகளையும் காட்டு மிராண்டித் தனமாக அறுத்து அறுக்கப்பட்ட மூக்குகளை சாக்குகளில் கட்டி அனுப்பிவிட்டனர்." இப்படியான மூக்கறுப்பு பல சண்டைகளில் திரும்பத் திரும்ப நிகழ்கின்றன.

"திருமலை நாயக்கரின் செப்பேடு, "கல்லும் காவேரியும் புல்லும் பூமியுள்ளவரை புத்திர புத்திர பாரம்பரியமாய் அனுபவித்து...."என்று சொல்கிறது. மதுரை ஆண்ட திருமலை நாயக்கர், நிரந்தத்திற்கு அடியாளமாக வைகையைச் சொல்லவில்லை.
காவேரியைச் சொல்கிறார்.

பிரொயென்சா பாதிரி 1665-ம் ஆண்டு பால் பாதிரிக்கு எழுதிய கடிதத்திலிருந்து: "இந்த முஸ்லீம் கேப்டன் சுற்றியிருந்த இடங்களைச் சூறையாடி, மக்களை ஈவிரக்கமின்றி கொல்ல ஆரம்பித்தான். தம் பெண்டிரும் குழந்தைகளும் இஸ்லாமிய வன்முறைக்கு ஆளாகமல் இருக்கவேண்டி பெரியமனிதர்கள் பலரும் தம் மனைவி மக்களைக் கொன்று விட்டு அதே கத்தியால் தம் உயிரை மாய்த்துக்கொண்டனர்."

1704-1705-ம் ஆண்டு சௌராஷ்டிரர்கள் பூணூல் அணியலாமா என்ற வழக்கு ராணி மங்கம்மாள் முன் வந்த போது, அவர்களும் வடநாட்டிலிருந்து வந்த அந்தணர்களே ஆகையால் அவர்கள் பூணூல் அணியலாம் என்று கவிதார்க்க சிம்மம், தண்டலம் வெங்கட கிருஷ்ணய்யங்கார் போன்றோர் அடங்கிய அறிஞர் குழு தீர்மானிக்க, ராணி மங்கம்மாள் அவ்வாறே ஆணை இட்டாள். சாசனம் தெலுங்கில் உள்ளது.

சந்தா சாஹிப் திருச்சியின் பெயரை ஹஸ்ரத் நாதர் வாலி என்னும் இஸ்லாமிய சாதுவின் நினைவில் நாதர் நகர் என்று மாற்றினான்.

வாலாஜா நவாப் இராமநாதபுரத்தை அலி நகர் என்றும் சிவகங்கையை ஹுஸைன் நகர் என்றும் வழங்குமாறு செய்தான்.

பனையூரில் வெள்ளாள ஜாதியில் பிறந்த மருதநாயகம், இஸ்லாமியனாக மாறி முகம்மது யூசூ·ப் ஆனான். சிறந்த தளபதியாக கான் சாகிப் என்று பெயர் பெற்றான். "..அப்போது மதுரையில் கோட்டை மிகப் பெரியதாய் இருந்தது. இரு மதில் சுவர்களைக் கொண்ட அந்தக் கோட்டை 22 அடி உயரத்திற்கு அமைக்கப்பட்டிருந்தது.."....கான் சாஹிப் மதுரைக் கோட்டையை சீர்படுத்தி காவலை ஒழுங்கு செய்தான். இந்துக்களின் உதவி வேண்டி கோவில் பூஜை முறைகளையும் புதுப்பித்தான். கோவிலின் முன்னர் இஸ்லாமியர் தொழுமிடம் ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. அதையும் நீக்கியதால் கான் சாஹிபின் மதிப்பு இந்துக்களிடையில் உயர்ந்தது."

1755-ம் ஆண்டு கர்னல் ஹெரான் திருமோகூருக்கு படையுடன் சென்று அங்குள்ள கோவிலைச் சிதைத்து, சூறையாடி, மக்களுக்கு இன்னல் பல விளைவித்தார். இதைப் பொறுக்காத கள்ளர்கள் பழிவாங்க, ஆங்கிலேயர் சூறையாடிய பொருட்களை ஒட்டகங்களில் ஏற்றிக்கொண்டு திருச்சிக்குத் திரும்புகையில் அவர்களைத் தாக்கி திருடிச் சென்ற சிலைகளையும் பொருட்களையும் கோவிலுக்கு மீட்டனர். (18-ம் நூற்றாண்டில்

ஆங்கிலேயர் பாண்டி நாட்டில் ஒட்டகங்களை சுமை தூக்கும் வாகனங்களாக்குகின்றர்! ஆச்சரியம் தான்.)

1812-ல் ரௌஸ் பீட்டர் (ரௌஸ் பாண்டியன் என்றும் பெயர் பெற்றவர்) மதுரை கலெக்டர் ஆனார். அவரை ஒரு மழைநாளில் ஒரு சிறுமி இடியால் நாசமாகவிருந்த வீட்டிலிருந்து கைபிடித்து அழைத்து வெளியேற்றி உயிர் காப்பாற்றியதாக "பீட்டர் பாண்டியன் அம்மானை" சொல்கிறது. அச்சிறுமி மீனாட்சி அம்மனே என்று நம்பிய பீட்டர் அம்மனுக்கு விலை உயர்ந்த கற்கள் நிறைய பதித்த தங்க மிதியடிகளை அளித்தார். இன்றும் அம்மனின் குதிரை வாகன புறப்பாட்டின் போது அம்மன் இம்மிதியடிகளையே அணியக்காணலாம்.

1837-ம் ஆண்டு கலெக்டாரக வந்த ஜான் ப்ளாக் பர்ன், மதுரைக் கோவிலைச் சுற்றியிருந்த பாதுகாப்புக் கொத்தளங்களை நீக்கி, சுற்றியிருந்த அகழிகளையும் ஏலம் விட்டு வீடுகள் ஒரே மாதிரியாகக் கட்டச் செய்து மூன்று வெளி வீதிகளை உருவாக்கினார். கொத்தளங்களிலிருந்து எடுக்கப்பட்ட கற்கள் வைகையில் கற்பாலம் அமைக்க பயன்பட்டன.

இன்னும் நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். இவையெல்லாம் எனக்கு புதிதாகவும் ஆச்சரியம் தருவனவாகவும் இருந்தன. நரசய்யா தொகுத்துத் தந்திராவிட்டால் இவை எனக்கு அறியக் கிடைத்திராது, வேறு எந்த சரித்திரப் புத்தகத்திலும். இவையும் சுவாரஸ்யமானவை என்ற தேர்வுக்கு ஒரு பிரக்ஞை வேண்டும்.

ஆலவாய்: மதுரை மாநகரத்தின் கதை - நரசய்யா: பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை-14 ரூ 275/-

vswaminathan.venkat@gmail.com
பதிவுகள், ஆகஸ்ட் 2009 இதழ் 116

7. டானியல் நினைவலைகள்...! - வி. ரி. இளங்கோவன் -

டானியல் யார்? என்ன அவர் சாதனை? அவரை இன்றும் நினைத்துக்கொள்ள, அவர் என்ன செய்துவிட்டார்? டானியல் ஓர் அற்புதமான மனிதர் - கலைஞர் - மனிதாபிமானி - எல்லாவற்றுக்கும்மேலாய் தமிழில் ஓர் அருமையான படைப்பாளி - நாவலாசிரியர் - சமூக விடுதலைப் போராளி - தடம்புரளாத அரசியல்வாதி. ஈழத்தமிழர் மத்தியில் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் பிறந்து வறுமையோடு தவழ்ந்து, சமூகக் கொடுமைகளுக்கு முகங்கொடுத்து, கடுமையாகப் போராடி, ஒடுக்கப்பட்ட மக்களின் தளைகளை அறுத்தெறிந்து அவர்களைச் சகமனிதர்களுடன் சமானமாக நிலைநிறுத்துவதற்குத் தன் உடல் பொருள் ஆவி என அத்தனையையும் அர்ப்பணித்துப் பணியாற்றியவர் தான் டானியல்டானியல் யார்? என்ன அவர் சாதனை? அவரை இன்றும் நினைத்துக்கொள்ள, அவர் என்ன செய்துவிட்டார்? டானியல் ஓர் அற்புதமான மனிதர் - கலைஞர் - மனிதாபிமானி - எல்லாவற்றுக்கும்மேலாய் தமிழில் ஓர் அருமையான படைப்பாளி - நாவலாசிரியர் - சமூக விடுதலைப் போராளி - தடம்புரளாத அரசியல்வாதி. ஈழத்தமிழர் மத்தியில் மிகவும் முக்கியமான காலகட்டத்தில் பிறந்து வறுமையோடு தவழ்ந்து, சமூகக் கொடுமைகளுக்கு முகங்கொடுத்து, கடுமையாகப் போராடி, ஒடுக்கப்பட்ட மக்களின் தளைகளை அறுத்தெறிந்து அவர்களைச் சகமனிதர்களுடன் சமானமாக நிலைநிறுத்துவதற்குத் தன் உடல் பொருள் ஆவி என அத்தனையையும் அர்ப்பணித்துப் பணியாற்றியவர் தான் டானியல்.

என் இளமைக் காலத்தில் என் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்திச் சரியான சமூகப் பார்வையுடன் பேனா பிடிக்க வழிகாட்டியவர்களில் முக்கியமானவர் கே. டானியல். சுமார் பதினான்கு ஆண்டுகள் அவரோடு இணைந்து பணியாற்றியதும், அவரது இறுதி மூச்சு பிரியும் வேளையிலும் உடனிருந்து உதவியதும் என்னால் மறக்க முடியாதனவாகும்.

தலித் இலக்கியம் தற்போது தமிழ் இலக்கியப் பரப்பில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. விவாதிக்கப்படுகிறது. புலம்பெயர்ந்த நாடுகளிலும் நம்மவர் மத்தியில் இதுகுறித்து சர்ச்சைகள் நோக்குகள் கூர்மையடைந்து விவாதத்திற்குரியனவாகின்றன. தலித் இலக்கியப் பிதாமகர், முன்னோடி எனத் தமிழக விமர்சகர்களாலும் ஈழத்து இலக்கியக்காரர் பலராலும் டானியல் விதந்துரைக்கப்படுகிறார். இதில் ஒரு விடயம் சுலபமாக மறக்கடிக்கப்படுவதாகத் தெரிகிறது.

டானியல் ஒடுக்கப்பட்ட மக்களில் அடிமட்டச் சமூகத்தில் பிறந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவே போராடியவர், எழுதியவர் என்பதாக மட்டுமே உணர்த்தப்படுகிறது. அவரது பொதுவுடமைக் கட்சிப் பணி மறைக்கப்படுவதாக எண்ணத் தோன்றுகிறது.
டானியல் இன்று உயிருடன் இருந்தால் நிச்சயமாக இத்தகைய பார்வையை

ஏற்றுக்கொள்ளமாட்டார்.

டானியல் பொதுவுடமைக் கட்சியின் தொடர்பு காரணமாகவே சமூகப் பணிகளில் ஈடுபடத் தொடங்கியவர். பொதுவுடமைக் கட்சியினை வடபகுதிக்கு அறிமுகஞ்செய்து மக்கள் மத்தியில் பரவலாக்கி இறுதிவரை அதற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர் தோழர் மு. கார்த்திகேசன். அவரது தொடர்பு டானியலைப் பொதுவுடமை அரசியல் ரீதியாகவும், எழுத்துத்துறையிலும் வளப்படுத்தியது எனலாம்.

இளமைக் காலத்தில் வறுமையில் துவண்டபோதிலும், திருமணத்தின் பின்பும் வறுமையும், இடர்பாடுகளும் வாட்டிவதைத்தபோதிலும் அவர் கட்சிப் பணிகளிலிருந்து தன்னை ஒதுக்கிக்கொண்டவரல்ல. பொதுவுடமைக்கட்சியினது வடபிரதேசக் கிளையின் முழுநேரச் செயற்பாட்டாளராகப் பல வருடங்கள் பணியாற்றிவர் டானியல்;.

60-களின் நடுப்பகுதியில் சர்வதேசரீதியாகப் பொதுவுடமை இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு இலங்கையிலும் எதிரொலித்தது. இதன் காரணமாகச் சோவியத்சார்பு, சீனச்சார்பு எனப் பிளவு இலங்கைப் பொதுவுடமை இயக்கத்திலும் ஏற்பட்டது. பெரும்பாலான உழைக்கும் மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், கலை இலக்கியவாதிகள் தோழர் என். சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கட்சியினை ஆதரித்தனர். டானியலும் தோழர் சண் பாதையிலேயே இயங்கியவர்,

1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விஜயவீரா தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியினர் தொடங்கிய கிளர்ச்சியினால் பொதுவுடமைக்கட்சி (சீனச் சார்பு) பல பின்னடைவுகளை, அடக்குமுறைகளை, சீர்குலைவுகளை எதிர்கொண்டது. முன்னணித் தலைவர்கள் பலரும் சிறையிடப்பட்டனர். டானியலும் சுமார் ஒரு வருடம் சிறையிடபட்டார். நீரிழிவு நோயாளியான அவர் பல வேதனைகளை சிறையில் அனுபவித்தார். சந்தர்ப்பவாதிகளால் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டபோதிலும் நேர்மைமிக்க தலைவரான தோழர் சண்முகதாசனின் ;பாதையிலேயே டானியல் இறுதிவரை செயற்பட்டார்.

1979-ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிரமாண்டமான முழுநாள் மாநாடு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளால் மண்டபம் நிரம்பி வழிந்தது. இம்மாநாட்டின் வெற்றிக்காக இரவுபகலாக டானியல் இயங்கியதை யான் அறிவேன். தோழர் சண் வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தார். டானியல், எஸ். ரி. என். நாகரத்தினம், கே. கிருஸ்ணபிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர். பேராசிரியர் நந்தி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், லைஞர் சிசு நாகேந்தரா, கலைஞர் குத்துவிளக்கு பேரம்பலம் உட்படப் பல கலை இலக்கியவாதிகள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

'எனக்கு ஓர் அரசியல் பாதை உண்டு. அதற்கு உந்துசக்தியாகவே எனது படைப்புகளைத் தருகிறேன்' என டானியல் சொல்வதுண்டு. டானியல் அரசியல் செயற்பாட்டாளர். சமூக விடுதலைப் போராளி. எழுத்தாளர். பேச்சாளர். ஒடுக்குமுறை எந்த வடிவத்தில் வந்தாலும் அந்த வடிவத்தை அடையாளம் கண்டு எதிர்க்கின்ற பக்குவமும் துணிவும் ஆற்றலும் டானியலுக்கு இருந்தது. அதனால் யாழ் குடாநாட்டில் எந்தக் குக்கிராமத்தில் வாழும் மனிதனும் தனக்குச் சாதியின் பெயரால் அல்லது ஏதாவது வகையில் ஒடுக்குதல் - நெருக்கடி ஏற்பட்டால் அதற்கான பரிகாரம்தேடி ஆலோசனைபெற, ஆதரவுபெற டானியலைத்தேடி வருவதை யான் பல வருடங்களாகப் பார்த்திருக்கிறேன். அந்தவகையில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனதில் நிறைந்த ஒரு மனிதனாக டானியல் விளங்கினார். அவரது செயற்பாடுகளுக்கு பேருதவியாகக் கட்சித் தோழர்கள் இருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தை அமுல்படுத்தக்கோரி 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21-ம் திகதி சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க அந்த ஊர்வலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடன் முற்போக்கு எண்ணங்கொண்ட சகல மக்களும் - முஸ்லீம் மக்களுட்படக் கலந்துகொண்டனர். பொலிசாரின் தாக்குதலுக்குள்ளாகியும் நிலைகுலையாத ஊர்வலம் யாழ்நகர் நோக்கிச்சென்றது. இந்த ஊர்வலத்திற்குத் தலைமை கொடுத்துச் சென்றவர்களில் டானியலும் ஒருவர்.

இதன் பின்னரே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உதயமானது. இது ஒரு சாதிச்சங்கம் அல்ல. சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்துநின்ற சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்த ஒரு பரந்த வெகுஜன இயக்கமாகவே முன்னெடுக்கப்பட்டது. பல வெற்றிகளைக் கண்டது. கட்சி தென்னிலங்கை முற்போக்கு சக்திகளின் ஆதரவைப் பெற்றுக்கொடுத்தது. அன்று இலங்கைப் பாராளுமன்றம் முதல் சீன வானொலிவரை இந்த இயக்கத்தின் செயற்பாடுகள் பேசப்பட்டன. குடாநாட்டின் இருண்ட பகுதிகளுக்குள் வெளிச்சம் பாய்ச்சப்பட்டதாக விமர்சனங்கள் எழுந்தன. இந்தச் செயற்பாடுகள் அத்தனையிலும் டானியலின் பங்களிப்பு முக்கியமானது.

தலித்துகள் மட்டும் தான் தலித்துகளுக்காகப் போராடவேண்டும் என்ற சிலரது கூற்று சரியானதல்ல. வடபகுதியில் அன்று நடந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் போராட்டம் அத்தகைய கருத்தைக் கொடுக்கவில்லை. அது தோழர் சண்முகதாசன் தலைமையிலான பொதுவுடமைக் கட்சியின் பூரண ஆதரவுடன் சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றிணைத்து நடைபெற்றது. பல்வேறு கலை இலக்கியப் படைப்பாளிகள் இதற்கு உறுதுணையாகச் செயற்பட்டார்கள். பேராசிரியர் கைலாசபதி, பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன், முருகையன், இளங்கீரன், அம்பலத்தாடிகள் குழுவினர்

மற்றும் இளந்தலைமுறையைச் சேர்ந்த பல கலை இலக்கியப் படைபாளிகள் தலித்துகள் அல்ல. ஆனால் அவர்கள் உறுதுணையாகச் செயற்பட்ட மார்க்ஸிசவாதிகள்.

இலங்கையில் ஈழகேசரி, மறுமலர்ச்சி மற்றும் வீரகேசரி, தினகரன் ஆகியவற்றில் எழுதத்தொடங்கிய டானியல் தமிழ்நாட்டில் வெளிவந்த சிறந்த இலக்கிய இதழான சரஸ்வதியிலும் தம் படைப்புகளை வெளியிட்டார். சரஸ்வதியின் மிக முக்கியமான மூன்று படைப்பாளிகளில் ஒருவராய் ஜெயகாந்தன், சுந்தரராமசாமி ஆகியோருடன் இலங்கை எழுத்தில் முதற் படைப்பாளியாய் சரஸ்வதியில் தொடர்ந்து சிறுகதைகளைப் படைத்தாரெனப் பிரபல எழுத்தாளர் தஞ்சைப் ப்ரகா~; குறிப்பிட்டுள்ளார். சரஸ்வதி இதழில் டானியலின் உருவம் முகப்புப் புகைப்படமாய் அட்டையில் 1951-ல் பிரசுரம் செய்யப்பட்டு பாராட்டப்பட்டார்.

அத்துடன் ப. ஜீவானந்தம் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்த தாமரை கலை இலக்கிய ஏட்டிலும் எழுதினார். டானியல் கதைகள் (சிறுகதைத் தொகுதி) பஞ்சமர் - நாவல் இருபாகங்கள்) உலகங்கள் வெல்லப்படுகின்றன (சிறுகதைத் தொகுதி) போராளிகள் காத்திருக்கின்றனர் - நாவல், இலங்கையிலிருந்து ஓர் இலக்கியக் குரல் - பேட்டி, மற்றும் கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர், பஞ்சகோணங்கள் ஆகிய பஞ்சமர் வரிசை நாவல்கள், நெடுந்தூரம், மையக்குறி, முருங்கையிலைக் கஞ்சி, பூமரங்கள், சா நிழல் ஆகிய குறுநாவல்கள், என் கதை - கட்டுரை என்பன நூலுருவில் வெளிவந்த டானியலின் படைப்புகளாகும்.

டானியலின் படைப்புகள் ஜப்பான், இந்தியா, இலங்கை பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு ஆய்வுக்குள்ளாக்கப்படுகின்றன. டானியலின் படைப்புகளை ஆய்வுசெய்து பண்டிதர் செ. திருநாவுக்கரசு உட்படப் பலர் கலாநிதிப் பட்டங்களையும், முதுகலைமாணிப் பட்டங்களையும் பெற்றுள்ளனர்,

1981-ம் ஆண்டு சென்னை கிறிஸ்தவ இலக்கிய சபை (சி. எல். எஸ்) சாதியமும் வறுமையும் என்ற பொருளில் நடாத்திய கருத்தரங்கில் டானியலின் பஞ்சமர் நாவல் (முதலாம் பாகம்) தனிஅமர்வில் ஆய்வுக்கெடுத்துக்கொள்ளப்பட்டது, பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யான் டானியலின் படைப்புகள் குறித்து கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றினேன். டானியல் தனது அனுபவங்கள் - படைப்புகள் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

டானியலின் படைப்புகளில் குடாநாட்டின் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட பகுதியின் வரலாற்று ஓட்டத்தைச் சமூக நகர்வைக் கவனிக்கலாம். குடாநாட்டின் யாரும் காட்டியிராத இருண்ட பகுதிகளை வெளிச்சம் போட்டுக்காட்டியவர் டானியல்.

இதனால் தானோ சிலருக்கு அவர் வேண்டாதவராக ஒதுக்கப்பட வேண்டியவராகத் தென்பட்டார் போலும்... அவரை ஒழித்துக்கட்டவும் பல முயற்சிகள் நடந்ததுண்டு. அவரோடு பல இடங்களுக்கும் சென்றுவந்தபோது இத்தகைய ஒருசில நடவடிக்கைகளை என்னாலும் உணர்ந்துகொள்ள முடிந்தது. சிறை வாசத்தையும், பல மாதங்கள் தலைமறைவு வாழ்க்கையையும் கண்டவர்.

1981-ம் ஆண்டு தமிழகம் சென்றபோது தஞ்சைப் ப்ரகா~pன் அழைப்பின்பேரில் தஞ்சை சென்றதும் அவர் பார்க்க விரும்பியது உயர்ந்த கோவில்களோ, அரண்மனைகளோ பெரிய மனிதர்களென இருந்தவர்களையோ அல்ல. கீழ்வெண்மணியில் உயிருடன் கொளுத்தப்பட்ட ஏழைமக்களின் நினைவிடத்தைத் தான் பார்க்க விரும்பினார். தஞ்சைப் ப்ரகா~;, எழுத்தாளர் சி. எம். முத்து ஆகியோருடன் அங்கு சென்று பார்த்தோம். பலமணி நேரம் அங்குள்ள நசுக்கி ஒடுக்கப்பட்ட கிராமத்து மக்களைச் சந்தித்து அவர் பேசியமை இன்றும் எனக்கு ஞாபகம்.

இறுதிக் காலத்தில் கண்பார்வை குன்றிவந்த நிலையில் நீரிழிவு நோய்க்கு வைத்திய சிகிச்சை பெறும்பொருட்டு;ம் கானல், பஞ்சகோணங்கள் நாவல்களை அச்சேற்றும் பொருட்டும் பேராசிரியர் அ. மார்க்ஸ் மற்றும் தோழமை பதிப்பகத் தோழர்களின் அழைப்பின்பேரில் தமிழகம் செல்ல முடிவெடுத்தார். தமிழகம் செல்லும் முன்னர் கொழும்பில் தோழர் சண் வீட்டில் தங்கியிருந்து பல்வேறு விடயங்கள் குறித்து உரையாடினார். பஞ்சகோணங்கள் நாவல் குறித்து தோழர் சண் குறிப்பிட்ட விடயங்களையும் கவனத்திலெடுத்துக்கொண்டார்.

உடல்நலம் குன்றிய நிலையிலிருந்த அவரை 30- 01 - 1986-ல் தமிழகம் அழைத்துச் சென்றேன். நீரிழிவு நோயின் முதிர்நிலைப் பாதிப்புகள் அவரை வாட்டின. தோழர்களின் ஏற்பாட்டின்படி சிகிச்சைகள் நடந்தன. உடனிருந்து கவனித்து வந்தேன். உடல்நிலையைப் பாராது பல்வேறு இடங்களுக்கும் சென்று தோழர்களைச் சந்திக்க ஆவலாயிருந்தார். திருச்சி, தஞ்சை, சென்னை, மதுரை, பாண்டிச்சேரி, கும்பகோணம் ஆகிய இடங்களுக்குச் சென்றோம். கூட்டங்களில் உரையாற்றினார். பலரையும் சந்தித்து உரையாடினார். தஞ்சை தங்கசாரதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த டானியலுக்கு 23 - 03 - 86 காலை 8. 30 மணியளவில் மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவதிப்பட்டார். டாக்டர்களும் தாதிமாரும் உடனின்று சிகிச்சையளித்தனர். எனது கையைப் பற்றிப்பிடித்தவாறு 'தம்பி.... தம்பி....' என ஏதோ சொல்ல விழைந்த முடியாத நிலையில் அவரது உயிர் பிரிந்தது. இந்நிகழ்வு என்மனதில் என்றுமே மறக்கமுடியாத வேதனைப் பதிவாகிவிட்டது.

படைப்பாளிகளை மிகவும் நேசித்தவர் டானியல். இளம் எழுத்தாளர்களை அரவணைத்து வழிப்படுத்தியவர். பலருக்கு விளம்பரமின்றி நல்ல உதவிகள் செய்துள்ளதை என்னால்

அறியமுடிந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வரும் படைப்பாளிகளை வரவேற்று உபசரித்தவர். இதனை எழுத்தாளர்கள் வ. அ. இராசரத்தினம், லெ. முருகபூபதி, அந்தனி ஜீவா ஆகியோருட்படப் பலர் டானியல் காலமாகியதை அறிந்ததும் கண்ணீர் சிந்த எழுதியுள்ள பதிவுகளில் காணலாம்.

இறுதிவரை இலட்சியம் குன்றாத, எந்தவித விட்டுக்கொடுப்புகளுமற்ற நம்பிக்கையான போராளியாகப் படைப்பாளியாகத் திகழ்ந்த டானியல் மறைவு குறித்து இலங்கைப் பொதுவுடமைக் கட்சிப் பொதுச்செயலாளர் என். சண்முகதாசன் அன்று எழுதியுள்ள வரிகள் குறிப்பிடத்தக்கன.

"இளமைக்காலம் முதல் பொதுவுடமைக் கட்சியின் வடபிரதேசக் கிளையின் நடவடிக்கைகளில் முக்கிய பங்களிப்புச் செய்தவர் டானியல். அறுபதுகளின் பிற்பகுதியில் ஏற்பட்ட வெகுஜன இயக்க எழுச்சிக்குத் தலைமை கொடுத்தவர்களில் ஒருவர். அவரது இழப்பு இந்த நாட்டின் இலக்கியத்துறைக்குப் பேரிழப்பு. அவர் துணிவுமிக்க போராளி. நேர்மைமிக்க தோழர். நான் நல்ல தோழனை, அன்பு நண்பனை இழந்துவிட்டேன்" எனத் தோழர் சண் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மானிட நேசனின், மக்கள் விடுதலைப் போராளியின், கூர்ந்த சமூகப் பார்வையுள்ள படைப்பாளியின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும்.

[கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் கடந்த 14-ம் திகதி வெள்ளிக்கிழமை (14 - 01 - 2011) மாலை இடம்பெற்ற 'இலக்கியக் களம்" நிகழ்ச்சியில் 'டானியல் நினைவலைகள்;" என்ற தலைப்பில் எழுத்தாளர் வி. ரி. இளங்கோவன் (பிரான்ஸ்) நிகழ்த்திய உரையின் சுருக்கம். 'ஞானம்" சஞ்சிகை ஆசிரியர் டாக்டர் தி. ஞானசேகரன் இந்நிகழ்வுக்குத் தலைமை வகித்தார்.]

. thambirajah elangovan <vtelangovan@yahoo.fr>
பதிவுகள், மார்ச் 2011 இதழ் 135

8. நீர்வை பொன்னையன்: எண்பது வயதிலும் மனிதநேய எழுத்துப் பணி துறக்காதவர் சாகித்தியப் பரிசு கிடைக்காத சிறந்த மூத்த படைப்பாளி -

- எம்கே.முருகானந்தன்-

எழுத்தாளர்கள் ஏன் எழுதுகிறார்கள்? தமது ஆத்ம திருப்திக்காக எழுதுபவர்கள் பலர் இருக்கிறார்கள். தாங்கள் கொண்ட இலட்சியத்தை மக்களிடையே ரப்ப வேண்டும் என்பதற்காக எழுதுபவர்களும் இருக்கிறார்கள். சமூகத்தில் தனது அடையாளத்தை பதிக்க வேண்டும் என்பதற்காக எழுதுபவர்களும் இருக்கிறார்கள். எல்லோரும் எழுதுகிறார்களே நானும் முயன்று பார்க்கலாம் என முயற்சிப்பவர்களும் இருக்கவே செய்கிறார்கள். பலரும் இவ்வாறான எண்ணத்துடன் எழுத்துத்துறைக்குள் நுழைகிறார்கள். ஆனால் கால வெள்ளத்தில் பொறுப்புணர்வு அதிகரித்து, சமூக அக்கறையும் மேலோங்க அவர்களது பார்வை விரிவடைகிறது.

'நாம் ஏன் எழுதுகிறோம்' என்று தனது எழுத்துலகப் பாதையை வெளியுலகிற்கு துல்லியமாக வெளிச்சம்போட்டுக் காட்டி எழுதுபவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்க முடியும். உள்ளத்தில் கள்ளமில்லாத படைப்பாளியால்தான் அவ்வாறு எழுத முடியும்.

அண்மையில் 80 வயதை எட்டிய ஒருவர் தனது இளமைப் பருவம் முதல் கடந்த சுமார் 5 தசாப்தங்களாக கொள்கைப் பிடிப்போடு சிறுகதைகளைப் படைத்து வருகிறார். கலைத்துவமாகவும் வாசகர்களுக்கு பயனுள்ளதாக சிறப்பாகவும் எழுதி வருகிறார். அடக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும் அவரது படைப்புகள் குரல் கொடுக்கின்றன. முற்போக்கு இலக்கியத்தில் அவருக்கெனத் தனியிடம் உண்டு. இலங்கையின் பெரும்பாலான பத்திரிகைகள் அவரது படைப்புகளை விருப்போடு பிரசுரிக்கின்றன. வாசகர் மட்டத்திலும் எழுத்தாளர் மத்தியிலும் மதிக்கப்படுபவர். ஆயினும் இன்றுவரை அவருக்கு இலங்கைத் தேசிய சாஹித்தியப் பரிசு கிடைக்கவில்லை. இவரது முதல் சிறுகதைத் தொகுதி 1961 ஆண்டு சிறந்த சிறுகதைத் தொகுதியாக அவ்வாண்டின் நடுவர் குழுவால் தெரிந்தெடுக்கப்பட்டதாக அறிகிறேன். ஆனால் அன்றைய சாஹித்திய குழுத் தலைவரான ஒரு பேராசிரியர் 'சிறுகதை என்பது ஒரு இலக்கிய வடிவம் அல்ல அதற்குப் பரிசு கொடுக்க வேண்டியது அவசியமில்லை' எனத் தடுத்துவிட்டதாக தெரிகிறது.

அந்த ஒரே ஒரு வருடம் மட்டும் சிறுகதைக்கென சாஹித்தியப் பரிசு வழங்கப்படவில்லை. இதனால் சிறந்த சிறுகதைத் தொகுதியாக பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பரிசு கிடைக்காமல் போய்விட்டது. இது ஆச்சரியமான செய்தி மட்டுமல்ல. பரிசளிப்புகளின் போது திறமைகளைவிட வேறு விடயங்களும் கவனத்தில் எடுக்கப்படுகின்றன, தனிப்பட உள்நோக்கம் கொண்ட செயற்பாடுகளுக்கும் குறைவில்லை என்பது தெளிவாகப் புலப்படுகிறது.

அவர் பரிசுகளைத் தேடி ஒருபோதும் ஓடியதில்லை. முற் கூறிய சாஹித்திய மண்டலம் உட்பட எந்தப் போட்டிக்கும் தனது நூலை அனுப்பியதில்லை.

'ஒரு எழுத்தாளனுக்கான அங்கீகாரம் மக்களிடம் இருந்தே வரவேண்டும். பாரதிக்கும் கார்க்கிக்கும் யார் பரிசு கொடுத்தார்கள்' எனக் கூறி போட்டிகளையும் பரிசுகளையும் நிராகிரிக்கிறார் அவர். இருந்தபோதும்; கொழும்பு பல்கலைக் கழகம் 1998 லும், போராதனைப் பல்கலைக்கழகம் 2009 லும் அவரது படைப்புப் பணிகளைச் சிலாகித்து இலக்கிய விருதுகள் வழங்கிக் கௌரவிக்கத் தவறவில்லை.

அவர்தான் நீர்வை பொன்னையன். சிறந்த தொகுப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டும் பரிசு பெறாத சிறுகதைத் தொகுதி 'மேடும் பள்ளமும்' ஆகும்.

எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இல்லாமை இல்லாது ஒழிய வேண்டும் என்ற மனிதநேயக் கொள்கையை தனது கல்விப் பிராயத்திலேயே வரித்துக் கொண்டவர் அவர். தனது ஊரில் ஆரம்பக் கல்வியைப் பெற்றாலும் பட்டப் படிப்பை மேற்கொண்டது வங்காளத்தில். போராட்ட உணர்வும் முற்போக்குக் கொள்கைகளும் இவரது உள்ளத்தில் பதிவதற்கு அங்கிருந்த சூழலும் முக்கிய காரணங்கள் ஆகின்றன.

இளமைப் பிராயத்திலேயே முற்போக்கு எண்ணங்கள் தனதுள்ளத்தில் ஆழப் பதிந்த அவர் தான் கொண்ட இலட்சியத்தை மக்களிடையே பரப்ப வேண்டும் என்பதற்காகவே எழுதுகிறார். எழுத்து இவரைப் பொறுத்த வரையில் ஒரு சமூகப் பணி. தன்னை ஒரு சமூகப் போராளியாகவே மாற்றிக் கொண்டார். சாதி, மதம், பிரதேசம், பொருளாதாரம் ஆகியவற்றின் பெயரால் ஒடுக்கப்படும் சகல மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து தன் எழுத்தாணியை கூர்மையாகப் பயன்படுத்துகிறார்.

மண்ணின் மீது பற்றுக் கொண்டவர் இவர்;. இதனால் தனது பிறப்பிடமான நீர்வேலியை தனது பெயரோடு நீர்வை என இணைத்து கொண்டார். ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் தான் நிற்கிறேன் என்பது தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காக பொன்னையா என்ற தனது பெயரையே பொன்னையன் எனச் சுருக்கிக் கொண்டவர். இருந்தபோதும் நீர்வை பொன்னையனான அவர் நண்பர்கள் பலருக்கும் நீர்வை மட்டுமே.

நீர்வை பிரதானமாக ஒரு சிறுகதைப் படைப்பாளி. இலக்கியம் சார்ந்த கட்டுரைகளை அவர் எழுதியபோதும், அவற்றில் சில 'நாம் ஏன் எழுதுகிறோம'; என்ற கட்டுரைத் தொகுப்பாக வெளிவந்தபோதும், அவர் தன்னை சிறுகதையாளனாகவே முனைப்புப் படுத்தியுள்ளார்.

ஈழத்து முற்போக்கு சிறுகதை எழுத்தாளர்களின் மூத்த தலைமுறையைச் சார்ந்த இவரது ஆரம்பகாலப் படைப்புகளே மிகுந்த கலைத்துவம் மிக்கவையாக அமைந்தது

ஆச்சரியமிக்கது. இவரொத்த பலரும் சூழலுக்கு ஒவ்வாத நிகழ்வுகள் கொண்ட, கற்பனை வரட்சியான, பிரச்சார வாசனையால் வெறுக்க வைக்கும், கலைவரட்சியுடனான போர்முலா ரீதியான கதைகளாகக் கட்டிக்கொண்டிருந்த நேரத்திலேயே மண்மணம் மிக்க கலைத்துவப் படைப்பகளைத் தந்துள்ளார்.

எமது நாடு ஒரு விவசாய நாடு. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் சொந்தக் காணியற்றவர்கள். குத்தகைக் காணிகளில் பயிர் செய்பவர்கள். வயல்கள் மாத்திரமின்றித் தோட்டப் பயிர்களும் குடாநாடெங்கும் செழித்தருந்தன. ஆனால் விவசாயிகள் வறுமையில் வாடினர். இவர்களைப் பற்றி தமது படைப்புகளில் பேசாது கற்பனையான தொழிலாள வர்க்கப் பிரச்சனைகள் பற்றி பெரும்பாலான முற்போக்கு எழுத்தாளர்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது நீர்வை மட்டும் விவசாயிகள் பிரச்சனையை தனது படைப்பகளில் முதன்மைப் படுத்தினார். குடாநாட்டு விவசாயிகளைப் பற்றி மட்டுமின்றி வன்னிப் பிரதேச விவசாயிகள் பற்றியும் ஆரம்ப காலம் முதல் எழுதத் தவறவில்லை.

முக்கியமாக மேடும் பள்ளமும் என்ற இவரது முதற் தொகுப்பில் உள்ள சிறுகதைகளில் கிராமிய மணம் ரம்யமானது. அத்துடன் பல்வேறுவிதமான பாணியில் படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கலைநேர்த்தியில் அவை மிகச் சேர்ந்தவை.

வங்காளத்தில் படிக்கும்போது மாணவர் எழுச்சிப் போராட்டங்களில் பங்கு பற்றியதால் அடக்குமுறை எதிர்ப்பு, மக்கள் எழுச்சி, போராட்டம், போன்றவற்றில் பரந்த அனுபவம் கிட்டியது, அத்துடன் அங்கு கற்கும் காலத்தில் ஆங்கிலம் முதல் இந்தியாவின் பல்வேறு மொழி இலக்கியங்களைப் படிக்கும் வாய்ப்புக் கிட்டியதாலும் இவருக்கு நவீன இலக்கியங்களுடனான பரிச்சியம் கிட்டியது. இவற்றின் ஊடாக படைப்புகளில் கருத்தாளம் இருக்கும் அதே நேரம் உருவ நேர்த்தியும் கலையழகும் சேர்ந்திருக்க வேண்டியதின் அவசியத்தைப் புரிந்திருக்கிறார். இதனால்தான் நீர்வையால் தனது சமகால எழுத்தாளர்கள் பலருக்கும் இல்லாதவாறு சிறுகதைப் படைப்பின் சூட்சுமம் பிடிபட்டிருக்கிறது. யதார்த்தம், நனவோடை, குறுங்கதை போன்ற மாறுபட்ட வடிவங்களை பரீட்சித்து அவற்றில் வெற்றியும் பெற்றிருக்கிறார்.

கல்வி கற்று இலங்கை திரும்பிய நீர்வை தீவிர அரசியல் ஈடுபாடு கொண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். முழு நேர அரசியல் பணியாளராக இருந்ததால் தொழிலாளர்களுடனும், உழைக்கும் மக்களினதும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர்களது பிரச்சனையை அனுபவபூர்வமாக அறிந்தார். அவர்களது பிரச்சனைகளுக்காக அவர்களுடன் இணைந்து போராட்டங்களில் பங்கெடுத்தார். இதனால் இவர் எழுதிய கட்சி அரசியல் சிறுகதைகளிலும் செயற்கைத்தன்மை இருக்கவில்லை. பிரச்சார வாடை அவற்றில் இருந்தபோதும் பட்டறிவும் அனுவமும் இணைந்ததால் அவற்றில்

உண்மைத்தன்மை வெளிப்பட்டது.

இவர் அதிகம் எழுதுபவரல்ல. இதுவரை சுமார் 70-80 சிறுகதைகள் மட்டுமே எழுதியுள்ளார். மேடும் பள்ளமும், உதயம், பாதை, ஜன்மம், வேட்கை, நீர்வை பொன்னையன் சிறுகதைகள், நிமிர்வு ஆகியன இவரது ஏழு சிறுகதைத் தொகுப்புகளாகும்.

இவரது படைப்புகளின் சிறப்பு அம்சங்கள் என்ன என யோசிக்கும்போது பல விடயங்கள் முக்கியமாகப் படுகின்றன. நீர்வையின் படைப்புகள் கருத்தாளம் நிறைந்தவை. எப்பொழுதும் அவை சமூகத்திற்கு வழிகாட்டக் கூடிய அவசியமான கருத்துக்களை முன்வைப்பவையாக இருக்கும். தேர்ந்தெடுத்த சொற்கள், சுருக்கமான வசன அமைப்பு, தெளிவான நடை, உரையாடல்கள் ஊடாக கதை சொல்லும் பாணி, சிறப்பான முடிவு, செறிவான குறும் தலைப்புகள் எனப் பலவாகும்.

பல்வேறு வித்தியாசமான வடிவங்களில் கதை சொல்லும் கலையை நீர்வை பரீட்சித்திருக்கிறார். இவற்றில் பல அவரது படைப்புலகின் ஆரம்ப கட்டங்களில் இடம் பெற்றன. தனக்கென ஒரு பாணி உருவாகியதும் அதன் வழியிலேயே நீண்ட காலம் பயணித்தார். ஆயினும் அண்மைக் காலங்களில் அதன் வடிவம் சார்ந்த மற்றொரு புது முயற்சியில் இறங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது. கதை முழுவதையும் தனித்தனி வாக்கியங்களாக பந்தி பிரிக்காமல் எழுதி வருகிறார். சிறிய வசனங்கள். கவிதையாக இல்லாமல் அதே நேரம் புதுக்கவிதை போன்ற தோற்றத்துடன் படைக்கப்படுகின்றன. அண்மையில் வெளிவந்த 'நிமிர்வு' தொகுதியில் இத்தகைய படைப்புகளைக் காண்கிறோம்.

ஏற்கனவே குறிப்பட்ட 'நாம் ஏன் எழுதுகிறோம்' என்பது இவரது கட்டுரைத் தொகுதியாகும். 'உலகத்து நாட்டார் கதை' என்பது இவரால் மீள மொழியப்பட்ட நாட்டார் கதைத் தொகுப்பு. உலகின் பல்வேறு பகுதிகளிலும் வழக்கிலுள்ள நாட்டார் கதைகளின் தொகுப்பு இது பல பதிப்புகள் கண்ட ஒரு சிறந்த நூலாகும். விபவி கலாசார மையத்தின் தமிழ் மொழி இணைப்பாளராக நீண்ட காலம் கடமையாற்றியதுடன், 'இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்ற'த்தின் முக்கிய அங்கத்தவராகவும் செயற்படுகிறார். ஆயினும் தாய்ச் சங்கமான 'முற்போக்கு எழுத்தாளர் சங்க'த்தின் ஆரம்ப காலம் முதல் அதன் செயற்பாடுகளில் முக்கிய பங்கெடுத்தவர். அதன் வளரச்சிக்கு உதவியவர். அதன் மகாநாடுகள் சிறப்பாக நடைபெற முக்கிய பணியாற்றியவர்.

அவ்வாறு இருக்க எதற்காக இப்பொழுது இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் எனப் பிரிந்து நின்று செயற்படுகிறீர்கள் எனக் கேட்டபொழுது,

"முற்போக்கு எழுத்தாளர் சங்கம் செயலிழந்து போய் பல வருடங்களாகிறது. அதற்கு

புத்துயிர் கொடுக்க பல முயற்சிகள் செய்தும் முடியாமல் போயிற்று. அதன் நீண்ட காலச் செயலாளரான பிரேம்ஜி கனடாவிலிருந்து வந்து முயன்றும் முடியாமல் போயிற்று. எனவே முற்போக்கு கருத்துகளை உடைய படைப்பாளிகளை ஒன்று சேர்த்து பணியாற்ற வேண்டியது காலத்தின் தேவையாக இருந்தது" என்கிறார்.

"சிறுகதை, கவிதை நூல் வெளியீடுகளுக்கு அப்பால், மூத்த முற்போக்கு சிறுகதையாளர்களையும் கவிஞர்களையும் இன்றைய சமுதாயத்தினருக்கு அறிமுகப்படுத்தும் வண்ணம் தொகுப்பு நூல் வெளியீடுவது, தோழர் காரத்திகேசன், பேராசிரியர்.க.கைலாசபதி போன்றோரது நினைவுச் சொற்பொழிவுகள் நடாத்துவது, இலக்கியச் செல்நெறிகள், இலங்கையின் கல்வி முறை, சூழலியல், சேதுசமுத்திரத் திட்டம், புவிவெப்படைதல், உலகமயமாதல் போன்ற சமூதாய மேம்பாடு நோக்கிய விடயங்களில் கருத்தரங்குகளும் நூல்வெளியீடுகளும் என இலங்கை முற்போக்கு கலை இலக்கிய மன்றம் முழு மூச்சுடன் செயலாற்றி வருகிறது." என அதன் செயற்பாடுகளை விளக்கினார்.

இவர் பிறந்தது 1930 ம் ஆண்டு மார்ச் மாதம் 24 ம் திகதியாகும். யாருக்கும் தெரியாமல், எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி அவரது 80 பிறந்த தினம் கடந்த மார்ச் மாதத்தில் கடந்துவிட்டது. மணிவிழா, பவளவிழா என எழுத்தளார்கள் பலரும் (நான் உட்பட) தம்மை வெளிச்சம் போட்டுக் காட்டும் எழுத்து உலகில் இவர் வித்தியாசமானவர். தன்னை முதன்மைப்படுத்தாதவர். கொள்கைகளுக்காக வாழ்பவர்.

வயதில் முதிர்ந்தாலும் சோர்வின் சாயல் படியாது, இளமைத் துடிப்புடன் இன்றும் தொடர்ந்து செயற்படும் நீர்வை பொன்னையன் பல்லாண்டு காலம் வாழ்ந்து எழுத்துப் பணியில் ஈடுபட வேண்டி வாழ்த்துகிறேன்.

kathirmuruga@gmail.com
ஜனவரி 2011 இதழ் 133

9. விடுதலைப்போரில் நேதாஜி - முனைவர் சி. சேதுராமன் , இணைப் பேராசிரியர் ,மா. மன்னர் கல்லூரி , புதுக்கோட்டை -

பாரதத்தாய் ஆங்கிலேயர் கையில் சிக்கித் தவித்த காலம். ஆங்கிலேயர்களின் அடக்குமுறையால் பாரத மக்கள் சொல்லொணாத் துயரடைந்தனர். வெள்ளையர்களை நாட்டில் இருந்து விரட்டுவதற்காக இந்திய விடுதலைப்போர் தொடங்கிய காலம். அந்த எழுச்சி மிக்க சூழ்நிலையில்தான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் விடிவெள்ளியாகிய நேத்தாஜி 1897-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23 -ஆம் நாள் கட்டக்கில் பிறந்தார். இநதிய அன்னை தன் கைவிலங்குகளை அகற்றத் தவப்புதல்வன் ஒருவன் தோன்றிவிட்டான் என்று பேருவகை கொண்டாள்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்று கருதிய நேத்தாஜி 1921-ஆம் ஆண்டு ஸீ.ஆர்.தாஸை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டு விடுதலைப்போரில் குதித்தார். வங்காளத்தில் சத்தியாகிரக கிளர்ச்சி தோஜியின் வருகையால் தீவிரம் அடைந்த்து. வங்காள தேசம் முழுவதும் சுதந்திரக்கனலை பரப்பினார். அதனால் ஆங்கில அரசு 1921-ஆம் ஆண்டு டிசம்பர் மாத்த்தில் நேதாஜி சுபாஷ்சந்திரபோஸை கைது செய்த்து. நேதாஜிக்கு ஐந்து மாதம் கடுங்காவல் தண்டனை வித்திக்கப்பட்டது. தேசத்திற்காகச் செய்யும் தொண்டையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாக்க் கொண்ட நேதாஜி மகாத்மா காந்தி, நேருஜி ஆகியாரைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் சிறைசென்றார்.

"என்று தணியும் இநத சுதந்திர தாகம்
என்று மடியும் இந்த அடிமையின் மோகம்"

விடுதலைப்போரில் நேதாஜிஎன்ற பாரதியின் கூற்றிற்கு இணங்க நேதாஜி நாடு விரைவில் விடுதலைகாண வேண்டும் என்று துடித்தார். 1922-ஆம் ஆண்டிலேயே 'இளைஞர் கட்சியை'த் துவக்கி மக்களுக்குத் தேசீய உணர்வைஊட்டி வந்தார். 1940-ஆம் ஆண்டில் திரிபுரா காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு நேத்தாஜி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரிபுரா காங்கிரஸ் கூடியபோது ஆறுமாத்திற்குள் பிரிட்டன் இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கவேண்டும். இல்லையேல் பிரிட்டனுக்கு எதிராக மக்களைத் தயாரிக்க வேண்டும் என்று நேத்தாஜி கூறினார். பெருந்தலைவர்கள் யாரும் இதற்கு ஒத்துழைக்காத்தால் நேதாஜி தலைமைப்பதவியை உதறினார். கல்ககத்தாவில் ஹால்வெல் என்ற ஆங்கிலேயனின் சிலையை அகற்ற வேண்டும் என்று நேதாஜி போராடியதால் ஆங்கில அரசு அவரைக் கைது செய்த்து. நேதாஜி சிறையில் இருந்த போது வெளிநாடுகளுக்குச் சென்று இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்ட வேண்டு ம் என்று கருதினார். சிறையிலிருந்து விடுதலையானதும் 1941-ஆம் ஆண்டு ஜனவரி 15-ஆம் நாள் ஜெர்மனிக்குப் புறப்பட்டு மார்ச் 28-ஆம் நாள் ஜெர்மனிக்கு வந்து சேர்ந்தார். ஜெர்மனியில் ஹிட்லர் நேதாஜிக்கு மிகுந்த மரியாதை அளித்தார்.

இந்தியாவைப் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து மீட்பதற்காக ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டு ஜெர்மனியிலேயே இந்திய தேசிய ராணுவத்தை அமைத்தார். அச்சமயத்தில் ஜப்பானியருக்கும், பிரிட்டிஷாருக்கும் போர் நடந்துகொண்டிருந்த்து. இப்போரில் பிரிட்டிஷார் தோற்று இந்திய வீர்ர்களை யுத்த கைதிகளாகச் ஜப்பானியரிடம் ஒப்படைத்தனர். இதனை அறிந்த நேதாஜி 1943-ஆம் ஆண்டு டோக்கியோவிற்குச் சென்று இந்திய ராணுவ்வீர்ர்களை ஒன்று திரட்டினார். அங்கு சுதந்திர இந்திய அரசாங்கத்தை அமைத்துத் தாமே பிரதம மந்திரிப் பொறுப்பையும் ஏற்றார். சர்காரின் தலைமை அலுவலகம் முதலில் சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு மாற்றப்பட்டது.

நேதாஜியால் நிறுவப்பட்ட இந்திய தேசிய ராணுவத்தில் பெண்களும், சிறுவர்களும்இடம்பெற்றிருந்தனர். மகளிர் பகுதி, ‘ஜான்சி ராணிப் படை‘ எனப்பட்டது. படைகளுக்குமகாத்மா, ஆஸாத் போன்ற தலைவர்களின் பெயர்கள்இடப்பட்டன. “ ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் மென்று ஆடுவோமே“ என்ற பாரதியின் தீர்க்கதரிசனத்தைப்போல சுதந்திரம் அடைழவதற்கு முன்பே 1941-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் நாள் சுதந்திர தினத்தன்று நேதாஜி இந்திய தேசியபடையைக் கொண்டு இந்தியாவின் மீது படையெடுத்தார்.

மார்ச் மாதம் ராணுவம் தாய்நாட்டுக்குள் புகுந்து ‘தாயே உனது அடிமைவிலங்குகளை உடைத்தெறியும் வரைஉறங்க மாட்டோம் என்று சூளுரைத்த்து. தேசியராணுவத்திற்கும், பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திற்கும் நடந்த போரில் பிரிட்டிஷ் இந்திய படை படுதோல்வி அடைந்த்து. மார்ச் 21-ஆம் நாள் ஜான்சி ராணிப்படையினரின் எதிரிபாராத தாக்குதலால் பிரிட்டிஷ் படைகள் எல்லோரும் சரணடைந்தார்கள். மார்ச் 31-ஆம் நாள் தேசிய ராணுவம் மணிபுரிசமஸ்தானத்தில் புகுந்து தென் பாகம் முழுவதையும் கைப்பற்றியது. மே 10-ஆம் நாள் கோஹிமா நகரில் தேசிய ராணுவம் புகுந்த்து.

1944-ஆம் ஆண்டு ஜூன்மாதம் 25-ஆம் நாள் பிரிட்டிஷ் படை கோஹிமாவை மீட்டுக் கொண்டன. பின்பு நேதாஜியின் உத்தரவாலும்இயற்கையின் சதியாலும் தேசிய ராணுவம் பின்வாங்க நேரிட்டது.1945-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் நாள் இந்திய தேசிய ராணுவத்தின் தளபதி நேத்தாஜி ரங்கூனிலிருந்து வெளியேறினார். அவர் வெளியேறுமுன், “வெளிச்சம் பிறப்பதற்குமுன் இருட்டடைகின்றது என்பதைநம்பும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்தியா கட்டாயம் சுதந்திரம் அடையும். அதனை உங்களுக்கு உரித்தாக்குகிறேன். நேதாஜி போன பிறகும் இந்திய ராணுவ வீர்ர்கள் பர்மாவில் போர்புரிந்து இறுதியில் ரசணடைந்தார்கள். பர்மாவில் இருந்து நேதாஜி வெளியேறிய பின்னரும் சைகோன் வானொலி மூலம் இந்திய மக்களுக்கு உரைநிகழ்த்தினார்.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு 16-ஆம் நாள் நேதாஜி ஜப்பானிய அரசாங்கத்துடன் பேச்சு

நடத்துவதற்காக விமானத்தில் செல்லும்போது விமானம் விபத்துக்குள்ளாகியது. அதில் நேத்தாஜி படுகாயமடைந்தார். உடனே அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சைப் பலனிளிக்காத்தால் அவர்இறந்த்தாக்க் கூறப்படுகின்றது. நாட்டுக்குழைத்த நல்லவர், வீரத்தின் விளைநிலம், எளிமையின் இருப்பிடம், இந்தியத்தாய் பெற்றெடுத்த ரத்திருமகன் நேத்தாஜி அவர்கள் வைத்துள் வாழ்வாங்குவாழ்ந்து வானுறையும் தெய்வங்கள்ள் ஒனாறாகிவிட்டார்.

E. Mail: Malar.sethu@gmail.com

பதிவுகள், அக்டோபர் 2010 இதழ் 130

10. பெப்ருவரி 10 பிரெக்ட் நினைவு தினம்! பேற்றோலட் பிரெக்ட் நினைவுகளில்... - சந்துஸ் -

கலையானது ஆதிக்க சக்திகளின் கைகளில் தவழ்வதில் பெருமை கொண்டிருந்த நெருக்கடிகளின் கால கட்டத்தில,அச்சம் தவிர்த்து அடக்கப்பட்டவர்க்காகவும் உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும் பிரெக்ட் எழுதினான். உலகை அடக்கப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவும அவர்களுடையதாய் அதை மாற்றிடும் வகையில் எழுத்துக்கள் அமையவேண்டுமென அவன் விரும்பினான். அவன் எழுதிய கால கட்டமானது அப்படி எழுதுவதென்பது அபாயகரமானதாக இருந்த நாசிகளின் ஆட்சி நடைபெற்றக் கொண்டிருந்த காலம். பிரெக்டின் பல புத்தகங்கள் தடை செய்யப்பட்டன. ஜேர்மனியை விட்டு வெளியேறி அகதியாக நாடு நாடாக குடும்பத்துடன் அலைய நேர்ந்தது. நாசிகளைப்பற்றியும் அவர்கள் விளைவிக்கவிருந்த அனர்த்தங்கள் பற்றியும் எழுதுவது மட்டும் தொடர்ந்து கொண்டிருந்தது. நாசிகளின் வீழ்ச்சிக்குப்பின்னர் கிழக்கு ஜேர்மனியில் குடியிருக்க வந்த பிரெகஷ்ட் அங்கு இருந்த குழுவினருடன் சேர்ந்து பேர்லினர் என்சம்பில் என்ற நாடகக் குழுவைத் துவங்கினார். பல தரப்பட்டவர்களுடனும், நடிகர்களுடனும் உழைப்பவர்களுடனும் மாணவர்களுடனும் சேர்ந்து ஏராளமான நாடகங்கள் பிரக்டினால் எழுதவும் இயக்கவும்பட்டன. இவற்றில் பல பரிசோதனை முயற்சிகளும் அடங்கும். எழுத்தும் கவிதையும், அவர் 1956 ல் இறக்கும் வரையும் தெடர்ந்தது.

காவியபாணி நாடக அரங்கில் (எப்பிக் தியேட்டர்) பிரெக்ட் முன்னோடியாக சில பரிசோதனைகளை நிகழ்த்தினார். நாடகப் பாத்திரங்களில் உணர்வுரீதியாக ஒன்றி தம்மை அவரகளுடன் இணைத்து உணரவைக்கும் நோக்குடன் உருவாக்கப்படும் பிரதிக்கு எதிரான ஒரு பிரதியை உருவாக்குவது பிரக்ஷ்டின் எண்ணமாக இருந்தது. இது பார்வையாளரை உறங்கு நிலையில் ஜடங்களாக வைத்திருக்கவெ உதவுகிறது என்பது அவர கருத்து.

வாழ்வின் படிப்பினை என்பதைக் கற்றுக் கொள்வதன் மூலமே நாடக அரங்கு என்பது பிரயோசனப்படுகிறது. அரங்குகளில் உழைப்பவர்களில் அவர்களில் அடக்கப்பட்டவர்களின் பாதையில் யார் நிற்கிறார்கள் என்பதை சிலவேளைகளில இனங்கண்டு கொள்ள முடியும். பிரெக்ட் உடைய பாணியைப் பொறுத்தளவில் பார்வையாளர்கள் நாடகத்தின் பாத்திரங்களிலிருந்து தொடர்பை ஒரேயடியாக முறிக்கவும் கூடாது, உணர்வுரீதியான பிணைப்பிற்கிடையிலான ஒரு இடைவெளி பேணப்பட வேண்டும். அதாவது அந்தப் பாத்திரங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் அந்தப் பாத்திரங்கள் பிரதிநிதிப்படுத்தும் சமூக பாத்திரத்தை ஒரு விமர்சனக் கண்ணுடன் பார்ப்பதாகும். ஒவ்வொரு பார்வையாளரும் தனக்கான ஒரு விமர்சனப் பார்வையை வளர்த்துக் கொள்ளவும் இதனால் முடிகிறது. பிரக்ஷ்டின் இதன் அணுகுமுறையை சுருங்கச் சொல்லின், மேடையில் ஒரு பாத்திரத்தைக் காண்கையில் அப்பாத்திரத்துடன் நாம் உணர்வு

ரீதியில் ஒன்றிப் போவதைத் தவிர்க்கும் முகமாக பாத்திரங்கள், அணுகுமுறை, உருவம் என்பன அமைவதன் விளைவாக பார்வையாளர் அந்தப் பாத்திரத்தை அதன் வெளிப்பாடுகள் மூலமாக அது சமூகத்தில் உள்ள ஏதோ ஒன்றை சொல்வதாக இனங்காண முடிகிறது. இங்கு ஒன்றிப் போதல் என்பது 'அன்னியமாதல"; உத்தியால் தவிர்க்கப்படுவதால் பார்வையாளர்கள் சமூகத்தில் தனது நிலையையும விமர்சனப் பார்வையுடன் இனங்கண்டு கொள்வது சாத்தியமாகிறது. இந்த உத்தியைப் பொறுத்தளவில் பிரெக்ட் அன்றாட வாழ்வினின்று அன்னியப்பட்ட பாத்திரப்படைப்புக்களை மேடையில் உலாவவிட்டார்.

பிரபல மேற்கத்திய அரங்கு யதார்த்தமான வாழ்க்கையின் பரிமாணத்தை மேடையில் காட்டுவதில் முனைப்புக்காட்டியது. மேடையமைப்பும் நடிப்பும் உண்மையான வாழ்வைச் சித்தரிக்க முயன்றன. பார்வையாளர் தாம் வாழும் வீட்டின் இன்னுமொரு அறையைப் பார்ப்பது போன்றதோர் பிரமையில் இருத்தி வைக்கப்பட்டனர். வளர்ச்சியடைந்து கொண்டிருந்த நாடகத் தொழில் நுட்பங்கள் இதைத்; தத்வரூபமாக சித்தரிக்க பெரிதும் உதவின, இதனால் இன்னுமொரு அறை பற்றிய பிரமை மேலும் மேலும் வளர்ந்தது. எமிலிசோலா போன்ற யதார்த்த வாதிகளின் அரங்குகளில் இது மிகத் தீவிரமாக் காட்சிப்படுத்தப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு சமயலறைக் காட்சி என்று வைத்துக் கொள்வோம.; இதற்காக ஒரு சமயலறை அப்படியே நிர்மாணிக்கப்பட்டு உணமையான இறைச்சித் துண்டுகள் தொங்கிக் கொண்டிருக்க நிசமாக ஈக்கள் மொய்ப்பது என சமயலறை காண்பிக்கப்படும். இப்படிக் காண்பிக்கப்படுவதை பார்வையாளர்கள் இதுவே யதார்த்தம் என ஒன்றிப்போய் விமர்சனக் கருத்தாக்கத்தை தமக்குள் வளர்த்துக் கொள்ளாமல் இருந்து விடுகின்றனர். பிரக்ஷ்ட் சீன, ஜப்பானிய மற்றும் இந்திய அரங்குகளை முன்மாதிரியாக் கொண்டதுடன் அவற்றில் பார்வையாளரை எப்போதும் தாம் பார்த்துக் கொண்டிருப்பது யாதார்த்தம் அல்ல என்பதை மறக்காமல் இருக்கச் செய்து கொண்டிருக்கும் அம்சங்கள் இருப்பதையும் அதே சமயம் ஏதோ ஒன்றைக் குறிப்பாக உணரவைப்பதையும் விதந்தரைத்தார். அவரும் தன் நாடகங்களில் முகப்போலிகளை பயன்படுத்தினார். வெள்ளைப் பூச்சுக்களை நடிகர்களின் முகங்களில் பூசச் செய்தார். யதார்த்தத்தின் பிரமைகள் உடைபடுமாறு தனது பாணியை அவர் அமைத்திருந்தார். அவரது அரங்கின் நடிகர்கள் அரங்கின் பாத்திரங்களின் உடல்களுக்குள் புகுந்து கரைந்து விடாமல் ஆனால் அந்தப்பாத்தித்தைப் புரிந்து கொள்ளவும் பார்வையாளருக்கு அந்தப்பாத்திரம் எத்தகையது என்பதையும் சமூகச் சூழ்நிலையானது அப்பாத்திரத்தை எப்படி உருவாக்கியது என்பதைச் சொல்ல வேண்டும் என்றதிலும்; அவர் அக்கறை இருந்தது. யதார்த்த வாதிகளின் மிகைப் படுத்தல்களின் பிரதிபலிப்பை எல்லாவகையிலும் நிராகரித்த போதிலும் பிரக்ஷ்டின் அரங்குகள் சமூக நிலமைகளே உலகை நிர்ணயிக்கின்றன, உருவமைக்கின்றன என்று காண்பிப்பதானால் யதார்த்தமானவை. இன்னும் சொன்னால் சமூக உறுப்பினர்கள் உலகால் மாற்றப்படுவதையும், சமூக உறுப்பினர்களே உலகை மாற்றுவதையும் செய்தியாக அவரது நாடகங்கள் சொல்லிச் சென்றன.

இங்கு குறிப்பிட வேண்டிய இன்னெரு விடயம், பிரெக்ட் யாதார்த்த நாடகங்களையும் அவற்றின் பார்வையாளர்கள் பாத்திரங்களுடன் ஒன்றிச் சென்று விமர்சனமற்றிருந்தையும் அவர் நிராகரித்த போதிலும், அவரது நாடகங்களில் கூட உதாரணமாக 'மதர் கறேஜ்" (துணிவுள்ள தாய்) நாடகத்தில் உள்ள துயரில் கரைந்தும் உணர்வு ரீதியில் ஒன்றியும் போன பார்வையாளரே அதிகம். யதார்த்த சூழலில் எல்லோரும் பங்காளிகளாக இருபப்தனாலோ என்னவோ இது நிகழந்தது. இதை பிரெக்ட் தடுக்க முடியவில்லை.

இன்றைய இலங்கை இந்திய தமிழ்ச் சூழலில் (புகலிடங்கள் உள்ளிட) பொதுவான நாடகச் சூழலிற்கு மாற்றான அரங்கு என்பது தனக்கே உரிய படிப்பினைகளுடன் மேலெழுந்து வரும் முயற்சிகளைக் காண்கின்றோம். எங்கு பார்க்கினும் ஆதிக்க வர்க்கத்தின், ஆதிக்கச்சாதியின், அதிக்கப் பாலின் கருத்து மேலோங்கியுள்ள தொடர்பு சாதனங்களிலும் கலை வடிவங்களிலும் அரங்கிலும் மேலாட்சி செலுத்தும் நிலை உள்ளது. வெள்ளை ஆதிக்கம், ஆணாதிக்கம், பிராமண உயர்சாதி ஆதிக்கம் என்பனவே பொது நாடக அரங்கின் மொழியாகவும் இதயமாகவும் உள்ளது. இந்திய, இலங்கை மற்றும் புகலிட சூழலிலும் இவ்வகை மேலாதிக்கம் செய்யும் சாதிகளின், வர்க்கங்களின் கருத்தே நடை முறையிலும் அரங்கமாக நிகழ்த்தப்படுகிறது. அந்த பிம்பங்களே பிரதிபலிக்கப் படுகின்றன.

உதாரணத்திற்கு தீயதெனறால், தீமையென்றால், தீயவர்ர்கள் என்றால் கறுப்பு நிறத்தில் காட்.டுவதைச் சொல்லலாம். இது வெள்ளை மதிப்பீட்டை விமர்சனமின்றி விழுங்கிக் கொண்டதற்கு ஒரு உதாரணமே. இப்படி எங்கும் வலியதன் ஆதிக்கமே ஓங்கியிருக்கையில் இதற்கு மாற்றாய் கால காலமாய் அடக்கப் பட்டவர் சார்பாய் அந்த உணர்வாய் முகிழ்க்க முனையும் கலை வெளிப்பாடுகள் ஆறுதல் சொல்லத் தக்கதாய் தமிழ் சூழலைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் தனக்கேயுரிய தன்மையுடன் வெளிப்பட்டிருக்கும் தலித் அரங்கியல்; போன்றவற்றில் தாம் தம்மை இனம் காணும் ஒரு அரங்கியலை கற்றுக் கொள்ளவும் முடிகிறது. இந்தியச் சூழலில் அமைப்பு முறையானது அவர்களை ஒடுக்கி வைத்திருக்கும் பட்சத்தில் தாழ்தப்பட்ட மக்களின் கலைகளும் வாய் மொழி இலக்கியங்களுமே, இவர்களது உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடியனவாக இருக்கின்றன. ஆட்டம், கூத்து, நாடகம் உள்ளிட்ட அரங்கியல் வடிவமாக ஒடுக்கும் ஆதிக்க சாதி மக்களின் நடவடிக்கைகளை கேள்விக்குள்ளாக்கும் வடிவமாகவும், பார்வையாளர்களிடையே உடனடி விளைவை ஏற்படத்தக் கூடியதாகவும் தலித்தரங்கு விளங்குகிறது. தலித் மக்களின் வாழவியலுக்கு எதிராகக் கட்டமைக்கப்பட்டுள்ள கருத்தியலுக்கு எதிராகவும் மாற்றுக் கலாச்சாரத்திடனும் தலித் அரங்கியல் விளங்குகின்றது.

பிரெக்ட் கற்றுக் கொண்ட முகப்போலி அரங்கியலின் இந்திய வடிவத்திற்கு உயிர் கொடுத்துள்ளது தலித் கலைகள்தான். தமிழகச் சூழலில், கே. ஏ. குணசேகரன்

போன்றோரின் 'பலி ஆடுகள";, 'ஊர்கூடி",'பாறையைப் பிளந்து கொண்டு" ஆகிய நவீன நாடகங்கள் மேடைகளை தாண்டியும் நடத்தப்படுகின்றன. தமிழ் பேசும் சூழலின் மாற்று அரங்கு என்பது, இவர்களின் அனுபவங்களை உள்வாங்கி பெற்றதன் மூலமே ஆதிக்க கலைக்கு முகம் கொடுத்து தனது காலில் எழுந்து நின்று தனது உணர்வை உரத்துச் சொல்ல முடியும். பிரெகஷ்;;டை நினைவு கூரும் இந்தச்சந்தர்ப்பத்தில் எமது தற்கால சூழலில் அரங்கியலையும் புரிந்துகொள்வோம்.

(இச் சிறு குறிப்பிற்கு பின் புலமாகவும் உதவியுமாகவும் அமைந்த 'பிப்பிள்ஸ் எவேக்கினிங் 98" இதழுக்கும் டாக்டர். குணசேகரனின் 'தலித் கலை கலாச்சாரம்" நூலிற்கும் நன்றிகள்.)

சந்துஸ்: Santhush@aol.com
பதிவுகள், மார்ச் 2004 இதழ் 51 -

11. குவாண்ட புளுகுகள்! --ரோஸாவசந்த்_

[சக இணையச் சஞ்சிகையான 'திண்ணை' நமது நட்புக்கும் மதிப்புக்குமுரியது. ரோஸாவசந்தின் இக்கட்டுரை ஆரோக்கியமானதொரு விவாதத்தினை ஏற்படுத்தும் சாத்தியம் கருதியும், கருத்துச் சுதந்திரம் கருதியும் - அதற்காகப் பதிவுகள் நூற்றுக்கு நூறு வீதம் கருத்துச் சுதந்திரமான சஞ்சிகை என்று மார் தட்டிக் கொள்ள நாம் வரவில்லை - பதிவுகளில் பிரசுரமாகின்றது. திண்ணையைப் பொறுத்தவரையில் இணையத் தமிழ் சஞ்சிகைகளில் முதலாவதாக வெளிவந்த/ வெளிவருகின்ற ஆரோக்கியமான, காத்திரமான தமிழ் இணையச் சஞ்சிகை என்ற பெருமை அதற்குண்டு. இணைய விவாதப் பக்கம் எம்மை நாட வைத்ததே திண்ணையின் விவாதத் தளம்தான். இக்கட்டுரையினை இங்கு பிரசுரிப்பதன் மூலம் திண்ணையையோ அல்லது அதன் படைப்பாளிகளையோ (நானும் அவர்களிலொருவன் தான்) அவதூறு செய்யும் நோக்கம் எமக்குக் கிடையாது என்பதை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். - ஆசிரியர் -]

-3. எழுத மிகவும் அலுப்பாக இருக்கிறது. ஒரே மாதிரியான விஷயங்களை, அதுவும் எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தை எத்தனை முறை சொல்வது! எனது பால், ஜாதி, சமூக நிலை காரணமாய் எனக்கு கிடைத்த எந்த சலுகையையும் விட்டுவிடாமல் அனுபவித்துகொண்டு, அதனால் விளைந்த ஒரு திமிரும் ஏதோ ஒருவகையில் கலந்துதான் ஒவ்வொருவார்த்தையும் என்னிடமிருந்து பிறக்கின்றன. இதில் என் குரல் திண்ணையில் அமுக்கபட்டது குறித்து ஒப்பாரி வைப்பது போன்ற ஆபாசம் கிடையாது என்று எனக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது. அதனால் என் எழுத்து திண்ணையில் தடை செய்யபட்டது குறித்து, என் பொருட்டு யாரும் இரங்கல் தெரிவிக்க நியாயமான காரணங்கள் இல்லை. இந்த கட்டுரையுடன் தொடர்புள்ள 'விவாதம்', மற்றும் திண்ணை என்ற பத்திரிகை, அதில் உள்ள 'கருத்து சுதந்திரம்', அதன் 'நாட்டாமை', குறித்து பலருக்கு இருக்கும் பிம்பம் இவற்றை மனதில் வைத்து சில தகவல்களை மட்டும் குறிப்பாய் கீழே தருகிறேன்.

-2. கீழே தொடரும் கட்டுரை என்ற ஒன்று திண்ணைக்கு அனுப்பபட்டு வெளிவரவில்லை. வெளிவராது என்ற தகவல் கூட எனக்கு தெரிவிக்கபடவில்லை. தொடர்ந்து இது குறித்து எழுதபட்ட மின்னஞ்சல்களுக்கு பதில் வராமல், கடைசியாய் ஒற்றை வரி காரணம் மட்டும் தரபட்டது. அது 'திண்ணை அவர்களுக்கு கிடைக்கபெற்ற எல்லாவற்றையும் வெளியிடுவதில்லை, குறிப்பாக திண்ணை எழுத்தாளர்கள் மீதான வசைகளை வெளியிடுவதில்லை' என்பதுதான். ஆகையால் கட்டுரையில் உள்ள வசைகளை அவரவர் படித்து கண்டுபிடிக்கும் வகையில் எந்த மாற்றமும் செய்யவில்லை.

என் சிற்றறிவிற்கு எட்டியவகையில் கட்டுரையில் ஆட்சேபிக்க கூடிய விஷயமாக ஒருவர் கருத வாய்ப்புள்ளதாக, ஒரே ஒரு விஷயம்தான் இருக்கமுடியும் என்று தோன்றுகிறது. அது ஹாரிசனுடனான தனிபட்ட மின்னஞ்சல் தொடர்பு குறித்து குறிப்பிட்டிருப்பது மட்டுமே. கட்டுரை எழுத தொடங்கும் முன்பே திண்ணைக்கு இது குறித்து அறிவுரை கேட்டு, திண்ணையிடமிருந்து கிடைத்த ஆலோசனைகளை கணக்கில் கொண்டே அது

எழுதபட்டுள்ளது. குறிப்பாக ' நீலகண்டன், ஹாரிசன் சொல்வதில் திரித்தல்கள், தவறுகள் இருப்பதாக நான் நினைக்கும் விஷயங்களை தனிகட்டுரையாக எழுதலாம்' என்று திண்ணையின் ஆலோசனை அடங்கிய மின்னஞ்சல் இன்னும் என்னிடம் உள்ளது. இதே விவாதத்தில் என்னுடைய பழைய கட்டுரைகளில் வசைகள் வெளிபடுவதாக யாராவது சொன்னால் என்னால் அதை புரிந்துகொள்ள முடியும். முழுக்க விஷயம் குறித்து மட்டுமே பேசியுள்ளதாக நினைக்கும் இந்த கட்டுரையை வசையாக நினைக்க கற்பனை வளம் அதிகம் வேண்டும் என்று தோன்றுகிறது--ஏதேனும் ஒரு அராஜக வைரஸ் வந்து கட்டுரையை மாற்றி இருந்தால் ஒழிய.

மற்றபடி சொல்ல என்ன இருக்கிறது? இனி திண்ணை போன்ற பத்திரிகைகள் படித்து ரத்த அழுத்தம் ஏறவிடமாட்டேன் என்பதில் கொஞ்சம் சந்தோஷமாக இருக்கிறது. நீலகண்டன் எழுதியதில் இன்னும் உள்ள பிரச்சனைகள், 'இந்த தத்துவ இணைகள்' குறித்து எனக்கு இருக்கும் கருத்துக்கள் (நீலகண்டன் போட்ட முடிச்சை மட்டுமே எதிர்கிறேனே ஒழிய, இது குறித்து இன்னும் என் கருத்தை சொல்லவில்லை), கணிதம் என்ற தர்க்கத்தின் மொழியின் அடிப்படைகள் குறித்து திண்ணையில் பிறகு எழுத நினைத்தது எழுதபடமாட்டாது. ஆனால் நிச்சயம் சமஸ்கிருதத்தை முன்வைத்து அவிழ்த்துவிடப்படும் குவாண்ட புளுகுகள் குறித்து பின்னால் எங்காவது எழுதபடும்.

நீலகண்டன் இதற்கு பதில் என்று எதையாவது நிச்சயம் தருவார் என்று தெரியும். திண்ணை எனக்கு செய்தது போல் இல்லாமல், பதிவுகள்அதையும் வெளியிடவேண்டும். ஆனால் அதை நான் இப்போதைக்கு படிக்கமாட்டேன். இனி பழைய கட்டுரை தொடர்கிறது.

-1. எழுதபோவதாய் சொன்ன விஷயங்கள் குறித்து எழுதாமலும், எழுதமாட்டேன் என்று சொன்ன விஷயங்கள் குறித்து எழுதிகொண்டிருப்பதற்கும், படிப்பவர்கள் மிகவும் மன்னிக்கவும். கருத்து வேறுபாடாய் தொடங்கி செய்யப்படும் ஒரு விவாதத்தில், தன் தரப்பு தர்கத்தை வலுபடுத்தும் விதமாய் வெளிப்படும் புளுகை புரிந்துகொள்ளலாம். புறக்கணிக்கவும் செய்யலாம். கருத்து வேறுபாடாய் இல்லாமல், அறிவியல் குறித்தும், கணிதம் குறித்தும் புளுகுவதாலும் திரிப்பதாலுமே, இதை மீண்டும் எழுதவேண்டியுள்ளது. (தவறு/பொய் என்று தன் மனதிற்கு நன்றாய் தெரிந்தும், பொதுகளத்தில் அதை சொல்வதை புளுகு என்கிறேன். குவாண்ட புளுகு குறித்த விளக்கம் கீழே வருகிறது.)

0. நீலகண்டன் மற்றவர் மூலமாக அறிந்த ஒரு தகவலையோ, கருத்தையோ பொதுகளத்தில் முன்வைக்கும்போது, அந்த மற்றவரை குறிப்பிடுவது நல்லது. இதை ஏதோ அறிவு ஒழுக்கம் என்று கருதி செய்யவேண்டிய ஒன்றாக சொல்லவில்லை. சொன்ன தகவல்/கருத்து தவறாக, அபத்தமாக, முட்டாள்தனமாக இருக்கும் பட்சத்தில், அதற்கான பழி நீலகண்டன் தலையில் விழாமல் இருக்க வேண்டும் என்பதற்காக சொல்கிறேன்.

உதாரணமாக dirac delta funtion குறித்து ஹாரிசன் சொல்லி, அதை திண்ணையில் நீலகண்டன் குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் அதை சொல்வது முறையாக இருக்கும். அனாவசியமாக ஹாரிசனுக்கு போகவேண்டிய பழி, நீலகண்டன் மேல் விழாது.

1. இந்த அபத்தமான வெட்டி விவாதத்தை ஒரு முடிவுக்கு கொண்டுவரும் முயற்சியாய் நேரடியாய் ஹாரிசனுக்கே அவர் எழுதியதின் அபத்தத்தை விளக்கி எழுதினேன். (ஹாரிசனே ஒப்புகொண்டால் கூட நீலகண்டன் தொடர்ந்து ஹாரிசன் சொன்னதை நியாயபடுத்துவார் என்றாலும் நீலகண்டனைவிட ஹாரிசனுக்கு இந்த விஷயத்தை விளக்குவது எளிது என்று தோன்றியதால் எழுதினேன்.) ஹாரிசன் அதற்கு அளித்த பதில் நான் சற்றும் எதிர்பார்க்காத வகையில் அமைந்திருந்தது. நீலகண்டன் (ஹாரிசனை நம்பி!) குறிப்பிட்டிருந்த 'Dirac Delta function கணித தர்கத்தை மீறி செயல்படுவது' உட்பட, கணிதம் குறித்த பல அபத்தமான வாதங்களால் நிறைந்திருந்தது. ஹாரிசன் எழுதியவற்றின் அபத்தங்களை எல்லாம் விரிவாய் விளக்கி அவருக்கு பதில் எழுதிய என் இரண்டு கடைசி மின்னஞ்சல்களுக்கு கடந்த பத்து (இப்போது 17) நாட்களாய் பதில் வரவில்லை. ரோஸாவசந்த் எழுதியதெற்கெல்லாம் பதில் எழுதாமல் இருப்பதுதான் அறிவுஜீவி நேர்மை என்று இங்கே சிலர் நினைக்ககூடும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக நான் ரோஸவசந்தாய் இல்லாமல், ஹாரிசன் உட்கார்ந்திருப்பதைவிட உலகில் பெயர்பெற்ற, உலகின் முக்கியமான கணித மேதைகள் உலவும் ஒரு கல்வி நிலயத்திலிருந்து, ஒரு கணிதவியலாளனாய், ரோஸாவசந்தின் ஒரிஜினலாய் அந்த அஞ்சலை எழுதினேன்.

2. ஹாரிசனுடனான மின்னஞ்சல் தொடர்பு தனிபட்டமுறையில் இருந்ததால் அதை மேற்கோள்காட்டி பேச விரும்பவில்லை (ஹாரிசனை கன்வின்ஸ் செய்தபின், அவர் அனுமதியுடன் திண்ணையில் எழுதுவதுதான் எனது நோக்கமாக இருந்தாலும், அவர் என் கடைசி இரண்டு மெயில்களுக்கு பதில் எழுதாமல் போன நிலையில், அவரை அதிகம் தொந்தரவு செய்ய விருப்பமில்லாமல், அந்த பணியை நீலகண்டனுக்கே விட்டுவிட்டு இதை எழுதுகிறேன்.) ஆனால் ஹாரிசன் ஒரு முக்கிய அறிவியலாளர் என்பதாய் பாவனை செய்யபட்டு, அதனடிப்படையில்-அதனடிப்படையில் மட்டும்- நீலகண்டன் ஹாரிசன் சொன்னதை கொஞ்சம் திரித்து, "பலவிதங்களில் பிரபஞ்ச தரிசனத்தில் சாங்கியமும் பௌத்தமும் கொண்டிருந்த வேறுபாட்டினையும் இது குறித்து ஐந்தாம் நூற்றாண்டில் பாரதத்தில் நடந்த வாதங்களையும், ஸ்க்ராட்டிஞ்சரின் க்வாண்டம் இயற்பியல் மறுப்பும், ஹெய்ஸன்பர்க்கின் க்வாண்டம் வாதங்களும் மிகவும் ஒத்திருந்ததாக கூறுகிறார் இயற்பியலாளர் டேவிட் ஹாரிஸன்" என்று எழுதியிருந்தார். தொடர்ந்து நான் இது குறித்து மீண்டும், மீண்டும் பேசி provoke செய்த பிறகும் கூட நீலகண்டன் இந்த சாங்கிய vs பௌத்தம் ---- ஷ்ரோடிங்கர் vs ஹெய்சன்பர்க் விஷயத்திற்கான தொடர்பு குறித்ததற்கான ஆதாரமாய், உருபடியாய் ஒரு வார்த்தை கூட எழுதவில்லை. இன்னும் அதற்கான ஒரே ஆதாரமாய் இருக்கும் ஒரே விஷயம் ஹாரிசன் தனது 'கணித பரிச்சயம் இல்லாத, அதைகண்டு பயப்படும்'

மாணவர்களுக்கு எழுதியுள்ள பாடத்தில் உள்ள மொட்டையான ஒரு வரிதான். அதனால் சொல்லவேண்டியுள்ளது.

ஹாரிசன் எழுதிய பல விஷயங்கள் அவருக்கு கடந்த 60 வருட கணிதம் மட்டுமில்லாமல், குவாண்டம் இயற்பியலில் நடந்துள்ள முன்னேற்றங்களில் கூட பரிச்சயம் இல்லாமல் இருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. நீலகண்டன் முன்வைத்த 'Dirac Delta Function' கணித தர்கத்தில் வராது என்ற அதே தவறான தகவலை அவரும் தந்திருந்தார். அதே போன்ற வேறு சில உதாரணங்களையும் தந்துள்ளார். நான் போன இதழில் சொன்னபடி ஒரு 'distribution' என்பதாய் அதை வரையரை செய்வது ஒரு புறமிருக்க, ஒரு 'measure' என்ற அளவில் அது ஒரு கறாரான கணித விஷயம், அது ஒரு நூற்றாண்டாகவே உள்ள ஒரு விஷயம் என்பது கூட அவருக்கு தெரியவில்லை. நிச்சயமாய் முதலில் இயற்பியலில் பயன்படுத்தபட்ட போது கூட அது கணித தர்கத்தில் வராத ஒரு கருத்தாக்கமாக பயன்படுத்தபடவில்லை.

அறிவுரீதியான அத்தனை துறைகளிலும் சென்ற நூற்றாண்டில் ஒரு புரட்சியே நடந்தது என்று சொல்லலாம். அதில் ஒன்று குவாண்டம் இயற்பியல். இதன் காரணமாய் கணிதத்தில் உருவான புதிய துறைகளும், கருத்தாக்கங்களும் பட்டியலில் அடங்காதவை. இந்த பல துறைகள் தனிபட்ட கணித துறையாய் பரிணமித்தபோதும், அவ்வாறு மட்டும் இயங்காமல், இயற்பியலின் ஓவ்வொரு புதிய கருத்தாக்கத்துடன் இயைந்தே வளர்ந்து வருகிறது.

கணிதம் அதன் தர்க்க வரையரையை மீறி இயற்பியலில் ஒரு மொழியாக செயல்படுகிறது என்று சொல்வது போன்ற, விஷயம் புரியாமல் ஔரும், நகைப்பிற்குரிய கருத்து கிடையாது. இயற்பியலில் ஒரு விஷயம் கணிதத்தின் தர்கத்தை பயன்படுத்தாமல், குண்ட்ஸாக உருவானால், அது நீலகண்டன்/ஹாரிசன் சொல்வது போல் கணிதம் தன் "தர்க்க அமைப்பியல் சார்ந்த எல்லைகளை மீறி அல்லது அவை தகர்ந்த நிலையிலும் கணிதம் மொழியாக செயல்படுவ"தாக அதற்கு பொருள் கிடையாது. இயற்பியலில் அது குண்ட்ஸாக மட்டும் ஒரு கருத்தக்கமாக மட்டும் உள்ளது என்றுதான் பொருள். இன்னும் கணிதரீதியாய் கறாராய் (with rigour) அது வரையரை செய்யபடவில்லை என்றுதான் அர்த்தம். பொதுவாக ஒரு பத்தாண்டுகளிலேயே அதற்கு கணிதரீதியாய் கறாரான வரையரை வந்தும் விடுகிறது. பொதுவாக அதை இயற்பியல்வாதிகளே செய்தும் விடுகின்றனர். அவ்வாறு செய்யதொடங்கி கணிதவியலாளராய் மாறியவர்கள் பலர்உண்டு. அந்த வகையில் இயற்பியலும், கணிதமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கமுடியாமல் உள்ளது. இத்தகைய எந்த முன்னேற்றம் குறித்து தகவல் ரீதியாய் கூட ஹாரிசனுக்கு தெரிந்திராமல் இருந்தது மிகுந்த ஆச்சரியமளித்தது. (நீலகண்டனுக்கு தெரியாதது ஆச்சரியமல்ல.) டோரண்டொ பல்கலை கழகம் போன்ற இடத்தில், ஒவ்வோரு வாரமும், யாராவது ஒரு உலகின் முக்கிய பெரிய தலை வந்து சொற்பொழிவாற்றுவது வழக்கமாய்

இருக்கும். அப்படிபட்ட இடத்தில் இருந்துகொண்டு கூட மிக சாதாரணமான விஷயங்கள் கூட தெரியாதது வியப்பளிக்கிறது. அவர் கணித வரையரைக்குள் வராது என்று சொன்ன எல்லாமே மிக கறாராய் அதன் வரையரைக்குள் வரகூடிய விஷயம். (சொல்லபோனால் அப்படி வராத வரையரை பிரச்சனை குறைந்து 50 ஆண்டுகள் முந்தயது.)

3. மீண்டும் சொல்லவேண்டியுள்ளது. ஹாரிசனின் கணிதம் குறித்த ஓளரலை நியாயபடுத்தும் விதமாய் நீலகண்டன் எழுதியது போன்ற ஒரு ஆபாசமான தர்கத்தை நான் சமீபத்தில் படித்ததில்லை. தவறான ஒன்றை நியாயபடுத்தும் விதமாய் எப்படி எல்லாம் ஒருவர் தர்கம் செய்யமுடியும், நீலகண்டனை விட்டால், அவர் என்னவெல்லாம் செய்யும் 'சாமர்த்தியம்' படைத்தவர் என்பதற்கான ஒரு சிறந்த எடுத்துகாட்டாய் அது இருந்தது.

அ.தி.மு.க. வும் காங்கிரஸும் கூட்டு சேர்ந்தது குறித்து ஒரு 15 வருடம் முன்னால் கலைஞர் சொன்னார், " இரண்டும், இரண்டும் நான்காகவும் இருக்கலாம், சைபராகவும் இருக்கலாம்". நடைமுறையில் அது எப்படி நிகழ்ந்தாலும், இது +ஐயும், -ஐயும் முன்வைத்த ஒரு வார்த்தைவிளையாட்டு. இதை துக்ளக் தனது வழக்கமான பார்பனிய திமிருடன் கிண்டலடித்திருந்தது. கலைஞர் சொன்னதாவது 'கழித்தலும் ஒருவகை கூட்டலே' என்ற அளவில் சூழலுடன் பொருத்தி அர்த்தம் காணகூடிய சாத்தியமுள்ளது. மேலும் அவர் கணிதம் குறித்து, கணிதரீதியாய் எதுவும் சொல்லவில்லை. திண்ணை அறிஞர் நீலகண்டன் கேட்கிறார் " கணித பதங்களான + அல்லது - தன்னளவில் என்ன பொருளுடையவை?" கேட்டுவிட்டு பதிலை காணும். என்ன பொருளுடையவை, அதில் என்ன குழப்பம் என்று சொல்லவேண்டாமோ? ஒரு B. Sc. கணிதம் (ஒழுங்காய் புரிந்து) படித்த ஒரு மாணவனுக்கு இவை எல்லாம் கறாரான axioms கொண்டு, வரையரை செய்யபட்ட விஷயம் என்பது தெரிந்திருக்கும். நீலகண்டனுக்கு தெரியாவிட்டால் அதில் எந்த தவறும் இல்லை. ஆனால் இப்படி எதையோ ஒரு தத்துவம் போல் ஒளரிகொட்டி விட்டு, தன்னை எல்லாம் அறிந்த மேதாவியாய் நினைத்துகொண்டு, மற்றவர் சொல்வதை 'மடத்தனம்' என்றும் சொல்வது ஆபாசமில்லையா?

நீலகண்டனின் எழுத்தில்தான் எவ்வளவு நடிப்பு! ஏதோ கணிதம் குறித்த ஆயிரம் கால வரலாற்றையே கரைத்து குடித்தது போல் எழுதுகிறார்.

"ஒரே விஷயத்தை இரு கவிஞர்கள் இருவிதமாக பாடியுள்ளார்கள் என வைத்துக்கொள்வோம். அக்கவிதைகளை தத்தம் அழகியலைச் சார்ந்து இருவர் ஒன்றை வெறுத்து மற்றொன்றை விரும்பலாம். இத்தகைய ஒரு சூழல் கணிதத்திற்கு ஏற்பட முடியாதென்பதே க்வாண்டம் இயற்பியலின் எழுச்சிக்கு முன்பு வரையிருந்த நிலை. ஆனால் ஒரே க்வாண்டம் நிகழ்வுகளை குறித்து ஸ்க்ராட்டிஞ்சரும் ஹெய்ஸன்பர்க்கும் வெவ்வேறு கணித அமைப்புகளை முன்வைத்தபோது அவர்களுக்கு மற்றவரின்

கணித அமைப்பு விரும்பத்தகாததாக மாறியதற்கு தர்க்கம் சார்ந்த அல்லது தற்சார்பற்ற objective காரணிகளை விட அழகியல் சார்ந்த மற்றும் தத்துவ தரிசனம் சார்ந்த காரணிகளே காரணமாயிருந்தது. கணித மொழியின் அழகியல் சார்ந்து ஒரு வித கணித பகர்தலை மற்றொரு கணித பகர்தலுக்கு மாற்றாக ஒரு அறிவியலாளர் தேர்ந்தெடுப்பதென்பதை வெள¤க்காட்டும் பின்புலத்தில் ஹாரிஸனின் எடுத்துக்காட்டு மிகச்சிறந்த எளிமையான ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது."

'குவாண்டம் எழுச்சி'க்கு முன்னால் கணிதம் பற்றி அப்படி நினைத்துகொண்டிருந்தார்களாம், அதற்கு பிறகு நிலமை மாறிவிட்டதாம். என்ன ஒரு பாசாங்குடன் கூடிய புளுகு! ஸோக்கலின் பகடி கட்டுரையில் கூட இப்படி ஒரு பாசாங்கு இல்லை. கணிதம் என்பது காலம் காலமாகவே ஒரு 'கணக்கிடும்' (ஒரு விரிந்த அர்த்ததில்) சாமாச்சாரமாய் பார்த்த பார்வை போய், எல்லா அறிவுதுறைக்கும் ஒரு கறாரான தர்கத்தை(rigour) தரும் சமாச்சாரமாய் மாறியதே போன நூற்றாண்டுதான். எப்படி தனக்கு எந்த விதத்திலும் புரியாத ஒரு விஷயம் குறித்து ஒரு புளுகை, ரொம்ப சாமர்தியமாய் நம்பகதன்மையுடன் தரமுடிகிறது பாருங்கள்!

கணிதத்தில் தோன்றிய பிரச்சனைக்கும் குவாண்டம் இயற்பியலுக்கும் எந்த தொடர்பும் கிடையாது. கணிதத்தை கறாராய் கணகோட்பாட்டின் அடிப்படையில் வரையரை செய்யபோன ரஸ்ஸல், Russel's paradox என்று அழைக்கபடும் தனது பிரபல முரணியலை வந்தடைந்தார். அதை அவரே சமாளித்து, நவீன கணிதத்தின் அஸ்திவாரத்தை அமைத்து, தனது Principia Mathematica வையும் எழுதினார். இன்றும் கணிதத்தின் பிரச்சனை கோடல் தேற்றத்தில் (அதை ஒத்த அல்லது அதற்கு சமமான சமாச்சாரங்களில்)தான் உள்ளது. இதை எல்லாம் விலாவாரியாய் எழுத தொடங்கி என்னால் தொடரமுடியவில்லை. திண்ணையும் ஒரு தொடர்சி இல்லாமல் வெளியிட தயாராய் இல்லை. மார்சிற்கு பிறகு இதை எழுத முயற்சிக்கிறேன்.

இப்போதும் ஒன்று சொல்லவேண்டியுள்ளது. கணிதம்கூட எப்போதும் உண்மை சம்பந்தமானது என்று சொல்லமுடியாது. இன்றுவரை முரண்பாடற்றது, consistent ஆனது என்றுதான் சொல்லமுடியும். நாளையே ஒருவர் இன்னோரு முரணியலை கண்டுபிடித்தால்(அது சாத்தியமில்லை என்று சொல்லமுடியாது) திரும்பவும் எல்லாவற்றையும் மீள்axiomatise செய்யவேண்டியதுதான். ஆனால் ஹாரிசன் சொன்னவிஷயம் தவறானது, முட்டாள்தனமானது. அதை 'மிகச்சிறந்த எளிமையான ஒரு எடுத்துக்காட்டு' என்று, நான் விளக்கிய பிறகும் நீலகண்டன் சொல்வது மிக மிக ஆபாசமானது. அது குறித்து ஏற்கனவே சொன்னாலும் ஹாரிசனுக்கு எழுதியதையே மீண்டும் சொல்கிறேன்.

அவர் சொலவது போல் ஒரு கணிதவாக்கியத்தில் வரும் புள்ளியை The meaning of the dot is

ambiguous என்பது முட்டாள்தனமானது. The meaning of the dot will NEVER be ambiguous . It will always be very verry ..... well-defined. கணிதத்தில் ஒவ்வோரு கட்டத்திலும் ஒன்றை வரையருக்கும்போது செய்யபடும் ஒரு விஷயம் என்னவெனில், வரையருக்கபட்ட விஷயம் 'well-defined'ஆக இருக்கிறதா என்று சரிபார்பது. அவ்வாறு 'well-defined'ஆக வரையரை செய்யபட்ட ஒரு விஷயத்திற்கு எந்த ambiguty யும் எந்த கட்டத்திலும் இருக்க வாய்ப்பு இல்லை. இது குறித்து ஹாரிசன் சொன்னது எந்தவிதத்திலும் எளிய உதாரணம் இல்லை, தவறான முட்டாள்தனமான உதாரணம். (சொல்ல போனால் இது உதாரணமே இல்லை.) இதை சொல்லி தான் ஏதோ demontsrate செய்ததாய் ஒரு முடிவுக்கு வந்து, "In this view, then, the strong positions of Heisenberg and Schrய்dinger on the worldview of Quantum Mechanics is similar to an argument between two scholars of literary criticism on the meaning of a T.S. Eliot poem. "என்று அவர் சொலவது அபத்தத்தின் உச்சம். மீண்டும் அதை ஒரு 'விவாதம்தான்' என்று நீலகண்டன் சொல்லி சமாளிக்க பார்பது இன்னோரு பம்மாத்து.

ஒரே தேற்றம் கணித மொழிகொண்டு இரு விதமாய் நிறுவபடலாம். இதன் பொருள் அந்த தேற்றத்திற்கு இரு வாசிப்பு இருப்பதாக கொள்ளமுடியாது. வேவ்வேறுவிதமாய் நிறுவுதல் என்று மட்டுமே கூறமுடியும்.(சொல்லபோனால் proof theory என்ற mathematical logic இன் துறை அந்த இரண்டுமே 'அடிப்படையில்' ஒன்றுதான் என்று கூறகூடும்.) இதில் அழகியல் என்பது இருக்கலாம். ஆனால் அதை 'தர்க்கம் சார்ந்த அல்லது தற்சார்பற்ற objective காரணிகளை விட அழகியல் சார்ந்த மற்றும் தத்துவ தரிசனம் சார்ந்த காரணிகளே' என்று நீலகண்டன் சொலவது (தனக்கு புரியாத விஷயத்தை) இட்டிகட்டி சொல்லும் புளுகு.

இணையத்தில் இது பற்றி எல்லாம் விலாவாரியாய் விவரிக்கும் எத்தனையோ விஷயபூர்வமான கட்டுரைகள் இருந்தாலும், தெளிவில்லாமல் எதையோ பேசும் ஒரு கட்டுரையில், ஒரு வரியை மொழிபெயர்த்து கொடுக்கிறார். யார் அந்த ஜான் கஸ்டி, மீண்டும் மொட்டையாய் 'அவரே சொல்கிறார்' என்று சொல்லும் அளவிற்கு அவர் என்ன செய்தார் (நான் அதுகுறித்து சிறிய துப்பறியும் வேலைகூட செய்யவில்லை), இங்கே semantics என்று எதை குறிப்பிடுகிறார், என்று ஒரு விளக்கமில்லை. தனக்கு ஆதரவாய் இருப்பது போல் தோற்றத்தை அவரே உருவாக்கி, ஒற்றைவரியை மொழிபெயர்த்து ஒரு வாதமாய் முன்வைக்கிறார். இந்த லட்சணத்தில் URL piling prodigy என்று ரவியை கிண்டலடிக்கிறார்.

மீண்டும் சொல்கிறேன். இன்று வரை கன்ஸிஸ்டன்டாக இருக்கும் கணிதத்தின் சட்டகம் மீண்டும் ஒரு முரணியலை சந்திக்காது என்று உறுதியுடன் சொல்ல ஆதாரம் எதுவும் இல்லை. ஆனால் அதன் தளம் மிக ஆழத்தில் இருக்கும். குவாண்டம் இயற்பியலுக்கு rigour கொடுக்க உருவான எந்த கருத்தாக்கத்திலும் இது தோன்ற வாய்பில்லை. அதன் வரையரைகள் அத்தனையும் அந்த அளவு 'well-defined'ஆன உண்மை. 'விபத்து நிகழ வாய்பில்லை' என்று ஒரு பொறியியலாளர்

சொல்வது போன்ற ஒரு உறுதிமொழி இல்லை இது. 'கடவுளால் கூட மாற்ற'முடியாத வகையில் நிறுவபட்ட விஷயங்கள் இவை.

4. அறிவியல் பங்களிப்பு என்ற விதத்தில் எதுவும் இல்லாத நிலையில், கற்பித்தலில் ஹாரிசனுக்கு வழங்கபட்ட விருது குறித்து மீண்டும் சொல்கிறார். திருநெல்வேலியில் பத்தாம் வகுப்பிற்கு கணிதம் சொல்லிகொடுக்கும் ஒரு வாத்தியார் உண்டு. திருநெல்வேலி முழுக்கவே இன்று கூட அவர் ரொம்ப பிரபலம். கணிதம் என்பதை எப்படி சொல்லிகொடுக்க கூடாது என்று இன்று நான் நினைக்கிறேனோ, அத்தகைய ஒரு வழிமுறையில், ஒரு ட்ரில் மாஸ்டர் பாணியில் கணிதம் சொல்லிகொடுப்பார். ஆனால் அவரின் வழிமுறை மிகுந்த பலனளிக்கும். அவரிடம் டியூஷன் படித்து தேர்வில் 100 வாங்காத மாணவர்களை எண்ணிவிடலாம். (கணிதபாடத்தில் 100 வாங்கும் மாணவன்தான் மிக பெரிய முட்டாள் என்று இன்னொரு வாத்தியார் சொல்லுவார்.) அவருக்கு பள்ளி நிர்வாகம் விருது கூட கொடுக்கலாம். அதற்காக அவருடைய கற்பிக்கும் வழிமுறையை நான் பாராட்டமுடியுமா? ஹாரிசனின் கற்பிக்கும் திறமை குறித்து எனக்கு எதுவும் தெரியாதுதான். நான் சொல்வதெல்லாம், அதை நிச்சயமாய் சில விருதுகள் கொண்டு அளக்கமுடியாது. இப்படி ஒரு தவறான ஒரு உதாரணம் கொண்டு, தவறான விஷயத்தை 'demonstrate' செய்பவரை எந்தவிதத்திலும் நல்ல ஆசிரியராகவும் பார்க்கமுடியாது. (ஹாரிசனை முன்வைத்துமட்டுமே நீலகண்டன் சில விஷயத்தை பேசியுள்ளதாலும், அதை தொடர்ந்து நியாயபடுத்தியதாலும் மட்டும் இதை எல்லாம் சொல்லவேண்டியுள்ளது. ஒரே ஒருமுறை அதுவும் குறிப்பிட்ட சந்தர்பத்தில் 'A மேல் புள்ளி வைத்ததை இஷ்டத்திற்கு அர்த்தம் செய்வது' பற்றி சொல்லும்போது 'அரைலூஸ¤' என்பதாக, அதாவது அவ்வாறு அர்தபடுத்துவது அரைலூஸ¤த்தனம் என்பதாக சொல்லியிருந்தேன். அந்த கருத்தில் இப்போதும் மாற்றமில்லை (அதாவது அவ்வாறு பொருள்கொள்வது அரைலூஸ¤த்தனம் என்ற அளவில்.) ஆனால் நீலகண்டன் அதை மீண்டும், மீண்டும் எடுத்துகாட்டி(அதுவும் சொதப்பலான விளக்கங்களுடன்), எனக்கு எதிராய் பயன்படுத்துவதாய் நினைத்து ஹாரிசனை மிகவும் கேவலப்படுத்தியுள்ளார். எல்லாவற்றிற்கும் ஹாரிசனிடம் மன்னிப்பு! -- அவர் குறித்து சொன்ன விஷயங்கள்-விமர்சனங்கள் அப்படியே உள்ளன. தேவையில்லாமல் அவர் குறித்து பேச நேர்ந்ததற்கும், முதல் தடவை அவர் குறித்து பேசும்போது பொறுமையுடனும், கவனத்துடனும் கையாளாததற்கு மட்டுமே மன்னிப்பு!)

5. இது இப்படி இருக்க, இந்த தருணம் வரை, நான் பலமுறை சுட்டிகாட்டியும், இந்த சாங்கிய/பௌத்த திற்கும் குவாண்டத்திற்கும் சந்தடி சாக்கில் போட்ட முடிச்சு குறித்து நான் எழுப்பிய கேள்விக்கு, ஒரு வார்த்தை கூட விளக்கமாய் வராததை மீண்டும் சுட்டிகாட்ட விரும்புகிறேன். இவர்களுடய அறிவு நேர்மை இந்த லட்சணத்தில் இருக்கிறது. ஆனால் நீலகண்டன் இது குறித்து காட்டிய டான்ஸ், பிலிம் எல்லாவற்றையும் பார்பவர் ஏதோ ஆயிரம் அறிவியல் ஆதாரங்களை அவர் அடுக்கிவிட்டது போல்

தோற்றமளிக்கும். இந்த நிலையிலேயே சூர்யா வந்து சான்றிதழும் கொடுத்தாகிவிட்டது. இதுதான் குவாண்ட புளுகு! அண்டபுளுகு, ஆகாசபுளுகு அதை எல்லாம் மிஞ்சும் அண்டகாச புளுகு இது குறித்தெல்லாம் கேள்விபட்டிருக்ககூடும். குவாண்ட புளுகு என்பது இந்த நூற்றாண்டில் இந்துத்வம் பிரசார துறைக்கு அளித்த மிக பெரிய கொடை என்று சொல்லலாம்.

கணணிக்கு தேவையான bit குறித்து அனைவருக்கும் தெரிந்திருக்கும். இந்த பிட் 0 அல்லது 1 என்ற இரு நிலைகளில் ஏதாவது ஒரு நிலையில் இருக்கும். இன்னும் நடைமுறையில் முழுமையாய் சாத்தியமாகாத குவாண்டம் கணணி, இந்த bitற்கு பதில் quantum bit, அல்லது qubit என்பதனால் அமைக்கபட்டிருக்கும். இந்த குவாண்டம் பிட் எப்படி எனில், அது ஒரு superposition இல் இருக்கும். அதாவது ஒரே நேரத்தில் 0 வாகவும், 1 ஆகவும் இருக்கும். இரண்டிற்கும் இடையில் அல்ல, இரண்டாகவும் இருக்கும். (ஆனால் அளக்கபடும்போது இரண்டில் ஒரு நிலையில் மட்டுமே இருக்கும்.) அது போலத்தான் இந்த குவாண்ட புளுகும். அண்டபுளுகு போல் இதை அத்தனை எளிதாக அடையாளம் காணமுடியாது. இது ஒரே நேரத்தில் உண்மை என்ற நிலையிலும், பொய் என்ற நிலையிலும் இருக்கும். (பாதி பொய், பாதி உண்மை என்று அல்ல, உண்மையாகவும் பொய்யாகவும் ஒரே நேரத்தில் இருக்கும்.) ஹாரிசனின் ஔரலை நியாபடுத்தும்விதமாய் நீலகண்டன் நீலகண்டன் அளித்த வாதங்கள் அந்த வகையை சாரும். உதாரணமாய் கணிதத்தில் ஒரு குறியீட்டின் பொருள் சூழலுக்கு ஏற்பவே இருக்கும் என்று விளக்கியதை சொல்லலாம். அவர் சொல்வதை தனியாய் பார்த்தால் ஒரு பக்கம் அது உண்மை. இன்னொரு பக்கம் ஹாரிசன் சொன்னதை நியாயபடுத்தும் வாதம் என்ற வகையில் அது புளுகு. இதை q-புளுகு என்று அழகாய் அழைக்கலாம். புளுகு என்ற நிலையில் இல்லாமலேயே, அவ்வாறு தோற்றமளிகாமலேயே, புளுகாய் இயங்கும் பண்பு உடைய ஒரு புளுகு. நீலகண்டன், சூர்யா இந்த வகை குவாண்டப்புளுகு புளுகுவதில் நன்றாகவே தேர்ச்சி பெற்றிருப்பதாய் தெரிகிறது.

6. அடுத்து இந்த பிரம்மா, சிவா, விஷ்ணு விவகாரத்திற்கு வருவோம்.

முதலில் கொஞ்சம் விஷயத்தையும் பார்போம். கைவசம் ஒரு பல துகள்கள் அமைப்பு (many-particle system) இருக்கிறது என்று வைத்துகொள்வோம். (அதாவது இந்த பிரபஞ்சத்தை போன்று. இந்த பிரபஞ்சம் ப்ரோட்டான்களாலும், எலெக்ட்ரான்களாலும், போட்டான்களாலும் ஆனது போல்.) கைவசம் ஒரே ஒரு துகள் இருக்கும்போது, அது தொடர்பான அமைப்பின் பரிணாம மாற்றங்களை அறிய ஷ்ரோடிங்கர் தந்த சமன்பாட்டை வைத்துகொண்டு சமாளித்துவிடலாம். ஆனால் பல துகள்களின் இயக்கம் ரொம்பவும் குழப்பமயமாகிவிடுகிறது. இதை குழப்பங்களை 'fockspace' என்று வரையரை செய்யபட்ட ஒரு வெளியை(vector space) வைத்துகொண்டு புரிந்து கொள்ள முயற்சித்தனர். இந்த fockspace இல் உள்ள

ஒரு உறுப்பினர் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான துகள்களின் பிரதிநிதியாக இருப்பார்.

உதாரணமாய் இந்த அகிலத்தில் மொத்தம் மூன்று துகள்கள்தான் இருகின்றன என்று சும்மானாச்சுக்கும் வைத்துகொள்வோம். ஒரு தமாசுக்கு அதை ரோஸா, நீலகண்டன், திண்ணை என்று குறிப்போம் (சூழலுக்கு ஏற்ப அர்தம்தான்!) இதில் பல நிலைகள் (states) சாத்தியமாகும். அதை கொஞ்சம் விவரிப்போம். துகள்களே இல்லாத வெற்று நிலையாய் |0>.ஒரு துகள் நிலையில் மூன்று சாத்தியங்கள் |ரோஸா>, |நீலகண்டன்>, |திண்ணை>.இரு துகள்கள் நிலையில் மூன்று சாத்தியங்கள் |ரோஸா,நீலகண்டன்>, |ரோஸா,திண்ணை>, |நீலகண்டன், திண்ணை>.மூன்று துகள்கள் நிலையில் ஒரே ஒரு சாத்தியம் |ரோஸா,நீலகண்டன்,திண்ணை>வேறு சாத்தியங்கள் இல்லை. இந்த fockspace இன் உள்ளே மேலே விவரித்தது போன்ற உறுப்பினர்களே அமர்ந்திருப்பர்.

என்ன வகை துகள்கள் நம் கரிசனத்துக்கு ஆட்படுகின்றன என்பதை பொறுத்து அதனிடையேயான உறவுகளும் மாறும். உதாரணமாய் அது boson எனப்படும் துகள்கள் எனில் அதற்கு 'symmetric fock space', fermion எனில் அதற்கென 'anti-symmetric fock space' என வெளி மாறும். இது இன்னும் குழப்பத்திற்கு இட்டு செல்வதால் குண்ட்ஸாகவே பார்போம். என்ன செய்துள்ளோம் எனில் சில நிலைகளின் 'wave function'ஐ மேலுள்ளவாறு குறித்துள்ளோம். இங்கேதான் இந்த creation, preservation, annihilation என்று மூன்று அபரேட்டர்கள் வருகிறது. உதாரணமாய் a_{ரோஸா} என்ற ஆபரேட்டர்காரன் என்ன செய்வான் எனில் |0>வை கொண்டுபோய் |ரோஸா>வில் போடுவான். |நீலகண்டன்>ஐ கொண்டுபோய் |ரோஸா,நீலகண்டன்>இல் போடுவான். |நீலகண்டன், திண்ணை>ஐ கொண்டுபோய் |ரோஸா,நீலகண்டன்,திண்ணை>இல் போடுவான். இதே போன்ற வேலையையே a_{நீலகண்டன்} மற்றும் a_{திண்ணை} என்ற மற்ற இரண்டு பண்பட்ட ஆபரேட்டர்களும் செய்வார்கள். இருக்கும் நிலையிலிருந்து இந்த ஆபரேட்டர்கள் ஒரு துகளை சேர்கின்றன. அதனால் இது creation ஆப்பரேட்டர். இதற்கு நேர் எதிராக a^*_{ரோஸா},என்ற அராஜக ஆபரேட்டர்காரன் என்ன செய்வானெனில், |ரோஸா>வை கொண்டு போய் |0>வில் தள்ளுவான். |ரோஸா,நீலகண்டன்>ஐ கொண்டுபோய் |நீலகண்டன்>இல் தள்ளுவான். |ரோஸா,நீலகண்டன்,திண்ணை>ஐ கொண்டுபோய் |நீலகண்டன், திண்ணை>இல் தள்ளுவான். மற்றதை நேயர்களே ஊகித்துகொள்ளவும். இது ஒரு அழித்தல்வேலை. ஒவ்வொரு நிலையிலும் 'ரோஸா>வை இந்த ஆபரேட்டர் காலி பண்ணுவதால் இது annihilation. இன்னொரு ஆபரேட்டர் ஒன்றும் செய்யாமல் (ஒரு எண்ணால் பெருக்க மட்டும் செய்துவிட்டு) அதை அதை அந்தந்த நிலையிலேயே விட்டு செல்லும். அது preservation சமாச்சாரம்.(காத்தல்-protection அல்ல!) மேலே சொன்னது குண்ட்ஸான ஒரு விவரிப்பு. கணிதத்தில் இது இன்னும் கறாராய் வரையரை செய்யபட்டிருக்கும்.

நமது பெருமை மிகு பாரம்பரியம் தந்த பிரம்மா, விஷ்ணு, சிவன் சமாச்சாரத்திற்கும்

மேற்கண்ட ஆபரேட்டர்களுக்கும் (இங்கே கணக்கில் அடங்காத 'பிரம்மனும், சிவனும்' உள்ளார்கள்), ஒரு தத்துவ அடிப்படையில் கூட, எந்த தொடர்பும் (இணையும்) கிடையாது என்பது தெளிவு. உதாரணமாய் நமது உடலில் ஒரு குறிபிட்ட கால இடைவெளியில் கண்காணித்தோம் என்றால், சில செல்கள் உருவாகும், சில அழிக்கப்படும், சில அப்படியே இருக்கும். இந்த நிகழ்வுக்கும், பிரம்மா, விஷ்ணு, சிவன் சமாச்சாரத்திற்கும் தத்துவ அடிப்படையில் கூட ஒத்திருத்தல்/இணை என்று எதுவும் கிடையாது. அது போலவே இதுவும். குவாண்டம் ஸ்டொக்காஸ்டிக் கால்குலஸின் பல அடிப்படைகளை அமைத்த பார்த்தசாரதி, அது குறித்த தனது புத்தகத்தின் தொடக்கத்தில், ப்ரம்மா(The creator), விஷ்ணு, (The protector), சிவா (The annihilator), இவர்களுக்கு புத்தகத்தை அர்பணிப்பதாய் குறிப்பிட்டிருந்தார். படிக்கும் ஒருவருக்கு ஏதோ ஒரு முடிச்சு இருப்பதாக தோன்றவைக்கலாம். இதற்கு பிறகு பார்த்தசாரதியின் மிக நெருங்கிய நண்பரும், அவருடன் இணைந்து பல பங்களிப்புகள் தந்த மார்டின் லின்ட்ஸே என்பவர் (எனக்கு தெரிந்து) ஒருமுறை, ஒரு சந்தர்பத்தில் இந்த ஆபரேட்டர்களை சிவா, பிரம்மா, விஷ்ணு என்று பெயர்போட்டு அழைத்திருந்தார். இந்தியர்களுக்கு இது ஒரு 'சும்மா' முடிச்சு என்று தெரியும். ஆனால் சில வெளி நாட்டுகாரர்கள் அதில் ஏதோ ஆழ்ந்த பொருளுடன் செய்யபட்ட விஷயமாக எடுத்துகொண்டார்கள். என்னிடம் கூட அது குறித்து சிலர் விசாரித்தார்கள். இதைதான் நான் குறிப்பிட்டிருந்தேன். புஷ்பக விமானத்தையும், கண்டதையும் அறிவியலுடன் இணைக்கும் நம்ம ஊர் இந்துத்வா கும்பலுக்கு இது தெரிய வந்தால், இதை எடுத்துகொண்டு ஜல்லியடிக்க கூடும் என்று எழுதியிருந்தேன். இனி நீலகண்டன் சொல்வதற்கு வருவோம்.

இந்த விஷயத்தை அவர் 'கேள்விபட்டிருக்க வாய்ப்பிருக்காது என்று நினைக்கிறேன்' என்று சொன்னதை அவர் சாதியை மனதில் வைத்துதான் என்று குற்றம் சாட்டியவர் அவர்தான். நான் எதுவும் சொல்லாத நிலையிலேயே, குவாண்டம் ஸ்டோக்காஸ்டிக் கால்குலஸ் குறித்து அவருக்கும் எதுவும் தெரியாத நிலையிலேயே, அப்படி தெரிந்ததாக பாவனை செய்தபடி, அவர் சாதிகாரணமாகத்தான் அவருக்கு தெரியாது என்று நான் நினைப்பதாக அவர்தான் சொன்னார். இப்போது கேட்கிறார், 'இதனை QSC ஐ நான் தெரிந்து வைத்திருப்பது எப்படி ரோசாவசந்தின் சாதியத்தன்மைக்கு நிகரான உயர்வு மனப்பான்மைக்கு சான்றாகும் என்பதும் தெரியவில்லை.' என்று உல்டா செய்து என்னிடம் கேட்கிறார். அதற்கு ஏற்றார் போல் 'இதன் நீட்சியாகவே' என்ற அவரது வார்த்தையை மட்டும் விட்டுவிட்டு மற்றதை வெட்டி ஒட்டுகிறார். என்ன இந்துத்வ அறிவு நேர்மையோ! ஒன்றும் புரியவில்லை.

ஒருவர் ஒரு குறிபிட்ட சந்தர்பத்தில் பெயர் போட்டு அழைப்பதற்கும், பெயரிடப்படுவதற்கும் என்ன வேறுபாட்டை உணர்த்த விரும்பினேன் என்று ஒருவேளை புரிந்திருக்கலாம். நீலகண்டன் அது 'பெயரிடபட்டிருப்பதாய்' குறிபிட்டதாலேயே அது குறித்த விவரத்தை அடுத்த திண்ணையில் தரும்படி கேட்டிருந்தேன். ஒரு சர்வே கட்டுரை

எழுதுவது போல் நீலகண்டன் வாசகர்களுடன் 'பகிர்ந்துகொண்ட' விவரத்தை பார்போம்.

நீல்கண்டன் சொல்கிறார். "1967 தான் எழுதிய பாடநூலில் இந்த ஆபரேட்டர்களுக்கு இப்பெயர்களை அளித்தவர், வெள்ளைக்காரருமல்ல, இந்தியருமல்ல. அந்த இயற்பியலாளரின் பெயர் சகுராய்." இப்படி தொடங்கி வழக்கம்போல், இந்தமுறை ஒரு ஆவண விஞ்ஞானியாய் அவதாரம் எடுத்து, விஷயங்களை அடுக்கிகொண்டு போகிறார். நான் இந்த விவகாரம் குறித்து குறிப்பிட்டது பார்த்தசாரதி, மற்றும் லிண்ட்ஸே விஷயத்தைதான். ஸகுராய் புத்தகத்தை பார்திருந்தும் (அதாவது அதன் இருப்பை அறிந்திருந்தும்) இந்த விஷயத்தை படிக்கவில்லை. முதலில் 'நான் கேள்விபட்டிருக்க வாய்பில்லை' என்று சொன்ன விஷயம் சரிதான். ஆனாலும் ஒரு ஆவண விஞ்ஞானி போல் நீலகண்டன், இதுவரை குவாண்டம் இயற்பியல் குறித்து எழுதபட்ட புத்தகங்களில் கட்டுரைகளில், ஒரு குறிபிட்ட விஷயம் குறித்து பேசப்பட்டவைகள் எல்லாவற்றையும் தொகுத்து தருவது கொஞ்சம் நகைச்சுவைதான். உலகின் மிக பெரிய கணணி கூட அந்த காரியத்தை செய்ய முடியுமா என்று தெரியவில்லை. (அவருக்கு மேட்டர் எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை.)

இது இப்படி இருக்க, இதை வைத்து 'ஏனெனில் ஒரு புராண பெயர்களை சில அறிவியல் விஷயங்களுக்கு கொடுப்பதற்கும் அதனால் ஒரு தத்துவ இணைத்தன்மையை கண்டு 'ஜல்லியடிப்பதற்குமான' வேறுபாட்டினை 'ஜல்லியடிப்பவர்கள்' உணர்ந்திருந்ததே காரணமாம். ஒருவிதத்தில் திரு.ரோசா வசந்த் கொடுத்த உதாரணம் மிகத்தெள¤வாக தத்துவ இணைத்தன்மையை கண்டு 'ஜல்லியடிப்பர்கள்' எவ்வித விஷயங்களை தங்கள் 'ஜல்லியடிப்பில்' கலக்கவில்லை என்பதை தெள¤வாக காட்ட உதவியுள்ளது.' என்று முடிவுகளுக்கு வருவது வழக்கமான நீலகண்டன் பாணி.

முதலில் ஸகுராய் 'அந்த ஆபரேட்டர்களுக்கு இப்பெயர்களை அளித்தார்' என்று சொல்வது எவ்வளவு தூரம் உண்மை? ஸகுராய் சொன்னது, "We might say that the three operators ... correspond respectively to the Creator(Brahma), the Destroyer(Siva) and the Preserver(Vishnu) in Hindu mythology." என்று சகுராய் சொல்லியிருப்பதை 'அப்பெயர்களை அளித்ததாய்' எடுத்துகொள்ளமுடியுமா? ஏனெனில் இந்த புத்தகம் மட்டுமில்லாது, அவர் எழுதிய மற்ற புத்தகங்கள், கட்டுரைகள் எங்கும், இந்த ஆபரேட்டர்களை இந்த பெயர் போட்டு அழைக்கவில்லை. இங்கே ஒரு சும்மா 'ஒப்பிடல்' செய்கிறார். அதாவது சரியாய் சொல்லவேண்டுமெனில் இந்த இடத்தில் ஒரு ஒப்பீடு செய்து ஜல்லியடிக்கிறார். ஆனால் 'சாங்ய/பௌத்த' விவகாரம் குறித்து ஹாரிசன் அடித்த ஜல்லியைவிட ஒரளவு ஒப்புமையுடன், கொஞ்சமாவது விஷயத்துடன் ஸகுராய் ஜல்லியடிக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். நீலகண்டன் ஆவணபடுத்தியது போல் அல்லாமல், அதற்கு பிறகு பல ஆண்டுகள் கழித்து லிண்ட்ஸே என்பவர் மீண்டும் ஒரு ஜல்லியடித்திருக்கிறார். அதை சிலர் ஸீரியஸாய் எடுத்துகொண்ட விஷயத்தைதான் நானும் சொன்னேன். (இது தவிர

இன்னும் சில இந்தியர்கள் ஜல்லியடித்திருப்பதாக கேள்விபடுகிறேன், முழுவிவரம் கையில் இல்லை.) நான் 'பரவலாய் தெரியவில்லை' என்று சொன்னதும், "தத்துவ இணைத்தனமை'யை வைத்து ஜல்லி அடிப்பவர்களை' மனதில் வைத்து அல்ல, குவாண்ட புளுகுகளை அவிழ்த்துவிடும் நீலகண்டன் போன்றவர்களையும். மற்றும் நேரடியாகவே அண்டபுளுகுகளை அவிழ்த்துவிடும் மற்ற இந்துத்வ கும்பலையும் மனதில் வைத்துதான். என்னகாரணத்திற்காக ஸகுராயும், லிண்ட்ஸேயும், இன்னும் ஹாரிசனும் (அதற்கு விளக்கம் தராதவரை அப்படித்தான் அழைக்கவேண்டும்) ஜல்லியடிக்கிறார்கள் என்ற விஷயத்தினுள் போகவில்லை. இவர்கள் ஜல்லியடித்துவிட்டார்கள் என்பதற்காக மட்டும் அதற்கு எந்த மதிப்பும் கொடுக்கமுடியாது என்பதுதான் நான் சொன்னது. உலகத்திற்கே முக்கிய இயற்பியலாளரான ஸகுராய், மற்றும் முக்கிய கணிதவியலாளரான லிண்ட்ஸேக்கும் அது பொருந்தும். சூர்யாவிற்கும், நீலகண்டனுக்கும் மட்டும் முக்கியமான இயற்பியலாளரான ஹாரிசனுக்கும் அது பொருந்தும்.

இது இப்படி இருக்க குவாண்டம் இயற்பியலுக்கும் அல்லது அதன் தத்துவ உள்ளீட்டிற்கும், இந்தியதத்துவத்திற்குமான, இணைதன்மையை 'விளக்கி' நீலகண்டன் எழுதியுள்ள ஒன்றிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை வாசகர்கள் மீண்டும் படித்து பார்கவும். எங்காவது ஒரு இடத்தில் ஒரு தெளிவான ஒப்பீடு, உதாரணமாய் குண்ட்ஸாகவாவது இந்த பிரம்ம, விஷ்ணு, சிவா விவாகாரத்தில் எந்த இணைதன்மை கூட கிடையாது என்று நான் சொன்னதுபோல, எங்கேயாவது விரிவாய் நீலகண்டன் விளக்கியிருக்கிறாரா என்று படித்து பார்த்து முடிவுக்கு வரவும். ஓபன்ஹெய்மர் சொன்னார், ' காலடியில் நிலம் நழுவி போவதாய்' எய்ன்ஸ்டீன் சொன்னார் அப்படி இப்படி போகிறதே தவிர, உருப்படியாய் எதாவது ஒரு வரி இருக்கிறதா? இத்தனைக்கும் கையில் கனம் கனமாய் புத்தகங்களை வைத்துகொண்டு அதை எல்லாம் அளிக்கிறார். சில விஷயங்களை ஆவணபடுத்தி வறலாற்றையே முன்வைக்கிறார். ஆனால் விஷயபூரவமாய் எதையும் காணோம். இதற்கு பெயர்தான் குவாண்ட புளுகு!

7. நீலகண்டன்தான் எழுதினார், "பாணினியின் சமஸ்கிருத இலக்கணத்தின் அடிப்படையில் பல தீர்வுமுறைகள் (algorithms) உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, முனைவர். P.இராமானுஜன் (Centre for Development of Advanced Computing) அவர்களால்." என்று. இவ்வாறு எழுதுபவர் என்ன அல்காரிதம், அது எதற்கானது, அது குறித்த தகவல் எங்கே கிடைக்கும் என்று குறைந்த பட்சமாய் விளக்கவாவது தயாராய் இருக்கவேண்டும். நான் அந்த ஆய்வுதாள் எங்கே கிடைக்கும் என்றோ, குறைந்தபட்சம் ராமானுஜனின் மின்னஞ்சல் முகவரியோ கேட்டால், "கணினி ஆராய்ச்சி மையத்திடம் கிடைக்கும் விஷயத்திற்கு 'நாகர்கோவில் இருந்து கொண்டிருக்கிற நபரிடம்' கேட்கிற ஆராய்ச்சி நேர்மை இருக்கிறது பாருங்கள்! வாசிக்க கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும்!" என்கிறார். என்ன ஒரு அசட்டுத்தனம்!

அல்காரிதம் என்பதற்கு ஒரு குறிப்பிட்ட அர்தம் கணிதத்தில் இருக்கிறது. அந்த அர்த்தப்படி, சமஸ்கிருத இலக்கண அடிப்படையில் உருவாக்கபட்ட இந்த 'அல்காரித' விஷயம் ஒரு புருடா என்றுதான் இப்போழுதும் நினைக்கிறேன், படிக்காமலே இப்படி நினைக்க நிச்சயம் காரணமுள்ளது. இவர்கள் தரும் (இந்த ரிக் ப்ரிக்ஸீன் AI கட்டுரை உட்பட) பல உதாரணங்களை படித்தபின் இந்த எண்ணம் உறுதிபட்டுதான் வருகிறது. நீலகண்டன் ராமனுஜனை தொடர்பு கொள்ள அளித்த முகவரிக்கும் இந்த 'குறிப்பிட்ட கட்டுரை' குறித்து கேட்டு ஒரு வாரம் ஆகியும் (இப்போது இரண்டுவாரம் ஆகியும்) இன்னும் எனக்கு பதில் வரவில்லை. (மீண்டும் எழுதி கேட்டது ரோஸாவசந்த் இல்லை!) முதலில் நீலகண்டன் சொன்னது போல் ஒரு கட்டுரை இருக்கிறதா என்று தெரிந்தபின்தான், அது புருடாவா என்பது குறித்து யோசிக்க முடியும்.

ஆனாலும் நீலகண்டனின் தர்க்கம் அசட்டுதனத்தின் எல்லா பரிமாணங்களையும் கொண்டிருப்பது புதியதல்ல. அவருடைய பழைய கட்டுரைகளில் உள்ள விஷயம்தான். காங்கிரஸ் என்ற பா.ஜ.க. விலிருந்து பெரிதாய் வேறுபடாத ஒரு கட்சி, சொல்லபோனால் பா.ஜ.க.வின் எல்லாவகை வளர்சிக்கும் வித்திட்ட, அதற்கு விதையும் உரமும் அளித்த ஒரு கட்சி, அரை நூற்றாண்டிற்கு மேலாய் சமஸ்கிருதமயமாக்கலுக்கும், அதன் 'வளர்சிக்கும்' எல்லவகையிலும் உறுதுணையாய் இருந்து வருகிறது. இதில் ஒரு .01%கூட இன்னொரு செம்மொழியான தமிழுக்கு கிட்டியதில்லை. இப்படியிருக்க நீலகணடன் மாபெரும் பாயிண்டாய் "RSS-பார்ப்பன 'புருடா' வேலைகள் அக்மார்க் மதச்சார்பற்ற காலங்களிலேயே தொடங்கி ஜாம்ஜாமென நடக்கிறதாக தெரிகிறது." என்று அசடு வழிகிறார். கொடுமை!

8. ரிக் ப்ரிக்ஸின் 'ஆய்வுதாள்' குறித்து பேசும்போது, 'ஒரு ஆய்வுத்தாள் 18 வருடங்களாக யாராலும் கவனிக்கப்படாததால் அது குப்பை என்கிற ரீதியில்' என்று நான் சொல்லாவிட்டாலும் திரித்து வாசிக்க நீலகண்டனுக்கு சொல்லியா தரவேண்டும். 'எந்த கணணி அறிஞரும் கேள்வி எழுப்பவில்லையே?' என்று அபத்தமாக (அதாவது ரிக் குண்ட்ஸாக போட்ட ஒரு முடிச்சுக்கு, சமஸ்கிருதம் படித்து, ரிக் போட்ட முடிச்சையும் ஆரய்ந்து அது குறித்து யாரும் கேள்வி எழுப்பாதது குறித்து) நீலகண்டன் கேட்டதற்கு பதிலாகவே அதை எழுதியிருந்தேன். யாரும் கேள்வி எழுப்பாதது எதையும் நிருபிக்கவில்லை, யாரும் ஸீரியஸாய் ஏன் எடுத்துகொள்ளவில்லை என்பதுதான் முக்கியமான கேள்வி என்றுதான் கேட்டிருந்தேன்.

மற்றவருக்கு பயன்படுத்தும் ஒரு தர்க்கத்தை கொஞ்சம் கூட தனக்கு பொருத்தி பார்க்க தயாரயில்லாத மனிதராய் எனக்கு நீலகண்டன்தான் தெரிகிறார். ரவி 'peer reviewed journal' குறித்து பேசியதற்கே அத்தனை ஆத்திரத்தை கக்கியவர், மீண்டும் மீண்டும் ஒரு AI இதழில் ரிக்கின் கட்டுரை வந்ததை பெரிய விஷயமாய் வலியுறுத்தி சொல்லிகொள்கிறார். (அங்கே என்னவகை peer review என்று தெளிவாகவும் இல்லை. உதாரணமாய் ரிக்கின் கட்டுரையை சமஸ்கிருதம், செயற்கை

அறிவு இரண்டும் அறிந்த அறிஞர்கள் கூடி review செய்தபின்தான் பிரசுரமானது என்று நம்ப எந்த முகாந்திரமும் இல்லை.) ரோஸாவசந்துக்கு AI யில் வந்தாலும், new age இல் வந்தாலும், விகடனில் வந்தாலும் உள்ளிருக்கும் விஷயம்தான் முக்கியம்.

முன்பே சொன்னது போல, ரிக்கின் கட்டுரை நீலகண்டன் சொலவ்துபோல நிச்சயமாய் எதையும் நிறுவவில்லை. நிறுவுவதற்கு கணிதரீதியான அல்லது அதற்கு சமமான rigour தேவை. ரிக் செய்வது மிக மிக குண்ட்ஸான முறையில் ஒரு 'நிகழ்துதல்'(demonstration) மட்டுமே! அதையும் எப்படி செய்திருக்கிறார், என்ன செய்திருக்கிறார் என்று பார்போம்! ரிக் ப்ரிக்ஸ் கட்டுரையின் தொடக்கத்தில் அறிமுகபடுத்தும் semantic net என்பதன் விளக்கமே மிகவும் குண்ட்ஸாக இருக்கிறது. எந்த விதத்திலும் `well-defined' வரையரையாக அது விளக்கபடவில்லை. உதாரணமாய் ரிக் கட்டுரையில் சில வாக்கியங்களுக்கு `semantic net' என்று சொல்லி படம் தந்து பாகங்களை குறிக்கிறார். இதை படித்து வேறு ஒரு வாக்கியத்திற்கு நானும், நீலகண்டனும் வேறு வேறு இடத்தில் உட்கார்ந்துகொண்டு, ஒரே விதமான 'semantic net'ஐ உருவாக்கும் வகையில் அது வரையரை செய்யபடவில்லை. அதன் வரையரையே மிக மிக குண்ட்ஸாக இருக்கிறது. மேலும் ரிக் சொல்கிறார் (நீலகண்டனும் குறிப்பிட்டுள்ளது போல).

"The degree to which a smantic net (or any unambiguous, nonsyntactic representation) is cumbersome and odd-sounding in natural language is the degree to which that language is "natural" and deviates from the precise or "artificial". As we shall see, there was a language spoken among an ancient scientific community that has a deviation zero."

அதாவது ஒரு மொழியின் செயற்கை தன்மையை அளக்க இந்த semantic net களை பயன் படுத்துகிறார். சரி, அதாவது ஒரு மொழியை கொடுத்தால், அதை வைத்து அதன் வாக்கியங்களுக்கு semantic net களை உருவாக்கி அது எவ்வளவு 'இடியாப்ப குழப்பமாக' உள்ளது என்று பார்த்து அதன் அடிப்படையில் அதன் இயற்கை/செயற்கை தன்மை குறித்து முடிவுக்கு வருவது குறித்துதான் சொல்கிறார். கட்டுரையின் இறுதியில் 'ஒரு புராதன அறிவியல் சமூகத்தினர்' பேசிய ஒரு மொழி (அதாவது சமஸ்கிருதம்) எவ்வாறு zero deviation உடன்' இருந்தது குறித்து காட்டபோவதாகவும் சொல்கிறார். ரிக் செய்திருக்க வேண்டியது என்னவெனில், கணிதம் போல் கறாராக இல்லாவிட்டாலும், கொஞ்சம் குண்ட்ஸாகவாவது semantic net ஐ வரையரை செய்து, deviation என்பதை அளக்க ஒரு வழிமுறையும் பரிந்துரைத்திருக்க வேண்டும். மனிதர் மேலே உள்ள ஒற்றை வரியை தவிர, கட்டுரை முழுக்க எங்கேயும் இந்த deviation என்ற வார்த்தையையே பயன்படுத்தவில்லை. எப்படி சமஸ்கிருதம் zero deviation உள்ள ஒரு மொழி என்று குண்ட்ஸாக கூட (தொடக்கத்தில் உறுதிமொழி அளித்தபடி) demonstrate செய்யவில்லை. முதலில் சொல்லிவிட்டதோடு சரி, அதற்கு பிறகு அது குறித்த

பேச்சே இல்லை. அது மட்டுமில்லாமல் அவர் சொன்னபடி சமஸ்கிருத வாக்கியத்தை வைத்து மேற்சொன்னபடி semantic net களை உருவாக்கி அதனடிப்படையில் ஏதாவது சொல்கிறாரா என்றால் அதுவுமில்லை. அப்படி எதுவுமே செய்யவில்லை. சமஸ்கிருத வாக்கியங்களை, அதற்கு இலக்கணம் எழுதியவர்கள் 'அலசியதாக' சில விஷயங்களை சொல்லி, அதற்கும் மேலே சொன்ன semantic nets ற்கும் ஒற்றுமை இருப்பதாக சொல்கிறார். இது நிச்சயமாய் சமஸ்கிருதம் என்ற மொழியின் செயற்கை தனமை குறித்து demonstrate செய்யும் காரியம் அல்ல. கட்டுரையின் தொடக்கத்தில் மொழியின் இயற்கை/செயற்கைதன்மை குறித்து சொல்லி, செய்யபோவதாக அவர் சொன்னதும் இதை அல்ல. அப்படி இப்படி குண்ட்ஸாக சில 'பொருத்தங்களை' (அதுவும் சரியான citation, சமஸ்கிருத வாக்கியங்கள், இலக்கண ரீதியான வரையரை என்று எதுவும் கறாராய் இல்லாமல்) பொத்தாம் பொதுவாக செய்கிறார், இப்படி எதையோ செய்துவிட்டு பழங்கால சமஸ்கிருத அறிஞர்களை hardware இல்லாத கணணி விஞ்ஞானிகள் என்று பட்டமும் தருகிறார். கட்டுரையின் நடுநடுவே இஷடத்திற்கு சமஸ்கிதம் குறித்து பீலாக்களையும் விடுகிறார். அதற்கான ஆதாரங்கள் முட்டை. அதை எல்லாம் அவர் மொழி அறிஞராய் சொல்கிறாரா, அல்லது நாசா அறிவியலளராகவோ, அல்லது ஒரு செயற்கை அறிவு ஆய்வாளராக சொல்கிறாரா, ஒன்றும் தெளிவில்லை. சரியான விதத்தில் citation கிடையாது. சமஸ்கிருத வாக்கியங்களை எடுக்கும்போதும், அதற்கான இலக்கண சமாச்சாரத்தை மேற்கோள் காட்டும் போதும் எந்த தெளிவும் கிடையாது. எல்லாமே குண்ட்ஸாக செய்யபடுகிறது. மற்ற ஒரு மொழிக்கு இது பொருந்தாது என்று சொல்ல குண்ட்ஸான ஒரு கோடிட்டுகாட்டல் கூட கிடையாது. தொல்காப்பியத்தை முன்வைத்து (சொல்லபோனால் அது கூட தேவையில்லை, தேவநேயபாவாணரின் ஒரு புத்தகத்தை மேற்கோள் காட்டி) சமஸ்கிருதம் இருக்கும் இடத்தில் தமிழை வைத்து இதே போல ஒரு கட்டுரை எழுதுவது எந்த விதத்திலும் கடினமல்ல. நீலகண்டன் கொஞ்சம்
காத்திருக்கணும்.

ரிக்கின் கட்டுரை ஒரு மாபெரும் விஷயத்தை ஆழமாக ஆராய்ந்து பேசுவது போல், நீலகண்டன் பேசுவது இன்னொரு பம்மாத்து அவ்வளவுதான். நிச்சயம் இது குறித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் எல்லாவித விரிவுடன் நான் எழுதத்தான் போகிறேன். மீண்டும் சொல்கிறேன். ரிக் ப்ரிக்ஸின் 'ஆய்வுதாள்' குண்ட்ஸாக, குண்ட்ஸான கருத்தாக்கங்களை மட்டும் வைத்து, மிக மிக குண்ட்ஸான முறையில் ஏமாற்றகூடிய எல்லாசாத்தியங்களுடன் எழுதபட்ட ஒரு கட்டுரை. எனக்கு இந்த மொத்த `ஆய்வுதாளுமே' இன்னொரு குவாண்டம் புளுகாகத்தான் தெரிகிறது. அதாவது 'demontrate' செய்யும் விதமாய் சொன்ன சில விஷயங்களில் உண்மை இருக்கலாம். ஆனால் demonsrate செய்ததாய் சொன்னது அண்டபுளுகு. இது எப்படி AI இதழில் வெளிவந்தது, ரிக் ஏன் இதை எழுதினார் என்ற கேள்விகளுக்குள் போகாமல், கட்டுரையின் உள்ளடகத்தை மட்டும் வைத்து எழுதியுள்ளேன். நிச்சயம் இது குறித்து இன்னும் விரிவாக தமிழிலும்,

ஆங்கிலத்திலும் எழுதத்தான் போகிறேன். நீலகண்டனுக்கு AI இதழில் கட்டுரை வெளிவந்த ஒரே காரணத்தால் அது மிக முக்கியமானது. எனக்கு அதில் இருக்கும் உள்ளடகத்தை மட்டும் வைத்து அது ஒரு குப்பை. இந்த குப்பை AI இதழில் வெளிவரும் சாத்தியத்தை வைத்து வேறு கேள்விகள் எழலாம், அவ்வளவுதான். இன்னும் விரிவாக மார்சிற்கு பிறகு வருகிறேன். வாசகர்கள் தாங்களாகவே படித்து ஒரு முடிவுக்கு வரலாம்.
http://www.aaai.org/Library/Magazine/Vol06/06-01/vol06-01.html

கடைசியாக நீலகண்டன் URL தந்துள்ள அனுஸாரகாவின் பக்கத்திலும் சரி இந்த ரிக்கின் கட்டுரையிலும் சரி இந்த 'இந்திய பண்டய அறிவியல் விஷயங்களை மேற்கு மறுகண்டுபிடிப்பு செய்வதாய்' சொல்லும் ஜோஷி (இது குவாண்ட புளுகு இல்லை, நேரடியான அண்ட) புளுகு வெளிபடுவதை பார்க்கவேண்டும். இப்படி எல்லாம் சொல்லாமல் சூர்யா போல், நீலகண்டன் போல் குவாண்ட புளுகு மட்டும் புளுகினால் ஒரு குறைந்த பட்ச நம்பகதன்மை கிடைக்கலாம்.

What is the significance of this activity from the shastric tradition viewpoint?
Ans : Generally, once something is discovered in the west, we claim to find an evidence for it in the shastras also. Anusaaraka is an attempt to demonstrate the application of shastric ideas from the shastras before they are rediscovered in the west.

9. கடைசியாய் திருமாவளவன் 'மூளைசலவை' செய்யபட்ட விஷயம். கணிதத்தையும், அறிவியலையுமே திரிக்க தெரிந்தவருக்கு இதை எல்லாம் திரித்து சாமர்தியமாய் பேச சொல்லியா தரவேண்டும். ஒருவர் வந்து வெளிப்படையாய் 'திருமாவளவன் தலித், அதனால் அவருக்கு சிந்திக்க தெரியாது' என்று சொன்னால்தான் அதை ஆதிக்கசாதி உளவியலாய் ஒப்புகொள்வாராம். அதை எல்லாம் நீலகண்டனும், மணிமாறனும் வீட்டில்தான் சொல்லிகொள்ளவேண்டும். இதை வெளிப்படையாய் சொல்லும் நிலையில் நாடு இன்று இல்லை. (ஆனால் நான்மட்டும் இவருக்கு QSC தெரிந்திருக்காது என்று நினைத்தால் கூட அது குறித்து அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். என்ன ஒரு நடுநிலமை!) நான் கேட்ட விஷயம் தெளிவானது என்றாலும் அதை கண்டுகொள்ள இவருக்கு என்ன தலையெழுத்தா?

நான் தெளிவாகவே மீண்டும் மீண்டும், திருமாவளவனை விமர்சிக்க கூடாது என்றோ, அவர் கருத்தை விமர்சிப்பது குறித்தோ பேசவில்லை என்று சொல்லியாகிவிட்டது. திருமாவளவன் கருத்தை மணிமாறன் விமர்சித்திருந்தால் அதை மட்டும் வைத்து (அதிலும் ஆதிக்க ஜாதி உளவியல் இருக்கலாம், விமர்சிப்பதை மட்டும் வைத்து) ஆதிக்கஜாதி உளவியல் என்று நான் நிச்சயாமாய் சொல்லவில்லை. திருமாவளவன் கம்யூனிஸ்டுகளையும், திராவிட இயக்கத்தவரையும் மிக கடுமையாய் விமர்சித்து வருபவர். எதிர்த்து அரசியலும் நடத்தி வருபவர். அப்படி இருக்கையில் அவரை,

மேற்கண்டவர்களால் மூளைசலவை செய்யபட்டதாய் சொல்வது அபத்தமில்லையா? உதாரணமாய் ஒரே விஷயத்தை பேசுவதற்காக கம்யூனிஸ்டுகளையும், திகவினரையும் திருமாவளவனால் மூளை சலவை செய்யபட்டதாய் சொல்லமுடியுமா? திருமாவளவன் சொன்ன அதே கருத்தை வேறு யாராவது சொன்னால் அவரையும் அந்த கருத்துக்களுக்காக மட்டும் brain washed என்று சொல்வாரா? இவ்வாறு அபத்தமாய் சொல்வதன் பின்னுள்ள அடிப்படை திருமாவளவனுக்கு சொந்தமாய் சிந்திக்க தெரியாது என்ற கருத்து அல்லவா? உதாரணமாய் நீலகண்டன் RSS ஆல் மூளைசலவை செய்யபட்டவர் என்று நான் சொன்னால் அதில் ஒரு அர்த்தம் உண்டு. தனது உடல், பொருள், ஆவி, அறிவு, மூளை எல்லாவற்றையும் RSS ற்கு அர்பணித்தவர் அவர். திருமாவளவனால் கடுமையாய் விமர்சிக்கபடுபவர்களால் அவர் மூளைசலவை செய்யபட்டதாய் சொல்வது ஆதிக்கஜாதி உளவியல் அல்லாமல் வேறு என்ன என்பதுதான் நான் கேட்டது. இதை ஏற்கனவே பலமுறை விளக்கி சொல்லியாகிவிட்டது. புத்திசாலியான நீலகண்டனுக்கு நிச்சயம் அது புரிந்திருக்கும். ஆனாலும் குவாண்ட புளுகருக்கு இதை மாற்றி, மறைத்து, திரித்து சாமர்த்தியமாய் தர்கம் செய்ய சொல்லியா தரவேண்டும்!

10. மீண்டும் சொல்கிறேன். இந்துத்வவாதிகள் எந்த தர்கத்தையும் தங்களுக்கு சாதகமாய் பயன்படுத்திகொள்ள, அண்டபுளுகு, குவாண்ட புளுகு என்று எதை வேண்டுமானாலும் பயன்படுத்த தயங்கமாட்டார்கள். மீண்டும் அதை நீலகண்டன் உறுதிபடுத்தியுள்ளார். தமிழகத்திற்கு ஏற்றாற்போல் இங்கு பார்பனிய எதிர்ப்பு கூட பேசுவார்(மற்ற மாநிலத்தில் வாய் திறக்கமுடியுமோ!) அம்பேத்காரையும் அவ்யப்போது தேவைக்கேற்ப கருவேப்பிலை போல் தொட்டுகொள்வார்கள். காந்தியை கொன்றது மட்டுமில்லாமல், இன்றும் அது குறித்து ஒரு நியாயபடுத்தும் வாதத்தை ஒவ்வோரு RSS காரனும் கொண்டிருப்பான். என்றாலும் இவர் 'மகாத்மா' என்பார். காலத்திற்கு ஏற்ப ஹிட்லர் ஆதரவையும் இப்போது வெளிப்படையாய் பேசுவதில்லை. யூத இனவெறிக்கு மட்டுமே வெளிப்படையான ஆதரவு. லூபென்னுக்கும், ஹிட்லருக்கும் இத்தகைய சாமர்த்தியங்கள் இருந்திருந்தால் எங்கேயோ போயிருப்பார்களே!

11. அவ்வளவுதான். இனி நீலகண்டன் குவாண்ட புளுகு, அண்ட புளுகு, குவாண்டகாச புளுகு என்று என்ன புளுகினாலும் மார்ச் இறுதிவரை இந்த பக்கம் வரமாட்டேன். திண்ணை படிக்ககூடமாட்டேன். வந்தனம்! ஒரு RSS மனநிலையை இன்னும் நன்றாக புரிந்துகொள்ள மீண்டும் ஒரு வாய்பளித்ததற்கு, நீலகண்டனுக்கு நன்றி!

rksvasanth@yahoo.com
பதிவுகள், பெப்ருவரி 2004 இதழ் 50

12. தமிழ் சூழலுக்குள் ஆய்வு முறைமைகளும் கருத்துக்கட்டுமானமும்! - - - -ப.வி.ஸ்ரீரங்கன் -

வாழ்வியல் மரபுகள் தகர்க்கப்பட்டுவரும் சூழல் இருபத்தியோராம்நூற்றாண்டாகும்,ஒன்றின் இழப்புக்குப் பின் அந்தவிடத்திற்கு மிகவும் காட்டமான பழைய மரபுசார்ந்தெழுகின்ற ஒரு பிற்போக்கு வடிவத்தை புதியவொழுங்கு போன்று ஒப்பவிக்கிறது இந்த நுற்றாண்டு.இதற்கு புதிதாய் மலிந்துவிட்ட விஞ்ஞானச் சாகசங்கள் நன்றாய்த் துணைபுரிகின்றன, இதன்பொருட்டு இன்றைய செய்மதிச் செய்திப்பரிவர்த்தனை வானளாவிய தொலைத் தொடர்பு மற்றும் தொலைக்காட்சி- வானொலி,இணைய வலைப் பின்னல்களை தனிநபர்-தனிப்பட்ட வலயத்திற்குள் திணித்து விட்டுள்ளது, இது பற்பல சாத்தியங்களை மக்கள் சமூகத்துள் தோற்ற இதன் பயன் பாரிய சமுதாயப் பின்னடைவை-பிளவை வற்புறுத்துகிறது,என்றுமில்லாதவாறு சமூக முரண்கள் மழுங்கடிக்கப்பட்டு சமுதாய மாற்றம் நிகழாத சூழலை ஏகாதிபத்திய நிறுவனங்கள் நிறுவனமயப் படுத்துகின்றன, தற்செயலாகவேனும் உலகமயத்திற்கெதிரான கல்வியல் சார்ந்த கட்டுமானம் நிகழாதபடி இந்த உலகமய அரசியற்தந்திர வியூகம் இப்போது பலமாகக் கட்டப்படுகிறது. நிகழ்வுசார்ந்தெழுகின்ற அனைத்து நிலமைகளும் நன்றாகத் திட்டமிடப்பட்டுள்ளன.இதன் ஒவ்வொரு அசைவும் நுணுக்கமாக ஆய்வுக்குட்படுத்தி சட்டநிலைமைகளால் தடுக்கப்பட்டு வரும் நிலையில் நமது தமிழ்ச்சூழலை மையப்படுத்தி எதையும் குறித்துரைக்காதிருக்கமுடியாது!

இன்றைய சூழல் நம்மைக் கணிசமான அளவு உதிரிவர்க்கமாகவும், நாடோடிகளாகவும்-ஒட்டுண்ணிகளாகவும் அறிவுத்திறனற்ற அடிமைகளாகவும் மாற்றியுள்ளது,நாம் நமது பாரம்பரியக் கனவுகளில் தஞ்சம் புகுகின்றோம்,தப்பித்தல் எந்த வகைப்பட்டதாயினும் அது நமது பொருள் வயப்பட்ட வாழ்வைப் பாதிக்காதிருக்க கவனமாகப் பழக்கப்பட்டுள்ளோம். மூன்றாம் உலகத்துக்கேயுரிய அடங்கிப்போகும் மனோபாவம் நம்மை இன்னும் வக்கொழிந்தவர்களாகப் பார்க்கும்படி நாமேயேர்ப்படுத்தி அவற்றை நமது அடுத்த தலைமுறைக்குக் கடத்திக்கொள்ள பற்பல ஊடகங்களுடாய் செயற்படுதல் தற்போது சகயமாகப்பார்க்க முடியும், எனினும் எமது வாழ்வும் துய்ப்பும் நம்மில் பலரை இதற்கு மாற்றீடாய்ச் சிந்திக்க வைத்தாலும் நமது கருத்தியற் தளம் மிகவும் பலயீனப்பட்ட நிலைகளால் மிகச்சாதரண காரியத்தைக்கூட மக்கள் சமூக வட்டத்துள் சாதிக்க முடியாதபடி ஆக்கப்பட்டள்ளது.

சிலகால வரலாற்றுண்மைகளை நாம் கேள்விக்குட்படுத்திவிடுதலும் பின் அவற்றை முழு நிலவுகின்ற சூழலுலக்குமான மொத்தக் கண்ணோட்டமாகக் கருதிவிடுதலும் பின்தங்கிய உற்பத்தி நிலவுகின்ற நாடுகளிலுள்ள புத்திஜீவ மட்டத்தின் பகுப்பாய்வாக இதுவரை நிகழ்ந்துவருகிறது,இதன் அப்பட்டமான பரிந்துரைப்புகளை நாம் பல் வகைகளிலான வரலாற்று ஆவணங்களிலும் பார்க்கமுடியும்! இந்தப்பார்வைகள்

வைக்கின்ற மௌன மேதாவியக்கோரிக்கைளை அவற்றை வைத்தவர்களே இன்று மறந்துவிட்டு உலகமய அரசியலில் தமது இருப்பிற்கேற்ற வாறு புதிய மொந்தைக்குள் பழையதை ஊற்றமுடியாது மண்ணுக்கேற்ற மார்க்சியம் பேசும் சூழலில் மறந்துபோயும் வர்க்கம் சார்ந்து பேசாதிருக்கப் பழக்கப்பட்டுவிட்டார்கள், உலகமயமாதலை ஒருநாட்டினது சுய பொருளாயுத வளர்ச்சியாக வர்ணிக்கும் மேதமையை புலம்பெயர் நாடுகளில் புதிதாய் பட்டம்(!?)பெற்ற தமிழ்ச்சிறுவர்கள் செய்துவருகிறார்கள் (உ.ம்:வெக்டோன் தொ(ல் ல்)லைக்காட்சியும் அதன் ஆய்வாளர்களும்).இந்த உலகமயமாதல்(The Road to Serfdom?) என்ன என்பதை அறியவைத்தல் தமிழ்ச்சூழலுக்கான(வெகுஜன)ஆய்வு முறையாக இன்னும் வளரவில்லை.தமிழர்களினது வர்க்கச் சிந்தனை மிகவும் கவனமாக வளர்த்தெடுக்கப்பட்டது, இது தன்னையும் தன் குடும்பத்தையுமே மானுடமாகப் பார்க்கப்பழகியது, எனவே அதன் தேவைகள் அண்டிப்பிழைத்தல் அரசியலை மையப்படுத்தி நகரத்தொடங்கி இன்று கிட்டத்தட்ட ஈராயிரமாண்டாகிவிட்டது!

புலம் பெயர் தமிழ் குழுமம்:

புலம்பெயர்வாழ்வு மிகவும் முரண்படுதன்மைகளை -பொருந்தாத்தன்மைகளை தன்னகத்தே கொண்டுடியங்குகிறது,இணக்கமற்ற இருவேறு அணுகுமுறைகளின் ஒருமாதிரி சேர்க் கையிலேதாம் புலம் பெயர் தமிழ்மக்களினது இருப்பே தங்கியுள்ளது.
இங்கெல்லாம் நாம் நமது வாழ்வை சமூகக்கூட்டாகமைக்க முடியவில்லை .இதனால் சமுதாயரீதியான அணுகுமுறையற்றுப்போவதால் குழுவாரீயான அணுகுமுறையே நிலவுவதால் அ·து ஒன்று,மற்றது: தனிநபர்வாத அணுகுமுறை! குழுவாரியான அணுகுமுறைக்குள் சிறு சுய அமைப்பாண்மையும்,ஆற்றலையும் காணும்போது மறுபுறத்திலோ தனிநபர்வாத அணுகுமுறை எல்லாச்சீரழிவுக்கும் பசளையிடும் காரியத்தில் இயங்கிக்கொள்கிறது.இத்தகைய தனிநபர்வாத அணுகுமுறை பழைய குட்டிப்பூர்ச்சுவா குணாம்சம் காரணமாக மிகவும் இறுக்கமான மரபுசார்ந்து செயற்படும் தந்திரத்தில் மையங்கொண்டுள்ளது, இது கண்டதையும் காசாக்கும் நோக்கோடு சகல ”மக்கள் தொடர்பாடலையும்” பார்க்கிறது. இந்தப்போக்கின் விருத்தியே தமிழ் வானொலி-தொ(ல்)லைக்காட்சி வியூகமும்,அதுசார்ந்த வர்த்தகமும்.இது சுயநலன் கொண்ட தற்பெருமையும்,இறுமாப்பும் கொண்ட தனி நபர்களை உருவாக்கிவிட்டுள்ளது, இவர்களது சமூகவாரியான புரிதல் மிகவும் தாழ்நிலையில் இருக்கிறது,இவர்களே புதிதாய் கற்றுவிட்ட மேதாவிகளாய் உலகத்தின் எந்த பிரச்சனைக்கும் எழுந்தமானத்திற்குப் பதிலளிக்கிறார்கள்

இந்தியா இன்னும் இருபதாண்டுகளில் வல்லரசாகிவிடுமென கருத்திடும் இவர்கள் உலகமயமாக்கலை சுயவளர்ச்சியாகப் பார்க்கும் பிரமையை இறுமாப்பென்பதா அல்ல மூடத்தனமென்பதா?இந்த பட்டதாரி இளைஞர்கள் தமிழ்பேசும் மக்களின் எந்தப்பிரச்சனையையும் புரிய மறுத்து மேற்குலகக் கல்வியின் பிரதி நகலாக-மேற்குலக மானுடர்களாக தொலைக்காட்சிகளில் தோன்றி சாதரணமக்களை அடிமைத்தனத்திற்குப்

பழக்கி அதில் தங்கிவாழ வியூகம் அமைத்து யார் யாருக்கோ உதவுகிறார்கள்! இந்த நிலையே கேள்விகளை-சாரத்தை-இயங்குதளத்தை புரிந்துகொள்வதில் சிக்கலிட்டுள்ளது, முரண்நிலையிலிருந்து கேள்வி கேட்பது சமூக விஞ்ஞானத்தின் ஆரம்பப்படி.இதன்படியே நம்மை-நாம் புரிந்துகொள்வது இன்று மிக மிக அவசியம். புலம்பெயர் தமிழ்பேசும் மக்களினது வாழ்வானது இரண்டும் கெட்டான் சமூகசீவியமாகவிருக்கின்ற இன்றைய சூழலில் ஏதுகுறித்து பொறுப்புணர்வோடு ஆய்வுகள்,கருத்துக்கள் முன்வைப்பது இன்றைய இளைய படிப்பாளிகளின் பொறுப்பாகும்!

ஐரோப்பியக்கூட்டமைப்பு நாடுகளினது உயர்கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் சமூக உளவியற்சூழல் மிகவும் தாழ் நிலையிலேயே இருக்கிறது, இ·து ஐ.கூ.அமைப்பின் பொருளியல் நலன்களின்மீதான கருத்தமைவுகளுடன் பிணைவுற்றே தன்னை வெளிப்படுத்துவதால் இதன் வேர்களை நாம் மிக இலகுவாக இந்த ஐ.கூ.அமைப்பின் சமூகக்கட்டுகளுக்குக் கீழ் நிலவும் பாசிசத் தன்மைக்குள் காணமுடியும். இது ஒரு வகையில் பழைய கொலனித்துவ மற்றும் 1938 களில் நிலவிய சமூக உளவியலை மீளக்கட்டுவதற்கும், இளைய தலைமுறையை பூர்ச்சுவா கருத்தமைவுகளுடன் பிணைப்பதற்கும் திட்டமிட்டபடி பெரும் நிறுவனமான பாடசாலை-பல்கலைக்கழகங்களை பயன்படுத்திவருவதை சகல உயர்கல்வி மாணவர்களும் சற்று அவதானமாக நோக்கினால் அறிய முடியும், மேற்குறிபிட்ட படி இதைச் சகல வடிவங்களிலிருந்தும் அந்தக் கல்வி நிறுவனம் சரிவரத் திட்டமிட்படி கடைப்பிடிக்கிறது,ஐரோப்பியக் கூட்டமைப்பின் பாடத்திட்டங்களை வகுக்கின்ற கல்வியாளர்களே இந் நாடுகளின் இன்றைய சமூக உளவியலைத் தீர்மானிப்பவர்களாக சமூகப் புறநிலையுள்ளது.ஐ.கூ.வந்துவிட்டது! பல் தேசங்கள் கூடி,தத் தம் தேசிய எல்லைகளைக் கடந்து "கண்ட அரசியலை" நகர்த்தினாலுங்கூட இவர்களது அரசியல் சந்தைப் பொருளாதாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதும் அந்தப் பாதுகாப்புக்கவசத்திற்கு என்றுமே எதிரிகளற்ற கருத்தியல் மேல்நிலையைக் கட்டிக்கொள்வதுமே. ஐரோப்பியக் கூட்டமைப்பின் அரசியல் தேசங்களின்-மக்களின் கூட்டாகவன்றி வெறுமனவே உடமை வர்க்கத்தினது கூட்டாகக் காணமுடிகிறது! இ·து மிக விரைவாகச் சிதறியே தீரும், யூரோ நாணயம் இன்று பலமுடையதாயினும் நாளை அதன் முடிவு நெருங்கிவிடும். அப்போது நடைபெறப்போகும் நாடகம் நமது கனவுகளை நொருக்கி நம்மை புகலிடத்திலிருந்தே விரட்டும், இதை நமது இளைய தலைமுறை புரிந்து விடுமென நம்பமுடியாது. இது இப்படியிருக்க இந்தியாவின் வியூகமோ சொல்லிமாளா!

வாழ்வியல் முரண்கள் புதியவற்றை படைக்கத்துண்டும் நிலைமகளில் - நம்மை வற்புறுத்தும் இன்றைய புலம்பெயர் வாழ்வில் நாம் அவற்றைத் தெரிந்து-புரிந்து காரியமாற்றமுடியாதபடி மிகக் கவனமாக தமிழ்பேசும் மக்களின் விரோதிகள் காரியமாற்றுகிறார்கள், இந்த விரோதிகள் தமிழ்பேசும் மக்களை தமது நலனுக்கேற்றவாறு பயன்படுத்தும் நோக்கோடு நமக்குள் ஆய்வுகளை, கருத்தக்களைக் கொட்டுகிறார்கள். இவை

புலம்பெயர் வாழ் தமிழ் மக்களை வெறும் கலாச்சாரடிமைகளாக மாற்றிவிடும் வியூகத்தை அடிப்படையாகக் கொண்டியங்குகிறது. இந்தக் கபடவலைக்குடந்தையாக இன்றைய ஊடக வளர்ச்சி இருக்கிறது. இது தமிழக இறுமாப்பு நிறைந்த வர்த்தகச் சினிமா மனிதர்களைப்போல் நமது மனோபாவத்தை மாற்றிவிட பாடு படுகிறது, இதனுடாக நமது சுயவளர்ச்சி முடக்கப்படுகிறது, எதற்கும் இந்தியப் பார்ப்பன கருத்தியலைச் சார்ந்து இயங்கும் மனிதக்குழுவாக நம்மைத் தயார்ப்படுத்தப் பாடுபடும் இந்திய நலன் நமக்கான சுய விடுதலையை,சுதந்தரத்தை-ஆத்மீகவளர்ச்சியை,தனித்துவத்தை,தேசிய அடையாளத்தை நிர்மூலமாக்குவதில் மெதுவாக வெற்றியடைந்து வருகிறது! இதன் போக்கால் இந்தியச் சந்தை விரிவாக்கப்பட்டுள்ளது, நிரந்திரமான ஒரு நுகர்வுக்கூட்டத்தை ஜரோப்பா மற்றும் அமெரிக்கா,அவுஸ்ரேலியா,ஆபிரிக்காவெங்கணும் கட்டிக்கொள்ள இந்தியத் தரகுமுதலாளிய வர்க்கம் முயற்சித்து வருகிறது.இது இந்தியாவினது ஆசியச் சந்தையைவிட மிக வருமானத்தை அதற்கு அளிக்கக்கூடியது, இந்தச்சந்தையின் நுகர்திறன் வளாச்சியடைந்த சமூகத்தின் திறனோடு ஒப்பிடத்தக்கது.நமது மனோபாவம் வளராவிடினும் நாம் வளாச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில்தாம் வாழ்கிறோம்.

புலம்பெயர் தமிழராகிய நாம் உளவியல் ரீதியாகப் பலவீனப்படுத்தப்பட்டுள்ளோம், தமிழகத் திரை முகங்களிடம் தஞ்சமடையுமளவுக்கு நமது அகவளர்ச்சி தடுக்கப்பட்டுவிட்டது. இதிலிருந்து மீள இங்கிருக்கும் குழுவாரியான சுய அமைப்பான்மையுடைய தமிழ்ப் புத்திஜீவிகள் தமது ஆற்றலை இவை நோக்கித் திருப்பிவிட அவர்களுக்கிருக்கும் ஒரே தடை கருத்துச்சுதந்திர மறுப்பேயாகும்! இதை தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் கூடுதலாகப் பார்க்கமுடியும். மாற்றுக்கருத்துக்கு நாம் இடமளிப்பதே நமது எதிர்காலத்தை விருத்திக்கிட்டுச் செல்லும், இதை இங்கிருக்கும் எந்த ஊடகமும் மறுக்கமுடியாது.

இலங்கை மற்றும் தமிழகச் சூழல்:

பாரம்பரியமாக வாழ்ந்து வரும் பகுதிகள் இப்போது தமிழர்களின் சுதந்திரமான உயிர்வாழும் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதாக யாரும் கனவுகூடக் காணமுடியாதவொரு சூழலை அவைகொண்டுள்ளன, ஒரு திமி¡த் தனமான அரசபயங்கரவாத நெருக்குவாரத்தோடுகூடிய தனிநபர்பயங்கரவாதம் தலைவிரித்தாடும் தமிழ்ப் பிரதேசங்களில் ஜனநாயகப் பண்புகள் துளியளவேனும் நிலவுவதாக யாரும் குறித்துரைத்தால் அவர் விசமம் பண்ணுபவராகவே கருத இடமுண்டு, அவ்வளவு மோசமானவொரு சூழலை இவ்விடங்களில் வாழும் மக்கள் அனுபவிக்கின்றனர். அரை இராணுவத்தன்மையுடைய சர்வதிகார காட்டாட்சிக்குள் இலங்கை-தமிழக தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள், நேரடியான அரச வன்முறைஜந்திர நெருக்குவாரத்துக்கு தமிழக மக்கள் முகங்கொடுத்தால் இலங்கைத் தமிழ் மக்களோ அரச-தனிநபர் பயங்கரவாதத்திற்கும் பொருளியல் ஒடுக்குறைக்கும் முகங்கொடுப்பது மட்டுமல்ல முகத்துக்கு நேரே குறிவைத்துக்காத்திருக்கும் சுடுகருவிக்கும் தலைசாய்த்தே சீவிக்கவேண்டும்! என்றுமில்லாதவாறு உயிர்வாழும் உரிமை மறுக்கப்படும் சூழலில் ஒரு

ஆரோக்கியமான கருத்தியில் கட்டுமானம் நிலவமுடியாது, அங்கே நிலவுகின்ற சமூக உளவியல் அரபுநாடுகளை விட பின்தங்கிய குறைவிருத்தியுடைய ஜனநாயகத்தன்மையைக்கூட விட்டுவைக்கா. இது ஆண்டான் அடிமை அமைப்பை மறைமுகமாகப் பிரதிநித்துவப்படுத்துவதில் ஆளுமைமிக்கவர்களை தள்ளி அவர்களது நலனை முதன்மைப் படுத்தும் அரசியலை மையப்படுத்தியே சட்டவாக்கம் உருவாக்கப்பட்டுள்ளது. இதையேதாம் அமெரிக்க பொருளியல் நலன் மூன்றாமுலகில் விரும்புகிறது. இவ்விடங்களில் துளியளவேனும் ஜனநாயப்பண்பு நிலவுதை உலக ஆண்டான்கள் விரும்புவதில்லை. தமது அடிவருடியளைக்காக்க இதுவே சரியானதொரு அரசியல் வழியாக அவர்கள் கருதுவதால் இவ் மக்கள் மத்தியில் நிலவும் உணர்வு எப்படியும் உயிர்த்திருத்தலே, இதை விட வேறெதுவம் அவர்தம் சிந்தையில் தோன்றுவதாயின் அதுவே தப்பித்தலாக இருக்கும். இந்தத் தப்பித்தல் காலா காலத்திற்கு மாறு பட்ட வளர்சச்சியையெட்டமுடியுமேயொளிய மாறாக ஆரோக்கியமான வாழ்வியல் பண்புகளை,ஜனநாயகத்தன்மைகளைத் எட்டமுடியாது. ஏனெனில் இங்கு நிலவும் இராணுவப் பொருளாதார உறவுகள் இதற்கு மேலே செல்லும்படியான உற்பத்தியுறுவுகளை ஏற்படுத்த முடியாது போய்விடுகிறது,சரியான முதலாளிய வளர்ச்சியற்ற தரகு முதலாளியச் சூழல் இதற்குமேல் நகர முடியாது.

சொந்த முரண்பாடுகளால் நமது சமூகவுருவாக்கம் நிகழும் படியாக கொலனித்துவம் விட்டு வைக்கவில்லை, அது தனது தேவைக்கேற்றபடி தரகு முதலாளியகளை உருவாக்கிவிட்டு அதற்கேற்ற திட்டவாக்கத்தை நமக்கு கற்பித்து வருகிறது, இதிலிருந்து இந்த நுற்றாண்டில் மீளக்கூடிய ஆரோக்கியமான நகர்வு தென்படவில்லை. பாராளுமன்ற ஓட்டுக் கட்சிகள் யாவும் நம்மையும் நமது நாட்டையும் தமது வருமானத்தின் மூலப்பொருளாக பாவித்தல் அறுபதாண்டுகளாக நடைபெற்றுவரும் சங்கதி. இதனால் நாம் நாடு எனும் அமைப்பை விட்டு, நாடுகள் என்ற அமைப்புகளுக்குள் நிர்பந்திக்கப்பட்ட வாழ்வை மேற்கொள்ளும் அவலமேற்பட்டுள்ளது. நமக்கான திட்டவரைவை உலகவங்கி எழுதுகிறது, அதன்படி காரியமாற்றும் ஓட்டுக்கட்சிகள் இப்போது கல்வியில் கைவைக்கும் உலக வங்கியை எதுவும் கூறமுடியாத வக்கற்வர்களாகி அறிவுசார்ந்த துறைகளை மூடிவிடச் சொல்லும் செயலை செவ்வனவே செய்து வருகிறார்கள், இதன்படி இனிமேல் தொழில் சார்ந்த ,அதுவும் உலகமயத்தின் கொள்ளைக்காரருக்குச் சேவகம் செய்யும் கல்வியே சாத்தியமாகப் போகிறது.

இந்தநிலையில் நமது தேசியக் கனவுகள்,தேசிய அலகுகள்,தேசியத்தன்மைகளெல்லாம் மாற்றம் பெறுகின்றன. எமக்கான நீதி,நியாயம்,உரிமை யாவுமே ஏகாதிபத்யத்தின் நலனுக்கேற்வாறு மட்டுமே இயங்கும்.அடிப்படை வாழ்வுரிமை புதிய வகைமாதிரியானவொரு மொன்னைப் பேச்சாகவே இப்போது பேசப்படுகிறது,இதன் விருத்தி வேறொரு வகையில் மனிதாயத்தின் பெரும் தோல்வியாக -அதுவே ஒரு பெரும் கதையாடலாக இட்டுக்கட்டி அதன் கழுத்தில் நுகம் வைக்கப்பட்டுள்ளது! இந்த

நுகத்தடி பற்பல வர்ணங்கொண்ட கனவுகளை விதைப்பினும் மானிட நேயம்சார்ந்த சமூக உளவியல் இப்போது காலமாகிவிட்டது.இனி இது குறித்த கதையாடல் பிறிதொரு பாணியிலான மொன்னைப் பேச்சுத்தாம்.இந்தப் பின் தங்கிய கருத்தாடலைத் தாண்டி சுய கௌரவம்,தனிநபர் சுதந்திரம்,தனிநபர் தனித்தன்மை என்பவைகளே உலக மய அரசியலில் ஏகாதிபத்யங்களால் பேசப்படும் உளவியலாக் கருத்துக்கள் கட்டப்படும். இதற்கேற்றவாறு இலங்கை-தமிழக தமிழ் புத்திஜீவகள் ஆய்வுகள் முன்வைத்து அவற்றைத் தலித்துவத்தோடு இணைத்து விடுவதில் பிரயத்தனஞ் செய்கிறார்கள். இது ஏகாதிபத்யங்களளோடு கூட்டுச் சேர்ந்து நமது வடுதலையைப் பெறுமுடியுமென்று தமிழ் பேசும் உழைக்கும் வார்கத்தைக் காட்டிக்கொடுக்கும் மாபெரும் வரலாற்றுத் தவறை நமக்குத் தருமென்பதில் எமக்கு இருவேறு கருத்துக் கிடையாது! மக்கள் புரட்சிகரமாக இருந்து ஒருமண்ணும் நிகழா,மாறாக நமக்கு உலகு தழுவிய புரட்சிகரக் கட்சியின் அவசியம் முன்னெப்போதையும் விட இப்போது தேவையாகவுள்ளது. உலக உழைக்கும் மக்கள் நம்முடன் தோள் சேரவேண்டும், இதுவே காலமாகிவிட்ட மனிதாயத்தை உயிர் பெறவைத்து நமக்காக அனைத்து தளைகளையெல்லாம் அறுத்தெறியும்.

அரச ஆதிக்கமும், அரச ஐந்திரமும் இருவேறு வினைகளின் வடிவங்கள்:
ஒரு நாட்டில் இருவேறு அரச ஐந்திரம் நிலவமுடியுமாவெனுங் கருத்தாடல்கள் இப்போது நமக்குள் நடை பெறும் சூடான விவாதமாகத் தொடர்கிறது,இரு அரச வன்முறை ஐந்திரம் ஒரு நாட்டுக்குள் நிலவுமாயின் அங்கே ஒரு அரச வடிவமில்லையென்பது தெளிவானதுதாம்.ஆனால் உண்மையில் இது சாத்தியமாக சுய பொருளியல் பலம் இருக்கவேண்டும்! எதற்குமே பொருளாதாரமே அடித்தளம்,பொருளாதாரமென்ற அடிமட்டத்தைக் காப்பதற்கான மேல்மட்டக் கவசங்களே அடிமட்டமாகப் பார்க்கப்படுதல் வெறும் சட்ட அறிவின் வெளிப்பாடுதாம், பொருளாதார அடிப்படையற்ற எந்த அமைப்பும் இறுதியில் அன்னியசக்தியின் ஆதிக்கத்துக்கு உட்பட்டேயாகவேண்டும்!

இன்றைய தேசிய இனப்பிரச்சனைகளுக்கு அரசியல் தீர்வுகுறித்துக் கருத்தாடலிடும் சிறார்கள் தமிழ்பேசும் மக்களது பிரச்சனை "ஒற்றையாட்சியலோ அன்றி கூட்டாட்சியிலோ "தீர்க்கமுடியாதபடி தமிழர் தரப்பில் பலமான இராணுவக்கட்டமைப்பு உண்டு ,அது கலைக்கமுடியாதவரை இவை சாத்தியமில்லை, எனவே சுதந்திரக்கூட்டாட்சியே தீர்வாகும்,இது இருவேறு தனிநாடுகளின் கூட்டரசாகவே அமையமுடியும்,ஆகையினால் இலங்கை அரசியற்சட்டம் மாற்றி அமைக்காதவரை தீர்வுசாத்தியமில்லையென்றும் கருத்தாடுகின்ற திடீர் "அரசியல் ஆய்வாளர்கள்" மத்தியில் சிக்கியுள்ள நாம் இந்த இராணுவக்கட்டமைப்பை இலங்கையரசின் ஆதக்கத்திலிருந்து நோக்குவோமாயின் அதன் சிதறல் மிகவிரைவாக நிகழாதவரை எந்த உந்து சக்தி தக்கவைக்கின்றதென அறியமுடியும். இலங்கையரசின் ஆதிக்கத்திலிருந்து முழுமையாகவோ அன்றி பகுதியாகவோ தமிழ்ப்பிரதேசங்கள் விடுபடவில்லை:

மொத்தமாகவே இலங்கையரசினது ஆதிகத்திற்குட்பட்ட பகுதியாகவிருக்கும் தமிழ்ப் பிரதேசங்கள் ஒருபோதும் சுயஅமைப்பாண்மையை பொருளாதாரக் கட்டமைவில் செலுத்தமுடியாதென்தை சாதாரண உயர்கல்வி மாணவாரொருவர் புரிந்து கொள்ள முடியும்,இது இப்படியிருக்க இந்த ஆய்வாளர்கள் யாரினது நன்மைக்ககாக இல்லாததை இருப்பதாகக்காட்டி குட்டையைக் குழப்பி துண்டிலிட முனைகிறார்கள்? இலங்கையரசு முற்றுமுழுதானவொரு பொருளாதாரத் தடையைக் கடைப்பிடித்தால் நிலமையென்னவாகும்? பாரம்பரிய பிரதேசங்களென்பவை முதலில் இலங்கையரசாதிக்கத்திலிருந்து விடுபடாதவரை இரு இராணுவமெனுங் கருத்தாக்கமே சுத்தப் போலீயானது! எந்த விடுதலைப் போராயினும் முதலில் நிலவுகின்ற அன்னிய ஆதிக்கத்தை உடைத்தபின்பேதாம் அதன் வன்முறை இயந்திரத்தின் மீது கைவைப்பார்கள்.அந்தக் கைவைப்பு முற்றுமுழுதாய் அதைச் சிதறடிப்பதில் முடிவுறும், ஆனால் இலங்கையில் தமிழ்பேசும்மக்கள் வாழும் பிரதேசங்களிற் பார்ப்போமானால் நிலமை தலைகீழ்! ஒவ்வொரு பத்துச் சதுர கி.மீ.க்கும் இரண்டு அல்ல மூன்று இராணுவ முகாங்கள் உள்ளன. இவைகள் இலங்கையரசினது வன்முறை இயந்திரம்.

இறுதியாகச் சில:

1): தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தவறான ஆய்வுகளைத் திட்டமிட்டு நம்மை ஒடுக்குபவர்கள் வதைக்கிறார்கள்.

2): இதற்கு உடந்தையாக சில தமிழ்ப் புத்திஜ£விகள் தெரிந்தோ தெரியாமலோ ஒத்துழைக்கின்றார்கள்.

3): இந்திய புலனாய்வுத்துறை மீளவும் நமது வாழ்வைச் சிதைக்க களத்தில் இறங்கி புலம் பெயர் மக்களை
தமது நலனுக்கேற்றவாறு மூளைச் சலவை செய்கிறது.

4): புலம்பெயர் தமிழர்கள் சுய அமைப்பாண்மையுடன் வளர்வுறுதலை மட்டப்பட வைக்க இந்தியா தொடர்ந்து கருத்தியில் யுத்தத்தை தமிழ்ச்சினிமாவூடே நடாத்த முனைகிறது.

5): பாரிய வர்த்தக நலனுக்காய் நம்மீது நுகர்வடிமை மனோபாவத்தைத் திட்டமிட்டு வளர்த்தெடுக்க முனைந்து வரும் இந்திய -இலங்கைத் தரகு முதலாளித்துவம் நமது நாட்டின் இயல்பு நிலையை விரும்பாது தொடர்ந்து கொந்தளிப்பான அரசியல் நிலையைத்தோற்றுவிக்கப் படாதபாடுபடுகிறது.

6): உலக ஏகாதிபத்யம் தனது உலகமயப் படுத்தலில் நமது தேசியத் தன்மைகளை மறுத்து வெறும் கொத்தடிமைகளாக்கி நம்மை இந்திய-இலங்கை தரகு வர்த்தகத்தின் நலனுக்கேற்றவாறு பயன்படுத்தி வருகிறது.

7): இதனுடாய் உலக மயத்தை நம் நாடுகளில் சிறப்பாய்ச் செய்து அறுவடையை கையகப்படுத்த அனைத்து வியூகங்களும் வெற்றியாய் நடைமுறைக்கு வருகிறது.

8): இவ்வளவுக்கும் புலம் பெயர் தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஊடகங்களும் ஒத்திசைவாகச் செயற்படுகிறது,இதற்குப் பரிசாக எலும்புத்துண்டங்கள் இவர்களுகிடப்பட்டுவருகிறது.

நாம் தொடர்ந்தும் வேலைக்குப்போய் வீடுமீண்டு சோற்றுக்கோப்பைக்குள் விழுந்தொழும்பி சண்,சண் கே.,வெக்டோன்,¦ஐயா மற்றும் அதன் கூட்ட..., தீபம், ரி.ரி.என்.பார்த்துப் பின்னிரவு இரண்டு மணிக்கு கண்மூடி அதிகாலை ஐந்துக்கு மீளவும் வேலைக்குப் போகவேண்டும்.

srirangan@t-online.de
பதிவுகள், மார்ச் 2004 இதழ் 51]

13. பெண் ஏன் அடக்கப் பட்டாள்..? ஏன் ஒடுக்கப் பட்டாள்..? - சந்திரவதனா செல்வகுமாரன் (யேர்மனி) -

எழுச்சிகளும் புரட்சிகளும் காலங்காலமாய் இருந்து வந்தாலும் இன்னும் பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் மனப்பாங்கு சமூகத்தில் இருந்து விலகவில்லை. பெண்ணின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலைப்போடும் நிலையும் மாறவில்லை. அவளின் அசைவுகள் கூட அலசப் படுகின்றன. உடைகள் பற்றிப் பேசப் படுகின்றன. அணிகலன்கள் பற்றி ஆராயப் படுகின்றன. பெண்களை நாங்கள் வெளியில் போக விடுகிறோம். விரும்பிய உடைகளை அணிய விடுகிறோம். பல்கலைக்கழகம் வரை படிக்க விடுகிறோம். வேலை செய்ய விடுகிறோம். ஏன்.. கணினியில் கூட எழுத அனுமதிக்கிறோம். இன்னும் என்ன வேண்டுமென்று இவர்கள் ஆர்ப்பாட்டக் கொடி பிடிக்கிறார்கள்.. என்ற ஆணாதிக்கம் தொனிக்கும் கேள்விகள் கூட சில ஆண்களிடம் இருந்து சினத்தோடு எழுகின்றன.

பெண்விடுதலை என்றால் என்ன? அதன் தார்ப்பரியம் என்ன? என்பவை பற்றி சில ஆண்களுக்கு மட்டுமல்ல. பல பெண்களுக்குமே புரியவில்லை.

இன்றைய காலகட்டத்தில் பெண்கள் வெகுவாக முன்னேறி விட்டார்கள்தான். அதை யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. தனது பதினோராவது வயதிலேயே பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு தாய்மை என்னும் புனிதத்தையோ அன்றிப் புளகாங்கிதத்தையோ உணர முடியாத குழந்தைப் பருவத்தில் ஒரு குழந்தையைத் தான் சுமந்து தாயான லிபேரியக் கறுப்புஇன இளம் பெண்போராளி ஒருத்தி சொல்கிறாள் ஒரு ஆணை விட ஒரு பெண்ணினால்தான் முழுமன ஈடுபாட்டுடனும் வீரியத்துடனும் புத்தி சாதுரியத்துடனும் போராட முடியுமென்றும் ஒரு ஆணை விடப் பெண்ணிடம்தான் வலிமை அதிகம் என்றும். அது உண்மைதான். பெண்களின் பங்கு என்பது உலகில் மிக முக்கியமானது.

அவர்கள் இல்லாமல் ஆண்களால் பொ¢தாக எதையும் சாதித்து விட முடியாது.

இருந்தும் பெண் ஏன் அடக்கப் பட்டாள்..? ஏன் ஒடுக்கப் பட்டாள்..?

ஆதிகாலத்தில் வேட்டையாடுவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ மனிதர்கள் காடு மேடு கடந்து பல தூரங்களுக்குப் போக வேண்டிய நிலையும்;, போனவர்கள் அன்றே திரும்ப முடியாமல் போன இடத்திலேயே தங்க வேண்டிய நிலையும் இருந்தன. இந்த சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை விடப் பலமான விலங்குகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டிய கட்டாயமும் இருந்தது. இங்குதான் பெண்கள் மெதுமெதுவாக வீட்டுக்குள் ஒடுங்க வேண்டிய காரணி உருவாகத் தொடங்கியது.

குழந்தை பிறந்திருக்கும் சமயங்களில் பெண்களில்; குருதி வாடையும், பால் வாடையும் இருக்கும். அதே போல மாதாமாதம் வெளியேறும் சூல்முட்டைகளின் காரணமாகவும் பெண்களில் அந்த நாட்களில் குருதி வாடை இருக்கும். இந்த வாடையை முகர்ந்தறிந்து மனிதர்களின் இருப்பிடத்தையோ அல்லது வரவையோ அறிந்து கொள்ளும் திறன் விலங்குகளுக்கு உண்டு.

ஆரம்பத்தில் பெண்கள் ஆண்கள் என்று எல்லோரும் ஒன்றாகச் சென்று வேட்டையாடி, ஒன்றாக உண்டு, போற போற இடங்களிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்துத்தான் வாழந்தார்கள். ஆனால் எவ்வளவு பாதுகாப்பாக ஒழிந்திருந்தும் எப்படி விலங்குகள் தம்மைக் கண்டு பிடித்து அழிக்கின்றன என்ற ஆராய்ச்சியை அவர்கள் மேற்கொண்ட போதுதான் இந்தக் குருதி வாடையை வைத்து விலங்குகள் தம்மை மோப்பம் பிடிப்பதை அறிந்து கொண்டார்கள்.

அதன் பிறகுதான் அந்தக் குறிப்பிட்ட நாட்களில் பருவமெய்திய பெண்களையும், குழந்தை பெற்ற பெண்களையும் வீட்டிலே விட்டு மோப்பம் பிடித்து வரக் கூடிய விலங்குகளால் அவர்களுக்கு எந்த வித ஆபத்துக்களும் ஏற்படாவண்ணம் காவலும் வைத்து விட்டு மற்றவர்கள் வேட்டைக்குச் சென்றார்கள்.

இது மனிதர்கள் மத்தியில் மட்டுமல்ல. விலங்குகளிடமும் இருந்தது. மிக மிக ஆதிகாலத்திலிருந்தே தம்மை விடப் பலமான விலங்குகளிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ள குட்டி போட்ட பெண் விலங்குகளை தமது இருப்பிடங்களில் விட்டுப் போக வேண்டிய கட்டாயம் விலங்குகளுக்கும் இருந்தது.

இந்த விலங்குகளிடமிருந்தான பாதுகாப்புத் தேடல்தான் மெதுமெதுவாக பெண்கள் வீட்டுக்குள் முடங்க வேண்டியதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தத் தொடங்கியது.

காலங்காலமாக இந்த நடை முறை தொடர்ந்த போது - எப்படித் தோல் நாட்டின் சீதோசண நிலைக்கேற்ப இசைவாக்கம் பெற்றதோ அதே போல மூளையும் மெது மெதுவாக இசைவாக்கம் பெறத் தொடங்கியது.

ஆண்களின் மூளை வேட்டைக்குப் போகும் பாதையை நினைவு படுத்தி வைப்பதிலும் வேட்டையாடுவதிலும்............. என்று ஒரு விதமான ஒற்றைப் பாதையில் திடமாக கூர்மையான அவதானத்துடன் நின்ற போது

பெண்களின் மூளையோ தமது குழந்தைகளைப் பாதுகாப்பதிலும், குடும்பத்தின் உள் விடயங்களைக் கவனிப்பதிலும்........... என்று சற்றுப் பரந்து விரிந்தது.

இங்கே பாதுகாக்கும் தன்மை என்பது ஆண்களால் வெறுமனே ஒருவரை காவலுக்கு விடுவதுடன் நின்று விட்டது. ஆனால் பெண்களிடமோ தம்மைத் தாமே பாதுகாப்பது மட்டுமன்றி, மிக மிக அவதானத்துடன் எந்த விலங்கிடமும் தமது குழந்தையும் பறி போய் விடாத படி தாமே பாதுகாக்கும் தன்மையும் தம்மை அண்டியுள்ள மற்றைய பெண்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் ஆபத்து ஏற்படாத படி பாதுகாப்புக் கொடுக்கும் தன்மையும் என்றிருந்தது. அதுவே அவர்களிடம் ஒரு குழுமமாகச் செயற்படும் தன்மையை ஏற்படுத்தியது.

இதுவே மனிதன் விலங்குகளிலிருந்து தன்னை வேறு வழிகளில் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய நிலை வந்த பின்னும் தொடர்ந்தது. தொடர்ந்து கொண்டிருக்கிறது.

மாதவிலக்கு என்று சொல்லி பெண்ணைத் தனியாக பாதுகாப்பாக விடுவதற்கும், மாதவிலக்கு நாட்களில் பெண் தனியே வெளியே போனால் பேய் பிடிக்கும் என்று சொன்னதற்குமான அடிப்படைக் காரணிகள் இவையே. அங்கே பிடிக்கப் போவது பேயல்ல, விலங்குகள். ஆதிகாலத்தில் - அந்த நேரத்தில்

விலங்குகளிடமிருந்து பெண்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே பெண்களிடம் ஒரு பெரிய இரும்பைக் கொடுத்து வைத்தார்கள். இங்கே இரும்பு ஒரு தற்பாதுகாப்பு ஆயுதமாகவே இருந்தது. சில இடங்களில் உலக்கையையும் கொடுத்தார்கள்.

இன்று மாதவிலக்கான பெண்களைத் தேடி வரும் தொலைவில் விலங்குகளே இல்லை. மிருகக்காட்சிச் சாலையில் விலங்குகளை அடைத்துக் காட்சி வைக்கும் அளவுக்கு அவைகளை எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்து விட்டு வாழ்கிறோம்.

இந்த நிலையில் ஏன் எதற்கு என்ற சிந்தனைகள் எதுவுமின்றி இன்றும் இப்படியான அர்த்தமற்ற செயற்பாடுகள் தொடர வேண்டிய அவசியமில்லை.

ஏட்டில் எழுதிய நாம் இன்று கணினியில் எழுதுகிறோம். புறாவைத் தூது விட்ட நாம் மின்னஞ்சலில் அசத்துகிறோம். பெண்ணை மட்டும்; அடங்கு என்று சொல்ல இன்னும் என்ன நாம் காட்டிலா வாழ்கிறோம். அல்லது எம்மைச் சுற்றி விலங்குகளா நடமாடுகின்றன. காட்டு வாழ்க்கையை விட்டு நாட்டில் வீடு கட்டி பாதுகாப்பாக வாழும் நிலைக்கு நாம் என்றைக்கோ வந்து விட்டோம். இருந்தும் மூளையில் பதியப் பட்ட அடிப்படையான ஆதிகாலப் பிரச்சனையை கருத்தில் கூடக் கொள்ளாமல் இன்னும் பெண்கள் வீட்டுக்குள் ஒடுங்க வேண்டியவர்கள்தான் எனக் கண்மூடித்தனமாக் கருதுகிறோம். அன்று சூழல்நிலை கருதி - பாதுகாப்புக் கருதி குழந்தை பெற்ற பெண்கள்... வீட்டினுள் தங்கினார்கள் என்றால், இன்று அந்த எந்தக் காரணங்களும் இல்லாமலே பெண்கள் வீட்டுக்குள் அடங்க வேண்டுமென நினைக்கிறோம்.

உண்மையில் ஒரு ஆணை விட ஒரு பெண்ணால்தான் ஒரு வியாபார ஸ்தலத்தையோ, அல்லது ஒரு பொ¢ய நிறுவனத்தையோ கூட்டாகக் கொண்டு நடத்தி கூடுதலாக வெற்றி பெற வைக்க முடியும். ஒரு சொல்லை ஒரு ஆணிடம் சொன்னால் -
அவனால் அந்தச் சொல்லுக்கு ஒரு அர்த்தம்தான் கண்டு பிடிக்க முடியும் என்றால் அதையே ஒரு பெண்ணிடம் சொன்னால் அவள் அது பற்றி நன்கு யோசித்து பல கோணத்தில் பல அர்த்தங்கள் கண்டு பிடிப்பாள். ஒரு விடயத்தைச் சொன்னால் அதைக் கிரகித்து அதற்குப் பதில் சொல்லும் தன்மை ஆண்களின் மூளையில் ஒரு பங்கு என்றால் அதைக் கிரகித்து பதில் சொல்லும் தன்மை பெண்களின் மூளையில் ஆறு பங்கு. இவைகள் ஆய்வாளர்களின் கண்டு பிடிப்புகள்.

ஒரு ஆணின் மூளை ஒரு பெண்ணின்; மூளையை விட 130 கிராம் நிறை அதிகமானது. ஆனால் இரு மூளைகளினதும் செயற்பாடுகள் - ஆதிகாலத்திலிருந்து இன்றைக்கு வரைக்குமான சூழ்நிலைகளுக்கும் வாழ்க்கை முறைகளுக்குமேற்ப இசைவாக்கம் பெற்று வெவ்வேறு வழிகளில் செயற் படுகின்றன. இங்கு ஆண் உசத்தி என்றோ பெண் உசத்தி என்றோ எதுவும் இல்லை.

அன்றைய காலத்தில் தேவை கருதி வீட்டுக்குள் இருந்த பெண்களிடமிருந்து மெதுமெதுவாக சுகங்களை அனுபவிக்கத் தொடங்கிய ஆண்கள் ஒரு காலகட்டத்தில் பெண்களை வெறும் சுகபோகப் பொருட்களாகவே பாவிக்கத் தொடங்கி விட்டார்கள். சுயநலம் கருதி உளவியல் ரீதியான தாக்கத்தைக் கொடுத்து பெண்களை அடிமைப் படுத்தியும் விட்டார்கள். இதனால் வீட்டுக்குள்ளேயே இருந்து இருந்து இசைவாக்கம் பெற்ற மூளையிடமிருந்து விடுதலை பெற முடியாத பெண்கள் - தாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியவர்கள்தான் என்று நினைத்து விட்டார்கள். அடங்கி அடங்கியே வாழ்ந்ததால் தாம் அடங்க வேண்டியவர்கள்தான் என நினைத்து தமக்குத் தாமே விலங்கிட்டு அடங்கியும் விட்டார்கள்.

இதே நேரம் இவையெல்லாம் பிழை. முன்னர் நாம் வீட்டுக்குள் முடங்க வேண்டியதற்கு காரணங்கள் இருந்தன. இன்று வெளியே சென்றாலும் எம்மால் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். என்று சில பெண்கள் சிந்திக்கவும் தவறவில்லை. சிந்திக்கத் தொடங்கிய இப் பெண்களின் விழிப்பு நிலையே இன்று சில ஆண்களுக்குப் பிரச்சனையாக இருக்கிறது. பெண்களிடம் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஆண்களின் மூளை ஏற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகிறது.

இந்த உண்மைக் காரணங்களை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து செயற்படும் பட்சத்தில் இந்தப் பெண்ணடிமை, பெண்அடக்குமுறை, பெண்ணை இரண்டாந்தரப் பிரஜையாக எண்ணும் தன்மை எல்லாமே அர்த்தமற்ற செயல்கள் என்பது நன்கு புலப்படும்

இப்போது கூட உங்கள் மனதில் எங்கே பெண்கள் அடிமையாக இருக்கிறார்கள் என்ற கேள்வி எழலாம். அவர்கள் சுதந்திரமாகத்தானே திரிகிறார்கள் என்ற சிந்தனை ஓடலாம். ஆயுதந் தூக்கிப் போரிடுகிறார்கள் என்ற பிரமிப்பு ஏற்படலாம். இத்தனை சலுகைகள் கொடுத்து விட்டோமே..! இன்னுமா திருப்தியில்லை என்ற எரிச்சல் எழலாம்.

உண்மையில் பெண்ணுக்கு இன்னும் முழுமையான விடுதலை கிடைக்கவில்லை. வெறும் சலுகை மட்டும் வாழ்க்கையில்லை. அவள் சுயம் பேணப்பட வேண்டும். அவள் சுயமாக இயங்கச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். பெண் இப்படித்தான் வாழ வேண்டு மென்று சமூகத்தின் அடி மனதில் எழுதி வைக்கப் பட்ட சில எழுதாத சட்டங்கள் அழித்தொழிக்கப் படவேண்டும். அவள் அவளாக வாழ அவள் மனதில் தைரியம் வரவேண்டும். இது பற்றியதான சிந்தனை சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தவரிடமும் எழ வேண்டும்.

கருப்பையில் மூன்று மாதக் கருவாக இருக்கும் போதே ஒரு குழந்தை தாயின் உணர்வுகள், தாயைச் சுற்றி ஒலிக்கும் குரல்கள்.. என்று எல்லாவற்றையும் கிரகிக்கத் தொடங்கி விடும். வெளியில் கேட்கும் சினிமாப் பாடலைக் கூட மனப்பாடம் செய்யத் தொடங்கிவிடும். இது இன்றைய ஆய்வாளர்களின் கண்டு பிடிப்பு.

இதன் விளைவுகளை பெற்றோர்கள் சரியான முறையில் சிந்தித்து ஒரு பெண் தாயாகத் தொடங்கியதிலிருந்தே ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் இதை கருவுக்குள் உருவெடுத்திருக்கும் எமது பிள்ளையும் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது என்ற எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். பிறந்த பின்னும் குழந்தைகள் வளர்ந்து கொண்டிருக்கும் போதே ஒவ்வொரு விடயத்திலும் ஆண் குழந்தை பெண் குழுந்தை என்ற பேதமின்றி பாரபட்சமின்றி அவர்களை வளர்க்க வேண்டும். அவர்கள் முன் பேசுவது கூட நான் ஆண் என்றோ, அல்லது நான் பெண் என்றோ எந்த விதமான தாழ்வு மனப் பான்மையையும் அவர்கள் மனதில் விதைக்கப் படாத விதமாக இருக்க வேண்டும்.

இப்படியான அவதானம் மிகுந்த செயற்பாடுகள் மனித மூளையில் ஆழப் பதிந்திருக்கும் பெண் அடங்க வேண்டியவள்தான் என்ற உள்ளுணர்வை அழித்தொழிக்க ஏதுவாக அமையும்.

காலப்போக்கில் ஆண்களின் மூளையும் இந்த நடைமுறையுடன் இசைவாக்கம் பெறும். அப்போதெல்லாம் விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளில் ஆண் பெண் மூளை பற்றியதான முடிவுகள் வேறு விதமாக அமைந்திருக்கும்.

chandra1200@yahoo.de பதிவுகள், மார்ச் 2004 இதழ் 51 -

14. கே.டானியலின் 'பஞ்சமர்' பற்றியதொரு பார்வை. - கே.எஸ்.சிவகுமாரன் -

நமது நாட்டுச் சிரேஷ்ட எழுத்தாளர்களில் ஒருவர் கே.டானியல். நாவல்களையும் சிறுகதைகளையும் எழுதியிருப்பவர். நாவலாசிரியராகவே இவர் தனிச் சிறப்படைகிறார். இரு பாகங்களைக் கொண்ட இவருடைய பஞ்சமர் என்ற நாவல் குறிப்பிடத் தக்கதொன்று. எழுபது அதிகாரங்களைக் கொண்ட இந்த நீண்ட நாவலைப் படிக்கும் பொழுது பிரதாப முதலியார் சரித்திரம், வடுவூர் துரைசாமி ஐயங்கார் எழுதிய நாவல்கள் ஆகிவற்றைத் தனித்தனியாகப் படிக்கும்பொழுது ஏற்படக்கூடிய அனுபவமே எனக்கு ஏற்படுகிறது. அதாவது 'டொக்குமெண்டரி' (மெய்நிகழ்வு மட்டும் காட்டுகின்ற பாணியும்) சஸ்பென்ஸ் (அடுத்து என்ன நடக்கப் போகிறதோ என்ற ஐயப்பாட்டை உருவாக்கும் பண்டு) அம்சமும் பஞ்சமர் நாவலில் விரவியிருக்கக் கண்டேன். இந்த நாவல் என்ற எழுத்துக் கொத்தை வெளியிட்டிருப்பவர் ஜி.எல்.எம்.ப்ரகாஷ். பாலம் என்ற சிற்றேட்டை வெளியிட்டவர். ஈழத்து இலக்கியத் துறையில் ஏற்பட்டு வரும் அபிவிருத்திகளைக் கவனித்தி வருபவர்களுள் ஒருவர்.

நமது நாட்டிலே அறுபதுகளின் கடைக்கூறிலே இடம் பெற்றிருக்கக் கூடிய சில சம்பவங்களை அடியொற்றி எழுதப்பட்டுள்ளது இந்த நாவல். யாழ்ப்பாணத்துக் குடாநாட்டிலே நிகழக்கூடிய சாதிப்பிரச்சினை சம்பந்தமான துர்ப்பாக்கிய சம்பவங்கள் இந்த நாவலில் இடம் பெறும் சமபவங்கள் எனலாம்.

சாதித்துவேஷம் தலைவிரித்தாடும் ஒரு சமூகத்திலே வர்க்க நலன் பேணும் பண்பு மேலோங்குவது அப்படியொன்றும் விசித்திரமானதல்ல. நாவலாசிரியர் டானியல் இந்தச் சாதிவேறுபாட்டையும், வர்க்க வேறுபாட்டையும் தொடர்பு படுத்தி இரண்டுமே ஒழிக்கப் பட வேண்டியவை என்ற கருத்தைக் கொண்டவர் என்பது நாவலைப் படிக்கும் எவருக்கும் தெரியவவரும்.

அந்தவிதத்தில் பஞ்சமர் ஒரு வரவேற்கத்தக்க நாவல் என்றாகிறது. இருபதாம் நூற்றாண்டின் கடைக்கூறில் வாழும் ஓர் உலக மனிதன் நிச்சய்மாக அழிந்தொழியும் நிலவுடமை அமைப்பியோ தாழ்த்தப்பட்ட சாதி என்பதற்காக ஒரு மனிதன் இன்னொரு மனிதனால் மனிதாபமற்ற முறையில் நடத்தப்படுவதையோ வரவேற்கான். மாறாக இந்த அநீதிகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பான்.

எனவே பஞ்சமர் மனித இனத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லத் தூண்டக்கூடிய ஒரு முற்போக்கு நாவல் என்ற முறையில் இந்த நாவலின் தொனிப்பொருளை நான் கொள்கை அளவில் வரவேற்கிறேன். அதே சமயம் நாவலாசிரியர் தமது கருத்தை வலியுறுத்த வேண்டிக் கையாளும் பிரச்சினை தீர்வுக்கான மார்க்கத்தை நான் ஆதரிக்கவில்லை. அதாவது வதைகளும் , வன்செயல்களும் அவை எந்தப்

பக்கத்திலிருந்து வந்தாலும் கண்டிக்கப் படத்தக்கவை, வெறுக்கப்படத் தக்கவை என்பது என் அபிப்பிராயம்.

'எல்லோருக்கும் எல்லாச் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுத்தல்' என்பதைக் கொள்கையளவில் நாம் ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் இது சாத்தியமாகின்றதா என்றும் பார்க்க வேண்டும். அதே சமயம் தனிமனித சுதந்திரம் பேணப்படவேண்டும் என்பது எனது நிலைப்பாடு. குறிப்பாகச் சிந்தனைச் சுதந்திரம் தனிமனித அடிப்படையில் செயற்பட அனுமதித்தல் வேண்டும். 'எல்லாச் சுதந்திரம்' என்று நாவலாசிரியர் கூறும் பொழுது தனிமனித சுதந்திரத்தையும் அவற்றில் அடக்குகின்றார் என்றே கொள்ளவேண்டியிருந்தாலும், அவர் எழுதிய முன்னுரையிலிருந்து இதனைத் தெளிவாக அறிய முடியவில்லை.

இன்னொன்று: இலக்கியத்துக்கு இலக்கிய அளவு கோல் என்ற வரம்புக்குள் நிற்க வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில் இலக்கியமோ , கலையோ அதன் கலாச்சார, சமூக, அரசியல், பொருளாதாரப் பின்னணியில் வைத்தே மதிப்பிடப்படுகிறது. எனவே இந்தப் பின்னணியை மறைத்து விட்டு வெறுமனே இலக்கியத்துக்கு இலக்கிய அளவு கோல் என்ற அடிப்படையில் எந்தவொரு நவீன விமர்சகனுமே ஒரு படைப்பை அணுக மாட்டான்.

அதே சமயம் ஒரு படைப்பாளி தனது கருத்தை அல்லது உணர்வை அல்லது அனுபவத்தை வெளிப்படுத்த அடுத்துக் கொள்ளும் ஓர் இலக்கிய ஊடகம் குறைந்த பட்சமாகுதல் குறிப்பிட்ட அந்த ஊடகத்தின் பொதுவாக அங்கீகரிக்கப் பட்ட அம்சங்களைத் தழுவியிருக்க வேண்டும். இந்த இடத்திலிருந்து தான் உள்ளடக்கம் உருவத்தைத் தீர்மானிக்கிறது என்ற கூற்று பொருத்தமாக அமைகிறது. ஒரு படைப்பாளி தனது உள்ளடக்கத்துக்குச் சிறந்த முறையி; வடிவங் கொடுக்கத் தக்க வாகனம் நாவல்தான் என்று கருதினால் அவன் அந்த நாவல் என்ற இலக்கிய வகையின் ஏற்றுக் கொள்ளப்பட்ட உறுதிப் பொருள்களை அனுசரித்தே பெரும்பாலும் எழுதுதல் வேண்டும். இதனால் அவன் பரிசோதனையாக மீற வேண்டிய இடங்களில் மீறக்கூடாது என்றாகாது.

இறுதி ஆய்வில் எழுத்தாளன் எந்த விதமான இலக்கிய வகையைப் பயன்படுத்தினாலும் அது வாசகனுக்கு ஒரு பயன்பாடும் நிறைவும் ஏற்பட உதவ வேண்டும். அவ்வாறில்லா விட்டால் எழுத்தாளனின் நோக்கம் நிறைவேறவில்லை என்றே பெறப்படும்.
இந்தப் பின்னணியில் பார்க்கும் பொழுது டானியலின் பஞ்சமர் சமீப கால தமிழ் நாவல் வகையில் சேர்க்கப்படக்கூடிய ஒரு நாவல் எனலாம்.

இந்த விதமான அரசியல் சார்ந்த உடனிழ்கால நாவல்களுக்கு முன்னோடியாக நமது நாட்டு எழுத்தாளர் செ.கணேசலிங்கனே இருக்கிறார். இவருடைய முதல் ஐந்து நாவல்களும் தமிழ் நாட்டிலேயும், ஈழத்திலும் அவை போன்ற 'கொமிட்டட்'

(கட்டுப்பாடுடைய) அரசியல் நாவல்கள் எழுதப்படத் தூண்டுகோலாய் அமைந்தன என்பதைக் குறிப்பிட வேண்டும்.

செ.கணேசலிங்கன், கே.டானியல், யோ.பெனடிக்ட்பாலன், சி.சுதந்திரராஜா, எஸ்.அகஸ்தியர், வை.அஹமட் போன்றோரின் முயற்சிகள் ஏதோவொருவிதத்தில் இந்தப் புதுமாதிரியான நாவல் எனலாம். இத்தகைய நாவல்களை அளவிடுவதற்காக, திறனாய்வுக் கருவிகளும் சம்பிரதாயமானவையாக இருக்க மாட்டா. இத்தகைய நாவல்களை 'டொகு-நாவல்கள்' என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். உதாரணமாக றூமன் கப்டோ, நோர்மன் மெய்லர் போன்ற அமெரிக்க நாவலாசிரியர்கள் மெய்நிகழ்வுகமட்டும் காட்டுகின்ற வகையில் நாவல்களை எழுதியுள்ளனர். உண்மை சம்பவங்களை இருவர் வாக்கில் குறித்துச் செல்லும் ஒருவித எழுத்து முயற்சியிது. றூமன் கப்டோ எழுதிய 'இன் கோல்ட் பிளட்' என்ற நாவல் திரைப்படமாகவும் வெளிவந்ததை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனவே பஞ்சமர் போன்ற நாவல்கள், நாவல் இலக்கிய வகைகளுக்குள் அடங்கக்கூடிய ஓர் இலக்கிய வகைதான் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், கேள்வி என்னவென்றால்..அது எவ்வளவுதூரம் நம்பும் தன்மை உடையது? வாசகன் முழு ஈடுபாட்டுடன் நாவலைப் படிக்கக் கூடியதாக இருக்கிறதா? நாவலைப் படித்து முடித்த பின் வாசகன் பெறும் புதிய அனுபவம் என்ன? அவன் சீறி எழுகின்றானா? நாவலில் விபரிக்கப்படும் கொலைபாதகச் சம்பவங்களைப் படித்து அநீதிக்கெதிராகத் தனது குரலையும் பதிவு செய்ய முற்படுகின்றானா?

இந்தமாதிரியான கேள்வி அல்லது கேள்விகளே நாவலின் பயன்பாட்டைக் கணிக்க உதவும். இக்கேள்விகளுக்குப் பதில் தரும் விதமாக இந்த நாவலைப் படித்தபின் என்னில் எழுந்த உணர்வுகளைத் தருகிறேன்.

பஞ்சமர் என்ற இந்த நாவலை ஆரம்பம் முதல் இறுதிவரை ஆர்வம் கெடாது வாசித்தேன். சுவாரஸ்யமாக இருந்தது. இதற்குக் காரணம் விறுவிறுப்பாக அடுத்து என்ன நடக்கப் போகின்றதோ என்ற ஐயப்பாட்டைப் புகுத்தியும் நாவல் எழுதப்பட்டிருப்பதுதான். அதாவது ஒரு துப்பறியும் நாவலுக்கு இருக்க வேண்டிய சஸ்பென்ஸ்சும் விருப்பை வெளிப்படுத்தும் மனோபாவமும் நாவலாசிரியர் டானியலின் எழுத்தில் காணப்படும் அம்சங்கள்.

கணேசலிங்கனின் வார்த்தைகளில் சொல்வதாயிருந்தால், 'சென்ஸேஷன்ல்' தன்மை பஞ்சமரில் நிறைய உண்டு. இன்னுமொரு படி சென்று கூறுவதானால் 'செக்ஸேஷனல்' என்றும் அடையிடலாம்.

மேட்டுகுடியினரின் கள்ளக் காம உறவுகளைப் படிக்கும் போது மத்தியதரத்தைச் சேர்ந்த வாசகன் 'த்றில்' அடைவதில் வியப்பேதுமில்லை. அதேசமயம் ஆகக் கீழ்மட்டத்தவருக்கும் ஆக மேல்மட்டத்தினருக்கும் இந்தசெக்ஸ் என்பது ஓர் உணர்வார்வ (த்ரில்) அல்லது பரபரப்பானதொன்றல்ல. அது ஒரு முறைமை படாத விவகாரம். நடுத்தரவர்க்கத்தினருக்குத்தான் இந்த இணைவிழைச்சு எழுச்சி நவநாகரிகப்பண்புக்கு மாறானதாகப் படுகின்றது. அது போகட்டும்.

டானியல் இந்த நாவலில் மேட்டுக் குடியைச் சேர்ந்த மணமான பெண்களும், கன்னியரும் தமது செக்ஸ் தேவைகளுக்காகத் தாழ்த்தப்பட்டவர்கள் எனக் கருதப்படுபவர்களின் சேவையினை நாடுவதாகக் குறிப்பிடுகின்றார். சாதிமான் என்று கூறிக்கொண்டே வர்க்க நலன் பேணும் இந்த மேட்டுக்குடியினர் வெளிப்படையாகச் சாதி முறைமை பேணுகின்றனர். அதே சமயம், இரகசியமாகப் பள்ளத்திலிருப்பவர்களுடன் உடலுறவை வைத்துக் கொள்கின்றனர். இந்த இருமைப் போக்கை இரட்டுற வாழ்வைக் காட்ட டானியல் எவ்வாறு எழுதுகிறார் என்று வைத்துக் கொண்டாலும், சேரி வாழ்பவர்களிடையே தகாத காம உறவுகள் இருக்கவே மாட்டாவெனவும் கூற முடியாது. தகாத உறவு என்பதைச் சித்திரிக்க வேண்டுமாயின் அது எந்த வர்க்கத்தில் காணப்பட்டாலும் உள்ளது உள்ளபடி காட்டப் படவேண்டும். மேட்டுக் குடியினர் மாத்திரமே காமக் கிழத்திகளாக இருக்கிறார்கள் என்ற பொருள்படவோ, குடிசை வாழ் மாந்தரே அசுத்தமானவர்கள் என்று என்று பொருள்படவோ எழுதுவது வாழ்க்கையைப் புறநிலையில் நின்று அவதானித்ததாக அமையாது.

நிலவுடைமையாளரின் அட்டுழியங்களை அப்படியே சித்திரிக்கும் வேளையில் அவர்களிடையே நல்ல வரவேற்கத்தக்க நவீன சிந்தனைப் போக்குடைய எவருமே இரார் என்ரதொனியில் ஆசிரியர் எழுதுவது நாவலில் ஒரு சமநிலையைக் கொண்டுவரத் தவறி விடுகிறது.

லண்டன் பாரிஸ்ட்டர் ஒருவர் முற்போக்கானவர் என்று காட்டிப் பின் அவரும் வர்க்க நலன் பேணுபவர்தான் என முடிவு காட்டுவது இயல்பானதாக எனக்குப் படவில்லை. பஞ்சமர்களில் ஒருவராக இல்லாத ஐயண்ணனாரும், குமாரவேலுவும் கமக்காரச் சாதியினருடன் தொடர்பு கொண்டவர்கள்தானே? உண்மையில் பஞ்சமரின் எழுச்சிக்கு அவர்கள் தானே மூலகாரணமாக இருக்கிறார்கள். எனவே உயர்ந்த சாதி எனக் கூறப்படும் சாதியில் பிரந்தவர்கள் எல்லோருமே வர்க்கத்தைத்தான் தூக்கிப் பிடிப்பார்கள் என்றோ தாழ்ந்த சாதி எனக் கூறப்படும் சாதியில் பிறந்தவர்கள் எல்லோருமே தாழ்வுச் சிக்கல் உடையவர்கள் என்றோ கருதப் படும் விதத்தில் பாத்திரங்கள் படைக்கப் படுவது இந்த 'பலன்ஸ்' நெறியில் நின்று விலகக் காரணமாகிறது. பஞ்சமரிடையே காணப்படும் நல்ல / தீய பண்புகள் ஆகியவற்றை எதார்த்தமாகச் சித்திரிக்க ஆசிரியர் முற்பட்டிருப்பாராயின் சமநிலை நாவலில் ஏற்பட்டிருக்கும்.

இந்த நாவல் கூறவருவது என்னவென்றால், முதல் தடவையாக பஞ்சமர் எனப்படுபவரே தமக்கிடையேயுள்ள வேறுபாடுகளைக் களைந்து முதலில் ஒன்றுபட்டு, அணி சேர்ந்து தமது எதிரிகளுடன் போராட முனைகிறார்கள் என்பதுதான். அவர்களுடைய இந்த முயற்சி பாராட்டப்படும் அதேவேளையில் நிறைவேற்றப்படும் அதேவேளையில் அவை நாவலில் விவரிக்கப்படும் பாங்கு ஒரு வீரகதைக்குரியதாக(ரொமாண்டிக்) அமைகிறதை அவதானிக்கலாம்.

செ.கணேசலிங்கனின் நீண்ட பயணம் முதல் காவலூர் ஜெகநாதனின் நாளை வரை இத்தகைய புதியவகை நாவல்கள் எல்லாம் இந்த 'நியோ ரொமாண்டிக்' (நவ வீரகாதைப் பண்புடைய) வகையைச் சேர்ந்தவை எனலாம்.

பஞ்சமர் நாவலைப் படித்ததும் எனக்கு இந்த நிலவுடமையாளர் மீதும், மனிதாபிமானமற்ற முறையில் உடன் மனிதப் பிறவிகளை வதைப்பவர்கள் மீதும், புத்தறிவு பெற்றிருந்தும் போலிச் சம்பிரதாயங்களைத் தமது அனுகூலத்திற்காகப் பயன்படுத்துபவர்கள் மீதும் ஆத்திரம் எழுந்தது. அந்த விதத்தில் பஞ்சமர் தூண்டி இயக்கக் கூடிய (பேர்ஸ¤வேஸிவ்) ஒரு நாவல் எனலாம்.

பதிவுகள், மே 2003 இதழ் 41

15. தமிழ் இலக்கியப் புனைவுகளும் வர்க்கக்கோடுகளும் - க. சண்முகம் -

இன்றைய தமிழ்ப்புனைவு இலக்கிய உலகில் புலம் பெயர்ந்தோரின் எழுத்துகள் முக்கிய இடம் வகிக்கின்றன என்று சொல்வதை விட அவை வசதி படைத்த தமிழ் உலகினரின் வாசிப்பை ஆக்கிரமிக்கின்றன என்று சொல்வது மிகையாகாது. இந்தப் புலம் பெயர்ந்தோர் கூட்டத்தில் ஈழத்து , இந்திய தமிழ் எழுத்தாளர்கள் உள்ளனர். இவர்களில் இந்திய எழுத்தாளர்கள் பொருள் விருத்திக்காகப் போய்ச்சேர்ந்தோர் என்பதும் ஈழத்து எழுத்தாளர்களில் அனேகமானோர் அகதிகளாகப் போய்ச்சேர்ந்தவர்கள் என்பதும் முக்கியமான வித்தியாசம். சில கிழவயது எழுத்தாளர்கள் வேடந்தாங்கல் பறவைகள் போல் வடக்கும் தெற்குமாய்ப் போய் வருகிறார்கள். இவர்கள் கதை எழுதுவதை நிறுத்தி மின்னூடகத்தில் கதையளக்க ஆரம்பித்துவிட்டார்கள். தங்கள் ஊர்களிலேயே இருந்து எழுதிக்கொண்டிருப்பவர்கள், இன்னும் எதிர் நீச்சல் சக மானுடருடன் தாங்களும் அடித்தபடி, உயர் இலக்கியப் பணி செய்தபடி இருக்கிறார்கள். இந்தப்புலம் பெயர்ந்தவர் எழுத்தின் அகங்காரமும், ஆக்கிரமிப்பும், உதாசீனமும், தற்பெருமையும் தங்கள் ஊர்களிலேயே இருந்து வாழ்வையும் எழுத்தையும் இணைக்க முயலும் மூன்றாம் உலக வறிய எழுத்தாளர்களை வருத்துகின்றன. உலக நியதியில் பொருள்வள நாடுகளில் எல்லாமே வலிவுடன் இருக்கின்றன. பொருளாதாரமோ, ராணுவமோ, கல்வியோ, தகவல்துறையோ யாவுமே இந்நாடுகளில் வலிவுடன் அமைந்து இருப்பது புலம் பெயர்ந்தோருக்கு மிக வசதியாக அமைந்து போய் இருக்கின்றது. ஊடகங்கள் வலிவினால் பலர் குரல்கள் கேட்கின்றன.

ஈழத்து எழுத்தாளர்களின் விவாதங்கள் முற்றி மின் ஊடகங்கள் நாறுவதும் வருத்தத்திற்குரியதே. அவர்களின் முரண்பாடுகள் வர்க்க பேதங்களின் அடிப்படையில் அமைந்தவை. இந்திய எழுத்தில் வருக்க பேதக்குறிகள் தேய்ந்து பல வருடங்களாகி விட்டன. வலிந்தவனை வைத்துக்கதை பண்ணிய இந்திய எழுத்தாளர்கள் வசதி வந்தவுடன் சைக்கோவ்ஸ்கி கேட்கப் போய்விட்டார்கள். பின் நவீனத்துவம் என்கிறார்கள் மஜிக் யதார்த்தம் என்கிறார்கள் மற்றும் பல இசங்களைச் சொல்லிக் குழப்பிக்கொள்கிறார்கள். வர்க்கக்கோடுகள் தெற்கே வந்தடைந்துவிட்டன.

ஈழமோ, இந்தியாவோ, (ஈழத்து) டொமினிக் ஜீவா இன்றுவரை வலிந்தவர் பக்கம் நின்றபடியிருக்கிறார். யாழ் பல்கலைக் கழகம் அவருக்குக் கவுரவ கலாநிதிப்பட்டம் தர மறுத்தது இந்த வருக்க சாதீயப் பார்வைகளின் இன்றைய நிலையை எடுத்துக்காட்டும் உதாரணம். உலகில் பல சமுதாயங்களில் தமிழரிக்கிடையேயான சாதி உணர்ச்சிகள் மாதிரியான வியாதி கிடையாது. சாதி வித்தியாசம் பாராட்டா சமய சமூகங்களைக்கூடக் கெடுத்து வைத்திருக்கிற வியாதி இது. யாழ்ப்பாண வெள்ளாளத்துவமும் இந்திய பிராமணீயமும் தங்கள் தங்கள் ஆளுமைக்காக இன்னும் போட்டி போட்டபடியிருக்கின்றன. தென் இந்தியப் பிராமணியம் ஈழத்து விவகாரங்களிலும் புகுந்து விளையாடுகிறது.

சென்னையில் இருக்கும் பிராமணியப் பத்திரிகையாளர் மேல் ஈழத்து வெள்ளாளர் குறைப்படுவது சமூக அமைப்பில் பிராமணர்களின் மேல்மட்ட நிலையைப் பொறுக்க முடியாமல் எழும் அங்கலாய்ப்பே தவிர சாதியமைப்பை எதிர்ப்பதற்காக இல்லை. ஈழத்து வெள்ளாளர் தங்கள் வழக்கமான குட்டலுக்கு எட்டாமல் இந்தியப்பிராமணர்கள் இருப்பதில் மிகவும் காழ்ப்படைந்து கத்துகிறார்களே தவிர சாதியத்தையும் வருக்கக்கோடுகளையும் அழிக்கும் யோசனை அவர்களுக்கில்லை. இந்தியப் பிராமணீயமோ ஈழப்போராட்டத்தை சிறுமைப்படுத்தி, ஒடுக்கி, பயங்கரவாதம் என்ற அடையாளம் குத்தி மற்ற தமிழ் சாதி மக்களை ஒடுக்குவதில் மும்முரமாக இருக்கிறது. தமிழ் நாட்டில் ஈழப்போராட்டத்தை எதிர்க்கும் கூட்டத்தில் பிராமண எழுத்தாளர்களும் அரசியல் வாதிகள் மட்டுமே இருப்பது ஏன்? சனாதன தருமத்தைத் திரும்பவும் நிறுத்தி மக்களை ஒடுக்கும் ஏற்பாட்டைக் கொண்டு வருவதில் முதல் படி இது. மேல் மட்ட வெள்ளாளத்துவத்தையும் பிராமணீயத்தையும் பொறுத்தவரையில் சாதீயம் வர்க்கமுரணை உள்ளடக்கிய வக்கிரம். ஒடுக்கப்பட்ட மக்களில் அமைந்திருக்கும் சாதி பேதம் இயற்கையாய் எழாது மேல் மட்ட மக்களின் ஆட்டுதலில் நடைபெறும் வக்கிரம். எனவே எழுத்தாளர்களின் சாதி மற்றும் வர்க்கப் பின்னணிகள் பற்றிய வித்தியாசங்கள் முக்கியமானவை.

இந்தக் குழப்பத்தில் மின்னூடகங்கள் இன்னோரடுக்கைக் கொண்டு வந்து விட்டன. மேல் வர்க்க மேல் சாதியினருக்கு தங்கள் பொய்களை உண்மையாக்கவும் வியாபாரம் நடத்தவும் இந்த மின்னூடகங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. பொய்களின் உலகமயமாக்கல் இலகுவாகிவிட்டது. புலம்பெயர்ந்தோரினால் தமிழ் சினிமா, தொலைக்காட்சி, பத்திரிகைகள் வியாபாரம் பெரும் வியாபாரமாகி விட்டது. இது போதாது என்று மின் ஊடகத்திலும் தமிழ்ப்பத்திரிகை வியாபாரம் நடக்கிறது. ஈழத்து எழுத்தும் வியாபாரத்துக்கு உதவுவதாகப் போய் விட்டது. இந்தியப் பத்திரிகை முன்னோடிகள், பிரபல எழுத்தாளர்கள் ஒரு சில ஈழத்து எழுத்தாளரையும் கவிஞர்களையும் தூக்கிப்பிடித்து முக்கியம் கொடுப்பதில் இன்பமும் சுய முக்கியத்துவத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். தளையசிங்கத்தைத் தூசி தட்டி எழுப்பிய பிரபலம் உனக்கா எனக்கா என்று சுந்தர ராமசாமி, ஜெயமோஹன் போன்றோர் போட்டி போட்டபடி இருக்கிறார்கள். இந்திய பிரபலங்கள் பொன்னுத்துரை, டானியல், முத்துலிங்கம், சேரன், சிவசேகரம் இவர்களெல்லாம் எழுத்துச்சிகரங்கள் என்று தலை மேல் வைத்து ஆடின பிறகு ஈழத்து எழுத்து மட்டமானதுதான் என்றும் சொல்லிப் போகிறார்கள். என்ன கூத்து இது? ஈழத்தில் உள்ள தரமான எழுத்தாளர்கள் எல்லாரையும் விட்டுவிட்டுச் சிலரை மட்டுமே தூக்கிப்பிடிப்பது இந்திய பிரபலங்களின் கிலிசகேடு.

மின் ஊடகத் தமிழ் சஞ்சிகைகளில் பிரபலமாக எழுதுபவர்களின் சாதீய வருக்கப் பின்னணிகள் கவனிக்கப்பட வேண்டியவை. அதுவும் புலம் பெயர்ந்தோரின் வருக்கப் பின்னணிகள் அவர்களின் எழுத்தின் நோக்குகளை இலகுவில் காட்டும். புலம் பெயர்ந்தபின் அவர்கள் தங்கள் வர்க்கக்கோடுகளின்படி புது இடத்து மனிதர்களை விபரிக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

சின்ன உதாரணம். காஞ்சனா தாமோதரன் என்கிற பெண் தமிழ் எழுத்தாளர் - ஒரு அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களில் நிருவாகியாய் இருந்தவர்-இருப்பவராயும் இருக்கலாம். அவர் சமீபத்தில் இந்தியாவிற்குப் போய் வந்ததைப்பற்றி விபரித்துத் "திண்ணை" மின் பத்திரிகையில் எழுதியதை வாசித்தால்தான் தெரியும் இந்திய வறுமையைப் பார்த்து வருந்தக்கூடிய ஒரு சமூகத்தில் அவர் இல்லையென்று. கைத்தறி நெசவாளரின் நெருக்கடியை பற்றிய ஒரு சிறு குறிப்பைத்தவிர வேறோர் உணர்வும் அவர் இந்தியாவுக்கு மேல் கொண்ட பயணத்தில் அவருக்கு எழுந்ததாகத்தெரியவில்லை. பலராலும் போற்றப்பட்டு வரும் முத்துலிங்கம் சாதிப்பிரச்சனை பற்றி என்ன எழுதியிருக்கிறார்? கனடாவில் சென்றடைந்த ஈழத்தமிழரில் சாதிப்பிரச்சனையில்லையா? "ஊரில் எவ்விடம்? " என்று சாதியைப்பற்றி யார் கதை எழுதுகிறார்கள்? சுந்தர ராமசாமியின் புலம்பல்களில் இந்தியாவில் வறுமைப்பட்டோரின் துன்பம் எதுவாவது தெரிகிறதா? தளையசிங்கத்துடனும் பொன்னுத்துரையுடனும் ஈழத்து எழுத்து நின்றுவிடவில்லை. காலம் செல்வம், மஹாலிங்கம் இவர்களெல்லாம் சுந்தர ராமசாமிக்கு ஆலவட்டம் பிடிப்பது உலகமறிந்தது. இவர்களைத் தொடர்ந்து சிறிதரன் சமீபத்தில் எழுதிய ஒரு புளியமரத்தின் கதைக்கு விமரிசனமும் எழுதிப் போட்டிருக்கிறார். அதில் சிறிதரன் சுந்தர ராமசாமியின் சாதிய வருக்கப்போர்வையை எடுத்தெறிந்து காட்டுகிறார். ஆனால் அக்கதையில் வரும் தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்ச்சிகளை அவர் விமரிசிக்காததில் "ஒரு நேர்மை அமைந்து போயிருக்கிறது" என்று சொல்லி மரியாதையாக அந்த இக்கட்டிலிருந்து கழன்று கொள்ள முயன்றது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். "உலகத்தமிழ்" பெரிய இந்திய நிறுவனங்களின் உதவியில் நடத்தப்படுகிறது. அதை நடத்தும் கண்ணன் சுந்தரராமசாமியின் மகன். இவர்கள் தூக்கிப்பிடிக்கும் ஈழத்து எழுத்தாளர்கள் இவர்களுக்கு ஆலம் கட்டுபவர்கள். எப்படி கண்ணன், ஜெயமோஹன் போன்றோரை விலைக்கு வாங்கலாம் என்று தெரிந்த ஈழத்து எழுத்தாளர்களுக்கு பிரபலம் கிடைக்கிறது. ஜெய மோஹனின் அகங்காரமும் தற்பெருமையும் வெளிப்படையானவை. சுந்தரராமசாமியின் சுயகவனமும் அலட்சியமும் உள்படையானவை. பாரிசில் இருக்கும் எக்சில் , உயிர் நிழல் பத்திரிகையாளர்கள் வருக்க சாதீய சாதீயப்பின்னணியை வைத்து அவர்கள் குரலை நசுக்கும் பணி தொடர்கிறது. வருக்கப்போராட்டம் இலக்கியத்துடன் எவ்வாறு பிணைகிறது என்பதற்குத் தற்காலத் தமிழ்ப்புனைவுகளும் எழுத்தாளர்களும் ஊடகங்களும் உதாரணமாக அமைந்து இருக்கின்றன.

kashanmugam@hotmail.com

பதிவுகள், ஜூலை 2003 இதழ் 43 -

எதிர்வினை: தமிழ்ப்புனைவுகளும் வர்க்கக் கோடுகளும் - ஸ்ரீதரன் -

திரு சண்முகம் அவர்கள் சில காலத்திற்கு முன், உலகத்தமிழ் இணையப்பத்திரிகையில் "ஒரு புளிய மரத்தின் கதை - காலங்கடந்த பார்வை" என்ற தலைப்பில் வெளியான எனது

விமரிசனத்தையும் அக்கதையையும், சுந்தர ராமசாமி (சுரா) வையும் கண்டனம் செய்து உலகத்தமிழ் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தைத் தொடர்ந்து பதிவுகளில் தனது நிலைகளைப் பொதுப்படுத்தித் தன் கருத்துகளை முன் வைத்திருக்கிறார். அவர் கருத்துகள் மிக ஆணித்தரமாக முன் வைக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக, அவர் கருத்துகளுக்கு எதிராகச் சொல்லப்படுபவையெல்லாம் வலிவில்லாதவை என்று படுகின்றன. சம கால எழுத்திலான உள்ளடக்கத்தைப் பார்க்கும் போது எழுத்தாளரின் வர்க்க சாதீயப் பின்னணிகள் அவர்கள் பார்வையையும் அவர்கள் எழுத்தையும் பாதிப்பதைப் பார்க்கலாம். டொமினிக் ஜீவாவின் விவகாரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நடந்து கொண்ட விதமும் சரியானதாகப் படவில்லை. சண்முகம் எடுத்துக்காட்டியதைப்போல் டொமினிக் ஜீவாவின் பாதையில் எழுப்பபட்டிருக்கக்கூடியதான சுவர்களைப் பற்றி முற்றாக அறிந்திருக்கக்கூடிய பின்னணி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் யாருக்கு இருந்திருக்கக் கூடும்?

ஆனாலும் அவர் என்னில் எழுப்பிய புகார்களுக்கு பதில் எழுத வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டிருக்கின்றேன். சுந்தர ராமசாமி (சுரா) அவரது "ஒரு புளிய மரத்தின் கதை" யில் வரும் தோட்டிகள் சமூகத்தினரின் பார்வையில் அக்கதையில் எதையும் எழுதாதில் "ஒரு நேர்மை அமைந்திருக்கிறது" என்று நான் "சப்பைக்கட்டு" கட்டுவதாக சண்முகம் அவர்கள் குறைப்பட்டிருக்கிறார். அந்த " நேர்மை" யைப் போற்றி நான் எழுதவில்லை. அமெரிக்க எழுத்தாளர் ஸ்டைன்பெக், கலிபோர்னியா ஸலினாஸ் பள்ளத்தாக்கில் பைஸானோ மக்களிடையே வாழ்ந்து பின்னர் தன்னிடத்திற்கு வந்து அவர்களைப் பற்றிப், பல கதைகள் (உதாரணமாக Cannery Row) எழுதியதைப்பற்றி விமர்சகர்கள் பலத்த கண்டனம் பின்னர் தெரிவித்தார்கள். பைஸானோ மக்களை, கதை எழுதும் வெறும் பொருளாக (objects) மாற்றிவிட்டார் என்றும் குறைப்பட்டார்கள். ஸ்டைன்பெக், என் மதிப்பில் அந்த மாதிரியான எழுத்தாளரில்லை. அமெரிக்க கலிபோர்னியா சமூகத்தில் அன்றாடம் காய்ச்சிகளாக வாழ்ந்த பைஸானோ மக்களிடையே வாழ்ந்தது மட்டுமல்லாது அவரே தொழிலாளியாய் இருந்திருக்கிறார். தி. ஜானகிராமன் "ஜெயகாந்தனின் குடை எப்போதும் ப்ளாட்பாரம் பக்கமே சாயும் " என்று சிலாகித்து எழுதிய மை காயும் முன்னரே ஜெயகாந்தன் பார்வை வேறெங்கெல்லாம் விழ ஆரம்பித்திருந்தது. சுரா தனக்கமைந்ததான பின்னணியில் இருந்து, அதிலிருந்து விலகாமல், தோட்டிகள் பற்றி எழுதியிருக்கிறார். அவர்கள் கஷ்டமோ, நோக்கோ அக்கதையில் அவற்றுள் இறங்கும் எண்ணம் சுராவிற்கு இருந்ததாகத் தெரியவில்லை. இந்த மாதிரியான அணுகல்களில் சுராவிடம் எந்த மாற்றமும் இல்லை. இந்த விஷயத்தில் சுராவிடம் எந்த நடிப்பும் இல்லை என்று தோன்றியதால் அது "ஒரு நேர்மை" என்று பட்டது. நிச்சயமாக அதைப் போற்றி நான் எழுதவில்லை.

பதிவுகள், ஜூலை 2003 இதழ் 43

எதிர்வினை: க.சண்முகதுக்கு ஓர் எதிர்வினை... - மாயவன் -

க.சண்முகம் தனது கட்டுரையில் படைப்பாளிகளின் சாதீய வர்க்கப் பின்னணிகளின் அடிப்படையில் படைப்புகளை ஆராய வேண்டுமென வலியுறுத்துவது ஏற்கக் கூடியதாகவில்லை. படைப்பாளிகளில் பல்வேறு பட்ட பிரிவினர் இருக்கிறார்கள். ஒரு சிலர் சமூக, அரசியல் பாதிப்புகளினால் அதிகமாகப் பாதிக்கப் பட்டவர்கள். அப்பாதிப்புகளால் ஏற்பட்ட தாக்கங்களை மீறிச் சிந்திக்க முடியாதவர்கள். தங்களது பாதிப்புகளை உரத்துச் சொல்ல முனைபவர்கள். இவர்களிலும் பல பிரிவினர். ஒரு சிலர் சம உரிமை வேண்டிக் குரல் கொடுப்பவர்கள். அதாவது அந்தஸ்து உயர வேண்டுமென நினைப்பவர்கள். இன்னும் சிலர் சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், பிரிவினைகள் இருக்கக் கூடாதென நினைப்பவர்கள். இதற்காக மானுட விடுதலைக்காகக் குரல் கொடுப்பவர்கள். முன்னவர்கள் படைப்புகளில் தீவிரமான பிரச்சாரமும் ஆத்திரமும் இருக்கும். பின்னவர்களின் படைப்புகளில் நிதானமான அணுகுமுறை தென்படும். வாழ்வினை விளங்கிய தெளிவு காணப்படும். இதன் அடிப்படையில் முழுமையான மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பன இவர்களது படைப்புகள். பிரச்சாரத்தையும் ஆத்திரத்தையும் மீறிய தெளிவுள்ளவை இவர்களது படைப்புகள். மேலும் ஒரு படைப்பாளியின் பின்னணியை வைத்து அவர் படைப்புகளை எடை போடுவதுதான் ஒரே வழியெனக் கொண்டு எடை போட முனைவதால் பல தவறுகள் ஏற்பட வாய்ப்புகளுள்ளன. உதாரணமாகப் பாட்டாளிகளுக்காகக் குரல் கொடுத்த முதலாளியான எங்கெல்ஸ்சை ஓரங்கட்ட வேண்டி வந்து விடும். வர்க்க விடுதலைக்காகக் குரல் கொடுத்த மார்க்ஸியத்தின் தந்தையான கார்ல்மார்க்சை நிராகரிக்க வேண்டி வந்து விடும். பாரதியின் பங்களிப்பைக் கொச்சைப்படுத்த வேண்டி வந்து விடும். மார்க்ஸ்,எங்கெல்ஸ், பாரதி போன்றவர்கள் சூழலை மீறிச் சிந்தித்தவ்ர்கள். அதே சமயம் அவர்களது சமூக, அரசியல் பின்னணிகளின் தாக்கங்கள் தமது நியாயமான கோட்பாடுகளைத் திசை திருப்பி விடாமலிருப்பதில் இவர்கள் கவனமாகவிருந்தார்கள். அதே சமயம் டொமினிக் ஜீவா, டானியல் போன்றவர்கள் பாதிப்புகளின் வடுக்களைப் பலமாகத் தாங்கியவர்கள் அதன் விளைவாகத் தமது பிரச்சினைகளை உரத்துச் சொல்வதைத் தமது கால கட்டப் பங்களிப்பாகக் கருதுபவர்கள். இதன் காரணமாக இவர்கள் எப்பொழுதுமே எல்லாவற்றையும் தாங்கள் அணிந்திருக்கும் கண்ணாடியினூடாக பார்க்கின்றார்கள். ஆனால் அது தவறென்றும் கூறுவதற்கில்லை. பாதிக்கப் பட்டவர்கள் உரத்துக் குரல் கொடுப்பது புரட்சிகரமானது. ஆனால் அதே சமயம் ஆத்திரத்தில் சில வேளைகளில் சரியானதை இனங்காண்பதில் தவறுகள் ஏற்பட்டு விடும் வாய்ப்புகள் ஏற்பட்டு விடுகின்றன. படைப்பாளிகளின் படைப்புகளின் சார்பினை வைத்துப் படைப்பாளிகளை இனங்காணப் பழகிக் கொள்ள வேண்டும். மலையக மக்களுக்காகக் குரல் கொடுப்பது யாழ்ப்பாணத்து அல்லது தமிழக அல்லது வன்னி அல்லது மட்டக்களப்புப் படைப்பாளியொருவரின் குரலாகவிருக்கலாம். அதற்காக இவர்கள் அனைவரினதும் படைப்புகளும் மலையக மக்களின் துயரங்களை எடுத்துக் கூறும் பட்சத்தில் அவை

அனைத்துமே மலையகச் சார்பானவையே என எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதே சமயம் சமூகத்தில் பலவேறு வர்க்கங்களின் மத்தியிலும் தம் வர்க்க , சாதீயக் கூறுகளை முன் வைத்துச் சிந்திக்கும் போக்கு அதிகமாகவிருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொருவரும் மற்றவரைப் பார்த்து ஆத்திரத்தில் சூடாகக் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்வதும், அதன் அடிப்படையில் பிழையான முடிவுகளுக்கு வருவதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவில்லை. படைப்புகள் கூறும் பொருளைக் கொண்டு, அவற்றில் நிலவும் உணர்வுகளின் போக்குகளின் தன்மையின் அடிப்படையில், படைப்பாளிகளை இனங்காணும் பக்குவத்தை விமர்சனம் செய்ய விளைபவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். டானியலின் படைப்புகளில் அல்லது டொமினிக் ஜீவாவின் படைப்புகளில் அல்லது சித்தலிங்கையாவின் படைப்புகளில் தென்படும் ஆவேசத்தின் அடிப்படையாக அவர்களது சமூகப் பின்னணி இருப்பதைப் புரிந்துணரும் அதே சமயம் மார்கஸ், தகழி, எங்கெல்ஸ், பாரதி போன்றவர்களின் படைப்புகளில் காணப்படும் தாம் வாழ்ந்த சூழலை மீறிய சிந்தனைகளையும் புரிந்து கொள்ள வேண்டும். மாறாக அவர்களது சமூகப் பின்னணியின் அடிப்படையில் அவர்களது கருத்துகளைக் கொச்சைப்படுத்தும் வகையில் பொதுவானதொரு அளவுகோலாக வர்க்கச் சாதியப் பின்னணியை வைத்து இனக்காண்பதைக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்தது..மின் இணைய இதழ்கள் பற்றியது. இவை நவீனத் தொழில் நுட்பத்தின் விளைவாக உருவான புதிய ஊடகங்கள். இவற்றை முதலில் பயன்படுத்தும் படி படைப்பாளிகளுட்பட அனைவரையும் தூண்ட வேண்டும். பதிவுகளின் ஆசிரியர் இதனையே பிரதானமான காரணங்களிலொன்றாக அடிக்கடி கூறுவதும் வழக்கம். எக்ஸில் போன்ற மின்னிதழ்களைக் குறைந்த பொருட் செலவில் (இணையத் தளங்களை உருவாக்குவதற்கான தொழில் நுட்பத்தினை அறிந்திருக்கும் பட்சத்தில்) வெளியிட்டுத் தமது நோக்குகளைத் தெரிவிக்க முடியும். இது இணையத்தின் முக்கியமான நன்மைகளிலொன்று. அதை விட்டு விட்டு ஒட்டு மொத்தமாகச் சமூகப் பின்னணியின் அடிப்படையில் புதிய காரணங்களைக் கண்டு பிடித்துக் கொச்சைப்படுத்துவது அவ்வளவு நல்லதாகவில்லை. அதே நேரத்தில் சமூகப் பின்னணியின் அடிப்படையில் அதன் பாதிப்பில் இணய இதழ்கள் சில வெளிவருகின்றன என்ற உண்மையினை நான் மறுக்கவில்லை. முன்னர் கூறியது போல் ஒரு பொதுவான குறுகிய கண்ணோட்ட அளவுகோலின் அடிப்படையில் இவற்றை , இந்த இணைய இதழ்களை, நோக்க முனையக் கூடாதென்பதே எனது வாதம். ஆத்திரப்படாமல், அவசரப் படாமல், நிதானமாக வாதங்களை முன் வைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். சண்டித்தனத்தில் இறங்கக் கூடாது. கூறுவதிலுள்ள நியாயத்தினை மழுங்கடிக்க இச்சண்டித்தனம் காரணமாகயிருந்து விடுவதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அடுத்தது டொமினிக் ஜீவாவிற்குக் கெளரவ கலாநிதிப் பட்டம் மறுக்கப் பட்டது பற்றியது......கெளரவக் கலாநிதிப்பட்டங்களுக்கே மதிப்பு அற்றதொரு நிலையில்

இத்தகையதொரு பட்டத்தை ஜீவா பெற்றிருந்தால் கூட அதனையும் அவர் மறுக்கத் தான் வேண்டும். எனவே அதற்காக அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் ஒரு கேள்வி... ஒரு மாத இதழினைப் பல ஆண்டுகளாகத் தனித்து நடத்தி வரும் டொமினிக் ஜீவாவின் பங்களிப்பு உண்மையிலேயே போற்றப் பட வேண்டும். ஆனால் இதுவரையில் அவர் எழுதி வெளிவந்த எந்தவொரு காத்திரமான ஆய்வுக் கட்டுரைகளையும் நான் படிக்கவில்லை. சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. கேள்வி-பதில்கள் வெளிவந்திருக்கின்றன. ஆனால் இலக்கியத்தின் அல்லது சமூக, அரசியலின் எந்தவொரு துறையினைப் பற்றியாவது டொமினிக் ஜீவா ஏதாவது ஆழமாக எழுதி வெளிவந்த விடயங்கள் என் கவனத்தில் படாமல் போயிருந்தால் அறியத் தாருங்கள். என்னைப் பொறுத்தவரையில் டானியலுக்கு நிச்சயமாகக் கௌரவ கலாநிதிப் பட்டம் கொடுக்கலாம். ஏனெனில் அவரது ஒவ்வொரு நாவலுமே வாழ்கையினை அவரது பார்வையில் வைத்து விரிவாக ஆய்வு செய்து வெளிவந்த படைப்பு என்பதே என் கருத்து. அவரது நாவல்கள் பற்றிய பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், எல்லா ஆய்வுகளுமே ஒரே மாதிரி அமைவதில்லை என்பதன் அடிப்படையில் அவரது படைப்புகளை ஏற்றுக் கொள்வதில் தவறேதுமில்லை என்பது என் கருத்து. கூற வந்த விடயத்தை எந்த வகையில் சரியான காரணங்களை, தரவுகளை முன்வைத்து நிரூபிக்கின்றாரென்பது தான் ஆய்வுகளில் முக்கியமே தவிர, பொருள் சரியா பிழையா என்பதெல்லாம் இரண்டாம் பட்சம்தான்.

16. பாவம் செய்தவர்கள் ·பர்ஸ்ட் க்ளாஸ¤க்குப் போவார்கள்! - பா.ராகவன் -

[எழுத்தாளரும், மானசரோவர்.காம் இணைய இதழ் ஆசிரியருமான பா.ராகவனின் கட்டுரை நூலொன்றும் (154 கிலோபைட்) நாவலொன்றும் (தூணிலும் இருப்பான்) வெளியாகவுள்ளன. இணையத்தளங்களில் மட்டுமே வெளியான கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவரும் 154 கிலோபைட் நூலிலிருந்து கட்டுரையொன்றினைப் 'பதிவுகள்' வாசகர்களுக்காக ராகவன் இங்கே பகிர்ந்து கொள்கின்றார்.]

தாம்பரத்திலிருந்து கடற்கரை செல்லும் மின்சாரத் தொடர் ரயிலில் முதல் வகுப்பில் சீஸன் டிக்கெட் வாங்கிப் பயணம் செய்யும் அபாக்கியசாலிகளைக் கூர்ந்து கவனித்திருக்கிறீர்களா? பாவம் செய்தவர்கள் நரகத்துக்கும் போவார்கள்; ·பர்ஸ்ட் க்ளாஸ் கம்பார்ட்மெண்டுக்கும் போவார்கள். முதல் வகுப்பென்று பெயர் தானே தவிர, கட்டணத்தைத் தவிர வேறு பெரிய வித்தியாசம் எதுவும் அங்கே தேடினாலும் கிடைக்காது. அதே கும்பலில் கோயிந்தாவாக, இயேசுநாதர் போல் கைகளை உயரே வைத்துக்கொண்டு சுமார் ஒரு மணி நேரம் சிலுவை சுமக்க வேண்டியது தான்.

உட்கார வாய்ப்புக் கிடைத்த பிரகஸ்பதிகளுக்கு கம்யூனிஸ்டுகள் எதிர்க்காமலே ஜனாதிபதி ஆகிவிட்டது போல் ஒரு அழகிய திமிர் எப்படியோ உண்டாகிவிடுகிறது. ஹிந்துவை விஸ்தாரமாகப் பிரித்து, 16 காலத்தையும் ஒரே பார்வையில் விழுங்கிவிடுபவர்கள் போல் ஆழ்ந்து போய்விடுவார்கள். நிற்பவர்களின் இடைஞ்சல்கள் பொதுவாக அவர்களை பாதிப்பதில்லை. ஆனால் நம் சுண்டுவிரலோ, சட்டை நுனியோ அவர்கள் மேல் பட்டுவிட்டால் அவ்வளவுதான்.

'நீங்க உக்காருங்க சார்! ப்ளீஸ் பீ ஸீட்டட். நான் நின்னுக்கிட்டே வரேன்' என்று கொலைவெறிக் கண்களுடன் எழுந்து ஒரு சின்ன ஓரங்க நாடகமே நடத்திவிடுவார்கள். அந்தச் சிறிய கம்பார்ட்மெண்டில் உள்ள அத்தனை கனவான்களும் என்னமோ ஏதோ என்று எட்டிப் பார்ப்பதோடல்லாமல், அவரவர் தம் மேலான கருத்துக்களையும் சொல்லத் தயங்க மாட்டார்கள். மேனர்ஸ், டீஸன்ஸி, டெலிகேட், அர்ரகன்ஸ் போன்ற சொற்களை வேண்டிய அளவுக்கு உபயோகித்து நிரோத் போல் ஜன்னலுக்கு வெளியே வீசிவிடுவார்கள்.

படித்தவர்கள், குறைந்தபட்சம் 10,000 சம்பாதிப்பவர்கள் தான் முதல் வகுப்புக்கு வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.வெண்டார்ஸில் வருகிறவர்கள் அளவுக்குக் கூட இவர்களின் சகிப்புத் தன்மை இல்லை என்பது ஆச்சர்யமான விஷயம்.

உண்மையில் தமிழகத்தின் உயர்தட்டு மக்களின் பொதுவான மனோபாவம் குறித்து ஆராய்ச்சி செய்ய ரயிலின் முதல் வகுப்புப் பெட்டி சரியான களம்.

நேற்று ஒரு சம்பவம் நடந்தது. ஒரு பெண்மணி. பார்ப்பதற்குச் சற்று சுமாராகத்தான் இருந்தார். பகட்டுகள் ஏதுமற்ற உடையில், வாரப்படாத கூந்தலில், போடப்படாத மேக் அப்பில் அவர் சராசரி பக்கத்துவிட்டுப் பெண் போலக் காட்சியளித்தார்.

அவர் ரயிலில் ஏறியதிலிருந்து ஸ்டேஷனுக்கு ஒருத்தர் வீதம் அவரிடம், 'மேடம் இது ·பர்ஸ்ட் க்ளாஸ்' என்று சொல்லிக்கொண்டே இருந்தார்கள்.

அந்தத் தோற்றத்துப் பெண்மணி ஒருவர் முதல் வகுப்பில் தவறி மட்டுமே ஏறியிருக்கமுடியும் என்பதில் அவர்களுக்கு அத்தனை நம்பிக்கை.

அந்தப் பெண் பொறுமையாகவும் அமைதியாகவும் ஒவ்வொருவரிடமும் தன்னிடம் முதல் வகுப்பு சீசன் டிக்கெட் இருக்கிற விஷயத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார். இறங்கும்போது தனக்கே சொல்லிக் கொள்பவர் போல ஒரு விஷயம் சொல்லிவிட்டுத்தான் இறங்கினார்: "பத்து வருஷமா போயிட்டிருக்கேன். இதுவரைக்கும் ஒரு டிக்கெட் செக்கர் கூட என்கிட்ட கேட்டதில்லை."

நம் மக்களால் எப்படி இப்படி இருக்கமுடிகிறது? வருத்தம் கலந்த வியப்பு தான் ஏற்படுகிறது. முதல் வகுப்புப் பிரயாணம் என்பது ஈகோ அரிப்புக்குச் சொரிந்துகொள்ளும் விஷயம் என்று இந்தக் காலத்திலும் நம்புகிறார்கள் என்பதை நம்பமுடியவில்லை.

கோவணம் மட்டும் கட்டுகிறவர்களெல்லாம் வெற்றிலைச் சுருக்குப் பையுடன் செல்போனையும் சேர்த்து இடுப்பில் சொருகிக் கொண்டிருக்கிறார்கள், பல தென் மாவட்டங்களில். நானே நேரில் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு அது அத்தியாவசியமான ஒரு தகவல் தொடர்புச் சாதனம் என்பதைத் தவிர வேறு உணர்வு ஏதும் இல்லை. ஆனால் இந்த முதல் வகுப்பு ஜீவாத்மாக்கள் அந்த வஸ்துவை வைத்துக்கொண்டு படுத்துகிற பாடு இருக்கிறதே, நம் சகிப்புத் தன்மைக்குச் சவால் விடும் விஷயம் அது.

'ஹலோ, பல்லாவரம் வந்துட்டேன். இன்னும் அஞ்சு நிமிஷத்தில அங்க இருப்பேன்' என்பதை ஐந்து நிமிடங்கள் கழித்து நேரில் போய் நிரூபிக்கக்கூடாதா என்றால் மாட்டார்கள்.

இன்னும் சிலபேர் ஆன் பண்ணாமலேயே காதில் வைத்துக்கொண்டு அழகு பார்ப்பார்கள். மேலும் சிலபேர் தாம் பிறவி எடுத்ததே அதன் பட்டன்களை அழுத்தி அழுத்தி விளையாடுவதற்குத்தான் என்பதுபோல் ஐம்பது வயதுக்கு மேல் போக்கர் விளையாடுவர்கள். செல்போன் இல்லாதவர்கள் டிவி ரிமோட்டையாவது கையில் வைத்திருக்கிறார்கள்.

இந்த கோஷ்டியில் ரயில்வே உத்தியோகஸ்தர்கள் தனி ஜாதி. தான் சார்ந்திருக்கும் யூனியன் பெயர் பதித்த அட்டை மட்டுமே அவர்கள் வைத்திருக்கும் சீஸன் டிக்கெட். அது கூட இல்லாவிட்டாலும் பாதகமில்லை. பொதுஜன சேவகர்கள் அல்லவா?

கடப்பாறை, மண்வெட்டி, கூடைகள், கட்டுச்சோறு, தண்ணீர் பாட்டில், 'தண்ணி'பாட்டில், சொக்கலால் ராம்சேட் பீடிக்கட்டு இன்னபிற தம் உபகரணங்களுடன் அவர்கள் பெட்டிக்குள் ஏறும்போதெல்லாம் ஒரு சிறிய பூகம்பம் ஏற்பட்டுவிடுகிறது. மேலும் திருவட்டார் ஆதிகேசவப் பெருமாளின் வாரிசுகளாக சீட்டை நிரப்பிக்கொண்டு அவர்கள் அனந்த சயனம் செய்வதைத் தவறியும் யாரும் பொருட்படுத்திவிடுவதற்கில்லை.

யூனியன் அரசியல் குறித்து அவர்கள் நிகழ்த்தும் சம்பாஷணைகள் சபைக்குறிப்புகளுக்கு அப்பாற்பட்டவை. பொதுமக்கள் புகை பிடிக்கக் கூடாது என்று எழுதிவைக்கும் ரயில்வே நிர்வாகம் தன் ஊழியர்களுக்கு மட்டும் குடித்துவிட்டு கலாட்டா செய்துகொண்டே பயணம் செய்ய அனுமதி தந்ததெப்படி என்று ஒரு வயதான அன்பர் ஒரு நாள் கம்பார்ட்மெண்டில் கேள்வி எழுப்பினார்.

பழவந்தாங்கலில் இறங்கிய அவர் அன்று ஒழுங்காக வீடு போய்ச் சேர்ந்தாரா என்று இன்றுவரை எனக்குக் கவலையாக இருக்கிறது.

தொட்டதற்கெல்லாம் சண்டை, விட்டதற்கெல்லாம் வாதம், வரம்பு மீறல்கள், அலட்டல்கள், அடாவடிகள் என்று இருக்கும் முதல் வகுப்புப் பெட்டிகளின் ஒரே சுவாரசியமான விஷயம், யூனியன் போஸ்டர்கள். மாவீரன், போர்ப்படைத் தளபதி, தன்மான சிங்கம், நிகரற்ற பெருந்தலைவர், குள்ளநரி, ஓநாய்க்கூட்டம், லாவணி பாடும் அணியினர் என்பது போன்ற பட்டப் பெயர்களுடன் பத்துக்குப் பத்து அளவில் தினசரி ஒட்டவும் போராடவும் நியாயம் கேட்கவும் அவர்கள் சமூகத்துக்கு எப்படியோ விஷயம் கிடைத்துவிடுகிறது.

சமீபத்தில் யாரோ தலைவர், ஒரு தொண்டரின் வீட்டுத் திருமணத்துக்கு வருகை தருவது பற்றிய போஸ்டர் ஒட்டியிருந்தார்கள்.

தலைவரின் பெயர், உப தலைவர், துணைத்தலைவர், உதவித் தலைவர், செயலாளர், உப, துணை, உதவிகள், பொருளாளர், பிறகு கோட்ட உறுப்பினர்கள் என்று அவர்களே, இவர்களே என்றெல்லாம் வரவேற்றவர், தன் பெயரைப் போட்டுக்கொள்ள இடமின்றி கீழே பென்சிலால் எழுதி இருந்ததை மிகவும் ரசித்தேன்.

கல்யாணம் அவருக்கா, அவர் மகனுக்கா, மகளுக்கா என்பது தான் கடைசி வரை விளங்கவில்லை.

writerpara@yahoo.com பதிவுகள், ஆகஸ்ட் 2003 இதழ் 44

17. (ஆல)காலச்சுவடா? - எம் வேதசகாயகுமார் -

அன்புள்ள நண்பர்களுக்கு! காலச்சுவடு சார்பில் வெளியிடப்பட்ட ஓர் சுற்றறிக்கையை நீங்கள் கண்டிருக்கலாம். சொல் புதிதில் வெளிவந்த நாச்சார் மட விவகாரங்கள் என்ற கதையை அதில் அவதூறு என கடுமையாக கண்டித்திருந்தனர். அக்கதையை எழுதியது நான் .எம்.வேதா என்பது எம்.வேதசகாயகுமார் என்பதன் சுருக்கம். இப்பெயரில் நான் கதைகள் முன்பு எழுதியதுண்டு. இனியும் எழுதலாம்

தனிப்பட்ட முறையில் இன்றைய அரசியல் சூழலைப்பற்றிய என் மனச்சோர்வையும் உயரிய மதிப்பீடுகள் என நான் பலகாலமாக நம்பியவற்றின் வீழ்ச்சியையும் சொல்கின்ற கதை 'நாச்சார் மடவிவகாரங்கள்' . அந்த வீழ்ச்சியை குறிக்க என் முன் தூலமாக உள்ள சொந்த அனுபவம் சார்ந்த உதாரணம் சுந்தர ராமசாமி . சுந்தர ராமசாமி மீதுநான் கொண்ட குருசீட உறவுக்கு நீண்ட முப்பதுகால வரலாறு உண்டு. அவர் கல்வித்துறை மீது வைத்த கடுமையான விமரிசனங்களை உண்மையென நம்பி கல்வித்துறையுடன் கடுமையாக மோதி பலர்வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதித்தவன் நான். அதற்காக நான் அடைந்த இழப்புகள் சாதாரணமல்ல . வசந்திதேவியை மாபெரும் கல்வித்துறை சக்தி என்று சித்தரித்து அவர் எழுதிய நூல எனக்கு அதிர்ச்சி அளித்தது . வசந்தி தேவியையும் , சுந்தர ராமசாமி அப்படி எழுதியதற்கான காரணங்களையும் அறிந்த எனக்கு ஏற்பட்டது ஆழமான மனச்சோர்வு . வசந்தி தேவியே பெரிய கல்வியாளர் என்றால் நெ .து .சுந்தரவடிவேலு வ .செ குழந்தை சாமி வ .சுப மாணிக்கம் போன்றவர்கள் என்ன குறைந்து விட்டார்கள்? யாருக்காக இந்த ஆட்டத்தை ஆடினோம்? இது ஓர் உதாரணம்தான். வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் வெற்றுப்பேச்சுகளால் ஏமாற்றப்பட்டவனாக உணர்கிறேன். அதேபோல நான் நம்பிய அரசியலிலும் என் ஏமாற்றம் பெரிது.

'நாச்சார் மட விவகாரங்கள் ' கதை தொடங்கும் புள்ளி இதுதான். அது ஓர் அங்கதம். அக்கதை கதைகளுக்குரிய வழக்கப்படி வளர்ந்து மேலும் பல இடங்களை தொட்டுசெல்கிறது. இக்கதையை காலச்சுவடு அவர்கள் மீதான விமரிசனமாக காட்டும் முன்புவரை எவருக்குமே அப்படி படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன் . திண்ணையில் கூட விமரிசனம் வந்ததை படித்தேன்.

நவீனத்துவ மரபைச்சேர்ந்த கதைகளின் அழகியல் கடுமையும் தீவிரமும் கொண்டதுதான். உதாரணமாக சுந்தர ராமசாமியின் நடுநிசிநாய்கள் என்ற தொகுப்பில் உள்ள கவிதைகளையே எடுத்துக் கொள்ளலாம். இந்தக் கதையேகூட "வானம் வந்திறங்கியதும் இளைப்பாற ஒரு கட்டில் செய்தேன்' என்ற பசுவய்யா கவிதையின் மறுவடிவம்தான். வந்திறங்கிய வானம் 'கழிப்பறை எங்கே?" என்று கேட்பதுதான் அக்கவிதை. என் கதையை வேண்டுமென்றே திரித்து சிக்கல்களை உருவாக்க சிலர் முயல்வது இலக்கியத்துக்கு ஆபத்தானது .அப்படிப் பார்த்தால் சுந்தர ராமசாமி எழுதிய ' நடு நிசி நாய்கள் ' , 'நாய்கள் ' ,

' ஆந்தையை பார்த்து நாளாச்சு ' போன்ற கவிதைகள் எல்லாம் யாரைப்பற்றியவை என்று நாம் கேட்க வேண்டி வரும். அவை கசடதபற என்ற இலக்கியக் குழுவினரையும் க. நா. சுப்ரமணியத்தையும் குறித்தவை என்று இலக்கிய உலகில் அன்று பேசப்பட்டதுண்டு. 'ஒரிஜினல் ஆந்தை' என க நா சு பல காலம் உள்வட்டத்தால் வசைபாடப்பட்டதும் , அவர் மிக மனம் வருந்தி பதினேழு வருடம் சுந்தரராமசாமியின் தொடர்பை துண்டித்திருந்ததும் நடந்தது. இது எனக்கு நன்கு தெரிந்ததே. அப்படி பொருள் கொண்டால் எந்த இலக்கியமும் ஆபத்தானதாக மாறிவிடும்.

படைப்பாளிகள் மீதான வன்முறை பற்றி காலச்சுவடு பேசுகிறது. காலச்சுவடுதான் அவதூறுகளுக்கென்றே ஒரு பகுதியை ஆரம்பித்த முதல் சிற்றிதழ் . அவதூறுகளை தமிழிலேயே அதிகமான பக்கங்கள் வெளியிட்ட இதழ் அதுதான். இதுவரையிலான அதன் இதழ்களை எடுத்துப் பார்த்தால் யாருக்கும் அது தெரியும். இதை ஒரு வணிக உத்தியாக காலச்சுவடு பயன்படுத்தியது. அதையே குமுதம் எடுத்துக் கொண்டுள்ளது. ஒரு எழுத்தாளரை பற்றி வேறு எழுத்தாளாரிடம் கேட்டு எழுதிவாங்கி பிரசுரிப்பது காலச்சுவடின் தந்திரம். நீதிமன்றம் செல்ல வசதியாகவா அதில் அவதூறுகளை வெளியிட்டனர்? உதாரணமாக ஆர் பி ராஜநாயகம் எழுதிய கட்டுரையையே சொல்லலாம். அதை தொடர்ந்து கண்ணன் எழுதிய குறிப்பில் 'மற்ற நண்பர்' என்று சொல்லி என் சாதியைப்பற்றி ' மாட்டுவண்டி ஓட்டும் நாடான் ' [தேரோட்டி] என உள்ளர்த்தம் வைத்து நக்கல் செய்து எழுதிய இதழ் அது. தெரியாமல் கேட்கிறேன், சுந்தர ராமசாமியை விமர்சிக்கும்போது மட்டும்தான் படைப்பு வன்முறையாகிறதா? கையெழுத்திட்ட மகாஜனங்களில் எத்தனைபேர் இவ்விஷயங்களை கண்டித்தார்கள் ? விஷத்தை நாசூக்காக உமிழ்ந்தால் அது வன்முறை இல்லையா? விஷத்தை உமிழ்வதில் ஆயிரம் வருடப் பழக்கம் என் சாதிக்கு இல்லை . அதுதான் இப்போது பிரச்சினையா என்ன?

இலக்கியப் படைப்பு நன்றாக வரலாம், சரியாக வராமலும் போகலாம். அது எழுதுபவனின் திறனைப்பொறுத்த விஷயம். அதை இம்மாதிரி கொச்சைப்படுத்துவது நோய்க்கூறான மனநிலை .

மேலும் இப்போது இக்கதையை வைத்து எழுத்தாளர்களிடம் கையெழுத்து பெற்று சொல்புதிதின் விளம்பரதாரர்களிடம் அனுப்பி சொல்புதத்தை நிறுத்திவிட முயற்சி செய்யப்படுகிறது. உண்மையான வன்முறை இதுவேயாகும். கையெழுத்திட்ட எழுத்தாளர்கள் இதுகுறித்து சிந்திக்கவேண்டும்

'பதிவுகள்' விவாதத் தளத்திலிருந்து...

*பதிவுகளில் இடம்பெற்றுள்ள வேதசகாயகுமாரின் கடிதம் காலச்சுவடின் போலிமுகத்தை காட்டுகிறதே! சி.மோகன் அவரது பேட்டி ஒன்றில் மிக லேசாக சுந்தரராமசாமியின் கபடக்

குணங்கள் பற்றி கூறியிருக்கிறார். புதுமைப்பித்தன் படைப்புக்கள் தொடர்பாக எழுந்த இளையபாரதி Vs கண்ணன் பிரச்சனைகளிலும் காலச்சுவடின் பிரச்சாரமே மேலோங்கியிருந்து இளையபாரதி போன்றோரை ஏதோ வெறும் திருட்டுவியாபாரிகள் போல காட்டியது. ஆனால் புதுமைப்பித்தன் படைப்புக்கள் ஆய்வுப்பதிப்புக்காக வசந்திதேவி தன் கல்விவட்டார/அரசாங்க செல்வாக்கைப் பயன்படுத்தி காலச்சுவடு நிறுவனத்திற்கு ஐந்துலட்சம் ரூபாய்களை வேண்டிக்கொடுத்துள்ளார். இதற்கான நன்றிக்கடன்தான் சுந்தரராமசாமி வெளியிட்ட "வசந்திதேவியுடன் உரையாடல்" என்ற நவீன கல்விச்சிக்கல்கள் தொடர்பான புத்தகம். இப்படிப்பார்த்தால் தன்போலிகளை மறைப்பதற்காகவே காலச்சுவடு கண்ணன் மற்றவர் நீதி பற்றிக் கதைக்கிறார் போலப்படுகிறதே.

பணச்செருக்குக்கும், கபடக் குணத்திற்கும் இலக்கியத்திற்கும் சம்மந்தமே இல்லை. இப்போது இதைச் சம்மந்தமாக்குவது காலச்சுவடு கண்ணன் மட்டும்தான்.

-சதுக்கபூதம் (ஜீவன் கந்தையா)-

*சுரா மற்றும் ஜெயமோகன் போன்றவர்களைப் பலர் பணத்தை வைத்துப் பிடிப்பதாகவும் அதற்குப் பதிலாக சுரா ஜெயமோகன் போன்றவ்ர்கள் இவர்களைப் பற்றி எழுதி முதுகு சொரிந்து விடுவதாகவும் கூட அண்மைக்காலங்களில் கதைகள் பல அடிபடுகின்றனவே....தமிழகத்தில் பல அற்புதமான படைப்பாளிகள் பலர் இருக்கிறார்கள். அவர்களில் பலர் சுரா போன்ற்வர்கள் காரணமாக இருளில் கிடப்பது வேதனையானது..வண்ணநிலவன், சோ.வேணுகோபால, இலட்சுமணப்பெருமாள், ஜெயகாந்தன்,நாஞ்சில் நாடன், கிரா...போன்ற்வர்களின் பல படைப்புகள் பாதித்தது மாதிரி இதுவரையில் சுராவின்...எந்தவொரு படைப்புமே என்னைப் பாதித்ததில்லை. இவரது படைப்புகளை வாசிக்கும் போது பண்டிதர்களின் படைப்புகளைப் படிப்பது போல், மனதுக்கு ஒட்டாத ஒருவித நிலையில் தான் எப்பொழுதுமே வாசிக்க முடிகிறது

--மாயவன்-

*இது நான் கேள்விப் பட்ட தகவல். உண்மையா என்பது தெரியவில்லை. சு ராவின் மகள் அமெரிக்காவில் படித்தாள். இந்தியாவில் மெடிரிகுலேஷன் படித்துவிட்டு அமெரிக்கா சென்று படித்ததனால் முடிக்கமுடியவில்லை. திரும்பி வந்தாள். வசந்திதேவி தன் விசேட அதிகாரத்தை பயன்படுத்தி அப்படிப்பை ஒரு பட்டப் படிப்பாகக் கருதி சான்றிதழ் வழங்கினார். அதற்கான நன்றிக்கடனே 'உரையாடல்'

இந்த பின்னணி தெரியவந்ததுதான் வேதசகாய குமாரின் கொதிப்புக்கு காரணம்.

பலகாலம் முன்பு டொமினிக் ஜீவா மல்லிகையில் எழுதினது நினைவுக்கு வந்தது. சுராவை சென்று பார்த்துவிட்டு ஒரு விடுதி யரையில் ஜீவா தங்கினார். அங்கே வந்த சு ரா கடை ஊழியர் ஒருவர் இவரை பெரிய எழுத்தாளர் என்கிறீர்கள் இவர் என் வேலையில் சிறு தவறு வந்துவிட்டதற்காக பாதிசம்பளத்தை பிடித்து வயிற்றில் அடித்தவர் என்று அழுதாராம். சு ரா வியாபாரி . இந்தியாவில் வியாபாரம் செய்ய எல்லா தந்திரமும் தேவைப்படுகிற நாடு. அவரை ஆதரிச புருடனாக இவர்கள் கண்டதுதான் தப்பு .

சு ரா , ஜெயமோகன் போன்றவர்கள் இலக்கியத் தகுதி இல்லாத யாரைப்பற்றி பாராட்டி எழுதியுள்ளார்கள்? தளையசிங்கம், அமுத்துலிங்கம் தவிர யாரைப்பற்றியும் பாராட்டி ஜெயமோகன் எழுதியது இல்லை. சு ரா தளையசிங்கம், சேரன் பற்றி மட்டும்தான் எழுதியுள்ளார். வயிற்றெரிச்சல்களை வம்பாக்காதீர்கள்

-சிவம் (sivam kantharaja) -

*வாஸ்தவந்தான் மாயவரே! ஆனால் ஜெயமோகனை பணத்திற்கு இரையாகுபவர் என்று கூறமுடியாது. என்னுடைய சொந்த அனுபவத்தின்படிக்கு ஜெயமோகன் தன் வெளிநாட்டுப் பயணத்தின்போது சொல்புதிதுவுக்கு சந்தா சேகரிப்பதற்கே வாய்விட்டுக் கூறியவர் கிடையாது.

இந்தக் கண்டனக்கடிதத்தில் பிரபஞ்சன் கையெழுத்துப்போட்டிருக்கிறார். அவர் தெரியத்தக்கதாக தஞ்சை.பிரகாசைப் பற்றி நல்லதாக கதை எழுதியிருக்கிறாரே? நல்லது என்பது கெட்டதற்கு மறுமுனைதானே...?

- சதுக்கபூதம் -

*சுரா தன் மௌனங்களால் கட்டிக்கொண்டு கம்பீரமாய் உட்கார்ந்திருந்த புனிதபீடம் அவரது மகன், காலச்சுவடு கண்ணனால் நொறுங்கிப்போவது பரிதாபம்தான். இன்னும் கண்ணனின் வீட்டிற்கு எப்போது சென்றாலும், நாலைந்து பேர் இலக்கிய ஞானம் பெற்று உணவருந்திக் கொண்டிருப்பார்கள் என்றொரு நண்பர் கூறினார். பின்னர் மூளைச்சலவை, நன்றிக்கடன் என இன்னபிற கடன்கள் நடக்காமலா போயிவிடும்? சென்னையில் கூட காலச்சுவட்டிற்கு துதி பாடியபடி உலகத்தமிழ் அடியார்கள் தங்கள் பணி பரப்பியபடி இருக்கிறார்கள். கண்ணனின் வியாபார/அரசியல் தந்திரத்தைப் பாருங்கள்..."நாச்சார் மட விவகாரங்கள்" அறிக்கையில் கூறுகிறார், இவ்வாறு புனைவுகளில் எழுதும்போது சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கமுடியாது என்று.

மற்றும் வசந்திதேவி விவகாரம் குறித்த அரசியல் தெரியாதபோதும், காலச்சுவடும் (முக்கியமாய் மனுஸ்யபுத்திரன்...அவருக்கும் காலச்சுவட்டில் கல்தா), வசந்திதேவி

மனோன்மனியம் சுந்தரம்பிள்ளை பல்கலைக்கழகத்தில் இருந்தபோது ஏதோ புரட்சி நடந்தமாதிரியும், பிறகு க.ப.அறவாணன் முதல்வரானபோது எல்லாம் நாசமாய்ப் போய்விட்டதென்றும் எழுதியது/பேசியது படித்தேன். உண்மையைச் சொல்லப்போனால், க.ப.அறவாணன் வந்தபிறகுதான் அங்கிருந்து புலம்பெயர் தேசங்களிலுள்ள தமிழர்களோடு ஒரு தொடர்பு ஏற்பட்டு, மனோன்மனிய பலகலைக்கழகத்தோடு இணைந்து தமிழ் இளங்லை, முதுகலை கற்கைநெறிகள் பிறநாடுகளிலும் ஆரம்பித்திருக்கின்றன (உ+ம், கனடா).

ஜெயமோகன் பணவிடயத்தில் சுத்தமாயிருக்கக்கூடும். அவர் நல்லதொரு வியாபாரியாய் இருக்கமுடியாததால்தான், அவரும் அவரது நண்பர்களும் சொல்புதிதை கடினப்பட்டுத்தான் நடத்தவும் வேண்டியுமிருக்கலாம். என்றாலும், அவரும் தன் பீடத்தை எழுப்பியபடி தான் இருக்கிறார். இது குறித்து விரிவாய் நேரங்கிடைக்கும்போது பேசுகிறேன் (ஜெயமோகன் மீது கடுமையான விமர்சனம் இருக்கின்றபோதும், அவரது கடினமான உழைப்பினை மதிக்கின்றேன்.) வம்புகளை வயிற்றெரிச்சல்கள் ஆக்காதீர்கள் என்கின்ற சிவம் கந்தராஜாவின் பதிவுகளை அடியிலிருந்து அந்தம்வரை (திண்ணையிலிருந்து, பதிவுகள் வரை) அவதானித்தால், அவருக்கு ஜெயமோகன் மட்டும்தான் படைப்பாளி என்ற எண்ணம் தலையில் தேங்கி நிற்பது அறியலாம்.

~டிசே -

பி.கு: கவலைப்படாதீர்கள் சிவம், காய்க்கிற மரத்திற்குத்தான் கல்லெறி விழும் என்று உங்கள் குருவைப்போல நீங்களும் தேற்றிக்கொள்ளுங்கள்.

*நண்பர்களே, தொழிலுக்கோடும் அவசரத்திலே ஒரு வார்த்தை: இரண்டு பக்கத்தாருமே ஜால்ராக்களோடு சமா செய்கின்றவர்கள் என்பதும் அறிந்தபோதுங்கூட, இரண்டு புறங்களுமே முழுச்சுத்தமா அசுத்தமா என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், ஒரு கதையை யாரோ பற்றி யாரோ மறைமுகமாக எழுதினாரென்றால், எழுதியவரின் நேர்மைத்திறனிலே எழுத்துநெறித்தன்மையிலே குற்றம் சாட்டலாமேயொழிய, அதற்கு மேலாக, கண்டனக்கையெழுத்துவேட்டை நிகழ்த்துவதனாலே, தெரியாத மகாஜனங்களுக்கும், அப்பன் குதிருக்குள்ளே இல்லை என்று சொன்னதாக மட்டுமே முடியும். போன மாதத்துக்கு, பல்லை உடைத்ததைப் பற்றி எழுதினால், கையெழுத்து வேட்டை; இந்த மாதத்துக்கு, இது. அடுத்த மாதத்துக்கு என்னவோ?

கொஞ்சம் கண்ணை, காதை மூடினால், சொந்தப்பெயரையே உருவி இன்னொரு தேசத்திலே உருட்டிவிடுகின்றார்கள். இதுக்குப் போய்ச் சுராவும் குட்டிமீன்களும் அழலாமா? மீதியை வந்து அலட்டுகிறேன்...

-திண்ணைதூங்கி-

18. ஒரு புளிய மரத்தின் கதை - ஒரு காலங்கடந்த பார்வை - ஸ்ரீதரன் -

முன்னுரை

சுந்தர ராமசாமி (சுரா) அவர்களை, டொரான்டோ நண்பர்கள் செல்வம், மகாலிங்கம் மற்றும் கலாநிதி கனகநாயகம் இவர்களுடன் டெட்றொயிட் நகரில் அவர் மகளைப் பார்க்க வந்த நேரத்தில் நேரில் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் நண்பர் பத்மநாபன் மூலமாகப் போன இலை உதிர் கால ஆரம்பத்தில் கிடைத்தது. அந்தச்சந்திப்பில், செல்வத்தின் சமகாலத் தமிழ் இலக்கிய உலகறிவும், மகாலிங்கத்தின் பலகால அறிவும், கனகநாயகத்தின் கைலாசபதியின் விமரிசனப் போக்குகளின் அறிவும் அலைமோதும் பரவையில் சுராக் கப்பல் தெளிவாகக் கடலோடுவதைப் பார்த்தது ஒரு நல்ல சுக அனுபவமாக அமைந்து போனது. பலமுறை அவருடன் டெலிபோனில் பேசக்கூடியதான வாய்ப்புகளும் பத்மநாபன் மூலமாக அதற்கு முன்னரே கிடைத்திருந்தபடியால் அவரைப்பார்க்க வேண்டுமென்கிற ஆவல் நிறையவே அடைந்து மனைவியாரையும் இழுத்துக் கொண்டு போயிருந்தேன். அவர் எழுத்துகளில் தெரிவது போலவே விசாலமான, மனக்கோடுகளின் பல்வித பரிமாணங்களை அறிந்ததுமான, அவற்றை வெகு லாகவமாகச் எடுத்துச் சொல்லத் தெரிந்ததுமான மனிதர். தெளிவான கருத்துகளைச் சொல்லும் கால் சட்டை அணிந்த ஆசான். சந்தித்தீர்களானால், புளியமரத்துத் தாமோதர ஆசான் மாதிரியானவரிடம் சிட்சை உண்மையாகவே நடந்துதான் இருந்திருக்கவேண்டும் என்கிற எண்ணங்கள் மனத்தில் எழாமல் இராது. அந்த உரையாடலில், அவர் சொன்னவற்றில் ஒன்று என் மனத்தை மிகவும் அரிக்கத்தொடங்கியது.

தங்கள் சாதி பற்றிய பிரக்ஞை இந்தியர்களுக்குப் போய் விடுவதில்லை என்பது அவர் தெரிவித்த கருத்து. அவருக்கு ஐயங்கார் நண்பர்கள் நிறைய இருக்கலாம் என்பது என் மனைவியார் கருத்து.

இரவிராகக் காரோட்டிக்கொண்டு நாங்களிருக்கும் டேய்டன் திரும்பி வரும்போது, நெடு நாளைக்குப் பின்னால் கேட்கக் கிடைத்த இந்த இலக்கிய சம்பாஷணைகள் பலவாறாகவும் என் மனத்தில், ஊரிலிருந்து நெடு தூரத்தில் வாழ்வதால் ஏற்பட்டுப் போன நெருப்பின் அடியிலான ஊரனுபவத் தணல்களை ஆழமாகக் கிண்டிவிட்டு விட்டன. ஊரனுபவத்தணல்கள் மண் வாசனை, குடும்பம், நண்பர்கள், படித்த கல்லூரிகள், படித்து மறந்து போய்விட்ட கதைகள், காவியங்கள், தெரிந்த தோல்வியுற்ற மற்றும் வெற்றியுற்ற காதலர்கள், பல் வேறு தத்துவங்கள், அரசியல் கொள்கைகள் எல்லாம் சேர்ந்தவைகள் தான்.

புளிய மரமும் அந்தத்தணலில் இருந்து முளைக்கப்பார்த்தது. அதற்குப் போட்டியாக ஒரு சிறு தணலில் இருந்து, நான் மிகச்சிறுவனாக இருந்த போது தெரிந்திருந்த ஓர் இலந்தை மரமும் நாக்கைக் கூச வைத்தது.

பின்னர் டொரான்டோப் பல்கலைக் கழகம் சுராவைக் கவுரவிக்கும் விழாவிற்கும் வேலைக் கெடுபிடிகளால் போக முடியவில்லை. அதற்கு ஏதாவது எழுதியும் கொடுக்க முடியவில்லை.

இதற்கிடையில் காலச்சுவடில் வந்திருந்த தமிழ்க்கல்வி பற்றியதான மலரில் சுராவின் கட்டுரையை வாசித்து அதில் பாரதியின் கதறலான " விதியே விதியே! தமிழச்சாதியை என்செய நினைத்தாய் எனக்குரையாயோ!" எனும் கவிதை பற்றி ஓர் எடுத்துக்காட்டுமில்லாது போன ஏக்கம் மனத்தை ஒரு புறம் அரித்தது. பல்கலைக்கழகங்கள், தத்துவார்த்தப் பாரம்பரியங்கள் என்கிற பேரில் மன வியாதிகளைக் கொடுத்துவிட்டிருக்கின்றனவோ தெரியவில்லை. எடுத்துக்காட்டும் குறிப்புகள் மிக முக்கியமானவை. குறிப்புகள் சொல்கிற கருத்துகள் அதை விட முக்கியமானவை. சொல்லப்படுகிற கருத்துகள் திருப்பிச் சொல்லப்படுகிறதாக இருந்தாலும் பரவாயில்லை. உண்மைக்கு எப்பவும் எங்கும் இடமுண்டு. பாரதியைப் பற்றி இந்த முக்கியமான விவாதத்தில் ஒரு குறிப்பில்லாத குறையும் என் மனத்திலிருந்து போகவில்லை. அதைப்பற்றி சுராவுடன் விவாதித்து நேரத்தை வீணாக்குவதை விட, இந்தக்குறையும் என்ன திசையைக் காட்டுகிறது என்று சிந்தித்தால் பிரயோசனமாக இருக்கும் என்று பட்டது. குறைப் பட்டதும் நல்லதற்குத்தான். சம நிலையுடன் ஒரு பார்வை பார்க்க முடியுமே!

அது ஒரு புறமிருக்க,

புளியமரத்தின் கதை அந்தக் கதையில் வீசுகின்ற மண், மொழி வாசனைகளால் உயிர்ப்பிக்கப்படுகிறது. மண் வாசனையில் கதை நடந்த இடம் யாழ்ப்பாணத்திற்கு வெகு தொலைவில் இருந்திருக்க முடியாது. ஆசானின் சுருட்டிலும் அது தெரிகிறது. மலையகத்திலிருந்து கதையை வாசித்து, 'இந்த மரத்திலதான் எம்புட்டுக்காய்!' என்று சொல்லும் இளம் பெண்ணின் வியப்பை மனத்தில் ஓட விட்டால் மொழி வழக்கில், இடம் பெயர்ந்து வந்த சொந்த ஊர்தான். மண்ணுடன் அவ்வப்போதுமொழியும் சேர்ந்து ஓட்டுமாவடியையும் ஞாபகப்படுத்தலாம்.

மண் வாசனைக்கும் பிரிந்து வந்த ஊருக்கும் மேலே இன்னும் ஒரு விஷயமும் இருக்கிறது- சின்ன விஷயங்களின் விஸ்வரூபத்தன்மை.

ஒரு தேரர் - அவர் பெயர் மறந்து போய் விட்டது- சிங்களத்தில் எழுதித் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட கதையொன்று ஞாபகத்துக்கு வந்தது. திடீரென்று ஒரு முறை கண்டிப் பெரஹர ஊர்வலம் நடந்ததா நடக்கவில்லையா என்ற சந்தேகம் மக்களுக்கு வந்தது பற்றியான கதை. மனிதப் பிரக்ஞையின் கேவலத்தைக் காட்டும் இட்டுக்கட்டப்பட்ட கதை. அதில் யானைச் சாணம், பெரஹர நடந்திருந்ததற்கும் நடக்காமல்

போயிருந்திருக்கக்கூடியதிற்குமான சாட்சி. மனித உணர்வுப் பிரயாகையில் வெகு சாதாரண பௌதீக உண்மைகளின் பங்கு பற்றியதுமானதும், ஒரு நோக்கில் சிறு விஷயங்கள் எளிதே விஸ்வ ரூபம் அடைந்து பெரிய விஷயங்களைக் கடுகாக்குவதைப் பற்றியதுமான ஓர் அற்புதமான சிறு கதை. இருபத்தைந்து அல்லது முப்பது வருடங்களுக்கு முன்னால்வெகு சாதாரணமான விஷயங்களின் மகத்துவம்பற்றி எனக்குக் கவனம் மிகுந்து வரும் போது இந்தப் 'புளியமரத்தின்' கதை கிடைத்தது. அதை வாசித்துச் சிலாகித்தது ஞாபகமிருக்கிறது. ஒரு கிளையை இழந்து புளிய மரம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவில்லையா? புளிய மரத்தில் காற்றடித்து விழுந்த புளியம் பழத்தைக் கவர்ந்த ஒரு சிறுவனிடம் இளம் பெண் ஒருத்தி இரந்து, அதைச் சப்பி நாக்கின்பம் பெற, அதைத்தொடர்ந்து, "களவோய்?" என்று பின்னால் ஐயம் வருமாறு, அங்கிருந்த பெண்களின் இரந்தலுக்கு ஆண்கள் உதவப் புளிய மரம் பழங்களைக் கொஞ்ச நேரத்தில் இழந்து விடுகிறது. அதை ஏலம் விடுகிற நகரசபைக்கு ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது- இந்தக் கதையில் பின்னால் வரும் அரசியல் சம்பவங்களுக்கு முன்னோடியாக. இந்த விவரங்களையும் அவற்றையொட்டிய சர்ச்சைகளையும் பிறகு பார்க்கலாம். முக்கியமாக அந்தப் பெண்களைத் "தோட்டிச்சிகள்" என்கிறாரே இந்த பொதுவுடமை வாதியாய் இருந்த மனிதன்!

இந்தச் சந்திப்பு நிகழ்வுகளின் பின்னர், முழுமை, திசை அளவுகோல்களை எடுத்துக்கொண்டு திரும்பவும் 'ஒரு புளிய மரத்தின் கதை'யை ஒரு மறு விமரிசனத்துக்குள்ளாக்க வேண்டும் என்கிற அவா எழுந்தது. சுராவின் எழுத்தில் முழுமை , திசைபற்றி ஒரு சந்தேகம் இந்தத் தமிழ்க் கல்வி பற்றிய கட்டுரையினால் வந்து விட்டிருந்த படியால் ஒரு மறு விமரிசனம் ஒரு நடு நிலை எடுத்துக்கொண்டு செய்யக்கூடும் என்கிற நம்பிக்கை வந்து சேர்ந்தது. ஆறாவது பதிப்பில் வந்த ராஜ் கௌதமனின் இந்தப்புத்தகத்திலான பின்னுரையை விடவும், மற்றும் தற்போதான சர்ச்சைகளை விடவும் ஏதாவது புதுப்பார்வை இல்லாது போனால் எல்லார் நேரத்தையும் வீணாக்கும் முயற்சியாக இது அமைந்து போகும். விமரிசனம் என்றாலே கதைக்கும் அதன் படைப்பாளிக்கும் சேர்த்துத்தான் என்பது ஒரு மரபாகிப்போனதினால் இதை மீறுவதாலும் இன்பம் காண முடியும். இதையும் பிறகுதான் அலச வேண்டும்.

கொஞ்ச காலத்திற்கு முன்னால் நண்பர் கலாநிதி நா. கண்ணன் அவர்களிடம் என் "இராமாயண கலகம்" கதையைக் கொடுத்து அபிப்பிராயம் கேட்ட போது "இந்தக்கதையை முதல் பக்கத்திலேயே முடித்திருந்திருக்கலாம்" என்று மின் கடிதம் அனுப்பியிருந்தார். கதையை வேறுவிதமாக எழுத வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. மனுஷ்யபுத்திரனும் இந்தக்கதையை "உள் வாங்கிக் கொள்ள முடியவில்லை" என்று சொல்லியிருந்தார். இந்த அனுபவத்திலிருந்து ஒரு கதையை விமரிசனம் செய்யத் தோன்றினால் பத்து முறையாவது அதைத்தீர வாசிக்க வேண்டுமென்று தீர்மானமெடுத்துக் கொண்டேன்.

ஒரு முறை நண்பர் முத்துலிங்கத்திற்கு அவர் கதைத் தொகுதியை விமரிசிக்க முடியுமா என்று கேட்ட போது அவரிடம் நான் சத்தியம் பண்ணிச் சொன்னது ஞாபகத்திற்கு வருகிறது - " பிடித்த கதையென்றால்தான் விமரிசனம் செய்யலாம். இல்லையென்றால் செய்ய முனைய மனம் வருவதில்லை " என்று. அவருடைய சூடான் மற்றும் ஆப்கானிஸ்தான் கதைகளைப் படித்து மகிழ்ந்திருந்தாலும் நேரமின்மையால் அவர் கதைகளெல்லாம் பிடிக்காமல் இன்னும் இருக்கின்றன. இந்தச் சத்தியத்தை இந்தப் புளியமரக்கதைக்குப் பிரயோகித்தால் உங்களுக்கு இப்போதே முடிவு தெரிந்த மாதிரியிருக்கும். ஆனால், எனக்குக் கிட்டடியில் வந்த மன அரிப்புகளினால், ஒரு நடு நிலை எடுத்து, நல்லதோ கெட்டதோ "ஏன்?" என்கிற ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறமாதிரி விமரிசனம் எழுதலாம் என்று தோன்றியது.. கதையின் முன்னுரையில் " விமரிசகர்கள் காண ஆசைப்படுவதையெல்லாம் கண்டுவிட்டதாகவே சொல்லலாம். ஆட்சேபணை இல்லை. " என்று சுரா வெருட்டுவதை வைத்துக் கவனமாக எழுதும் யோசனயும் இல்லை. ஒரு கதையில், எழுத்தாளன் கண்டதை விட மேலேயோ அல்லது கீழேயோ காண்பது சாத்தியமானது. சரியாகச் செய்தால், அது வெறுமே "காண ஆசைப்படுவது" ஆகாது.

புளிய மரக்கதைக்கு சீனியோரிட்டி இருக்கிறபடியால் முதலில் அதைச்செய்து முடிப்போம். முத்துலிங்கம் கதைகள் விமரிசனத்தைப் பின்னர் பார்ப்போம் என்று தீர்மானம் ஆனது. முன்னரின் விமரிசனத்தில் அதிக சவால் இருப்பதாகவும் பட்டது.

விரிவும் ஆழமும் தேடுவதெல்லாம் சரிதான், ஒரு திசை வேண்டாமா?

திசையிலாத உண்மைகள் யாருக்கு உதவியாய் இருக்கும்.? எழுத்தின் திசையில், விரிவையும் ஆழத்தையும் எவ்வாறு அளப்பது?

மனித உணர்வுப் பிரயாகையின் அடி ஆழமான உண்மைத் திசையை ஒத்திருக்கும் பண்பை வைத்து அளக்கலாமா? உண்மைத்திசையை எவ்வாறு அறிவது?

இந்தத் தொடர்பு வழிக் குழப்பத்தின் நடுவில் .....

சுராக்கப்பலின் திசை என்ன?

திசை இருக்குமென்றால், அத்திசை மனித உணர்வுப் பிரயாகையின் உண்மைத் திசையை ஒத்திருக்குமா?

உண்மைத்திசை ஒன்றா பலவா? அது 'அங்கீகரிக்கப்பட்ட தத்துவம்' ஆகி விடுமா?

மனித நேயம் பல பரிமாணமுள்ளதென்றால் மனித உணர்வுப் பிரயாகைக்குப் பல் வேறு திசைகள் அமைந்து போய் விடுமா?

எழுத்தில் ஆழம் அமைப்பது சொல், வசனம் இவற்றில் மட்டுமல்ல. எல்லாமாய்ச் சேர்த்துக் கட்டப்படும் கதைக் கட்டடத்தின் வலிவிலும், நிர்மாணத்திலும், உபயோகத்திலும், அழகிலும், அதன் சூழலுடன் அது இசைவதிலும், எல்லாவற்றிற்கு மேலாக வாழ்க்கையின் ஓட்டத்திலுள்ளான வெறுமே தோற்றா உண்மைகளைப் பிரகடனப் படுத்துவதிலுமே ஆழத்தை உணர்த்தலாம். ஆழம் என்பது முழுமையின் பிரகடனம். முழுமைக்கு மனித அளவு கோல்கள் உண்மையில் போதமாட்டா. எனவே விகிதாசார அளவுதான் எழுத்தின் ஆழத்திற்கு எடுத்துக்கொள்ள முடியுமானது. பல் வேறு மனங்களின் அடி ஆழத்தில் ஒளிந்திருக்கும் உணர்வு வேர்களை ஆட்டிப் பார்த்து சுயப்பிரக்ஞையைப் பரி சோதிப்பது எழுத்தாளர்களின் வேலை. ஆல்டஸ் ஹக்ஸ்லி ஒரு முறை ஆபாசத்திற்கு வரைவிலக்கணம் கொடுக்கும் போது, "தன்னைத்தானே பிரகடனப்படுத்தும் கீழ்த்தனம்" என்று குறிப்பிட்டார். அதே மாதிரி ஆழத்தையும் " தன்னைத்தானே பிரகடனப் படுத்தும் முழுமை" என்று சொல்லி விட்டால் விமரிசனம் ஒரு வினாடியில் முடிந்து போகும். சுராவை வேறொருவருடனோ இல்லை அவர் எழுத்தில் தத்துவங்கள் இருந்தால் மற்றத் தத்துவங்களுடன் ஒப்பிடுவதுதான் சாத்தியமானது. விஞ்ஞானத்தில் மட்டுமல்ல இலக்கிய விமரிசனத்திலும் ஒப்புமை சாத்தியமானது. நியூட்டனின் கோட்பாடுகளை விட ஐன்ஸ்டையுனுடைய கோட்பாடுகள் ஆழமானவை. இருத்தலியல் வாதிகளுடன் 'சாரம்' மாதிரித்தெரிகிற இந்த ஒப்புமையின் அடி வேர் 'இருத்தலா'?' என்கிற வாதத்தை வேறெங்காவதுதான் மேற் கொள்ள வேண்டும்.

ஒப்புவமைதான் கூடுமானது என்றால்.. படிக்காத கதைகளும் காவியங்களும் எந்த மகா பண்டிதருக்கும் உண்டே. என்ன செய்யலாம்?

குமுதம், ஆனந்த விகடன் கதைகளை வைத்து ஆழமான கதைகளை இலகுவில் கண்டு பிடிக்க முடியும் என்று சத்தியம் செய்யலாம்.

ஆனால், ஆழம் சிக்கலான கோட்பாடு. ஓர் உதாரணப் பட்டியலில் சேர்த்துக்கொண்ட, புதுமைப்பித்தன், மௌனி, லாசரா, அசோகமித்திரன், சுரா, திஜா, ஜெயகாந்தன், பொன்னுத்துரை இவர்கள் கதைகளில் எல்லாம் எந்தத்திசையாவது தெரிகிறதா என்பது கேள்வி. தோஸ்தயேவ்ஸ்கி, காமு, சார்த்ர இவ்வாறான பல மேற்கத்திய எழுத்தில் இருத்தலியல் வாதம் திசை அமைந்து இருக்கிறது என்று சொல்கிற மாதிரி எழுத்துகளை வெவ்வேறு தட்டில் வைப்பது மேற்கத்தைய வியாதியாய் இருக்கலாம். உதாரணத்திற்கு, கார்லோஸ் கஸ்தனேடாவின் எழுத்தில் -செவ்விந்தியர்கள் பார்வையில் ஒரு புது உலகமே இருக்கிறதைக் குறிப்பிடலாம். வலிவான சிந்தனைப் போக்குகள் எம்மிடமே இருந்தால் மேற்கத்தைய சிந்தனைகளின் அளவு கோல்கள்

தேவைப்படா. இந்த யோசனை சுராவிடவும், அனேக பலரிடமும் உண்டு. இதற்காக, எம்மிடையே உள்ள வலிவான சிந்தனைப் போக்குகளுக்கு, சமயச் சுவடிகளை மட்டும் தேடிக்கொண்டு போவது நடந்ததென்றால் பிரச்சனைதான். சமயச்சுவடிகளைத் தேடுவது மட்டும்தான் தமிழ் உரை நடை இலக்கியத்தில் வலிவும் ஆழமுமானவற்றைத் தருமென்றால் நெருக்கடிதான்.

ஆனால் முன்னுரையிலேயே, சுரா 'கதையெழுதுகிறேன் என்று அங்கீகரிக்கப்பட்ட தத்துவங்களுக்குத் தலையணை உறை தைக்க முடியாது' என்று அடித்துச் சொல்லி விடுகிறார். இந்தக்கதையிலும் இக்கோட்பாடு பின்பற்றப்பட்டுத்தான் இருக்கிறது. வாழ்க்கையுடன் பின்னுகிற தத்துவங்களை வெளிக்கொணர்வதுதான் எழுத்து. நிறையவே பல விஷயங்கள் மறைந்திருக்கின்றன. மறைந்திருக்காவிட்டாலும் எதையாவது பின்னிக்கொள்ளக் கூடிய மனதும் அமைந்துபோன மனித நிலை. இந்த 'அங்கீகரிக்கப்பட்ட' தத்துவ விசாரணைகளுக்கு தமிழ் சினிமாவே போதும். ஆகவே 'அங்கீகரிக்கப்பட்ட' தத்துவங்கள் இங்கு பிரச்சனையே அல்ல.

அங்கீகரிக்கப்படாத தத்துவங்களுக்குத் தலையணை உறை தைக்கலாமா? தத்துவ விசாரணைகள் அல்லாமல் ஆழம் கதைகளில் தோற்றுமா?

இலக்கிய ரீதியாக ஆழம் என்பது பல்மித பரிமாணம் கொண்டது. இதை இப்போதே விவரித்தால் இந்த ஆய்வு "சப்"பென்று போய்விடும். இந்தக் கதை தொடர்பாக ஆழம் என்பதைப் பிறகு பார்க்கலாமே!.

எங்களுக்குப் பரிச்சயமான தமிழ் எழுத்தில் என்ன ஆழமான தத்துவ நோக்குத் தெரிகிறது?

சிறு கதைகள் சிறு உண்மைகளைத்தான் சொல்வன என்பதில்லை. சிறு விஷயங்களின் விஸ்வரூபத்தன்மை பற்றி முன்னரே சொல்லிவிட்டேன். அதிலும் ஆழம் காண முடியும்.

என்ன ஆழமான தத்துவ நோக்கைப் புளிய மரக் கதை சொல்கிறது என்பதே விவாதம். சுரா இங்கே முக்கியமில்லை. ஆனால் கதையில் ஏதாவது தத்துவ நோக்குத்தெரியுமென்றால் அவர் பெயரை வைத்துவிடலாம்.

புளியமரக்கதைக் கட்டடம் பல அறைகள் கொண்டது. ஒவ்வொன்றாக முதலில் பார்த்துவிட்டு என்னமாதிரிச் சேர்க்கப்பட்டிருகின்றன என்கிற விவாதத்தில் இறங்கலாமா?. அல்லது முதல் கட்டடத்தைப் பார்த்த பின்னர் ஒவ்வொரு அறையாகப் பார்ப்பது நல்லதா? தற்காலத்தைய நவீன சிந்தனைப்போக்குகளில் அடிபடுகிற நேர்ப்பாடின்மையின் ஆதிகால, எளிய பிரதிபலிப்பில் அமைந்து போன கட்டமைப்பு இந்தக்கதைக்கு உண்டு விவாதித்தால், நேர்ப்பாடுக்காரர்கள் என்ன மாதிரி இந்தக் கதையை

உள்வாங்கிக்கொள்ளலாம்.? அவைகள் பிரச்சனைக்குரியதா அல்லது பிரச்சனையில்லையா?

ஜெயமோஹன் விவகாரம்

இந்த விமரிசனம் பாதி உருவாகி இருக்கும் போது, திண்ணை மின் பத்திரிகையில் ஜெயமோஹன் சுராவுக்கு அன்புடன், ஆனால் காரம் கலந்து ஜெயமோஹன் வெளியிட்ட இலக்கியக் கடிதத்தை வாசிக்க நேர்ந்தது. முதலில், "தமிழ்ச் சூழலில் இன்று தேவதேவன், பிரேம் ,எஸ். ராமகிருஷ்ணன் ,சி .மோகன்,நான் , என குறிப்பிடத்தக்கவர்கள் பலரும் சுந்தர ராமசாமியின் எழுத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களே" என்பதை வாசித்து, அது என்ன "எழுத்தை ஏற்றுக் கொள்வது" என்பதான பிராம்மணத்துவம் என்று குழப்பம் அடைந்தேன். கருத்துகளை ஏற்கலாம் அல்லது காரணங்கள் காட்டித் தவறு என்று நிரூபிக்கலாம். எழுத்து என்று குறிப்பிடப்படுவது சுராவின் கருத்துகள் யாவும் என்றால், ஜெய மோஹன் சொல்வது தன்மனத் தீர்மானமாக, அறிவு நீதி மன்றத்தில், முற்றாக நிலை நிறுத்த முடியாததொன்றாக அமைந்து போகும். மேலும், "எழுத்து" என்று சொல்வதனால், "உருவ வாதத்துவத்தை" நிலை நாட்டும் கோட்பாடா, அல்லது பல இந்தியர்களுக்கு உள்ள வியாதியான தற்குறித்தனமும் அகங்காரமும் சேர்ந்தான மனச்சிக்கலா என்று புரியவில்லை. எல்லாக்கருத்துகளையும் ஏற்று விவாதிப்பதுதான், அறிவு மரபு. இக்கடிதத்தில்,

" சு.ராவின் எழுத்து மிகவும் பிரக்ஞை பூர்வமானது. தொழில் நுட்பக் கச்சிதத்தை முதல் இலக்காகக் கொண்டது. நிதரிசனம் சார்ந்த உண்மையே ஒரே உண்மை என வலியுறுத்த முற்படுவது .ஆகவே அதனால் மன ஆழங்களுக்கோ அல்லது வரலாற்றின் ஆழங்களுக்கோ செல்ல முடிவதில்லை .அது எப்போதுமே 'நான்' ல் மையம் கொள்கிறது .தனது கருத்து தனது கோணம் ஆகியவற்றை மட்டும் முன்வைக்கிறது .ஆகவே அதில் மோதல்கள், உள்முரண்கள் இல்லை . ஆகவே அவை எளிய பகடி என்பதற்குமேல் உக்கிரமும் கொள்வதில்லை. எளிய சிந்தனைகள் , விமரிசனங்கள் ,மற்றும் நினைவு கூர்தல் ஆகியவை கலந்து உருவாக்கப்படுவது அது. "

என்று சுரா ஜெயமோஹனினால் அன்புடன் சாடப்படுகிறார். இதைப் பற்றியும் இந்த விமரிசனத்தில் விவாதிக்க வேண்டிய கட்டாயம் ஆகவே திணிக்கப் பட்டுப் போய்விட்டது.

இன்னோர் இடத்தில் ஜெய மோஹன் கட்டுரையில் "...அதேசமயம் மேற்கு தன் மரபில் இருந்து உருவாக்கிய கருத்துக்கள் மற்றும் வடிவங்கள் மீது விமரிசனமற்ற மோகம்.." சுராவுக்கு உண்டென குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆனால் புளிய மரக்கதையின் முன்னுரையில், "...உரு உத்தி இத்தியாதிகளில் மேல் நாட்டுக் களஞ்சியத்திலிருந்து கொஞ்சம் கொள்ளையடித்துத்தான் தீருவது என்று ஆசைப்பட்டோ, திட்டம் வகுத்தோ எழுதிய நாவல் அல்ல இது " என்று சொல்வதைப்

பார்த்தால் இந்தகுற்றச்சாட்டு சரியானதாகத் தெரியவில்லை.

'சுராவுக்கு மேல் நாட்டுக் களஞ்சியத்தில் ஆழ்ந்த பரிச்சயம் இல்லை, எனவே நினைத்தாலும் அவரால் திருட முடியாது' என்று தொடர்ந்து ஜெயமோஹன் விவாதத்தைத் தொடர வாய்ப்புண்டு.

பிரச்சனை என்ன என்றால், திசைகள் மனித சமூகத்திற்குப் பொதுவானவை. மனித விலங்குகளின் வாழ்க்கை ஒரு நெடுந்தூர ஓட்டம். எல்லார் ஓடுவதயும் மேலே இருந்து பார்க்கிறீர்கள் என்று வையுங்கள். ஓடும் தூரங்களைப் பொறுத்து - அவற்றை வாழ்க்கையின் பரிணாமங்கள் என்று சொல்லலாமா -சில வேளை எதியோப்பியன் முன்னால், சில வேளை அல்ஜீரியன் முன்னால், சில வேளை ஸ்வீடிஷ்காரன் முன்னால். மனித சிந்தனை ஓட்டங்களிலும் முன்னால் ஓடுகிறவர்களின் அடையாளம் மாறிக்கொண்டே தான் இருக்கிறது. மேற்கத்தியார்களின் வசதி வாழ்க்கையும் அது கொண்டு வரும் மனச்சிக்கல்களும், அவை பற்றி எழும் "உரு, உத்தி இத்தியாதிகள் " மேற்கத்தைய தொடர்பு ஊடகங்களின் வலிவினால், ஆழமும் வலிவும் படைத்த கருத்துகளாகத் தோன்றுகிற அபாயம் நிறையவே உள்ளது. ஆனால் மனித நேயத்திற்குப் பொதுவான விஷயங்கள் பல இருக்கின்றன. இரு விஞ்ஞானிகள் உலகின் வெவ்வேறு மூலைகளிலிருந்து ஒரே கண்டு பிடிப்பை நிகழ்த்துவதும் உண்டு.

ஏன் அவ்வளவு தூரம்? சுரா, "பிரமாணமாக உருவாகாத சிந்தனைகளும், தீர்ப்புகளுமே படைப்பில் கசிகின்றன" என்று புளியமரக்கதையின் முன்னுரையில் இரண்டாவது பெரிய பந்தியில் சொல்லப்பட்டிருப்பதை வைத்து, ஜெய மோஹன் "தன்னை மறந்தநிலை ஒன்று இலக்கிய ஆக்கத்தில் கைகூட வேண்டும் ,அது அந்தரங்கமாகவே இருக்கவேண்டும் என நான் சொன்னதை அவர் மறுத்து வாதாடியதும் உண்டு." என்று ஏன் சொல்லுகிறார் என்ற குழப்பம் எழலாம்.

இந்த கிழக்கு - மேற்கு விவகாரம் மிகக் குறுகலான விவாதம். மற்றவனைப் பார்த்துத்தெரிந்து கொள்வதில் தவறில்லை. மற்றவனும் ஓடுகிறான் என்ற பரந்த பார்வை தேவையே தவிர முன்னால் ஓடுபவனின் தொழில் நுட்பக் கச்சிதந்தொடங்கி மெய்யியல், வாழ்க்கையியல் தத்துவக் கோட்பாடுகள் வரையிலானவற்றை எடுத்துக்கொள்வதும் எறிந்து வீசுவதும் பற்றி வீணே சர்ச்சைப் படுவது தேவையில்லை என்று படுகிறது. மனித இருத்தல் என்பது, கிழக்கு மேற்கு சம்பந்தப்பட்ட நெருக்கல் இல்லை. பல்வித பரிமாணமும், மனிதனுக்கு வெளிப்படையாகத்தெரியாத பல் வேறு விஷயங்களும், உலகை அளக்க ஒரு சின்ன அடி மட்டமும் அமைந்து போன நிலையில், "மேல் நாட்டுக் களஞ்சியத்தில்" கை வைப்பது பெரிய குற்றம் ஆகாது. அதே நேரத்தில் எழுத்தாளனுக்கு "மேல் நாட்டுக் களஞ்சியத்தில்" பரிச்சயம் இல்லாமலிருப்பதுவும் குற்றம் ஆகாது. "மேல் நட்டுக் களஞ்சியங்களை"த் தாவும் பணி

ஏதாவது நடக்கிறதா என்பதுதான் கேட்கப் பட வேண்டியது.

இந்தக் கதையில் தொழில் நுட்பக் கச்சிதந்தான் பிரதானமா? படைப்பில் புதிதாக என்ன கண்டீர்கள்? ஆயிரத்தித் தொளாயிரத்தி அறுபது- எழுபதுகளைத் தாண்டிய பின்னர், ஐந்தாவது பதிப்பிற்கு வந்துவிட்ட படைப்பு என்ன காட்சியைக் காட்டுகிறது என்பதே ஆய்வு.

புளியமரக் கதை

முதலில் கதையை அனுமானித்துக்கொள்வோம். காலகட்டம்- இந்தியா சுதந்திரம் அடைய முன்னரும் பின்னரும் ஆன, தற்கால புள்ளி விவரங்கள், இயற்கையியல்படி ஒரு மரத்தின் பாதி வாழ் நாட்கள் என்று சொல்லலாம். அதில் குழப்பமிருப்பதாக பல பேர் குறைப்பட்டு, சுரா அதைச் சிறிது சரிப் பண்ணியதாக முன்னுரையில் சொல்லப்படுகிறது. கற்பனைக் கதையில் ஆதியில் குளத்தின் நடுவில் அமைந்து போன மரம்.

உண்மையில் கொலைக்குத் தப்பிய வேப்ப மரம்.

கதையில், இது வாழ்ந்து, நின்ற மேனிக்குப் பட்டுப் போய்விட்டு அழிந்து போன மரம். கூனிக்குறுகி பஞ்சுப் பொதித்தலைக் கிழவியைப் போலாகிப் போகும் வரை, நிழுலும் கொடுத்து, கர்ப்பிணிப்பெண்களின் நாவையும், நாக்கு நரம்பையும், ஆன்மாவுக்குக் கீழ் அடுத்த சவ்வையும் திருப்திப்படுத்தக்கூடிய பழங்களைக் கொடுத்த மரம். சந்தியில் நின்று தன் வெறும் இருத்தலினாலேயே பல மனித நிகழ்வுகளை ஏற்படுத்திய மரம்.

சந்தியில் மரம் நின்றதால் கதைக்கும் நேர்ப்பாடும் இயற்கையாகவே இல்லாமல் போய் விட்டது. ஆனால் வாசிப்பிற்கு இடைஞ்சல் இல்லை. இந்த அம்சம் தொழில் நுட்பக் கச்சிதத்தில் சேர்த்தி.

அதன் ஆதிகாலம் வெள்ளைக்காரர் ராஜவைக் கொண்டு ஆட்சி பண்ணிய காலம். அதைச் சுற்றியிருந்த குளம் ராஜாவின் நாசி நரம்புகளின் அதிமென்மை காரணத்தாலும், சேவகர்களின் எள்ளென்றால் எண்ணையைக் கொண்டுவரும் ஆர்வத்தினாலும் தூர்க்கப்படுகிறது. ராஜாவும் றொனால்ட் றேகன் மாதிரியான ஆட்சியாளர். டெவ்ப்லோன் ராஜா.

குளம் தூர்க்கப்பட்டு, சாலைகள் அமைக்கப்பட்டு, "ஜங்கூஷன்" வந்த நேரத்தில்தான் பெட்டியும் படுக்கையுமாக 'நான்' இன் குடும்பம் அந்த ஊருக்கு வந்து சேருகிறது. 'நான்' சேர்ந்திருந்த ஓரிளவட்டக்கூட்டத்தின் சோக்கிரத்தீசாக ஆசான்.

மரத்தின் பழைய கதைகளைச் சொன்னதே ஆசான் தான். புளிய மரத்தின் கிளையில்

சுருக்குப்போட்டுத் தற்கொலை செய்து கொண்ட செல்லத்தாயின் கதையும், மரத்தை வெட்ட வந்த கொப்ளானிடம் அந்த மரத்தில் "உக்கிர மூர்த்தி" ஒன்று குடியிருப்பதாய்க் கதை சொல்லி ஒரு கிளையை மட்டும் காவு கொடுத்து மரத்தைக் காப்பாற்றிய கதையும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சிறு கணத்திற்கு, இங்கே சுரா தத்துவவாதி ஆகி விடுகிறார்.

"பைத்தியம் என்பதும் ஒருவன் தன் அறிவை இழந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டதன் விளைவுதானே?" என்கிற விசனங்கள் உதிரித் தத்துவங்கள் மாதிரித் தோற்றினாலும் வாழ்க்கையின் இழப்பும், அழிவதும் ஆன இறுதிப் புள்ளியை மேலுறுத்தும் கதையின் திசையைக் காட்டத் தொடங்குகிறமாதிரி செருகப்பட்டிருக்கின்றன. இப்படியான செருகல்கள் மேற்கத்தைய பாணிகளிலும் உண்டு. ஸ்டைன்பெக்கும் செய்திருக்கிறார்.

புளிய மரம் மட்டுமல்லாது அதற்குத் தெற்கே இருந்த காற்றாடி மரத்தோப்பும், சுதந்திரம் வந்த பின் ஆன நவீனத்துவத்துக்குப் பலியாகி, ஒரு மேல் நாட்டுக்குப் போய்ப் பூங்காக் கலைகள் படித்துவிட்டு வந்திருந்த இளைஞன் உருவனின் வித்துவத்தின் பிரகடனமாக ஒரு நவீனப் பூங்கா அமைக்கப்படுகிறது. ஆசானின் கதைகளிலிருந்து பூங்காவின் முன் பிறப்பாயிருந்த கற்றாடி மரத்தோப்பின் மகத்துவத்தை அறிந்திருந்தவர்களின் கூட்டத்திற்கு இந்த நவீனத்துவத்தின் போலி தெரிகிறது. சுரா இந்தப்பூங்கா அமைக்கும் நவீனத்துவ போலித்தனத்தையும் அதன் வெறுமையையும் "கிண்டல்" தொனியில் தான் சொல்கிறார். நிச்சயமாக இவைகள் " எளிய பகிடிகள்" ஆக மாட்டா.

இந்தப் பூங்காக் கதை நடுவில் ஏன் வந்தது? நேர்ப்பாடாக வந்த கதையில் சற்றே இடறுகிறமாதிரி இது ஏன் நடந்தது? "இழந்தும் பெற்றும்தான்" நடக்கும் வாழ்க்கையைக் காட்டுவதற்காக என்று சொன்னால், இது சிறிய, தெரிந்த விஷயம் என்று விவாதிக்கப்படலாம். இது பற்றிய ஒரு குறிப்புப் பின்னால் வரும்.

புளிய மரம் பழங்களை இழந்த கதையைச் சொல்லுகையில், "தோட்டிகள்", "தோட்டிச்சிகள்" என்று சுத்திகரிப்புத் தொழிலாளரைக் குறிக்கும் பதங்கள் வருவதைக் குறையாக எடுத்துக் கொள்ளலாம். தகழியின், "ஓரு தோட்டியின் மகன்" ஐ மொழி பெயர்த்ததனால் இந்த உரிமையை எடுத்துக் கொண்டாரா? அல்லது கதை எழுதிய கால கட்டத்தில் அவற்றில் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லாதிருந்ததா? இப்படியான கவனமின்மை அல்லது மன அடி ஆழத்தில் புதைந்திருக்கும் கோணல்கள் கார்ல் மார்க்ஸ¤க்கும் இருந்ததை பலஸ்தீனிய அறிஞர் கலாநிதி எட்வர்ட் சயீத் ஒரு முறை குறியிட்டுக் காட்டினர். மார்க்ஸ், கீழைத்தேச மக்களை "வழிகாட்டி", மேற்கத்தியார் நடத்த வேண்டும் என்று ஓரிடத்தில் சொல்லும் போது எழுகிற முரண்பாடுகளை விவரித்துச் சொன்னார். மார்க் ட்வெயினின் "கிழக்கு கிழக்குத்தான் மேற்கு மேற்குத்தான்" என்கிற பிரிக்கும்

கோட்பாடுகளின் அடிமனக் கோடுகள் மாதிரி சுராவுக்கும் உண்டா? இந்து, முஸ்லிம் மக்களின் வாழ்க்கை அடி ஓட்டத்தில் இருக்கிற வித்தியாசமின்மையைக் காட்ட எடுத்துக் கொள்கிற முயற்சிகள் தோட்டிச்சிகள் விவரணையில் இல்லாமல் போய் விட்ட மாதிரித்தெரிகிறது. தோட்டிகளின் நிலவரம் "இழந்தும் பெற்றும் தான்" நடக்கும் வாழ்க்கை நியதியில் "இழந்து" போய்விட்ட கணக்கில் விதிக்கப்பட வேண்டியது என்றால் கவலைக்கு உரியதுதான்.

அந்த மாதிரியானவற்றைத்தான் ஜெய மோஹன் "ஒரு வகை ஜென்டில்மேன்" எழுத்தென்றும், "பிரேக்கில் காலை வைத்தபடி கார் ஓட்டுவதற்கு ஒப்பான" எழுத்தென்றும் குறை கூறுவதாக இருக்கலாம்.

புளியமரம் பழங்களை இழந்தது தெரியாமல் அதை நகர சபை ஏலம் விட முயற்சிக்க நடப்பவற்றைப் பற்றி விஸ்தாரமாக விபரித்திருக்கிறார். ஏலம் பதினொரு வருஷமாக நடந்திருக்குமென்றால் - அது சுதந்திரம் வந்ததன் பிறகு தொடங்கி இருந்தால் காலகட்டம் 1950 களின் கடைசி வருஷங்கள் என்று அனுமானிக்கலாம். ஆனால் காலகட்டம் 1950 களின் முதல் மாதிரியும் தோன்றுகிறது. "திருமனசு" ராஜ்யம் போனது பற்றிய கவலைகளும் சொல்லப்படுகின்றன. அது பற்றிய நோக்கு அந்தக்கால நோக்குகளைப் பகடி செய்துதான் இருக்கிறார். ஆனால் அவை எளிய பகடிகள் என்று சொல்ல முடியாது. பகடிகளுக்கும் கிண்டல்களுக்கும் பரிணாம வளர்ச்சி இருக்கிறது. சுரா அதை நன்றாகவே அந்த வளர்ச்சியின் திசையை உணர்ந்துதான் எழுதியிருக்கிறமாதிரித் தோன்றுகிறது.

அது ஒரு புறம் இருக்கட்டும். இந்தக்காட்சியில்தான் தாமு என்கிற தாமோதரன், புளிய மரத்துக்கு விஷம் வைத்த "கூலி" ஐயப்பன் இவர்கள் அறிமுகம். இந்திய சமுதாயத்தில் மேலோங்கி நின்ற நில பிரபுத்துவப் பார்வைகளின் ஆதிக்கம் முற்போக்கு எழுத்தாளர்களைக் கூடக் கட்டி வைத்திருப்பதை இந்த விபரணையில் பார்க்கலாம். இந்த விபரணைகளில் சுரா எந்த வித "பிரேக்"ம் பிடிப்பதாக இல்லை என்று சொல்லப்படலாம். "பறைச்சியும் சொல்லுவா சாம்பானும் சொல்வான்னு உண்டும்னா, கேக்குதுக்கு யாரு?" என்ற மேலாண்மைக்காரர்களின் பிரபுத்துவக் குறைகளை சுதந்திரமாகவே சொல்லும் சுராவுக்கு மற்றப்பக்கத்தின் குறைகளின் விபரங்களை எழுதத்தெரியவில்லை என்றும் சொல்லப்படலாம். சுரா தனக்குப் பரிச்சயமானவரின் சம்பாஷணைகளைத் தான் சேர்த்திருக்கிறார். இதில் கூடு விட்டுக் கூடு ப'யும் பிரயத்தனம் ஒன்றும் இல்லை. இதில் அவர் வெகு நேர்மையான எழுத்தாளர். இதில் எழும் பிரச்சனை என்னவென்றால், கதையின் பார்வையிலும் எழுத்திலும் கடைசியில் பிரபுத்துவ மேலாதிக்கம் இந்த முரணியக்கத்தில் வெல்லுமானால் மார்க்ஸ் சொன்னமாதிரி இவர்களெல்லாம் "தங்கள் விரல்களைச் சுட்டுக்கொள்ளாத, கவனமாய் இருக்கிற வறட்டுப் பிரகிருதிகள் (cautious philistines)" என்கிற குறை

வந்து சேர்ந்துவிடும். ஆனால் மேல் வட்டங்கள் புளியம்பழத் திருட்டைப் பற்றி விவாதித்துக் கொள்வதை நையாண்டி செய்யும் வலிவில் சுரா, ஜானகிராமன் பாஷையில், தராசைச் சரியாகத் திருப்பி விட்டு விடுகிறார்.

வெகு இயற்கையாக, மரத்தைக் கொல்லப்போகிறவர்களின் விவரணைக்குக் கதை தாவுகிறது. அப்துல் காதர் கடை முதலாளியான கதை முதலில். அதில் கோபால ஐயரின் கடையில் வேலைக்குச் சேர்ந்து அவர் விசர்த்தனத்தைப் பாவித்து கடையை வாங்கியது, மற்றும் ஜனாப் அப்துல் அஸீஸ் மூலமாக சிகரெட் ஏஜென்ஸி வாங்கியது, அவர் மகளைக் கலியாணம் செய்து கொண்டது, பணம் வந்தவுடன் செருக்கடைந்தது, சிறு கடைக்காரன் தாமுவுடன் சண்டை பிடித்தது இவைகளெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. சுதந்திரப் போராட்டத் "தியாகிகளின்" சுதந்திரத்திற்குப் பின்னாலான மன நிலைகளின் விபரணைகளில் சம்பவங்களின் சிக்கல்களினால், பல் வேறு பாத்திரங்கள் ஈடுபடுவதினால், எல்லாவற்றையும் நின்று நிறுத்தி இன்னும் பல்நுணுக்கமாகச் (sophisticated ஆகச்) சொல்ல முடியாத ஒரு நெருக்கடி ஏற்பட்டுப் போய் விடுகிறது. இந்த மாதிரியான நெருக்கடிகளில்தான் எழுத்தாளரின் பல்வித அறிவுகளும் தத்துவப் பார்வைகளும் தனிப்படுத்தும். இதுதான் ஜெயமோஹனின் சுரா மீதான குறைப்பாடு என்று படுகிறது. நுணுக்கமானதோ அல்லது புதியதோ ஆன பார்வைகள், இந்த விபரணைகளில் பெரிதாக இல்லையென்று குறைப்பட இயலுமென்றாலும், காலப் போக்குகளின் சித்திரப்படுத்தலில் தமிழ் நாட்டில் ஓரிடத்துச் சரித்திரத்தின் ஒருகால கட்டம் படம் பிடிக்கப்பட்டிருக்கிறது. பௌதீகத்தில் ஹைசன்பர்க் தத்துவம் என்று கேள்விப்பட்டிருக்கலாம். ஓர் அணுத்துகளின் இடப்பெயர்ச்சியைத் தீர்க்கமாக அளக்க முயன்றால் அத்துகளின் வேகத்தைத் தீர்க்கமாகத் தீர்மானிக்க முடியாதென்பதும், எதிர்ப்படையாக வேகத்தைத் தீர்க்கமாக அளக்க முயன்றால் இடப்பெயர்ச்சியைச் தீர்க்கமாகத் தீர்மானிக்க முடியாதென்பது இந்தத் தத்துவம். கதையில் பாத்திரங்கள் சம்பவங்கள் பெருகி சிக்கலாகி விடுமென்றால் நுணுக்கம் குறைவது வழக்கமாக நடப்பதே. அதுவும் தமிழ் எழுத்தில் இந்தக்குறை எப்போதும் காணலாம். இந்தத் "தத்துவத்தை" மீறுவதனாலேயே தோஸ்தயேவ்ஸ்கி, தோல்ஸ்தோய் இவர்கள் இலக்கிய வரலாற்றில் தனி இடம் பெறுகிறார்கள்.

கோபாலைய்யர் கடையிழந்தது ஒரு மனப்போக்கினால் என்றால் காதர் சிகரெட் ஏஜென்சியை இழப்பது இன்னொன்றினால். காதரின் பலகீனங்கள் பற்றி நேர்த்தியாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

காதரின் வீழ்ச்சிப் பாதையில் பத்திரிகை நிருபர் இசக்கி வகிக்கும் பங்கும், தற்போது ஈழத் தமிழருக்கு ஹிந்துப்பத்திரிகை ராமையும் அவர் சகாக்களையும் நினைவுறுத்தும் வகையில் நிருபர் எசக்கி திரித்து எழுதிச் சரித்திரத்தை மாற்றும் பத்திரிகா தர்மமும் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

காதர் தாமு இருவரும் அரசியலில் குதிக்க முயன்று, இருமுனைப் போட்டியை மாக்கியவெல்லித்தனமாக தாமு கட்சி ஏழை முஸ்லிம் கிழவரை வைத்து மும்முனைப்போட்டியாக்கி, அவர் வெற்றியினால் தோற்றுப் போய்விட, அவர்கள் போட்டி அடுத்த மட்டத்திற்குப் போகிறது. நிருபர் இசக்கி இந்தப் புளியமரத்தின் நிழலில்தானே தாமுவின் கடை இருக்கிறது என்பதைக் காதரிடம் சொல்லி அதை முனிசிப்பாலிடி மூலமாகவும் தன் நிருபத்துவம் மூலமாகவும் எடுத்துவிட முயல்வதும் அதற்கெதிராகத் தாமு கோஷ்டி எடுக்கும் முயற்சிகளும் விபரிக்கப்படுகின்றன. முனிசிப்பாலிடி மரத்தை வெட்டத் தீர்மானித்தாலும் அம்மனை மரத்தில் ஏற்றி கொன்டிராக்டரை ஓடப் பண்ணி விடுகிறார்கள். கடைசி முயற்சியாக ஐயப்பன் மூலமாகக் காதர் மரத்தில் பாதரசத்தை வைத்துவிட புளிய மரம் இறந்து விடுகிறது. இந்த இழப்பு முடிந்து என்ன பெற்றல் நடக்கப்போகிறது என்பது தெரியவில்லை. இழந்தும் பெற்றுமான வாழ்க்கை மரத்துக்குக் கடைசியில் இல்லாமல் போய்விட்டது.

கதையின் சில பாத்திரங்கள்

ஆசான்

தாமோதர ஆசான் கொளபீனம் காட்டியபடி வேட்டி அணிகிற, 63 வயதுத்தோற்றம் உள்ள 80 வயதுக் கிழவர். மனம் - உடல் திடகாத்திரம், சின்ன வீடு, புகையிலை சுருட்டு ரசனை கொண்ட எல்லாவற்றிற்கும் மேலாகக் கதைக் களஞ்சியமுமான நாட்டு வைத்தியர். ரமண மகரிஷியும் இல்லை மற்றும் காதில் விழும் கதைகள் அடிப்படையில் கிழ வயது ஜெமினியுமில்லை. சாந்தன்புதூரில் ஒரு வைப்பாட்டி - மற்றவைகள் தெரியவில்லை. தத்துவ வாதி. முன்னர் கதைகள் வாசிக்கும்போதெல்லாம் எவ்வளவு து¡ரம் ஒரு மனித மனத்தின் கோடுகளையெல்லாம் அறிந்து ஒரு மனித சீவனை நெருங்கி எழுத முடிகிறதோ அந்த நெருக்கத்தின் அளவு கோலை வைத்துக் கதையை எடை போடுவதுண்டு. இந்த ஆசானின் கதைகள் சொல்லும் ஆற்றல் மட்டுமே எங்களுக்குத்தெரியும். ஆசானை ஓரளவுதான் நெருங்க முடியும். கிட்ட இந்தப் புளியமரம் ஒரு முறை காப்பாற்றப் பட்டதன் காரியகர்த்தா. மரத்தை வெட்ட வருபவனை எப்படி "உக்கிர மூர்த்தி" அதில் குடியிருப்பதாய்ச் சொல்லிக் கிளையை மாத்திரம் வெட்டும்படி அவனைத்திருப்பி மரத்தைக் காப்பாற்றும் கதையைச் சொல்வதில், எவ்வாறு பொய்சொல்வது ஒரு புனிதமான காரியமாகிறது என்பதை நன்றாகவே காட்டியிருக்கிறார். ஆசான் "மனிதன் தான் பிரம்மா, மனிதன் தான் விஷ்ணு, மனிதன் தான் சிவன்" என்று சொல்வது, "கடவுள் இல்லை" என்று சாகும் போது சொன்னதாக வந்த கதை, அவர் கையினாலேயே ஆசான் சுட்ட புலியின் தோலைப் பற்றி சாந்தன்புதூர்க்காரியின் கதை இவைகளெல்லாம் ஆசானின் சிக்கலான குணாதிசயங்களைக்காட்டும். நடைமுறைத் தத்துவவாதி. இவரே கதையின் அசாதாரண புருஷர். ஆனால் மரத்தைக் காப்பாற்றுவதைத் தவிர வேறெதுவுமான ஆழ்ந்த சிந்தனையைக் காட்டியோ இவர் நிறுத்தப்படவில்லை. ஆசான் இவ்வாறு

காட்டப்பட்டதற்கு சுராவின் அறிவு வீச்சின் குறுமைகள் காரணமாகுமா?

கதைகள் சொல்வது என்பது பல் வேறு சமூகங்களில் மரபாயிருந்தது -இன்னும் இருக்கிறது. எழுத்து மூலமான ஊடகமில்லாத ஆதிகுடி மக்களிடம் இம்மரபு நடந்தவற்றைப் பற்றிச் சொல்வதற்காய் இருந்தது. பரம்பரை பரம்பரியாகக் கேட்டுக் கொண்டு வந்த கதைகளும் இளைஞருக்குச் சொல்லப் பட வேண்டிய அறிவுரைகளும் வாய்மொழி ஊடகத்தினூடாகவே நடந்து வந்திருக்கிறது. ஆபிரிக்க, மற்றும் செவ்விந்திய மக்களின் தத்துவங்கள் வாய் மொழி ஊடகத்தினூடாகவே, சில வருடங்கள் முன்னால் வரை சொல்லப்பட்டு வந்திருக்கின்றன. இம்மக்களிடையே தோன்றும் நவீன எழுத்தாளர்கள் இந்தத் தொடர்ச்சியின்மையை மிக ஆழமான கருத்துக்களைச் சொல்லப் பயன் படுத்தி இலக்கிய மேல்வட்டத்தில் இருக்கிறதாக நினைக்கப்படும் பெரிய பேர்களைக் கூடச் சிறுவர்களாக்கும் நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். இம்மக்களின் வாழ்க்கைகளைச் சித்தரிக்க முயல்வதிலேயே அவர்கள் கதைகள் தனித்துவம் பெறுகின்றன. கார்லோஸ் கஸ்தனேடாவைப் பற்றி முன்னர் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் அவ்வளவு தூரம்? பாமாவின் "இச்சி மரத்துக் கொரங்கு" (கண்ணில் தெரியுது வானம் - 2001) கதையிலும் ஒரு மரம் தனித்துவம் பெறுகிறது. ஒரு கிராமப்புறத்திலான இச்சி (அரச) மரமும், மரத்தில் இருக்கிற குரங்குக் குடும்பமும், குரங்கு பன்றி முதுகில் ஏறி கொண்டதான சம்பவமும், அங்கேயே படித்து டீச்சராகிப் போய்விட்ட பார்வதியும், அவள் பள்ளிக்கூட வள்ளியும், குரங்கும் பன்றியும் பரிமாறிக் கொள்கிறதாக நினைக்கப்படுகிற சம்பாஷணையும் தோற்றுவிக்கும் சித்திரமானது மனித நிலையின் எளிமையில் வாசகர்களைத் தள்ளி இருத்தலின் சாரத்தைக் காட்டுகிறது. பாமாவின் இந்தக்கதையில் அமைந்து போன சித்திரப்பாட்டையும் சுராவின் எழுத்தோட்டங்களையும் ஒப்பிட்டீர்களானால் சுராவின் பார்வையில் ஓடுவதான மேல்மட்டத்தனமும் பாமாவின் பார்வையில் ஓடுவதான, எளிமையும் வலிவும் இயற்கையானதுமான கிராமத்து மக்களின் பார்வையோட்டமும் பளீரென்று தெரிய வரும். சுராவின் எழுத்து "பிரக்ஞை பூர்வமானது" என்று வாதிக்கும் நேரத்தில், தன் மேல்மட்டத்தனத்தைப் பற்றியதான சுயப் பிரக்ஞை இல்லாமல்தான் சுரா எழுதுகிறார் என்று சொல்லலாமா? இது பற்றி ஆய்வு செய்தவரையில் சுராவின் பார்வையில் மேல்மட்டத்தனம் இருந்தாலும், இந்தக்கதையில், அவர் தராசு வலிவிழந்தவர் பக்கம் தான் சாய்வதென்று எனக்குத் தோன்றுகிறது. மார்க்சீயக்கோட்பாடுகளின் படி வர்க்க முரண்பாடே அடிப்படியானது. இன்றைய காலச்சூழலில், தெற்காசிய சமூகங்களில், வர்க்க முரண்பாடுகள் சாதி முரண்பாடுகளை விட ஆழமாக இல்லாது இருக்கும் தோற்றப்பாடு, இச்சமூகங்களில் தொழில்வினை நிலை நிலப்பிரபுத்துவ நிலையை முற்றாகத் தாண்டாமல் எழுந்து, நகரத்தார் வர்க்க முரண்பாட்டிற்கடியும், கிராமத்தார் சாதி முரண்பாட்டிற்கடியிலும் அமைந்து போன நிலைப்பாட்டில் எழுகிறது. வர்க்க நிலை உயர, சாதி அடிப்படையில் முரணாவது குறையும். வர்க்க நிலை கீழே அமைந்து சமனாக இருக்கும் போது சாதியை வைத்து முரண்படும் போக்கு அதிகரிக்கிறது. மார்க்சின் முரண்பாட்டியல் சிந்தனையில்

மூன்றாம் நிலக்கு நிரந்தர இடமில்லை. பூர்ஷ்வா சிந்தனைகள் என்று வருணிக்கப்பட்டு சரித்திரம் இந்தச்சிந்தனைகளைத் தேய்த்துத் தொழிலாளர் வருக்க சிந்தனைப் போக்குகளில் கொண்டுவரும் என்று நம்பிய மார்க்சிற்கு, சிந்தனைப்போக்குகளில் அமைந்திருக்கும் சாம்பார்த்தனம் பற்றி அறிந்திருக்க சந்தர்ப்பமில்லை.

காதர்

காதர் மிகவும் பிரயாசையான, மேலிடத்தை எட்டுவதைக் குறியாக வைத்திருக்கும் ஆசாமி. கோபாலய்யர் வலிவிழ்ந்த போது அவருக்குப் பணம் அனுப்பி வைக்கும் தருமமும் படைத்தவன். அவன் பணத்தில் வைக்கும் குறிகளுக்குப்பின்னால் இருக்கிற சரித்திரத்தைக் கோடி காட்டிவிட்டுப் போய் விடுகிறார். கதையில் எது குறி? காதரின் காமவாழ்க்கையின் விவரங்களா, தன் பணக்குறிகளே நெருக்கித் தன்னை மறுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயங்களையும் "இழந்தும் பெற்றும்" ஆன வாழ்க்கைத் தத்துவத்தில் உள்ளடக்கி விடலாம் என்பதுவா?

எங்கேயோ ஆன குறி இறுதியில் மரத்தை அடைந்து அதைச் சரிக்கிறது. இதுவே கதையின் வலு. தொடர்ச்சியாய் ஊரில் நடந்தனவெல்லாம் ஆரம்பமாகவும் இறுதியாகவும் மரத்தில் சேர்ந்து கொள்வதைக் காட்டி ஓர் ஊரின் கதையை நிறுத்திய சமச்சீர், இலகுவில் கிடைக்காத ஓர் இலக்கிய அனுபவம்.

குறி அமைய முடியாத ஒரு சூழலை ஏற்படுத்திக் கொண்டு, ஊரின் கதையைக் கட்டிச்சொல்ல வேண்டிய நிலையில் தன்னைத்தானே கொண்டுபோய்விட்டு விட்ட பின்னர், அங்கத நடையே சாத்தியமானது.

தாமுவும் மற்றும் பலரும்

தாமுவின் சுதந்திரத் தியாகங்கள், கொள்கைக்கும் வியாபாரத்துக்குமிடையில் மனத்தில் ஊசலாடுவதை அழகாக எடுத்துக்காட்டும் சுராவுக்கு, வர்க்கக் கோட்டின் எந்தப் பக்கத்தில் இந்தத்தோற்றப்பாடு இருக்கிறது என்று தீர்க்கமாகக் விபரிக்கும் ஆசையில்லை. "கூலிகள் எல்லா மதத்திலும் உண்டு என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்கிற தாமுவின் கேள்விகள் சுட்டிக் காட்டினாலும் தொனி எந்தப்பக்கத்தில் அமைந்து போனது என்று இலகுவில் தோற்றுவதில்லை. இந்தத் தொனி வித்தியாசத்தாலேயே, கதைப்பொருள் ஒப்பிடக்கூடியதான நிலை இருந்தும் ஜெயகாந்தனின் அந்த நாளைய எழுத்திற்கும் சுராவின் எழுத்திற்கும் வேறு பாடு அமைந்து, சுராவின் எழுத்தில் ஒரு வகைத் திசையிலாத்தனம் இருக்கிற மாதிரி சில விமரிசகர்கள் குறைப்படும் படியான நிலை எழுகிறது. உண்மையில் சுராவின் விபரணைகளில் தோற்றும் தொனியில் அமைந்துபோன உபதொனிகள் மூலமே அவர் நிலையைக் காணக்கூடியதாக இருக்கிறது. பட்டும் படாமல் இருக்கிற உபதொனிகள்,

அங்கத நடையினால் சில விமரிசகர்களில் படாமல் போகிற படியால், இந்தப் பேச்சு வாங்க வேண்டியிருக்கிறது. கருனாடக சங்கீதத்தில் உள்ள "அழுத்தமான பாட்டு" என்றும் " வாய் நுனிப் பாட்டு" என்கிற ஒப்புவமைகள் மாதிரி எழுத்திலும் சொல்ல முடியும். "தலையணை உறை தைக்க முடியாது" என்கிற பிடிவாதத்தை வர்க்க ரீதியாகவும் காரணப் படுத்தி விவாதிக்க முடியும். இலக்கிய சுதந்தரத்தைப் பேணும் ஓர் எழுத்தாளனின் நிலையை அடி ஆழத்தில்தான் காண முடியும். இதுதான் சுராவுக்கு நடப்பதான கோட்பாடு. கதையின் சாரத்தில் தர்மங்கள் காப்பாற்றப்படுவதையோ மற்றும்படியான "அங்கீகரிக்கப்பட்ட ஆன்மீகத் தத்துவங்கள்" நிலை பெறுவது பற்றியோ ஒரு குறிப்பும் இல்லை. எனவே இந்திய எழுத்துகளின் மறு வகையான் வான் மய, "ஆன்மீகக்" கோட்பாடுகளையும் நிலை நிறுத்தாததில் சுரா தலையணையுறை தைக்க முடியாத தத்துவ நிலை பற்றி உண்மையாகவே இருந்திருக்கிறார். ஜெய மோஹனுக்கு இது குறையாக இருக்கிறது.

சிறு பத்திரிகை நிருபர் என்றாலும், விஷயங்களைக் கட்டுப்படுத்தலிலும் தன் விருப்பங்களுக்கேற்றவாறு திரிக்கும் கெட்டித்தனத்திற்கும் இந்து ராமுக்கொப்பானவர் என்று தெரிகிறது. புளிய மரத்தின் சரித்திரத்தை மக்களுக்குப் பத்திரிகை மூலமாகச் சொன்ன பெருமை அவருக்கு. நிருபர் வேலையிலான மனப்பாங்குகளே விபரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விவரணைகள் மூலமாகக் கிடைப்பதுவெல்லாம் " தில்லானா மோகனம்பாள்" வாசிக்கும் அனுபவத்திற்கு ஒப்பானதே தவிர ஆழத்தை வேறு பிரதிபலிப்புகள் மூலமாகத்தான் காண முடியும்.

கதையின் விசாரபலம்

கதை பல தமிழ்க்கதைகளைப் போல், எந்த விசாரத்தையும் தூக்கி அலசுவதாக இல்லை. ராஜ் கௌதமனும் அவர் பின்னுரையில் அதைக்குறிப்பிடும் கட்டாயம் அமைந்து போய்விடுகிறது. "காண ஆசைப்படுவதையெல்லாம் கண்டு விட்டதாகவே சொல்லிவிடலாம். ஆட்சேபணையில்லை" என்கிற முன்னுரை மாத்திரம் ஒரு வேலியாக அமைந்து விடவில்லை. கதையின் ஓட்டமும் குறி வைக்க முடியாத கதைப்பொருளும் ஒரு வகை விசார பலமின்மை இந்தக் கதைக்குத் தருவதாகத் தோற்றும். ஆச்சரியமாக இவைகளே கதைக்கு ஒரு தத்துவத்தொனியைத்தருகின்றன. ஆசான் ஒரு தத்துவ வாதி என்று சொல்வதிலும், "மனிதன்தான் பிரம்மா, மனிதன் தான் விஷ்ணு, மனிதன் தான் சிவா" என்று சொல்வதிலுமான ஆழம் வரையே இந்திய கிராமத்து / சிறு நகரத்து நடை முறை நிலையில் தத்துவார்த்தங்கள் எட்டுகின்றன என்று குறைப்பட்டால், ஜெய மோஹனின் விஷ்ணுபுரத்தை வாசித்த பின்னர் தமிழ் சினிமாவையும் பார்த்து ரசிக்கும் நகர் மக்களின் மன முரண்பாடுகளையும் ஒப்பிட வேண்டும். சீஷாவல்லியிலான " இஷ்டம் மனிஷான, அமும் மனுஷான, சர்வம் மனிஷான " என்பதை ஆசான் சொல்லவில்லையென்று குறைப்பட முடியாது. ஆசான் ஆனவரால் மனிதனின் பௌதீக நிலை, லௌகீக விசாரம், ஆன்ம விசாரம் இவைகள் பற்றி ஒரு கிராமம் / சிறு நகரச் சூழலில் எட்டக் கூடிய நிலை அதுதான்.

சுராவின் சிந்தனையில் புதியவைகள் நிறையவே இருக்கின்றன. சென்னையில் இருந்து வந்ததெல்லாம் திருவல்லிக்கேணியைத் தாண்டாத நிலையில் நாகர்கோவிலுக்கு இழுத்துச் சென்று "அட மாந்தயா! ஆலகால விஷமில்லா!" என்றவகைளைக் கேட்கப் பண்ணி, ஓர் ஊரின் கதையை புளிய மரத்தை மையமாக வைத்து எழுதி, போதுமான ஆழத்தில் தன் நிலைகளைப் புதைத்ததில் இது தெரியும். நாகர் கோவிலுக்கு வாசகர்களை இழுத்ததான பணி இந்தியத் தமிழ் இலக்கிய பரிணாமத்தில் முக்கியமான புள்ளி.

கதையில் சொல்லப்படும், தோற்றும், வாழ்க்கையின் பரந்த வெறுமையும், வெங்காயத்தோல்த்தனமும் ஊரையும் மரத்தையும் சாய்ப்பதைக் காட்டுவதான முயற்சியில் சுராவுக்கு வெற்றியே. இதில் சூழலையும், சரித்திரத்தையும் இணைத்திருப்பதில் முக்கியத்துவம் பெறுகிறது. இலக்கியத்தில் ஆழம் காண்பது என்பது கிணறு தோண்டுவதற்கொப்பானது. தோஸ்தயேவ்ஸ்கியின் கதைகள் அழுத்தமாகவும் விரிவாகவும் சொல்லப்பட்டிருக்காவிடில், அவற்றின் இருப்புவாதத் தொனி யாருக்கும் கேட்டிருக்காது. அங்கத நடையில் இறங்கிய சுராவுக்கு இந்தத்தொனிகளும், நலிந்து போன மனித இருதயங்களைக் காட்டும் பணியிலான தொனிகளும், உப தொனிகளாக இருப்பதில் கதையின் விசார வலு தோற்றாமல் போய் விடுகிறது.

****

இந்திய பாரம்பரிய த்வைத , அத்வைத, விசிஷ்டாத்வைத சிந்தனா ஆழங்கள் என்று கருதப்படுவனவற்றில் பல கோட்பாடுகள் பிராம்மணத்துவ, நிலப்பிரபுத்வ சிந்தனைகளிலான சுருட்டல்களே தவிர சரித்திர ஓட்டத்தையும் வாழ்வின் அன்றாட யதார்த்தத்தையும் பண்ணையில் வேலை செய்பவனின் வியர்வையையும் கண்கொண்டு சொல்லப்பட்டவையல்ல. இதனால் அவற்றிற்கு இடமில்லையென்றும் சொல்லிவிட முடியாது. எல்லாவித வாழ்க்கையோட்டங்களையும் மீறுவதான உரிமை சிந்தனாவாதிகளுக்கு உண்டு. வருக்க, சாதிய சிந்தனைகளைக்கும் மேற்படுவதான வெகுவெளிப்பட்ட பார்வைகளே உண்மையின் முழுமைக்கு உதவுமென்றாலும், மனித சிந்தனையின் பரிணாமத்தில் பழங்காலத்தில் பிளேட்டோவிலிருந்து வேதங்கள் வரை எல்லாவற்றிற்கும் அமைந்து போன ஓரளவிலான உண்மை விகிதாசாரத்தை யாரும் விவாதிக்கமுடியாது. புளியமரத்தின் கதையில் இந்திய மதத்துவ பாரம்பரிய சிந்தனையோட்டம் இல்லை - நவீன மேற்கத்தைய சிந்தனைகளின் சாயல்களும் இல்லை என்கிற குறைகளுக்கு நிவர்த்தியாக, நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த முன்னும் பின்னுமான ஒரு கால கட்டத்தில் ஓர் ஊருக்கு நடப்பதை அங்கீகரிக்கப்பட்ட தத்துவங்களுக்குத் தலையணை உறை தைக்கமுடியாதென்பதான பிடிவாதத்துடன், சரித்திரத்தின் ஓட்டத்தில், கோணல் சிந்தனைகளிலிருந்தான விடுதலையைத் தருவதாக

விபரணைகள் அமைந்து போயிருக்கின்றன. "இழந்தும் பெற்றுமான வாழ்வு" என்கிற கோட்பாடு தத்துவத்திசை. ஓர் ஊரின் கூட்டு மனத்தைத் தேடும் முயற்சியானது இலக்கியத்திசை. இவைகள் பாராட்டப்பட வேண்டியவைதான்.

வெறும் சரித்திர ஓட்டமான, சிறுமையான சூழல்களிலும் பல எழுத்தாளர்கள் மனிதத் தொடர்புகளின் இறுக்கத்தையும் வக்கிரங்களையும் அழுத்தமாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அந்த மாதிரியான அழுத்தத்தை இந்தக் கதைக்குக் கொடுக்க சுரா முன் வரவில்லை. அவரால் முடியாது என்று சொல்ல இடமில்லை. பின்னால் வந்த நாவல் "பெண்கள் ஆண்கள் குழந்தைகள்" தொடர்புகளின் சிக்கல்களை நன்றாகவே எடுத்துக்காட்டுகிறது. சுரா தன் சொந்த வருக்க சிந்தனையிலிருந்து தப்ப முயலாமல் கதையைச் சொன்னதிலும் ஒரு நேர்மை அமைந்தே போயிருக்கிறது. இலக்கியப் படைப்புகளின் முழுமையின் அளவு கோல்களான கால கட்டம் , கதை நடக்குமிடம், கவனிப்பற்றோரிலான கவனிப்பு ஆகிய பரிமாணங்களில் கதை முன்னிடம் வகிக்கிறது. ஒரு கணம் நிதானித்திருந்தாரென்றால் அவர் சொல்ல வந்த வாழ்க்கை ஓட்டத்தின் இறுதித்தோல்வி பற்றி இன்னொரு வரி கிடைத்திருக்கும். தோல்வியான வாழ்வில் எந்தத் தத்துவத்திற்கும் தலையணையுறை தைப்பதுவும் வீணானதுதான் என்பதுதான் சுராவின் திசை போல் தோன்றுகிறது.

sisridharan@yahoo.com
பதிவுகள், ஜூலை 2003 இதழ் 43

19. "ஜே. ஜே.: சில குறிப்புகள்": சிறு குறிப்புகள்! - ரமணிதரன் -

வெளிவந்து ஏழு வருடங்களின் பின்னர் கேள்வியுற்று, -தேடியும் கிடைக்காது- இருபதுவருடங்களின் பின்னர் இருபதாம்நூற்றாண்டும் முடிந்தபின்னர் -தற்செயலாக தானே வீடுவந்து தட்டியபோது- வாசிக்கக்கிடைத்த குறிப்புக்கள். இந்தக்காலதாமதத்தினால் குறிப்புகளை எழுத்தாளரின் எழுத்தூடான நேரடிச்சாட்சியாக உணரமுன்னர், திறனாய்வு·விமர்சகத்தரகர்களின் பார்வைப்பூச்சுக்கூடாய்ப் பார்க்கவேண்டி ஏற்பட்ட (அவ)நிர்ப்பந்தம் (இன்னும் வாசிக்காது விலத்திக்கொண்ட சிலகுறிப்புகளின் பின்னான ·பிரான்ஸ்வா க்ரோவின் உரை தவிர) அவ்வப்போது ஏற்பட்டதனைத் தவிர்க்கமுடியவில்லை. அதே நேரத்திலே, இதே காலவிடைவெளி இந்நூல் மேலான விமர்சனங்களுக்குக் கதாசிரியரின் தன் விளக்கங்களையும் வாசிக்கத்தந்தது. இத்தனைக்குப்பின்னரும், ஆசிரியர் 99ம் ஆண்டு குமுதம் இதழிலே, "'ஜே:ஜே: சில குறிப்புகள் ' மீதான முழுமையான விமர்சனம் இதுவரை வரவில்லை" என்பதாகக் குறிப்பிடுகின்றார். எந்தவொரு ஆசிரியரினதும் கருத்துக்களும் குறியீடுகளும் அதன்மீதான எதிர்பார்ப்புகளும் முழுக்கமுழுக்க சக எழுத்தாளர்களாலும் விமர்சகர்களாலும் வாசகர்களாலும் அவர் அமைத்த வியூகத்தின் மர்மஸ்தானங்களைப் பிளந்துமட்டுமே புரிந்து உள்வாங்கப்படும் என்று எதிர்பார்க்கமுடியாது. அப்படி நிகழாத அதேநேரத்திலே, தனது முடிச்சுகள் தான் எதிர்பார்த்த கோணத்திலோ வேறேதோ மாற்றுச்செயலாலோ முற்றாக அவிழ்க்கப்படும்வரை, ஆசிரியன் தன் படைப்பு முழுக்க வெற்றியடைந்ததாகக் கருதிக்கொள்கின்றதில்லை. இங்கே அப்படி நிரப்பப்படாத வெளியின் ஓரிரு துவாரங்களை - கதைக்குறிப்பானவனையோ குறிப்பிட்டவரையோ சாராத புலமும் பேசப்படு காலமும் அமைந்துபோய், 'குழுக்கருந்துவாரங்கள்' உள்ளிழுத்துக்கொள்ளாத, விமர்சனத்தினைச் சாக்கிட்டு மறுவாசிப்பு~உடற்பகுப்பாய்வு செய்துகொள்ளாத ஒரு வாசகனுக்குச் சொல்ல என்ன மிஞ்சியிருக்கக்கூடுமா என்ற தயக்கத்தோடு- எழுந்தவாக்கிலே நிரப்ப எண்ணுகிறேன். அதனால், சொல்லப்பட்டவை மீண்டு இந்தச்சிறுகுறிப்புகளுள்ளே சொல்லப்பட்டால் குறை தவிர்க்கவேண்டுமென விழைவு.

நாவலுக்கு இலக்கணம் வலிந்து அதன்படி 'தமிழின் சென்ற நூற்றாண்டின் சிறப்பான பத்து பட்டியல்' வகுத்து, தனது இரண்டு புதினங்களை முன்னுக்கு வைக்கின்ற எழுத்தாளத் திறனாய்வுக்குழவிகள் தொடங்கி, தாள் தேர்ந்து நூல் வாசித்து பிடித்தபத்து பொறுக்கும் பெரும்பாலான 'சாதாரண வாசகர்'வரைக்கும் எவருமே தமது பத்துக்குள் ஜேஜேயின் குறிப்புகளைத் தவிர்க்கமுடியாமற்போனதற்கு, குறிப்புகளின் கருவும் பாத்திரப்படைப்பும் சொற்செதுக்கலும் இழை மேவிச் சீராய் ஊடுபாவி அமைந்துகொண்ட விதமே காரணமாக இருக்கின்றது என்று தோன்றுகின்றது. எழுத்தாளர்-திறனாய்வாளர்-வாசகர் என்ற முக்கோணமுடுக்கிலே கதையின் பாத்திரங்கள் மாற்றி மாற்றி தம்மை இடம் பெயர்த்துக்கொள்கின்றன. அதே நேரத்திலே,

குறிப்புகளை வாசிக்கின்றவர்களும்கூட தெளிவாக விளக்கமுடியாத காரணங்களின் உந்தலால், தம்மை ஏதோவொரு பாத்திரத்தால் ஆரம்பத்திலே அடையாளம் கண்டுகொண்டு, தாமும் கதையோட்டத்துடன், ஜேஜேயின் குறிப்புகள் மேலான பாலுவின் குறிப்புத்தளத்துக்குச் சமாந்திரமான இன்னொரு தளத்திலே, வேறொரு கோணத்திலே அதே பாத்திரங்களோடு தமக்கான சொந்தக்கதையைக் கோலாட்டி வழிநடத்திச் செல்ல நேரிடுவதாகின்றது. இந்தவிதத்திலே, பதிவாளன் பாலுவூடாக ஆசிரியர் என்ன சொல்லவந்தார் என்பதிலும், வாசகனின் பிறிதான பதிவாடியிலான தெறிப்புகளும் முக்கியமாகின்றன. இதன் காரணமாக, ஆசிரியரின் காலடியொற்றிப் பாதம் பதித்தாடும் கட்டாயத்திலிருந்து வாசகன் தளர்த்தப்படுகின்றான்; விடுவிக்கப்படுகின்றான். இ·து இந்தப்புதினத்துக்கு மட்டுமேயான சிறப்பில்லையெல்லையென்றாலும், எல்லாப்புதினங்களுக்கும் இச்சாத்தியம் ஏற்படுவதில்லை.

இந்தச்சாத்தியம் நிகழ்வதற்கு பாத்திரப்படைப்புகளின் முளைப்பும் அமைப்பும் செதுக்கலும் விவரிப்பும் ஆசிரியனாலே முழுமையாக வரையறுக்கப்படாது, வாசகனுக்கு வேண்டியபோதிலே கைகொடுத்து விழையாப்பொழுதிலே விலகி நின்று கவனித்து, இன்னொரு பொழுது படைப்பும் தெறிப்பும் மீள ஒட்டிக் கொள்ளும் வண்ணம் நிகழ்த்தல் வேண்டும். இது மண்டையோடு பிளந்து மூளை அறுவைச்சிகிச்சை செய்யும் கலை; சற்றே நெருங்கினால், வாசகனின்மீது பாத்திரத்தின் செறிவின்மீதான திணிப்பும் சற்றே விலகினால், கதைமீதான ஈடுபாட்டு விலகலும் நிகழும் என்ற கம்பியிலே எம்பிக்குதித்துக் கால் தந்தியாடும் நிலை. ஜேஜேயின் பதிவு மட்டுமல்ல, அரவிந்தாட்சமேனன், எம்.கே.ஐயப்பன், முல்லைக்கல் மாதவன் நாயர், திருச்சூர் கோபாலன் நாயர் என்று மட்டுமின்றி, சாராம்மா வரைக்கும் இதே காட்டியும் காட்டாமலும் வாசிப்பவர் கற்பனைக்கும் இடங்கொடுத்து கவர்ச்சி தரும் செயல் நிகழ்கின்றது. தமிழ் எழுத்துமட்டத்தின் முந்தநாளையும் நேற்றினையும் இன்றினையும் வாசிப்பாகப் பாதி, ஊர்வம்பூசியேறிய செய்தியாக மீதி கண்டு நடக்கும் தினசரி வாசகன் மட்டுமேயானவனுக்கு, ஆசிரியரின் பாத்திரங்கள்மீதான அறிமுக விவரணங்கள் - இது மலையாள இலக்கிய உலகத்தின்மீதான பார்வையா தமிழ் இலக்கிய உலகத்தின்மீதான பார்வையா என்பதற்கு ஆசிரியர் ஆங்காங்கே கொடுக்கமுயற்சித்த விளக்கங்களை அவரின் ‘விரிவும் ஆழமும் தேடி’யிலே அங்கும் இங்கும் காணமுடிந்தபோதும்- “யாரோ, இவர் யாரோ? இவரோ? அவரோ?” என்ற உருவகிப்பினை ஏற்படுத்தினாலும், கதை விரியுமிடத்திலே ‘அந்தத்’ தனியாளை ‘இந்தப்’ பாத்திரமாய் ஒட்டிவைக்கும் சுதை கழன்று அரூபம் மட்டும் வாசகனோடு நேரத்துக்கேற்ப இரசத்துளி உருளலும் வடிவமுமாய் -ஆனால், தானானது உள்ளே மாறாமற் போகின்றது.

குழந்தைக்கு வித்திட்டுப் பெற்றுக்கொள்ளும் செயல் தவிர்ந்த வேறெதிலுமே கற்பனையும் உண்மையும் கலக்காத படைப்பு இருக்கமுடியாது; இதற்கு ஒரு தோட்டக்காரனோ, ஒரு கதைசொல்லியோ, வேறெந்த வகைப்படைப்பாளியோ

விதிவிலக்காகிவிடமுடியாது. ஜேஜேயும் பாலுவும் இரண்டான பேர்வழிகள் என்று கொள்கின்றது என்பதிலும் இடையினிலே ஊடாடி, தன்கரைகளிலே வேறான ஒன்றின் இரண்டு பகுதிகளாகப்படுகின்றன..... (முற்றாகி நிறைவேறாத) இலட்சியமும் அதன்மீதான ஈர்ப்புச் சுவறாதபோதும், அதனுள் முழுதாக மூழ்கிச்செத்துப்போகாமல் தன் வாழ்தலை நிச்சயப்படுத்துக்கொள்ளும் நடைமுறையும். ஜேஜேயின் இறப்பு என்பது, 'பாலு'வின் 'புதிய பார்வையும் பாதையும்' பிறப்பதற்கான அசைபோடும் அஞ்ஞாதவாசத்தின் பிறப்பான குறியீடாகக் கண்டுகொள்ளத்தான் இங்கே இந்த வாசகனுக்கு முடிந்திருக்கின்றது. தேடலுடனான பிடிவாதத்தையும் அதன்பின்னான சோர்வுதந்த இடைவெளியிலே முன்னைய இருப்பு எதற்காக எண்ணியதற்கு மாற்றான முனைகளிலே வந்து நின்றதென்கின்றதை ஆய்தலையும் நீரும் நெய்யுமாகப் பிரித்தடுக்கும் முயற்சியே ஜேஜேயின் குறிப்புகளும் பாலுவின் கருத்துக்களும் என்ற எண்ணம் வாசித்துமுடிக்கும்போது தோன்றுகின்றது. மனித இருப்பின் தேவையினை, இலக்கியத்தின் அவசியத்தைப் பற்றி ஒவ்வொருவருக்கும் கேள்விகள் எழுதல் தவிர்க்கமுடியாதாயினும், தான் சூழ்ந்த உலகம் (குறிப்பாகப் படைப்புலகம்) சம்பந்தமாக ஜேஜேயின் வினாக்கள், ஜேஜேயின் காலத்துக்கு முன்னாலும் சமகாலத்திலும் வருங்காலத்திலும் இருந்தன·இருக்கின்றன·இருக்கும் என்கின்றதை அறியாதானாக இத்தனை வாசிப்புக்கும் அனுபவங்களுக்கும் தன்னை உட்படுத்திக்கொண்ட ஜேஜே இருந்திருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எழுகின்றது. அவ்வப்பொழுதுக்குத் தகுந்த தீர்வுகளைக் கிஞ்சித்தேனும் ஏற்றுக் கொள்ளாமல், அந்தவினாக்களை அவிழ்த்தல் மட்டுமே தன் வாழ்வுக்கான விதி என்று அவன் வாழ்ந்திருக்கின்றான் என்று (ஜேஜே பற்றி எனக்குப் பிடிபடுகின்றது சரி என்று கொண்டால்), சொல்லப்பட்ட அவனது அகண்ட வாசிப்பினதும் ஆழத்தேடலுக்கும் பலன் என்னவென்கிற கேள்விவும் அவநம்பிக்கையுமே வாசகன் மீது கவிகின்றதாகப் படுகின்றது. பாலுவினை உன்னதத்தினை நோக்கி வியப்போடு பார்க்கும் அதே நேரத்திலே நடைமுறையிலும் தன் இருப்பினைக் காத்துக்கொள்ளும் ஆளாக்கிவிடும் ஆசிரியர், ஜேஜேயினை அதீத இலட்சியத்துக்கு ஆக்கிவிடுகின்றார். மேன்மைக்குணங்களின் வரையறுப்புகள், நோக்குகள் முற்றிலும் வேறாயினும், இலட்சியத்தன்மை என்பதைப் பார்க்கும்போது, ஜேஜேயும் இலக்கு என்றது நாம் முட்டிப்பார்க்க இழுத்துக்கொள்ளும் கற்பனை உச்சத்துக்கோடு என்கிறதை மறுத்து, நா. பார்த்தசாரதியின் கதாநாயகர்களின் பண்புகளோடு போட்டிக்கு உரசிப்பார்க்கும் ஒரு மனிதனாகவே தெரிகின்றான். ஜேஜேயின் அகம்பாவமும் அச்சமும் தோல்வியும்கூட, "பிச்சை பெற்றாலும் கொடுப்பவன் பிடிக்க நான் எடுத்துக்கொள்கின்றேன்" என்ற வகையான நாயகனின் இலட்சியத்தினை அலங்கரிக்கும் பண்புகளாகின்றதோ என்று படுகின்றது.

இ·து ஒரு மையம் சார்ந்தொழுகாத படைப்பா இல்லையா என்கின்றதும் ஜே.ஜே.யின் (தெரிவிக்கப்பட்டதும் வாசகனாகப் புரிந்துகொண்டமைந்ததுமான) கருத்துத்தளம் மீPP தான விவாதங்களும் படைப்பினை வருங்காலத்துக்காக வகைபிரிக்கும்

நோக்கிலும் அவரவர் தத்துவநோக்கு நிலையிலே நின்று வாதாடப்படவேண்டியதாகவும் பெரும்பாலும் இருக்கின்ற நிலையிலே, வாசகனுக்கு கதை நகர்கின்றபோதிலே காலித்து கழன்றுகொள்ளாத சுவராசியமும் கதை எழுப்பும் உணர்வும் திறனாய்வாளரின் திமிறத்திமீற அழுத்தியூட்டலில்லாத தன்னறிதலும் திருப்தியும் முக்கியமாகின்றன. அந்தளவிலே, -தம்மளவிலே சிறப்புற்றாலும், காலமும் சூழலும் பிறழ்ந்த சில நகைச்சுவையிழைகளையும் சில நீண்ட குறிப்புகளையும் தவிர்த்து,- 'ஜே.ஜே.: சில குறிப்புகள்' பேச வந்த பொருளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றி. மையம் சார்ந்தொழுகாத படைப்பா என்கின்ற கேள்வியின் தேவை எனக்குத் தேவையில்லாதபோதும், நாட்குறிப்பு என்பதுதான் மையம் என்று பருமப்பொருள் சார்ந்து ஏற்றுக்கொள்ளலாமோ என்று எண்ணுகின்றேன். இன்னொரு வாசகருக்கு அவரின் அனுபவத்தினைப் பொறுத்து அவர் கதையிலே வேறொரு குறியீடு மையமாகலாம்.

கலை, இலக்கியம் சார்ந்து எழும் இதுவகையான கேள்விகளுக்கு ஜேஜேயோ வேறெவரோ பதிலேதும் கண்டு புதர் விலக்கிப் புதிர் அவிழ்க்கமுடியாது; எனக்கென்றால் ஏனோ, ஜேஜேயின் வினாக்கள் மட்டுமல்ல, தமிழ்ப்படைப்புலகமும் அப்படியேதான் பொம்மைகளும் பொம்மலாட்டக்காரர்களும் மாறினாலும் கூத்தேதோ மாறாமல் உலவும் என்று தோன்கின்றது. சில கேள்விகள் தொடர்ந்துகொண்டேதாம் இருக்கும். சூழலுக்கும் காலத்துக்குமேற்ப, மனிதன் தனது வாழ்காலத்தைக் கருத்திலே வைத்துக்கொண்டு, காய்களைச் சிறிதாக தனக்குப் பட்ட முன் திசையிலே நகர்த்திக்கொண்டு போகவேண்டும். ஆனால், கேள்விகளையும் குழப்பங்களையும் திணிவேற்றாமல் சுவராசியமாக வாசகர்கள்முன்னே பின்னிப்போட்டு உள்வாங்க வைத்ததன் காரணமாக 'ஜே.ஜே.: சில குறிப்புகள்' தமிழ்ப்படைப்புகளிலே ஒரு சிறப்பிடத்திலே, இனி வருகின்றவற்றுக்கு ஓர் ஒப்புநோக்கியாக்கமாக இருக்கும் என்பது மறுக்கப்படமுடியாததாகும்.

rkandia@tulane.edu

பதிவுகள், நவம்பர் 2004 இதழ் 59 -

20. கனவுகளுடனும் கற்பனைகளுடனும் காற்றோடு கரைந்த படைப்பாளி! புலோலியூர் க. சதாசிவம்! - (பிறப்பு: 20.3.1942 ல் மறைவு:14.09.2004) - எம்.கே.முருகானந்தன் -

கனவுகளும் கற்பனைகளும் நிறைந்தவன் மனிதன். அதிலும் படைப்பாளியாகவும் இலக்கிய ஆர்வலனாகவும் இருப்பவர்களின் கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் வானம் கூட எல்லையிட முடியாது தளரும். அந்த கனவுகளும் கற்பனைகளும்தான் அவர்களின் ஆத்மார்த்த பலமும் கூட. புலோலியூர் க.சதாசிவமும் அத்தகைய பண்புகளைக் கொண்ட ஒரு எழுத்தாளன்தான். தொழில் ரீதியாக அவர் ஒரு வைத்தியர் என்ற போதும் இலக்கியம், வைத்தியம் ஆகிய இரு துறைகளிலும் உறுதியாகவும் சமனாகவும் கால் ஊன்றி நின்றவர் ஆவார்.

அவரது இலட்சியம் சமூக மேம்பாடு ஒன்றையே குறியாகக் கொண்டது. சரியாகச் சொல்லப்போனால் இலங்கையின் வெவ்வேறு திசைகளில் வாழ்ந்த, பயணித்த இரு சமூகங்களின் மேம்பாடு அவரது இலட்சியமாக இருந்தது. தான் பிறந்து வளர்ந்து மணம் முடித்த வடமராட்சி மண் ஒரு கண் என்றால், தொழில் ரீதியாக இணைந்து அவரது வாழ்க்கைப் பயணத்தின் பெரும் பகுதியை ஆட்கொண்டுவிட்ட மலையகம் மறு கண் எனலாம்.

'நாணயம்' என்ற அவரது நாவல் " வடமராட்சிப் பிரதேசத்தின் நாடித் துடிப்பு, மனித உறவுகளைப் பிணைக்கும் பந்தமாகிய சடங்குகள், நம்பிக்கைகள், பண்பாட்டம்சங்கள், எண்ணக் கருத்துகளின் உயிர்த்துடிப்பான பேச்சு வழக்கு.." ஆகியவற்றை அற்புதமாகப் பதிவு செய்த படைப்பாகும். அதே போல சிறுகதைப் போட்டி ஒன்றில் முதற் பரிசைத் தட்டிக் கொண்ட அவரது முதற் சிறுகதையான ~புதுவாழ்வு| 1961 களில் இருந்த யாழ் மண்ணின் வாழ்வை கண்முன் கொண்டு வருகிறது.

அதே நேரத்தில் 'மூட்டத்தினுள்ளே' என்ற நாவலும் 'ஒரு நாட் பேர்' என்ற சிறுகதைத் தொகுதியும் மலையக மக்களின் துன்பங்களும் வேதனைகளும் நிறைந்த வாழ்வை பரிவோடும் பாசத்தோடும் பார்த்தது மாத்திரமின்றி அவர்களது வாழ்வில் ஒளியூட்ட வேண்டும் என்ற வேட்கையோடும் படைக்கப் பட்டவையாகும். கடந்த மூன்று தசாப்பதங்களுக்கு மேலாக மலையகத்தோடு ஒன்றியவர் அவர். அதிலும் முக்கியமாக டயபராத் தோட்டத்தின் வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய போது அந்த மக்களின் இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்காளியாக கலந்து வாழ்ந்தவர். அடிப்படை வசதிகள் கனவிலும் கூடக் கிடைக்காத அவர்களின் ஏழ்மையை நேரிடையாகக் கண்டு கண் கலங்கியவர். அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களின் முதுகில் சவாரி செய்ய முற்படும் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் கபடத்தன்மைகளையும் புரிந்தவர். இதனால் அவர்களது வாழ்வின் உள்ளும் புறத்தையும்

மாத்திரமின்றி, அச் சமூகத்தின் பலத்தையும் பலவீனத்தையும், பன்முக விஸ்தாரணத்தையும் தன் கலையுள்ளத்தில் ஆழமாகப் பதித்துக் கொண்டவர்.

இதனால்தான் வடமராட்சியைச் சேர்ந்தவரான அவர் வீரகேசரி நடாத்திய நாவல் போட்டியில் மலையகப் பிரதேசத்திற்கான பரிசை 'மூட்டத்தினுள்ளே' என்ற நாவலுக்குச் சுலபமாகத் தட்டிக் கொள்ள முடிந்தது.

அவர் பிறந்தது 20.3.1942 ல் மறைந்தது 14.09.2004 அன்று.

மறைந்த அன்று கூட புதிய திட்டங்களோடும், சிறகடிக்கும் கற்பனைகளோடும் பண்டாரவளையிலிருந்து கொழும்பு வரும் பஸ்ஸில் பயணிக்க ஏறியிருந்தார். கொழும்பில் நிற்கும்போது தான் இணையாசிரியராகக் கடமையாற்றும் ஞானம் இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் ஞானசேகரனைச் சந்தித்து ஞானத்தின் வளர்ச்சித் திட்டங்கள் பற்றி உரையாடுவதும், நான் உட்பட சில இலக்கிய நண்பர்களைச் சந்தித்து இலக்கியக் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும், சில தனிப்பட்ட வேலைகளைக் கவனிப்பதும் அவரது திட்டமாயிருந்தது.

ஆனால் அவரது பயணத்தின் திசை மாறிவிட்டது. அவரதும், எவரதும் கற்பனைக்கும் எட்டாத பயணம் அது. கொழும்பு வரவேண்டியவர் விண்ணுலகுக்குப் பயணமானார். நோய் நொடி என்றும் துன்பப்படாத அவருக்கு, மற்றவர் பிணி தீர்ப்பதில் மனநிறைவு கண்ட அவருக்கு தன்கூட மாயக் கூற்றுவனான நோயொன்றும் பயணித்தது தெரிந்திருக்கவில்லை. திடீரெனத் தோன்றிய இரத்தக் கட்டியொன்று (Clot) சுவாசக் குழாய்க்கான இரத்த நாடியை அடைக்க, பண்டாரவளையில் இருந்து புறப்பட்ட பஸ் ஹப்புத்தளையை அடைய முன்னரே திடீரென மரணத்தைத் தழுவிக் கொண்டார். ஆம் மரணம் மகத்தானது. அதன் முன் மனிதர்களாகிய நாம் அற்பப் புழுக்கள்.

சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், விமர்சகர்; எனப் பன்முகப் படைப்பாற்றல் கைவரப் பெற்ற அவர் ஒரு பல மருத்துவக் கட்டுரைகளையும் தினக்குரலில் எழுதியுள்ளார். யுகப்பிரவேசம் (1973), ஒரு அடிமையின் விலங்கு அறுகிறது (1982), ஒரு நாட் பேர் (1995), புதிய பரிமாணம் (1998), அக்கா ஏன் அழுகிறாய் (2003) ஆகிய ஐந்து சிறுகதைத் தொகுதிகளும், நாணயம் (1980), மூட்டத்தின்னுள்ளே (1983) ஆகிய இரு நாவல்களும் நூல் உருவாகியுள்ளன. இவற்றில் அவரது இரண்டு நாவல்களுமே தேசிய சாஹித்திய விருதுகளைப் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. புதிய பரிமாணம் யாழ் இலக்கிய வட்டத்தின் பரிசை வென்று கொண்டது. சென்ற மாதம் யாழில் நடந்த பரிசளிப்பு விழாவில் இதற்கான பரிசைப் பெற்றுக் கொண்டது குறிப்பிடத்தக்கது. லண்டனில் உள்ள கொம்மாந்துறை இலக்கிய வட்டமும் தினக்குரலும் இணைந்து நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது சிறுகதை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதற்கான

பரிசை இன்னமும் நேரிடையாகப் பெற்றுக் கொள்ளவில்லை என்பதும் அச் சிறுகதை தினக்குரலில் வெளியாவதை அவருக்குப் பார்க்கக் கிடைக்கவில்லை என்பதும் மனத்தை அழுத்துகிறது.

ஞானம் சஞ்சிகை நடாத்திய சிறுகதை நூல் கைப்பிரதிப் போட்டியை நடாத்துவதிலும் அதில் முதற் பரிசு பெற்ற சாரங்காவின் 'ஏன் பெண்ணென்று' என்ற பிரதியை புத்தகமாக வெளியிடுவதிலும் அவரே பெரு முயற்சி எடுத்ததை நான் அறிவேன். அது போன்ற முயற்சிகளை எதிர்வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செய்யவும் எண்ணியிருந்தார். அதன் அறிமுகவிழா சென்ற மாதம் விபவி ஆதரவில் பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு மையத்தில் நடந்தபோது அவரே அறிமுகவுரை நடாத்தினார்.

அன்று கூட்டம் முடிந்தபின் அங்கிருந்து வெள்ளவத்தை பஸல்ஸ் ஒழுங்கை வரை அவருடன் கே.ஆர்.டேவிட் ம் நானும் இலக்கியம் பேசியபடியே நடந்து நேற்று நடந்தது போல் மனத்தில் பசுமையாக இருக்கிறது. அதன் பின் அவரை நேரில் சந்திக்க முடியவில்லையே என்பது சுமையாக உள்ளத்தை அழுத்துகிறது. ஆயினும் தொலைபேசியில் இடையிடையே பேசுவோம். சுமார் 25 வருடங்கள் நெருங்கிய நண்பனாக இருந்த உற்ற நண்பனின் பிரிவுத்துயர் ஆற்றவொண்ணாதது. அதுவும் அன்று 15ம் திகதி நடுநிசி 1.30 அளவில் ஹப்புத்தளை மாவட்ட வைத்திய அதிகாரி அவரது டயறியைப் பார்த்து எனது டெலிபோன் நம்பரை கண்டுபிடித்து 'உங்களுக்கு டாக்டர் சதாசிவத்தைத் தெரியுமா' என்று கேட்டு அந்த அதிர்ச்சி மிக்க செய்தியைக் கூறினார்.
என்றென்றும் என்னால் அதிலிருந்து மீளவே முடியாது.

தென்புலோலியூர் கணபதிப்பிள்ளைக்குப் பின்னர் புலோலியூருக்கு இலக்கிய உலகில் தனிப் பெருமை சேர்த்தவர் புலோலியூர் க.சதாசிவம் ஆவர். அவர் முன்மொழிந்த வழியிலேயே புலோலியூர் தம்பையா, இரத்தினவேலோன் போன்ற பலரும் பின்தொடர்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரது பூதவுடல் பொரளை கனத்தையிலுள்ள ஜெயரட்ண மலர்ச்சாலையில் 16ம் திகதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா, கம்பவாருதி இ.ஜெயராஜ், ஞானம் ஆசிரியர் தி.ஞானசேகரன், தினக்குரல் ஞாயிறு இதழ் பொறுப்பாசிரியர் தேவகொளரி, மு.பொ, சிதம்பரப்பிள்ளை சிவகுமார், வதிரி இரவீந்திரன், நீர்வை பொன்னையன், வ.இராசையா, புலோலியூர் இரத்தினவேலோன் உட்பட பல எழுத்தாளர்களும், நண்பர்களும் உறவினர்களும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். டொமினிக் ஜீவா, தி.ஞானசேகரன், எம்.கே.முருகானந்தன் ஆகியோர் அஞ்சலி உரையாற்றினர். மாலை 5.30 அளவில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.

கனவுகளுடனும் கற்பனைகளுடனும் வாழ்ந்த அந்தப் படைப்பாளியான புலோலியூர் க.

சதாசிவம் காற்றோடு கலக்கும் போதும் அவற்றையே தனது வழித் துணையாக்கிக் கொண்டார் என்பதில் மனம் ஆறுவோம்.

kathirmuruga@hotmail.com

21. குந்தவை என்ற எழுத்தாளர் - இரா.முருகன் -

நண்பர் லண்டன் பத்மநாப ஐயர் புண்ணியத்தில் குந்தவை என்ற அருமையான ஈழத் தமிழ் எழுத்தாளரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. குந்தவையின் 'யோகம் இருக்கிறது' சிறுகதைத் தொகுப்பு ஆர அமரப் படித்து அசை போடப்பட வேண்டிய ஒன்று. அத்தி பூத்தாற்போல் எழுதும் குந்தவை (இயற்பெயர் சடாட்சரதேவி) புலம் பெயராத ஈழ எழுத்தாளர். அவர் கதைகளுக்கு அசாத்திய வலிமை சேர்க்க இந்த ஒன்றே போதும். அகதியாக ஆயிரக் கணக்கான காதம் தள்ளி உட்கார்ந்து கொண்டு, இழப்பைப் பற்றிக் கழிவிரக்கத்தோடும் தன்னிரக்கத்தோடும் கதைப்பவை இல்லை அவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில், பிறந்த மண்ணை விட்டு வெளியேறாமல் அங்கேயே இருந்து நிகழ்த்தும் பதிவுகள் குந்தவையின் கதைகள். முந்திய வாக்கியத்தை நேரடியாக வாசிக்காமல், புலம் பெயர்ந்த ஈழ எழுத்தாளர்கள் பற்றிய ஒரு தமிழக எழுத்தாளரின் கருத்து என்று உள்வரியை வலிந்து நுழைத்துப் படிப்பவர்களைப் பற்றி நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை.

"யுத்த பூமியை விட்டு அலறி அடித்துக் கொண்டு வெளியேறாது மண்ணின் நேசிப்புடன் மக்கள் துயரங்களைப் பங்கிடும் ஒருத்தியாய் வாழ்ந்த நேர்மையினால், குந்தவையின் கதைகள் இரண்டு தசாப்த காலத் தமிழ் ஈழத்தின் உண்மையான வரலாறாகப் பதிவாகிறது" என்று எஸ்.பொ தன் முன்னுரையில் (எஸ்.பொவின் மித்ரா பதிப்பக வெளியீடு இந்தப் புத்தகம்) குறிப்பிடுவது நூறு சதவீதம் உண்மை.

எனக்குப் படிக்கக் கிடைத்தவரையில் வழமையானதாகப் படும் ஈழத் தமிழ் மன இயக்கத்துக்கும் எழுத்து நடைக்கும் மாறான (எஸ்.பொ, முத்துலிங்கம் போன்ற விதிவிலக்குகள் தவிர்த்து) அடங்கி ஒலிக்கும் குரலும், போர் மறுப்புத் தொனியும் எல்லாவற்றையும் விட முக்கியமான பெண்ணியப் பார்வையுமாக (இது பெண்ணியம் கூட இல்லை - தாயியம்) எழுதும் குந்தவை குறைந்த சொற்களில் கதை நடத்திப் போகிறார்.கதை நிகழ்வில் ஆசிரியரின் குறுக்கீடு ஒரு பிரகடனமாகவோ, விமர்சனமாகவோ, எள்ளலாகவோ குறைந்த பட்சம் வாக்கிய முடிவில் ஆச்சரியக் குறியாகவோகூட இல்லாத அதிசயம்தான் குந்தவை கதைகள ஆழ்ந்து படிக்க வைக்கிறது.

'பெயர்வு' என்று அற்புதமான ஒரு கதை.

போர் நடக்கும் பூமியிலிருந்து வெளியேறிக் கடலில் படகில் பல மணி நேரம் பயணம் செய்து இடம் பெயரும் இளம் தம்பதிகள், அவர்களுடைய குழந்தை பற்றிய கதை இது.

'எல்லாவற்றையும் அப்படியே போட்டது போட்டபடி விட்டு ஓடி வந்தாகி விட்டது.

வீட்டை விட்டு வெளியே வந்தபின், ஒரு இரவு கூட ஒழுங்காக நித்திரை என்ற ஒன்றில்லை. அதுவும் நேற்றிரவு ஒரு கண் மூடவில்லை.

படுக்கக் கிடைத்த இடம் ஒரு பள்ளிக்கூட மண்டபம். நித்திரை கொண்டிருக்கலாம். முடியவில்லை. வரும் வழியில் கைதடிப் பாலத்தைக் கடக்கையில் பாலத்தின் கீழ் நிறைந்திருந்த நீரில் மிதந்த குழந்தையின் உடல் சிற்றலைகளால் அலைப்புண்டதுபோல் அவள் நினைவிலும் அலைப்புண்டது. அதோடு, கைப்பிடிச் சுவரோடு, நாலு பேரின் கைத்தாங்கலுக்குள் திமிறிக் கொண்டு அரற்றிய அந்தத் தாயின் கதறல். பாவி. ஏன் இடுப்புக் குழந்தையைத் தவற விட்டடாள்? பாலத்தின் மேல் நடக்கையில் களைத்து விழுந்தாளோ? நெரிசலில் சிக்குண்டு கை தவற விட்டாளா?

படகின் மறு மூலையிலிருந்து ஒரு குழந்தை வீரிட்டுக் கத்துவது கேட்டது. தொடர்ந்து தாயின் சமாதானப்படுத்த முயலும் குரலும் கேட்டது.

சிவரஞ்சனி தன் மடியிலிருந்த அமுதனைத் தடவிக் கொடுத்தாள். அவனின் ஈரம் வழியும் உடலில் நீரை வழித்து விடும்போதெல்லாம் அவனுக்குக் காய்ச்சல் கீச்சல் வரக்கூடாதே என்று உள்ளூர அங்கலாய்ப்பாக இருந்தது.

கடல், படகு தன் உடம்பை படகு கிழித்துச் செல்வது பொறுக்காதது போல வாரித் தூற்றி இரைந்து கொண்டிருந்தது. படகில் இருந்தவர்கள் ஒவ்வொரு வாரியடிப்பிற்கும் உடல் கொடுத்து நனைந்த வண்ணம் இருந்தனர்.

முதலில் இந்த அலையடிப்பிற்குள் சிலிர்த்து சந்தோஷமாகச் சிரித்த அமுதன் கூட இப்பொழுது சோர்ந்து விட்டிருந்தான். பசிக் களைப்பு வேறு"

உலர்ந்து போன பன். குழந்தை சாதாரணமாகச் சாப்பிடாது அதை. பணியாரம் சாப்பிட்டுப் பழகிய அந்த மழலை பசி பொறுக்க முடியாமல், 'அம்மா, பாண் கொடுங்கோ' என்று கேட்கிறது. அம்மா மனம் உடைந்து போகிறாள். பன்னைக் கிழித்துக் குழந்தைக்கு ஊட்டும்போது பின்னால் இருந்து யாரோ பார்ப்பதுபோல் தோன்ற திரும்புகிறாள். பசித்த இன்னொரு குழந்தை ஏக்கத்தோடு அவளைப் பார்க்கிறது. பன்னின் இரண்டு துண்டங்களைப் பிய்த்து அந்தக் குழந்தையிடமும் நீட்டுகிறாள் இந்தத் தாய்.

குந்தவை என்ற ஒரு தாய் எழுதிய இந்தக் கதை போர்ப் பிரச்சாரம் செய்யும் எந்தக் கதையையும் விட உன்னதமானது. சர்வ தேசியத் தன்மை உண்டு இந்தத் தாய்மை எழுத்துக்கு.

விட்டுவிட்டு வந்த வீடு போரில் அழிகிறது. பஸ்ஸில் பயணம் செய்து அங்கே மீண்டும் போகிறாள் ஒருபெண். அவள் பார்வையில் அந்தப் பயணம் காட்சி ரூபமாக விரியும் கதை "வீடு நோக்கி".

"வீதியோரக் காட்டுச் செடிகள் சில வளைந்து நின்று, பஸ் சன்னலால் உள்ளே தலை நீட்டிப் பார்த்து, விருட்டென்று மறைந்தன. பஸ்ஸைப் போக விட்டு, அதன் முதுகில் 'படபட' எனத் தட்டி வழி அனுப்பின. .... முன்பெல்லாம் கிணறுகளுக்கு அருகே பம்பு நீர் குழாய் வழியாகப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருக்கும். வாய்க்கால் வழியோடித் தரைகளை நிறைக்கும்.... புகையிலையோ, வெங்காயமோ கிண்டி எடுத்த பின்னும் கிணற்றடிகளைச் சுற்றி ஈரப்படை இருக்கும். அவற்றைச் செவலையும், கறுப்புமாய் மாடுகள் வந்து வந்து கூட்டமாய் மேயும். அவை புற்களை இழுக்கையில் வெளிப்படும் பூச்சிகளைப் பிடிக்க என மாடுகளைச் சுற்றி நிற்கும் வெள்ளைக் கொக்குகள் மாடுகளின் நகர்விற்கேற்பத் தாமும் நகர்ந்து நகர்ந்து செல்லும் ... இப்பொழுது அவை ஒன்றுமில்லை. வரம்பு அழிந்து வெடித்த வயல் வெளிதான். எங்கும் தூரத்தில் வயல்களுக்கு வரம்பு கட்டுவது போல் நிற்கும் பனைவடலிகளும் இன்றில்லை. ஓலைத்தரை விரித்த பனைகள் அங்கு ஒன்றும் இங்கு ஒன்றுமாகத் தெரிந்தன. கண்ணில் பட்ட
மற்றவை யாவும் எரிந்து முறிந்து போய்ப் பாதியாக நின்றன".

போய்ச் சேர்ந்த வீட்டில் போரின் எச்சமாகத் தங்கிக் கிடந்த கண்ணிவெடி மடித்து அவள் இறப்பதில் முடியும் கதை இது. போரின் எச்சங்கள் இம்மாதிரிப் பாவப்பட்ட மக்கள்தான், யார் ஜெயித்தாலும் யார் தோற்றாலும் இழக்கப்படுவது மலினப்படுத்தப்பட்ட மனித உயிர்கள் தான் என்று சொல்லாமல் சொல்லுகிறார் குந்தவை.

"நீருக்குள் இறங்கிய பொழுதும் கால் தடுமாறிக் கொண்டு வந்தது. படகின் வெளிப்புறத்தைப் பற்றிக் கொண்டு கால்களை நீருக்குள் அழுத்த ஊன்றிச் சமாளித்தாள். மன்ணை அரித்துக் கொண்டு ஓடிய நீர் பித்த வெடிப்புக் கால்களுக்குச் சுகமாகத் தானிருந்தது".

இதை ஒரு பெண்தான் எழுத முடியும். குந்தவை முழு வெற்றி பெற்றிருக்கிறார்.

பின்குறிப்பு :

இது நண்பர் கருணாகரமூர்த்தி பாட்டுக்கு எதிர்ப்பாட்டு இல்லை. நான் வழிநடத்தும் 'ராயர் காப்பி கிளப்' இணையக் குழுவில் அக்தோபர் 2002ல் நான் எழுதிய நூல் அறிமுகக் கட்டுரை.

'குந்தவை மேலும் கற்பனையும் உழைப்பும் சேர்த்து இன்னும் படைப்புக்களைக் கலாரீதியாகத் தருவாராயின் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் தன் சுவடுகளை இன்னும் அழுத்தமாகப் பதித்து முன்செல்வார் என்பதில் ஐயமில்லை' என்று புதுமுக எழுத்தாளரைப் பெருந்தன்மையோடு தட்டிக்கொடுத்துக் கருணாகடாட்சம் பொழியும் சீனியர் எழுத்தாளராக வியாபித்து யாதுமாகி நின்று கருணாகரமூர்த்தி தன் விமர்சனத்தை முடித்திருப்பதைப் படிக்கும்போது சிரிப்புத்தான் வருகிறது.

கருணாகரமூர்த்தி கதை எழுதப் பேனா பிடிக்கத் துவங்கியதற்குப் பல வருடம் முன்பாகவே காத்திரமும் கலாபூர்வமுமான படைப்புகள் மூலம் தன்னை முக்கியமான ஈழத்து இலக்கியப் படைப்பாளியாக இனம் காட்டிக் கொண்டவர் குந்தவை. I do not think she requires any condescending treatment by Karuna. இந்த ஆங்கில வாக்கியத்துக்காக ரயிலில் இருந்து குதிக்க வேண்டாம் என்று கருணாகரமூர்த்தியைக் கேட்டுக் கொள்கிறேன்.

குந்தவை கதைகளை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று விமர்சனம் செய்வது சுலபம். அவற்றில் தோய்ந்து வாசக அனுபவமும் அனுபூதியும் அடைவது எல்லோருக்கும் கைகூடாதுதான்.

பதிவுகள், மார்ச் 2003 இதழ் 39

பதிவுகள் © 2020

22. கவிஞர் அறிவுமதியுடன் ஒரு பேட்டி...... - புதியமாதவி, மும்பை -

கவிஞர் அறிவுமதி மிக மிக எளிமையானவர்.பழகுவதற்கு இனிமையானவர். திரைப்படங்களுக்குப் பாடல் எழுதுபவர்தான் என்றாலும் வெள்ளித்திரையின் பகட்டும் விளம்பரமும் தீண்ட முடியாத போராளிக்கவிஞன். "அடிமைகளாய் இருக்கின்றோம் என்பதை உணராத எம் முன்னோர்கள் அடிமைகளாய் வாழச் சம்மதித்ததில் வியப்பில்லை. ஆனால் அடிமையாய் இருக்கின்றோம் என்பதை உணர்ந்த பின்பும் அடிமையாய் வாழ்வதில் உள்ள வலியை எவ்விதம் சொல்ல ."... என்று கேட்கும் தன்மானக் கவிஞர் அறிவுமதி.

புதியமாதவி: அறிவு, மதி இரண்டு சொற்களுக்கும் ஒரே பொருள்தானே..உங்களின் இயற்பெயரே அறிவுமதி தானா?

அறிவுமதி:என் பெயர் மதியழகன். என் நண்பனின் பெயர் அறிவழகன். இருவரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இளங்கலை தமிழ் படிக்கும்போது நட்பு. அவன் தந்தையும் என் தந்தையும் திராவிட இயக்கத்தின் தொண்டர்கள். விடுதியில் ஒரே அறையில் தங்கினோம். விடுமுறைகளில் ஒருவர் வீட்டில் இன்னொருவர் கூடுதல் பிள்ளையாய் வளர்ந்தோம். எங்களைத் தேடி வரும் நண்பர்கள் இருவர் பெயரையும் இணைத்துதான் கேட்பார்கள். "அறிவு-மதி இருக்காங்களா?" என்று.
கபில பரணர் என்பதைப் போல அறிவுமதியும் நட்பின் அடையாளமாய் இருப்பதில் மகிழ்ச்சி ..

புதியமாதவி:இன்று உங்கள் நண்பர் அறிவழகன் என்ன செய்கின்றார்?

அறிவுமதி:அவன் கடலுக்குச் சொந்தமான நெய்தல் நிலத்துக்காரன்.தன் தந்தையின் வணிகத்தை அவனும் தொடர்கின்றான்.

புதியமாதவி: தமிழ்நாட்டில் இன்று தமிழ் வழிக் கல்வி தேவைதானா என்று கேட்கும் ஓர் அவல நிலை ஏன் வந்தது? யார் காரணம்?

அறிவுமதி: தமிழ் நாட்டில் தமிழர்கள் ஆண்டார்கள் என்று குறிப்பிருக்கலாம், ஆனால் அதை எல்லாம் "தமிழர் அரசு" என்று சொல்வதே வரலாற்றுப் பிழை என்றே கருதுகின்றேன். "பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே" என்று சங்ககாலத்திலேயே வந்துவிடுகின்றதே. அன்று பார்ப்பனர்களின் எண்ணிக்கை மூன்று விழுக்காடு. தமிழர்களின் எண்ணிக்கை 97 விழுக்காடு. ஆனால் இன்று.. பார்ப்பானர்களின் எண்ணிக்கை 97 விழுக்காடு. தமிழர்களின் எண்ணிக்கை 3 விழுக்காடு. ஆம்.. தமிழர்களில் பெரும்பகுதியினர் பார்ப்பனச் சிந்தனையாளர்களாய் மாறிவிட்டனர். தம் பிள்ளைகளுக்கு அர்த்தம் புரியாத

அயல் மொழியிலிருந்து பெயர் வைப்பதைதான் இன்றைய பெற்றோர்கள் பெருமையாக நினைக்கின்றார்கள். பத்தாயிரம் தமிழன் சேர்ந்து பணம் வசூலித்துக் கோயில் கட்டுவான்.கடைசியில் இரண்டு பார்ப்பானைக் கருவறைக்குள் கொண்டுபோய் நிறுத்தி இந்த பத்தாயிரம் தமிழ் மடையன்களும் திருநீறுக்குக் கையேந்தி வெளியில் நிற்பார்கள்..ஏன் கோவில் கட்டத் தெரிந்த தமிழனுக்கு மணி ஆட்டத் தெரியாதா? திருநீறு கொடுக்கத் தெரியாதா? தமிழ் இனம், தமிழ் மொழி என்று ஆட்சியில் இருப்பவன் சிந்திக்க ஆரம்பிக்கும் போதெல்லாம் வடவர்களின் ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகளும் கட்சி உடைப்பு முயற்சிகளும் தொடர்ந்து இடையூறாக இருந்து வந்துள்ளதைதானே நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். நீண்ட காலமாக மேல்சாதி ஆதிக்கமே கல்வித்துறையில் ஆளுமை செய்ததும் கூட இன்றைய இந்த நிலைமைக்கு சூழலுக்கு ஏது எனலாம்.
எது எப்படியோ.. இன்றைய தமிழர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும்.. திராவிட இயக்கம், பொதுவுடமை இயக்கம், பகுத்தறிவு இயக்கம்.. என்ற பல்வேறு இயக்கங்களுமே தமிழ் மொழிக்கல்வி பற்றிய உணர்வில் ஒருமித்த குரல் கொடுத்து இருப்பது வரவேற்கத்தக்கது.

புதியமாதவி: தமிழன் தன்மானம் தொலைத்து தமிழையும் தொலைத்து நிற்கும் இன்றைய தமிழ் தொலைக்காட்சிகள் பற்றி என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

அறிவுமதி:அதுதான் நீங்களே சொல்லிவிட்டீர்களே.. தமிழன் தன்மானம் தொலைத்து, தமிழையும் தொலைத்து நிற்கும் என்று.. இவர்கள் எல்லாம் தாயை வைத்து வணிகம் செய்யும் தறுதலைப் பிள்ளைகள். பெரும்பான்மையான நிகழ்ச்சி தலைப்புகள் யாவும் ஆங்கிலக் கந்தல். நிகழ்ச்சி அறிவிப்பாளர்களின் உடையும் உச்சரிப்பும் கண்ணையும் காதையும் பொத்திக் கொள்ள வைப்பன. மோதிரக்கல், வாஸ்துசாஸ்திரம்.. மதப்பிரச்சாரம் என நமக்குள் நம் வீட்டுக்குள் நுழைந்து கொள்ளை அடிக்கும் திருடர்களை நம்மை அறியாமலேயே அனுமதித்துக் கொண்டிருக்கும் அவலம்! புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள்தான் இன்றைக்கு இணையத்திலும் வானொலியிலும் தங்களின் கலை நிகழ்ச்சிகளிலும் தமிழை மிகச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி கண்டவர்கள்.

புதியமாதவி: திரைப்படத்துறை பற்றிய கேள்விகள்...?

அறிவுமதி: என்னம்மா தயக்கம். நான் திரைப்படத்துறையில் தானே இருக்கின்றேன்.மும்பை எழுத்தாளர் மன்றத்தின் உங்கள் அழைப்பிதழில் கூட "தமிழக அரசின் விருது பெற்ற திரைப்படப் பாடலாசிரியர்" என்றுதானே இந்த அறிவுமதியை அடையாளம் காட்டியிருக்கின்றீர்கள்..

புதியமாதவி: எனக்குத் தெரியும்.. இந்த மாதிரியான ஒர் அடையாளத்தை நீங்கள் விரும்புவதில்லை. ஏன் கவிஞர் அறிவுமதி என்று கூட போடவேண்டாம். "அறிவுமதி"

என்று போட்டால் மட்டும் போதும் என்று பலமுறைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் என்ன செய்வது அண்ணா.. காலையில் வணக்கம் தமிழகம் பார்த்து தான் நம்மவர்களுக்கு பொழுது விடிகின்றது. காவிரி நதிப் பிரச்சனையைக் கூட தஞ்சையின் விவசாயி பேசினால் யார் கேட்பார்கள்? எத்தனை விவசாயக் குடும்பங்கள் தற்கொலையின் பிடியில்......ஆனால் இதை எல்லாம்கூட ஒரு சூப்பர் ஸ்டார் காலையிலிருந்து மாலை வரை உண்ணாவிரதம் இருந்து காட்டினால்தானே தமிழகத்தின் பிரச்சனையாக நம்மவர்கள் உணர்கின்றார்கள்..

நம் திரைப்படங்களில் பாடல் காட்சிகளில், குறிப்பாக காதல்பாடல் காட்சிகளில்.. கதாநாயகனும் நாயகியும் மலை அடிவாரத்தில் ஓடிப்பிடிப்பதும், மலை அருவிகளில் குளிப்பதும் அப்போது அவர்களைச் சுற்றி குறைந்தது பத்து ஆண்களும் பெண்களும் குரூப் டான்ஸ் ஆடுவதும், நம் பாரதிராஜாவின் பாடல்களில் வெள்ளை உடை அணிந்த தேவதைகள் வந்து ஊஞ்சல் ஆடுவதும்... இதெல்லாம் ரொம்பவே செயற்கையாக இல்லையா?

அறிவுமதி: இல்லை. இந்த இடத்தில் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நம் வாழ்க்கைத்துவங்கிய இடம் எது? குறிஞ்சி.. மலையும் மலை சார்ந்த இடமும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்குரியதாக தொல்காப்பியம் சொல்லும். ஒரு காதல் காட்சி என்றவுடனேயே ஊட்டி, கொடைக்கானல், காஷ்மீர் என்ற மலை அடிவாரங்களை தேர்ந்தெடுப்பதுகூட நம்மிடம் ஒட்டிக்கொண்டிருக்கும் பழைய பண்பாட்டின் அந்த எச்ச உணர்வுகள்தான். நம் சங்க இலக்கியங்களில் தோழனும் தோழியும் வருவதில்லையா.. தோழன் தோழி இல்லாத சங்க இலக்கிய காதல் காட்சிகளே கிடையாதே. நம் வாழ்க்கை முறை அதுதான். குழுவாக உட்கார்ந்து கிடைத்ததை பகிர்ந்து உண்டு அதன் பின் எல்லோரும் சேர்ந்து நடனம் ஆடி தலைவனையும் தலைவியையும் அனுப்பி வைக்கும் நம் பண்டைய மரபின் எச்சங்கள் தான் இதெல்லாமே. அது சரி இடையில் எப்படி இத்தனை வண்ண வண்ண உடைகள்,,ஆயிரம் வயலின்..கிதார், புல்லாங்குழல் இதெல்லாமா அவர்கள் பாடும் போது வந்தது என்று.. காட்சியை கலை மயமாக்க இதெல்லாம் தேவைதான். ஆனால் இதற்காகவே இன்று காதல் காட்சிகள் என்ற பெயரில் காட்டப்படும் வக்கிர உணர்வுகளைத் தூண்டும் அங்க அசைவுகளைக் காட்டும் காட்சிகளை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

புதியமாதவி:பிறமொழி சொற்களைக் கையாளாமல் கூடியவரை தனித்தமிழில்தான் திரை உலகிலும் என் பாடல்கள் ஒலிக்கும் என்பதால் நீங்கள் இழந்து கொண்டிருக்கும் திரைப்படப் பாடலின் வாய்ப்புகள் ... வசதிகள்.. ஏன் இதெல்லாம்..? கொஞ்சம் உங்களை நீங்க மாற்றிக் கொள்ளக் கூடாதா?

அறிவுமதி: முடியவில்லையே. நான் ஒரு சிறந்த திரைப்படப் பாடலாசியர் என்பத்றகாகவோ இல்லை.. சிறந்த இலக்கியவாதி என்பதற்காகவோ என்னை

அழைத்தீர்களா.? என்னை விட மிகச் சிறந்த பெயரும் புகழும் பெற்ற திரைப்படப் பாடலாசிரியர்கள் இருக்கின்றார்களே. என்னை விட சிறப்பாக இலக்கியத்தொண்டு ஆற்றுபவர்கள், இலக்கியம் படைப்பவர்கள் இருக்கின்றார்களே..இந்த அறிவுமதி தான் வந்து உங்கள் நூலை வெளியிட வேண்டும் என்று ஏன் விரும்பினீர்கள்?. மராத்திய மண்ணில் வாழும் நீங்கள் எல்லோரும் என்னை ஏன் இரண்டாவது தடவையாக அழைத்தீர்கள்..? என் கொள்கைக்காக தானே அழைத்தீர்கள்.

புதியமாதவி:ஆமாம். இடையில் முருகன் பற்றி நீங்கள் ஒரு பாடல் எழுதியதாகக் கேள்விப்பட்டேனே. அந்தப் பாடல் என்ன ஆயிற்று?

அறிவுமதி: முருகன் பற்றிய உங்கள் பாடல் மிகச் சிறப்பாக இருக்கின்றது. ஆனால் ஒரு வரியிலாவது முருகனின் ஆறுமுகமும், பன்னிரண்டு கைகளும் சொல்லப் பட வேண்டும் என்று விரும்பினார்கள். அப்படிச் சொன்னால்தான் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் சொன்னார்கள். முடியாது என்று சொல்லி விட்டேன். முருகன் நம் தலைவன். நம் குறிஞ்சி நிலத்தின் தலைவன். குறிஞ்சி மகள் வள்ளியை மணந்த அரசன்.. இந்த தமிழ் வரவாற்றை எல்லாம் மறைத்துவிட்டு இடையில் வந்த ஆறுமுக வேலனின் பன்னிரண்டு கைகளை என்னால் எழுத முடியாது..

புதியமாதவி: எதை எழுதுவீர்கள் என்பதை விட எதை எதை எழுத மாட்டேன் என்பதில் உங்கள் பட்டியல் நீண்டுக் கொண்டே போனால் வீட்டில் பற்றாக்குறை பட்ஜெட் தான்..எப்படிச் சாமாளிக்கின்றீர்கள்..?

அறிவுமதி: பற்றாக்குறை கணக்கிலேயே சுதந்திரம் வாங்கி ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஒரு மிகப்பெரிய நாட்டையே வெற்றிகரமான ஐந்தாண்டு திட்டங்களுடன் நடத்திக் காட்டும்போது வீட்டை சமாளிப்பது ஒன்றும் அவ்வளவு கடினமல்ல. ஆனால்..அப்பப்போ வீட்டில் வாங்கிக் கட்டிக்கணும்... !!!!

புதியமாதவி: இதே நிலைமையில் நீஙகள் இருந்தால் நாளுக்கு நாள் வீட்டின் நிலைமைதான் மோசமைடையும். கொஞ்சம் அதைப்பற்றியும் சிந்திக்க கூடாதா? உங்களுக்காக, உங்கள் கொள்கைகளுக்காக உங்களைச் சார்ந்து உங்களை நம்பி வாழ்பவர்கள் கடைசி வரை சிலுவையைச் சுமக்க வேண்டுமா என்ன?

அறிவுமதி: நீ என்னம்மா.. சிலுவை அது இதுனு பேசி என்னைப் பயமுறுத்துகின்றாய்? நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருகின்றது என்பதை நானும் உணர்கின்றேன். நீ மும்பையில் இருந்து கொண்டு "என்ன, உங்கள் அணுத்திமிர் அடக்கு கவிதை நூல் தயாராகிவிட்டதா" என்று அலைபேசியில் (செல் போன்) கேட்டுக்கொண்டே இருக்கின்றாய். பணம் கொடுக்காமல் எப்படி அச்சடிப்பது... என்ற நிலைமையில் நான்.

மும்பையில் நூல் வெளியிடுவதை நீங்களும் அறிவித்துவிட்டீர்களே.. என்ன செய்யப்போகின்றோம் என்ற நிலைமையில்தான் துபாயிலிருக்கும் அமீரக நண்பர்கள் உதவி செய்தார்கள். ஏதோ மும்பை கிளம்புவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு அச்சகத்திலிருந்து நூல் வந்தது. "அப்பாடா " என்று நிம்மதியாக மும்பை வந்தேன். நூல் அச்சடிக்காமல் வந்திருந்தால் உன்னிடமெல்லாம் தப்பிக்க முடியாதே என்ற அச்சம் வேறு.

(ஒரு திரைப்படப் பாடலாசிரியருக்கு இப்படிப் பட்ட ஒரு நிலைமை இருக்கும் என்று என் கதைகளில் கூட என்னால் கற்பனை செய்ய முடியாது. ஆனால் அண்ணன் அறிவுமதி அவர்களே இதைச் சொன்னபோது...கண்கள் கலங்கியது. ..இருவருக்குமேதான்)
(அப்போது நிலவிய மன அழுத்தமான நிலைமையிலிருந்து தற்காலிகமாக தப்பிக்க நம் தொலைக்காட்சி நேர்க்காணல் மாதிரியில் ஒர் கேள்வி கேட்டு வைத்தேன்..)

புதியமாதவி: இன்றைக்கு உங்கள் மீடியாவில் நல்ல வாய்ஸ் யாருக்கு ?

அறிவுமதி: நம்ம பரவை முனியம்மாவுக்குத்தான் (குங்குமம் சின்னத்திரை தொடரில் தலைப்பு பாடல் பாடும் பரவைமுனியம்மாவைத்தான் அப்படி சொன்னார்.)

புதியமாதவி: பதிவுகள் இணையதளத்திற்கு என்று சிறப்பாக ஏதாவது சொல்ல விரும்புகின்றீர்களா?

அறிவுமதி: மும்பை வந்தப்பின் தான் பதிவுகளின் ஒவ்வொரு பக்கங்களையும் பார்க்கின்ற வாய்ப்பும் நேரமும் கிடைத்தது. ஆசிரியர் கிரிதரன் அவர்களின் முயற்சிக்கு என் வாழ்த்துக்கள். கடைசியாக நான் பதிவுகள் மூலம் சொல்ல விரும்புவது... " அகதி வாழ்க்கை.. என்கிற அந்தச் சொல்வழியே கசிகிற குருதியை .. கண்ணீரை ஒரு தமிழனாய்.. கவிஞனாய் உள்வாங்குகின்றபோது உள்ளுக்குள் விளையும் உணர்வுகள் தான் இந்த நூற்றாண்டு தமிழினித்தின் மிகப் பெரிய சோகம். மரணம் மிரட்டும் நிலையாமைச் சிந்தனைகளை... போராட்டம் மலர்த்தும் நம்பிக்கைச் சிந்தனைகளால் வெற்றிகொள்வோம் என்கிற உறுதியில் வாழும் எம் உறவுகளின் இடப்பெயர்வின் வாழ்விடம் தோறும் சென்று என் உயிர்கிழித்துக் கூரை செய்து நிழல் தர விரும்புகின்றேன். என்ன செய்ய... தாய்த் தமிழர்களிடம் குழுச்சிந்தனை குறைந்து குறுமுதலாளிச் சிந்தனை அதிகமாகிவிட்டது, தான், தன் மனைவி, தன் குழந்தைகள் என்கிற உட்சுருங்கிய குழிப்பூச்சி வாழ்க்கையாகி விட்டது இவர்களின் வாழ்க்கை. இந்த நிலைமை மாறவேண்டும்.. இந்த நிலைமை மாறிவிடும் என்றே நம்புவோம்...

(பேட்டி எடுக்கும் எண்ணத்தில் கேட்கப்பட்ட கேள்வி-பதில்கள் அல்ல.
மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் இலக்கிய விழாவுக்கு சிறப்பு

விருந்தினராக கவிஞர் அறிவுமதி அவர்கள் வந்திருந்த போது அவருடன் கலந்துரையாடியசெய்திகளின் துணுக்குகள்தான்..)

கலந்துரையாடலில் கவிஞருடன் கலந்து கொண்டு அதையே பதிவு செய்து பதிவுகளில் பேட்டியாக பதிவு செய்திருப்பவர்...உங்களன்பு, புதியமாதவி,மும்பை.

puthiyamaadhavi@hotmail.com

பதிவுகள், அக்டோபர் 2003 இதழ் 46

23. பாரதியின் பிரபஞ்சம் பற்றிய நோக்கு. -வ.ந.கிரிதரன்-

தத்துவஞானிகள் மண்டைகளைப் போட்டுக் குடைந்துகொண்டிருக்கும் தத்துவ மோதல்களிற்கு இன்றுவரை சரியானதொரு தீர்வில்லை. 'இவ்வுலகம், இங்கு வாழும் ஜீவராசிகள், இப்பிரபஞ்சம் எல்லாமே அவன் விளையாட்டு. அவனின்றி அவனியில் எதுவுமேயில்லை' என்று சமயம் கூறும். இதனைக் கருத்துமுதல் வாதம் என்போம். நம்புபவர்கள் 'கருத்து முதல்வாதிகள்'. இவர்கள் 'சிந்தனை, புலனுணர்வு என்பவை ஆன்மாவின் செயலென்றும், இவ்வான்மாவானது அழியாதது, நிரந்தரமானது' என்றும், 'இவ்வுலகு, இயற்கை யாவுமே சக்தியின் விளைவு' என்றும் கூறுவார்கள். அதுமட்டுமல்ல 'இவ்வுலகமென்பது (காண்பவை, செயல்கள் எல்லாமே) சிந்தனையின் அதாவது உணர்வின் விளைபொருளே' என்றும் கூறுவார்கள். ஆனால் இதற்கு மாறான கருத்துள்ள தத்துவஞானம் 'பொருள் முதல்வாதம்' எனப்படுகின்றது. இதனை நம்புபவர்கள் 'பொருள்முதல்வாதிகள்' எனப்படுவர். இவர்கள் கருத்துப்படி 'ஆன்மா நிலையானது, அழிவற்றது' என்பதெல்லாம் வெறும் அபத்தம் கட்டுக்கதை. சிந்தனை என்பது பொருள் வகை வஸ்த்துவான மூளையின் செயற்பாடே. நிலையாக இருப்பது இந்த இயற்கை (பொருள்) ஒன்றே'. இவ்வுலகினின்றும் வேறாகத் தனித்து ஒரு சக்தி இருக்கின்றது என்பதை எதிர்க்கும் இவர்கள் 'அப்படி எதுவுமில்லை' என்கின்றார்கள். 'இவ்வியற்கையில் ஏற்பட்ட பரிணாம மாற்றங்களே உயிரினங்கள் உருவாகக் காரணம்' என்கின்றார்கள். நவீன இயற்கை விஞ்ஞானத்தை இவர்கள் ஆதாரமாகக் கொள்கின்றார்கள்.

இந்நிலையில் பாரதியை ஆராய்வோமாகில் அவனும் இந்தப் பிரச்சினையை அசட்டை செய்து விடவில்லை என்பதைக் கண்டு கொள்ளலாம். பாரதியின் கீழுள்ள கவிதை வரிகள் அவனை ஒரு கருத்து முதல்வாதியாகக் காட்டுகின்றன. 'அல்லா' என்ற கவிதையில் பாரதி பின்வருமாறு பாடுகின்றான்.

"..பல்லாயிரம் பல்லாயிரம் கோடியண்டங்கள்
எல்லாத்திசையிலுமோரெல்லையில்லா
வெளிவானிலே
நில்லாது சுழன்றோட
நியமஞ் செய்தருள் நாயகன்..'

'மகாசக்தி வாழ்த்து' என்னும் கவிதையில் அவன் கூறுவதோ?

"..விண்டுரைக்க அரிய அரியதாய்
விரிந்த வானவெளியென நின்றனை.
அண்ட கோடிகள் வானிலமைத்தனை
அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை.

மண்டலத்தை அணு அணுவாக்கினால்
வருவதெத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை
கோலமே! நினைக் காளியென்றேத்துவேன்.."

மேலுள்ள பாடல் வரிகள், மற்றும் பாரதியின் அனேக தெய்வப் பாடல்கள் கூறுவதென்ன? இந்த உலகம், இந்தப் பிரபஞ்சம் யாவற்றையும் ஆக்கியது ஒரு சக்தி , அதுவே கடவுள் என்பதையல்லவா? ஆனால் இவ்விதம் இயற்கைக்கு வேறாக ஒரு கடவுளைப் படைக்கும் கருத்து முதல்வாதியாக விளங்கும் பாரதியால் கண்ணெதிரே தெரியும் காட்சிகளை, அவற்றின் உண்மையினைக் கருத்து முதல்வாதிகளைப் போல் மாயை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியவில்லை. பொருள் உண்மையென்ற பொருள்முதல்வாதத்தினையும் மறுத்து விட முடியவில்லை. பாரதியின் உலகத்தை நோக்கி வினவுதல்' என்ற கவிதையினைப் பார்த்தால்....

"..நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே
நீங்களெல்லாம் சொப்பனம் தானோ?
பலதோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே, நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த பொருளில்லையோ?
வானகமே! இளவெயிலே! மரச்செறிவே!
நீங்களெல்லாம் கானலின் நீரோ?
வெறுங் காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப் போல்
புதைந்தழிந்தே போனதினால்
நானுமோர் கனவோ? இந்த ஞாலமும் பொய்தானோ?
காலமென்ற ஒரு நினைவும்
காட்சியென்ற பல நினைவும்
கோலமும் பொய்களோ?
அங்கு குணங்களும் பொய்களோ?.."

இவ்விதமாகக் 'காண்பவை , கருதுபவை ' யாவுமே பொய்யோ எனக் கருத்து முதல்வாதிகளைப் போல் வினவும் பாரதியார் மேழுள்ள கவிதையின் இறுதியில் பின்வருமாறு முடிக்கின்றார்.

"..சோலையிலே மரங்களெல்லாம்
தோன்றுவதோர் விதையிலென்றால்,
சோலை பொய்யாமோ?

இதைச் சொல்லொடு சேர்ப்பீரோ?
காண்பவெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே நித்தம் விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே உறுதி கண்டோம்.
காண்பதல்லால் உறுதியில்லை.
காண்பது சக்தியாம்.
இந்தக் காட்சி நித்தியமாம்..."

ஆரம்பத்தில் கருத்து முதல்வாதிகளைப் போல் வினவிய பாரதி , இறுதியில் பொருள் முதல்வாதியாக முடிக்கின்றான். அதனால் தான் கருத்து முதல்வாதிகளைப் போல் 'காண்பதெல்லாம் மாயை'யென்று முடிக்காமல் 'காண்பது சக்தியாம். இந்தக் காட்சி நித்தியமாம்' என்று முடிக்கின்றான்.

இவ்விதமாக பாரதி தனிக் கருத்து முதல்வாதியாகவும் இல்லாமல், தனிப் பொருள்முதல்வாதியாகவுமில்லாமல் , கருத்து முதல்வாதத்திற்கும் பொருள் முதல்வாதத்திற்குமிடையில் ஒருவித இணக்கமான போக்கினை, சமரசப் போக்கினைக் கைக்கொள்பவனாகக் காணப்படுகின்றான். உண்மையில் பாரதி 'அல்லா', 'மகாசக்தி வாழ்த்து' மற்றும் பல பக்திப் பாடல்களின் அடிப்படையில் கருத்துமுதல்வாதியாகத் தென்பட்டாலும், 'உலகத்தை வினவுதல்' என்ற கவிதையினூடாக நோக்கும் போது மேலே கூறப்பட்டதைப் போல் இருவிதமான தத்துவவியற் போக்குகளுக்குமிடையில் ஒரு சமரசம் செய்பவனாகவே தென்படுகின்றான். உண்மையில் பாரதியிடம் காணப்படும் இத்தகைய முரண்பாடுகளெல்லாம் அவனது ஆர்வமிக்க, உலகை அறியும் நோக்கு மிக்க மனப் போக்குகளின் வளர்ச்சியின் வெளிப்பாடுகளே. இத்தகைய போக்கினையே அவனது 'சுயசரிதை' என்ற கவிதையின் பின்வரும் வரிகளும் புலப்படுத்துகின்றன.

"..மாயை பொய்யென முற்றிலும் கண்டனன்.
மற்றுமிந்த பிரமத்தினியல்பினை
ஆய நல்லருள் பெற்றிலன்.
தன்னுடை அறிவினுக்கு புலப்படலின்றியே
தேய மீதெவரோ சொலுஞ் சொல்லினைச்
செம்மையென்று மனத்திடை கொள்வதாம்
தீய பக்தியியற்கை வாய்ந்திலேன்.
சிறுது காலம் பொறுத்தினுங் காண்பமே.."

மாயை பொய்யெனக் கூறும் பாரதி, 'பிரமத்தின் இயல்பினை அறிய

இன்னும் அருள் பெறவில்லை' என்று கூறும் பாரதி, 'அறிவிற்கு புலப்படாத எவற்றையும் நம்பும் தன்மையில்லாத பாரதி, அத்தகைய அறிவு நிலையினை அடையும் வரை பொறுப்பேன் என்கின்றான். இவ்விதமாக பாரதியின் அறிவுத் தாகமெடுத்து அலையும் மனதில் ஏற்பட்ட தர்க்கப் போராட்டத்தின் விளைவுகளே அவனது மேற்கூறப்பட்ட முரண்பாடுகளே தவிர வேறல்ல. இத்தகைய முரண்பாடுகள் அவனது மாபெரும் மேதைமையின் வளர்ச்சிப் படிக்கட்டுக்களே.

பதிவுகள், செப்டம்பர் 2003 இதழ் 45 -

24. பாரதி ஒரு மார்க்ஸியவாதியா? - வ.ந.கிரிதரன் -

பாரதியார் ருஷ்யப் புரட்சியினைப் பாராட்டி வரவேற்று 'புதிய ருஷ்யா' என்னும் கவிதையில் பின்வருமாறு பாடுகின்றார். "குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு/மேன்மையுறக் குடிமை நீதி/கடியொன்றெழுந்தது பார் குடியரசென்று/உலகறியக் கூறிவிட்டார் அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது/அடிமையில்லை அறிக என்றார்/இடிபட்ட சுவர் போலே கலி விழுந்தான்/ கிருதயுகம் எழுக மாதோ". இதன் மூலம் ருஷ்யப் புரட்சியினை இனங்கண்டுகொண்டு முதன்முதலாகப் பாடிய இந்தியக் கவிஞனென்ற பெருமையினையும் பாரதியாரே தட்டிக் கொள்கின்றார். பாரதியின் 'மாதர் விடுதலை' பற்றிய கவிதைகள், கட்டுரைகள், 'கியூசின்' என்னும் வீரமாதினைப் பற்றிய கட்டுரைகள், அம்மாதின் கவிதை மொழிபெயர்ப்புகள், புதிய ருஷ்யாவைப் பற்றிய கவிதை, 'செல்வம்', 'தொழிலாளர்' என்னும் தலைப்பிலான கட்டுரைகள், மற்றுமவர் தத்துவப் பாடல்கள் இவையாவுமே நமக்குக் கூறி நிற்பவை தானென்ன? பாரதி ஒவ்வொரு விடயத்தினைப் பற்றியும் பல்வேறுவகைப்பட்ட கருத்துகளையும் வெகு நுணுக்கமாகப் பரிசீலித்துள்ளாரென்பது மட்டுமல்ல, சமகாலத்து நடப்புகளையும் அறிந்துள்ளாரென்பதையும்தான்.

இன்றைய உலகில், முரணான பல்போக்குச் சிந்தனையாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது பார்வைகளில் பாரதியினைக் கண்டு புளகாங்கிதமடைந்து கொள்கின்றார்கள். இந்நிலையில் பாரதியின் உண்மையான நிலைப்பாட்டினை அறிந்து கொள்ள முயல்வது மிகவும் அவசியம். இது பற்றிய அவனது முரண்பட்ட போக்குகளை, தேடலை அவனது எழுத்துகளினூடே அறிந்து கொள்ள முயலவதே சாலச் சிறந்தது.

'பாரத சமுதாயம்' என்னும் கவிதையில் அவன் பின்வருமாறு பாடுகின்றான்: "முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடமை. ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை" , “மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ? மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனியுண்டோ? பலனில் வாழ்க்கை இனியுண்டோ?" இவ்விதம் பாரதியின் கவிதைகள் 'பொதுவுடமை'யினையும் 'சமத்துவத்தையும்' வரவேற்றுப் பாடுகின்றன. இவ்விதம் பொதுவுடமைக் கருத்தினை வரவேற்றும், ஆயுதம் தாங்கி நிகழ்த்தப்பட்ட ருஷ்யப் புரட்சியினையும் வரவேற்றுப் பாடிய பாரதியை மார்க்ஸியவாதிகள் புரட்சியினை , ஆயுதப் புரட்சியினை வரவேற்றிடும் ஒரு கவிஞனாக எண்ணி விடுகின்றார்கள். ஆனால் உண்மை இதுவா? பாரதியாரின் ஆவேசத்தினையூட்டிடும் சுதந்திரப்பாடல்களையும், பாப்பாப் பாட்டில் "பாதகஞ் செய்பவரைக் கண்டால் நாம்/பயங்கொள்ளலாகாது பாப்பா!/மோதி மிதித்து விடு பாப்பா! /அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!" என்று பாடுவதையும் பார்த்துவிட்டு அவர் வன்முறையின் மூலம் தீர்வு காண்பதனையே விரும்புவதாக ஒரு சாரார் கருதிவிடுகின்றார்கள். ஆனால் இவை எல்லாவற்றையுமே தவிடு பொடியாக்கி

விடுகின்றது பாரதியின் 'செல்வம்' என்ற கட்டுரை. அதில் அவர் பின்வருமாறு கூறுகின்றார்:

"ஏற்கனவே ருஷ்யாவில் ஸ்ரீமான் லெனின் ஸ்ரீமான் மிந்த்ரோஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளைநிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங்களுக்கும் பொதுவுடமையாகி விட்டது. இக்கொள்கை ஜெர்மனியிலும்ஆஸ்த்திரேலியாவிலும்துருக்கியிலும் அளவற்ற வன்மை கொண்டு வருகின்றது. ருஷ்யாவிலிருந்து இது ஆசியாவிலும் தாண்டிவிட்டது. வட ஆசியாவில் பிரமாண்டமான பகுதியாக நிற்கும் சைபீரியா தேசம் ருஷ்யாவின் ஆதிக்கத்தைச் சேர்ந்ததால் அங்கும் இந்த முறைமை அனுஷ்டானத்திற்கு வந்து விட்டது. அங்கிருந்து இந்தக் கொள்கை மத்திய ஆசியாவிலும் பரவி வருகின்றது. ஐரோப்பாவிலுள்ள பிராண்ஸ் இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைத் தடுக்குமாறு பலவிதங்களில் பிரயத்தனங்கள் புரிந்து வருகின்றார்கள். ஆனால் இந்த முறைமை போர் கொலை பலாத்காரங்களின் மூலமாக உலகத்தில் பரவிவருவது எனக்குச் சம்மதம் இல்லை. எந்தக் காரணத்தைக் குறித்தும் மனிதருக்குள்ளே சண்டைகளும் கொலைகளும் நடக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்து. அப்படியிருக்க ஸமத்வம், ஸகோதரத்துவம் என்ற தெய்வீக தர்மங்களைக் கொண்டோர் அவற்றைக் குத்துவெட்டு பீரங்கி துப்பாக்கிகளினால் பரவச் செய்யும்படி முயற்சி செய்தல் மிகவும் பொருந்தாத செய்கையென்று நான் நினைக்கின்றேன்.."

இதே கட்டுரையில் இன்னுமோரிடத்தில் பாரதியார் பின்வருமாறு கூறுகின்றார்:"

..'கொலையாளிகளை அழிக்க கொலையைத் தானே கைக்கொள்ளும்படி நேருகின்றது. நியாயம் செய்வோரை அநியாயத்தாலேதான் அடக்கும்படி நேருகிறது' என்று ஸ்ரீமான் லெனின் சொல்லுகிறார். இது முற்றிலும் தவறான கொள்கை. கொலை கொலையை வளர்க்குமே ஒழிய அதை நீக்க வல்லதாகாது. அநியாயம் அநியாயத்தை விருத்தி பண்ணுமேயொழிய குறைக்காது. பாபத்தை புண்ணியத்தாலே தான் வெல்ல வேண்டும். பாபத்தை பாபத்தால் வெல்லுவோம் என்பது அறியாதவர் கொள்கை..." இவ்விதமாகக் கூறுமவர் இன்னுமோரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார்:"மேலும் ருஷ்யாவிலுங்கூட இப்போது ஏற்பட்டிருக்கும் 'ஸோஷலிஸ்ட்' ராஜ்யம் எக்காலமும் நீடித்து நிற்கும் இயல்புடையதென்று கருத வழியில்லை. சமீபத்தில் நடந்த மஹாயுத்தத்தால் ஐரோப்பிய வல்லரசுகள் ஆள்பலமும் பணபலமும் ஆயுதபலமும் ஒரேயடியாகக் குறைந்து போய் மஹாபலஹீனமான நிலையில் நிற்பதை ஒட்டி மிஸ்டர் லெனின் முதலியோர் ஏற்படுத்தியிருக்கும் 'கூட்டு வாழ்க்கை' குடியரசை அழிக்க மனமிருந்தும் வலிமையற்றோராகி நிற்கின்றனர். நாளை இந்த வல்லரசுகள் கொஞ்சம் சக்தியேறிய மாத்திரத்தில் ருஷ்யாவின் மீது பாய்வார்கள். அங்கு உடமை இழந்த முதலாளிகளும்

நிலஸ்வான்களும் இந்த வல்லரசுகளுக்குத் துணையாக நிற்பர். இதனின்றும் இன்னும் கோரமான யுத்தங்களும் கொலைகளும் கொள்ளைகளும் ரத்தப் பிரவாகங்களும் ஏற்பட இடமுண்டு...".

இவை எவற்றை எமக்கு உணர்த்தி நிற்கின்றன. ஒன்றினை மட்டும் அவை எமக்கு வெகுதெளிவாகவே உணர்த்தி நிற்கின்றன. அதாவது பாரதியார் பொதுவுடமைச் சமுதாயத்தினை ருஷ்ய அமைப்பு முறையினை வரவேற்றிடுகின்றார். ஆனால் ருஷ்யப் புரட்சி நிகழ்ந்த முறையினைத் தான் வரவேற்றிடவில்லை. அதே சமயம் ருஷ்ய நாட்டினைக் கொடுங்கோலன் ஜார் வருத்தி வந்திட்ட முறையினைக் கண்டு மனம் வெதிர்த்திட்ட பாரதியார் அக்கொடுங்கோலனின்றும் ருஷ்ய மக்களை விடுவித்த புரட்சி என்பதற்காக ருஷ்யப் புரட்சியினைப் பாராட்டிய போதும் வன்முறைப் புரட்சியினை அவர் மனம் ஒப்பவில்லை.

அதே சமயம் 'ருஷ்யாவின் விவாக விதிகள்' என்னும் கட்டுரையில் அவர் பின்வருமாறு எழுதுகின்றார்:

"..போல்ஷிவிக் ஆட்சி ஏற்பட்ட காலத்திலே அதற்குப் பலவகைகளிலும் தோஷங்கள் கற்பிப்பதையே தம் கடமையாகக் கருதியவ்ர்களிலே சிலர் அதன் மீது ராஹரீக நெறிகளிலே குற்றங்கள் சுமத்தியது போதாதென்று, போல்ஷிவிஸ்ட் கட்சியார் ஸ்திரீகளையும் பொதுவாகக் கொண்டு ஒருத்தியைப் பலர் அனுபவிக்கிறார்களென்ற அபாண்டமான பழி சுமத்தப்பட்டது. ஆனால் 'கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு'. ஒன்பதாம் நாள் உண்மை எப்படியேனும் வெளிப்பட்டுவிடும். ஒரு பெரிய ராஜ்ஜியத்தைக் குறித்து எத்தனை காலம் பொய் பரப்பிக் கொண்டிருக்க முடியும்? சில தினங்களின் முன்பு இங்கிலாந்து தேசத்தில் மாஞ்செஸ்டர் நகரத்தில் பிரசுரஞ் செய்யப்படும் 'மாஞ்செஸ்டர் கார்டியன்' என்ற பத்திரிகை நவீன ருஷ்யாவின் விவாக விதிகளைப் பற்றிய உண்மையான விபரங்களைப் பிரசுரஞ் செய்துள்ளது. அவற்றைப் பார்க்கும்போது நவீன ஐரோப்பிய நாகரிகம் என்று புகழப்படும் வஸ்த்துவின் நியாயமான, உயர்ந்த பக்குவநிலைமை மேற்படி போல்ஷிவிஸ்ட் விவாக சம்பிரதாயங்களில் எய்தப்பட்டிருக்கின்றதென்று தெளிவாக விளங்குகின்றது. ஆன்பெண் இருபாலாரும் பரிபூர்ண ஸமானம் என்ற கொள்கைக்கு பங்கம் நேரிடாதபடி விவாகக் கட்டை சமைக்க வேண்டும் என்பதே ஐரோப்பிய நாகரிகத்தின் உண்மையான நோக்கம். ..அந்த வகையில் பார்த்தால் ஐரோப்பாவின் இதரபகுதிகளைக் காட்டிலும் நவீன ருஷ்யா உயர்ந்த நாகரிகம் பெற்றுள்ளதென்பது ப்ரத்யஷமாகத் தெரிகிறது..."

இவையெல்லாம் நமக்குக் காட்டி நிற்பவைதான் யாதோ? பாரதியார் புதிய ருஷ்ய சமுதாய அமைப்பினை வரவேற்றிடுகின்றார் என்பதையல்லவா?..சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை ஆவேசத்துடன் கண்டித்த பாரதியை நவீன ருஷ்ய

அமைப்பு முறை கவர்ந்திட்ட போதிலும் அது ஏற்பட்ட வழியினை அவனால் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிட முடியவில்லை. அதனால் தான் இவ்விடயம் பற்றிய அவனது கேள்விகள் தேடல் ஆகியன அவனது பல்வேறு கட்டுரைகளில் வெளிப்பட்டு நிற்கின்றன. அதே சமயம் மேற்படி கட்டுரைகள் அவன் தன் மனதுக்கேற்ற வழியில் இவற்றிற்கான தீர்வுகள் பற்றிச் சிந்தித்திருப்பதையும் புலப்படுத்தி நிற்கின்றன. உதாரணமாக அவனது 'செல்வம்; என்ற கட்டுரையில் பின்வருமாறு அவன் கூறுவான்:

"..முதலாவது இந்தியாவிலுள்ள நிலச்சுவான்களும் முதலாளிகளும் ஐரோப்பிய முதலாளிகள் நிலச்சுவான்களைப் போல் ஏழைகளின் விஷயத்தில் அத்தனை அவமதிப்பும் குரூர சித்தமும் பூண்டோரல்லர். இவர்களுடைய உடமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. அதற்கு நம் தேசத்திலுள்ள ஏழைகள் அதிகம் விரும்பவும் மாட்டார்கள். எனவே கொள்ளைகளும், கொலைகளும், சண்டைகளும் பலாத்காரங்களுமில்லாமல் ஏழைகளுடைய பசி தீர்ப்பதற்குரிய வழியைத் தான் நாம் தேடிக் கண்டு பிடித்து அனுஷ்டிக்க முயல வேண்டும். செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே நான் மேற்கூறியபடி பொருந்தவும் செய்யாது. ஸாத்தியமும் இல்லை.."

மேலுள்ள பாரதியாரின் கூற்றினை வாசிப்பவர் பாரதியாரின் முரண்பட்ட போக்கினை வெகு இயல்பாகவே விளங்கிக் கொண்டிட முடியும். பொதுவுடமையினைப் போற்றிப் பாடிடும் பாரதியார், நவீன் ருஷ்யாவினை, அதன் அமைப்பு முறையினை, அங்குள்ள பெண்களின் நிலையினை வரவேற்ற பாரதியார் "இவர்களுடைய உடமைகளைப் பிடுங்க வேண்டுமென்றால் நியாயமாகாது. .."என்று கூறுவது 'தனியுடமை'யை ஆதரிப்பதாகுமன்றோ எனக் கேட்கலாம். ஆனால் இன்னுமோரிடத்தில் "செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் இந்நாட்டிலே நான் மேற்கூறியபடி பொருந்தவும் பொருந்தாது.." என்று கூறுவது மறைமுகமாகக் கூறி நிற்பது தானெது? செல்வர்களுடைய உடமைகளைப் பலாத்காரமாகப் பறித்துக் கொள்ள முயலுதல் கூடாது. ஆனால் அமைதியானதொரு வழியில் இதற்கான தீர்வு காணப்படலாம் என்பதைத்தானே. ருஷ்யப் புரட்சியினை வரவேற்கும் பாரதி, அங்குள்ள பெண்கள் நிலையினை வரவேற்கும் பாரதி ஆயுதப் புரட்சி விடயத்தில் மிகவும் தடுமாற்றத்துடன் காணப்படுவதை மேற்படி கூற்றுகளால் அவதானிக்க முடிகிறது. இத்தகையதொரு தடுமாற்றத்தின் விளைவினை அவனது 'தொழிலாளர்' என்னும் கட்டுரையிலும் காணக்கூடியதாகவிருக்கிறது. அதிலோரிடத்தில் அவன் பின்வருமாறு கூறுவான்:

"..எனவே இந்தியாவில் முதன் முதலாக தொழிலாளர் கிளர்ச்சி தோன்றியிருக்கும் இந்தச் சமயத்தில் நம்முடைய ஜனத் தலைவர்கள் முதலாளிகள் தொழிலாளிகள் என்று இருதிறத்தாரையும் ஆதரவுடன் கலந்து புத்தி சொல்லி மனஸ்தாபங்களை

ஏறவொட்டாதபடி முளையிலே கிள்ளிவிட முயற்சி செய்யவேண்டும். தொழிலாளரை முதலாளிகள் இகழ்ச்சியுடன் கருதி நடத்துவதை உடனே நிறுத்துவதற்குரிய உபாயங்கள் செய்ய வேண்டும்...ஆரம்பத்திலேயே நாம் இதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யாவிடின் நாளடைவில் ருஷ்யாவிலுள்ள குழப்பங்களெல்லாம் இங்கு வந்து சேர ஹேது உண்டாய்விடும்...

ருஷ்யாவில் சமீபத்திலே அடுக்கடுக்காக நிகழ்ந்து வரும் புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்து சைனியங்களில் பெரும்பகுதியார் தொழிற்கட்சியையும் அபேதக் கொள்கைகளையும் சார்ந்தோராய் விட்டனர். இதனின்றும் அங்கு ராஜ்யாதிகாரம் தொழிற்கட்சிக்குக் கிடைத்து விட்டது. தேசத்து நிதியனைத்தையும் சகல் ஜனங்களுக்கும் பொதுவாகச் செய்து எல்லோரும் தொழில் செய்து ஜீவிக்கும்படி விதித்திருக்கின்றார்கள். தேசத்துப் பிறந்த ஸர்வஜனங்களுக்கும் தேசத்து செல்வம் பொது என்பது உண்மையாய் விடில், ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமையினால் உண்டாகும் தீமைகள் இல்லாமல் போகும்படி ஸகலரும் தொழில் செய்துதான் ஜீவிக்க வேண்டும் என்ற விதி வழங்குமானால் தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்து ஜனங்களின் சேஷமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியுறும். எனவே ருஷ்யாவிலுள்ள அபேவாதிகளுடைய கொள்கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல. ஆனால் அவற்றை வழக்கப்படுத்தும் பொருட்டு அவர்கள் நாட்டில் ஏற்படுத்தியிருக்கும் தீராச்சண்டையும் அல்லலுமே தீங்கு தருவனவாம். ருச்க்யக் கொள்கைகள் இப்பொழுது அனுஷ்டிக்கப்படும் ருஷ்யமுறைகளின்படி உலகத்தில் ஸ்தாபனம் பெற்று வெற்றி பெற வேண்டுமானால் அதற்குள்ளே முக்காற்பங்கு ஜனம் கொலையுண்டு மடிந்து போவார்கள். வெளிநாட்டுப் போர் அத்தனை பெரிய விபத்தன்று. நாட்டுக்குள்ளேயே செல்வர்களும், ஏழைகளும், ஒருவரையொருவர் வெடிகுண்டுகளாலும், துப்பாக்கிகளாலும், பீரங்கிகளாலும், தூக்குமரங்களாலும் கொல்லத் தொடங்குவார்களாயின் அது தீராத தொல்லையாய் விடுமன்றோ?"

இவையெல்லாம் வெளிப்படுத்தி நிற்பவைதான் யாதோ? இவற்றில் காணப்படும் பாரதியின் தடுமாற்றம் நமக்கு உணர்த்துவதுதானெதுவோ? சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ருஷ்யாவின் கோட்பாடுகளை ஓரளவுக்கு பாரதியார் ஏற்றுக் கொள்கின்றார். ஆனால் அதனை அடைவதற்கு ருஷ்யா கைக்கொள்ளும் ஆயுதப் புரட்சியினையும், பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தினையும் தான் அவரால் ஏற்றுக் கொண்டிட முடியவில்லை. இந்த எதிர்ப்பின் விளைவே அவரது கற்பனாவாத சோஸலிசமான 'ஏழை', 'பணக்காரன்', 'தொழிலாளி', 'முதலாளி' ஆகியோருக்கிடையிலான இணக்கம் பற்றிய கோட்பாடுகள். இதன் காரணமாகவே செ.கணேசலிங்கன் 'பாரதி கண்ட கனவுப் பெண்' என்னும் கட்டுரையில் கூறுவதைப் போல் ('மேகம்', நவம்பர்-டிஸம்பர் 1982) பாரதியின் போக்கு இந்திய தேசிய முதலாளிகளின் புரட்சியோடு ஒன்றி நிற்பது போல் படுகிறது. ஆனால் உண்மையில் பாரதி முதாளித்துவப் புரட்சியொன்றினை எதிர்பார்த்திடவில்லை

என்பதைத் தான் அவரது 'சுதந்திரப்பள்ளு' , 'விடுதலை', 'பாரத சமுதாயம்' போன்ற கவிதைகள் புலப்படுத்தி நிற்கின்றன. [அதே சமயம் மானுடத்தின் முழுவிடுதலை பற்றியும் பாரதி பெரிதும் சிந்தித்திருக்கின்றானென்பதையும் அவனது படைப்புகள் நமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன. மானுடத்தின் முழுவிடுதலை அகவிடுதலயினைப் பெறுவதன் மூலம், மனிதர் இயற்கையுடன் இணக்கமாக வாழ்வதன் மூலம் மட்டுமே பெற முடியும் என்று அவன் கருதுவதையே அவனது 'சர்வமத ஸ்மரஸம்' , 'தாய்மாண்பு', 'அன்பு செய்தல்' முதலான கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன. ஆனால் பாரதியின் இந்த நிலைப்பாடு விரிவாக ஆராயப்படவேண்டியதொன்று]. அதே சமயம் மேற்படி கட்டுரையில் செ.கணேசலிங்கன் பாரதியின் இந்தப் போக்குக்குக் காரணம் பற்றிக் குறிப்பிடும் பொழுது "..விஞ்ஞான பூர்வமான சோஸலிசத்தைப் பாரதி அறிந்திருக்கவில்லை. சோஸலிச அமைப்பில் சாதி, சமய, பெண்ணடிமைத்தனப் பேதங்கள் எப்படி முழுமையாக நீக்கப்படும் என்பதை அவன் தெரிந்திருக்கவில்லை.." என்றும் கூறுவார். இவ்விதமாக 'மார்க்ஸியக்' கோட்பாடுகளைப் பற்றிய பூரண அறிவினை பாரதியார் அடையமுடியாமலிருந்ததற்கு அன்றைய சூழ்நிலை காரணமாகவிருக்கலாம். மார்க்ஸியக் கோட்பாடுகள் சம்பந்தமான போதிய நூல்கள் அவரது கைகளுக்குக் கிடைக்காமல் போயிருந்திருக்கலாம். கிடைத்திருந்தால் அவர் மான்செஸ்டர் கார்டியன் போன்ற பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளை விரிவாக ஆராய்ந்ததைப் போல் நிச்சயம் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்திட முயன்றிருப்பார். 'வரலாற்றுப் பொருள்முதல்வாதம்' பற்றியெல்லாம் விரிவாக ஆராய முயன்றிருப்பார். அவ்விதமெல்லாம் அவர் செய்யாததற்கு செ.க. கூறுவது போல் பாரதியாருக்கு அவ்விடயங்களில் பூரண விளக்கமில்லாமல் இருந்திருப்பதே காரணமாக இருந்திருக்கக் கூடும். இந்நிலையில் அவர் தன் அறிவுக்கெட்டிய வகையில் முதலாளி தொழிலாளிகளுக்கிடையிலான இணக்கத்தைத் தீர்வாகக் கொண்ட கற்பனாவாத சோசலிச அமைப்பென்ற தீர்வுக்கு வந்திருக்கலாம். அதற்கு மாறாக அவர் மார்க்ஸியத் தத்துவங்க்ளையெல்லாம் விரிவாக அறிந்துள்ள நிலையில் மேற்படி முடிவுக்கு வந்திருந்தால் செ.க.கூறுவதைப் போல் அவரை இந்திய முதலாளிகளின் புரட்சியுடன் ஒன்றியிருந்த ஒருவராகக் கருத முடியும். மாறாக மார்க்ஸியத் தத்துவம் பற்றிய பூரணமான விளக்கமற்ற நிலையில், அவர் வாழ்ந்த இந்தியச் சூழ்நிலைகளின் விளைவாக அவர் வந்தடைந்த தீர்வே அவரது ஏழை/பணக்காரன், முதலாளி/தொழிலாளி ஆகியோருக்கிடையிலான இணக்கம் பற்றிய கற்பனாவாத சோஸலிசத் தீர்வு [ஏனென்றால் பொதுவுடமையினை, ருஷ்ய அமைப்பு முறையினை அவர் வரவேற்கின்றார்]. இந்நிலையில் பாரதி ஒரு மார்க்ஸியவாதியா என்னும் கேள்வியே அர்த்தமற்றதொரு கேள்வி. ஆனால் பாரதியின் மேதமை அவரது காலகட்டச் சூழலுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில்தான் எத்தனை மகத்தானதென்று புலப்படும். அதனை விட்டுவிட்டு இன்றைய சூழலிலிருந்து கொண்டு, தான் வாழ்ந்த சூழலை மீறிச் சிந்தித்த, வாழ்ந்த பாரதியை செ.க. முதலியோர் அலசுவது போல் அலசுவது பயனற்றது. உண்மையில் பாரதியார் அன்றையச் சூழலில் 'ருஷ்யா'வை பற்றித் தனது நோக்கினத் திருப்பியதும், பெண்களின் நிலை பற்றிய பிரச்சினையில் ரஷ்ய, ஐரோப்பிய முறைகள்

பற்றிய ஆய்வினை நடத்தியதும், இந்திய தத்துவ நூல்களை விரிவாக ஆராய்ந்ததும், 'நிற்பதுவே நடப்பதுவே' என்னுங் கவிதையில் பொருள்முதல்வாத/கருத்து முதல்வாதத் தத்துவங்களையிட்டு ஆராய விளைந்ததும், தீண்டாமை/பெண் விடுதலை பற்றிச் சூழலை மீறிச் சிந்தித்ததும்..இவை யாவுமே மகத்தான விடயங்களாகும். அவர் வாழ்ந்த சூழலில் அந்த அளவுக்குச் சூழலை மீறிச் சிந்தித்ததே மாபெரும் அற்புதமெனலாம். இதுவே சரியான நிலைப்பாடாகப் படுகிறது.

[பாரதியார் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது. முதன் முதலில் இக்கட்டுரை 4/2/1983 இல் எழுதப்பட்டது. இதனைத் தழுவிய இன்னுமொரு கட்டுரை 'தேடல்' இதழில் பிரசுரமானது.]

பதிவுகள், ஜனவரி 2004 இதழ் 49

25. உலகப் பயங்கரவாதப் பூச்சாண்டியும் வர்க்கப்போரும்--மூன்றாவது உலகப்போராய் நடைபெறும் மூலதனக்காப்பு யுத்தம்! - ப.வி.ஸ்ரீரங்கன் -

"Ein Tropfen லுl ist uns einen Tropfen Blut wert"(எமக்கு ஒரு துளி எண்ணையோ ஒரு துளி குருதிக்குச் சமனமாகும்) Washinton-அமெரிக்காவில் இருந்து ,1918 இல்பிரஞ்சுப் பிரதமர் Clemenceau ஒரு உரையாற்றலில்கூறிய மிகப் பிரபல்யமான சொற்றொடர், இ·து."ஒரு தேசிய இன அங்கீகாரம் எண்ணை வளத்தை வைத்தே உலகத்தில் செல்லுபடியாகும்" இ·து அன்றைய அமெரிக்க ஜனாதிபதி வில்சன். எண்ணை கிடைக்காத பட்சத்தில் இராணுவ போர் ஐந்திரம் நின்ற நிலையில் நிற்கவேண்டியதுதாம், வியாட்நாமில் அமரிக்கத்தோல்விக்கும் இந்த எரிபொருள் சக்தியும் ஒரு காரணமென்பதை நவீன போரியல் வல்லுனர்கள் இன்றும் கூறுகிறார்கள்.முதலாம், இரண்டாம் உலகப்போர்கள் எண்ணை வளத்தை பெருமளவில் கணக்கிலெடுத்தே ஆரம்பிக்கப்பட்டது.எண்ணை விலை,எண்ணை வள கட்டுப்பாடு யாவும் உலகை வெற்றிகொள்ளல் மூலம்தம்மால் கையகப்படுத்தமுடியுமென §ஜர்மனிய ஆளும் வர்க்கம் கருதியது,முதலாம் உலகயுத்தத்திற்குப்பின்பு அமெரிக்கா எண்ணை வளத்திற்காக பேய்போல் அலைந்து துரகிழக்கு'அண்மைக்கிழக்கு நாடுகளை தினமும் வேட்டையாடி வந்தது.

இது சமகால வரலாறு.

11 செப்ரெம்பருக்குப் பின்னோ பற்பல அரசியற் கருத்தியற் வியூகங்கள் உலகரங்குக்கு வந்துள்ளது.அமெரிக்க' ஜரோப்பிய ஆளும் வர்க்கங்கள் இதன் படைப்பாளிகள்.

"இது பயங்கரவாதத்திற்கு எதிரானபோர்!,இஸ்லாமுக்கெதிரானதோ அன்றி ஒரு இனத்திற்கெதிரானதோ அல்ல." ஒரு கையில் உயிர் கொல்லி ஆயுதம் மறு கையில் உணவுப்பொட்டலமும் கூடவே பைபிள் சார்ந்த அரசியற்தத்துவ விளக்கமும், மேல்நிலை வல்லரசு அமெரிக்காவிடம். உலக ஆளும் வர்க்கம் தனது வர்க்க தோழமையுடன் கூட்டாகப்போரிடும் இன்றைய சூழலில்,எப்படியெல்லாம் கருத்துக்களை முன்தயார்படுத்தி அவர்தம்
ஊதுகுழல்கள் மூலம் நமக்குள் கொட்டுகின்றார்கள்!

என்ன செய்ய?, எப்படி எதிர்கொள்ள?

கருத்துக்களால்,நடைமுறையால்,செய்கையால் எதிர்கொள்ள? கேள்விகள்,கேள்விகளாகவே நீண்டபடி. நாம் ஆதரவற்றவர்களாக நடாற்றில் தள்ளிவிடப்பட்டுள்ளோம்.மனித நேயமா? அது அமெரிக்கர்கள்'ஜரோப்பியர்கள் அழிந்தால்-அழிவுக்குள் நேர்ந்தால் உலக அரங்குக்குள் வரும்.அவ்கானிஸ்தானில் மானுடம் அழிந்தாலென்ன ,ஈராக்கில்அழிந்தாலென்ன? இவையெல்லாம் யுத்த அளவுகோலாம்! இந்நாடுகளில்

மரணிக்கும் மானுடர்களுக்கு மௌனஅஞ்சலியை இந்த ஐரோப்பிய நாடுகள், அவர் -தம்தொழிற்சாலைகள்- கல்விக்கூடங்கள்- மதாலயங்கள்- பாராளுமன்றங்கள் செய்யவே செய்யா.

ஆனால் "11 செப்ரெம்பர்" என்பது கலாச்சாரமட்டத்தில் கருத்துக்களாக்கப்பட்டுள்ளது, அகராதியில் சொற்களஞ்சியமாக்கப்பட்டுள்ளது.இந்த "பதினொன்று" மனித குலத்துக்கு விரோதமான பயங்கரவாதிகளின் தாக்குதல்,சமாதானமாக வாழும் சுதந்திரத் திறந்த சமூகத்திற்கு எதிரான காட்டுமிராண்டித்தாக்குதல் எனும் விளக்கமும் வேறு. அமெரிக்காவில் நெறிகட்டினால் ஐரோப்பாவில் மட்டுமல்ல ஆசியாவில்கூட நோவு வந்துவிடுகிறது!

உயிரிழப்புகள் எங்கு நேரிடினும் நாம் நொந்துகொள்வோம்.அதுவே மானுடப் பண்பு. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எம் மூதோர் கூறியதும் இ·தே. ஆனால் மானுடநேயம் மட்டுமல்ல இந்தப்பூமிப்பந்தின்மீதுள்ளனைத்து விடயங்களுமே வர்க்கம் சார்ந்தது.இதனால் ஆளும்வர்க்கம் தனது வலியை எமதாக்க முனைகிறது,இதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது.தனதுசுமையை எமக்குள் அமுக்கி மூலதன நெருக்கடியை உலக மொத்தமக்களுக்குமான நெருக்கடியாக்கி வெற்றியும் கண்டுவிட்டன இந்த உலக ஆளும் வர்க்கப்பேய்கள்.

இது எப்படிச்சாத்தியமாச்சு? ,உலக வர்த்தகக்கழகக் கட்டடத் தகர்ப்புக்கும் இந்த "உலகப் பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்" எனும் அரசியற்கருத்தாக்க உளவியலுக்கும் என்ன தொடர்பு?, இது சார்ந்து மேற்கொள்ளப்படும்செயற்தந்திர வியூகத்திற்கும் போருக்கும் என்ன தொடர்பு?

"யுத்தத்தினது நோக்கை அரசியற் கோரிக்கைக்குள்ளும் அரசியற்கோரிக்கையை பொருளியல் நலன்களுக்குள்ளும் தேடணும்" இதை இடர்படும் நாம் கருத்திற்கொண்டு மேலே செல்வோம்.

ஐரோப்பிய--அமெரிக்க நலன்களும்,மோதல்களும்:
இன்று நடைபெற்று வரும் உலகுதழுவிய அதிநவீன யுத்தமானது வெறும் பொருளீட்டு நோக்குடையதன்று, மாறாக பற்பல நோக்கத்தை மையமாகக்கொண்டு வியூகங்கொண்டுள்ளது. இதை மனதிலிருத்தி க்கொண்டால் மட்டுமே இந்த ஜனநாய முகமூடியின் பின் எந்த முகமுள்ளதென அறியமுடியும்.

"அரபு நாடுகளின் எரிவாயு மற்றும்எண்ணை வள வயல்களை சுதந்திரமாக பராமரிக்கவும், கையகப்படுத்தவும் ஆப்கானிஸ்தான் நமக்கான தோழமை நாடாகவேண்டும்."

"ஈராக்கை மீளக்கட்டியெழுப்பும் பணிக்கு §ஜர்மனிக்கு ஒப்பந்தங்கள் தராத அமெரிக்காவுக்கெதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்கப்படும்."

"அமெரிக்காவினது தர்மயுத்திற்கு உதவாத எந்த நாட்டிற்கும் நாம் ஒப்பந்தம் தருவதாகவில்லை!முடிந்தால் வழக்கைத்தொடருங்கள்"

"ஜரோப்பியக்கூட்டமைப்பு தனது பாதுகாப்பிற்கு ,உலகதரத்திற்குஏற்றவாறு(அமெரிக்காவுக்கு நிகரான?) கூட்டு இராணுவ அமைப்பை உருவாக்கும்.அதனுள் ஜேர்மனி,பிரான்ஸ்,பெல்ஜ¢யம் ஆகிய நாடுகளின் இராணுவங்கள்இணைந்துகொள்ளும்"

மேற்காட்டிய கோரிக்கைகள் ஜராப்பிய கூட்டமைப்புக்கும் அமெரிக்காவுக்குமுடையது. இவ்வரசியற்கோரிக்கையின் பொருளியல் நலன் அப்பட்டமானதாகத் தெரிவதில் வியப்பில்லை.

ஆப்கானில்-ஈராக்கில் பல்லாயிரம் உயிர்கள் பலியாக்கப்பட்டது எதற்காக? இப்போது எது பயங்கரவாதம்? இதை அமுக்கிவிடுவதற்கு அல்லது திசைதிருப்பிவிடுவதற்கு ஒரு சதாம்--பின்லாடன் வகையறாக்கள் தேவைப்படுகின்றது.

கருத்தியில் கட்டுமானமும் யுத்தமும்:

சமூக வாழ்நிலையே சமூகவுணர்வை நிர்ணயிக்கின்றது.

எத்தகைய வாழ்நிலை நம்முடையது?

மனிதர்களாகிய நாமே வரலாற்றை உருவாக்கிறோம்,ஆனால் நாம் விரும்பியவாறல்ல, நாமாகவே தேர்ந்துகொண்ட சூழ்நிலமைகளின் கீழுமல்ல.மாறாக, எமக்கு நேரெதிராகக்காணப்படுகின்ற கடந்த காலத்திலிருந்து கைமாற்றித்தரப்பட்ட சூழ்நிலையின் கீழ் வரலாறு உருவாகின்றது.

இப்போது மேலே கேட்கப்பட்ட கேள்விக்கு வருவோம். எத்தகைய வாழ்சூழல் நம்முடையது?

வேலைவேண்டப்படுகிறோம்,வீடு மீள்கிறோம்.வேலைக்குப் போகவில்லை,வேலையில்லை. கூட்டில் வாழ்கிறோம்,மறுஉற்பத்தியல் ஈடுபடுகிறோம்,புதியவுயிர் பூமிக்கு வருகிறது. எமக்கான எதிர்காலமாக வளர்க்கிறோம்,க்டப்படுகிறோம்.கடமையாய் பாதுகாத்து இச் சமூகத்திற்கு ஒப்படைக்கின்றோம்.

முதலாளிய வர்த்தகச்சமூகமோ எமக்காய் பற்பல வர்ணங்களை -கருத்துக்களை நுகர்வுச்சந்தைக்குள் கொட்டுகிறார்கள் .நாம் நுகர்கிறோம், பிளவுபட்டுக்கிடக்கிறோம், மதங்களின்பேரால் நிறங்களின்பேரால்கூடவே,சாதியின்பேரால்.புல்லுக்கட்டை காட்டியதும் மாடுகள் ஓடோடி வருவதுபோன்று நாமும் நுகர்வுக்காக ஓடோடிக்கொண்டிருக்கிறோம்.

இத்தகைய வாழ் சூழலில்: ஒரு கொஞ்சம் பாசம்,மறு கொஞ்சம் மோசம். இவ்வளவுதாம் வாழ்வு? மறுப்பதற்குண்டு. ஆனால், உண்மையில் இ·துதாம் நமது வாழ்நிலை.

உலகமும்(புறவுலகம்) உயிரும் அதன் பௌதிக இருத்தலும் இவ்வகைச்சூழலுக்குள் இவ்வளவுதாம். அதாவது நமது வாழ்சூழலில் நாமுணரும் உலகம் இவ்வளவுதாம். எமக்கான உணவை,உடையை,உறையுளை,ஆத்மீகத்தேவையை-ஓய்வை, பொழுதுபோக்கை, கல்வியை-அறிவை, புறவுணர்வுத்தேவையை இன்னபிற சகல தேவைகளையெல்லாம் ஆளும் வர்க்கம் நமக்காக நுகர்வுச்சந்தையில் கடைவிரித்துள்ளது.நாம் இதற்காக சகல மட்டங் களிலும்(கல்விக்கூடங்கள்-கலாச்சாரமட்டம்.) தயார்படுத்தப்படுகிறோம், அவ்வளவுதாம்.

இதனாற்றான் புலம்பெயர்நாடுகளிலுள்ள தமிழ் ஊடகங்களில்சதாம் கொல்லப்பட வேண்டியவர்,அமெரிக்கா ஜனநாயக நாடு,எனும் நேயர்கள்ஒருபடிமேலே சென்று ”சும்மா கிடந்த அமெரிக்கச் சங்கை ஊதிக்கெடுத்தான் பின்லாடன்” என்று கூறுகிறார்கள்.

கவனியுங்கள்: அமெரிக்கா சும்மா கிடந்ததாம்!

இதைத்தாமே அவர்கள் வேண்டி நிற்கிறார்கள்.

”துன்மார்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது,செம்மையானவர்களின்¦ஜபமோ அவருக்குப் பிரியம்.”--(பைபிள்:நீதிமொழிகள்15,அதிகாரம்15:8)

இன்றைய மேற்குலக மூலதன எஜமானர்கள்(செம்மையானவர்கள்) ¦ஜபம் சொல்லிக்கொண்டே நம்மை அழித்துப் பலி செய்வது நமக்குப்புதிதல்ல. கொலம்பஸ் அமெரிக்காவைக்கண்டுபீடித்தார். ஐந்தாம் வகுப்பில் படித்தோம், ஆனால் பெரியவர்களாகியும் நம்மால் நமது வரலாற்றை அறியமுடியவில்லை.

அவர்களது ¦ஜபமோ அவ்வளவு வலிமையானது! அது கர்தருக்குப் பிரியமானது (கர்த்தர் சமன்உடமை வர்க்கம் தர மூலதனம்).கோடிக்கணக்கான செவ்விந்தியர்களை,அவுஸ்ரேலிய பழங்குடிமக்களைக் கொன்று குவித்தவர்களின் வாரிசுகள் இப்போது மிக வேகமாக மகாப்பெரிய அழிவு ஆயுதங்களை தம்மைத் தவிர மற்றய நாடுகள் வைத்திருக்கப்படாதாமென சமாதான சங்கீதம் பாடுகிறார்கள்.இதுதாம் இன்றைய ஊடக

யுத்தம்.

ஆளும்வர்க்க ஜனநாயகம்:

"வரலாறு கண்ட யுத்தங்களெல்லாம் வர்க்கங்களுக்கடையிலானது"

வரலாறுதோறும் வினை விதைத்தவர்கள் கீரோசிமாவையும்--நாகசாகியையும் சமீபகால வியாட்நாம் மற்றும்ஈராக்,யுக்கோஸ்லாவியா,அவ்கானிஸ்தான் என்று பல் இன-நாடுகளை கொடும் அணுயுத்தம் செய்து இன-கலாச்சாரஅழிவுக்குள் தள்ளிய ஜரோப்பிய அமெரிக்கர்கள் இப்போது இவ் கொடூரமான, மானுடவிரோதயுத்தத்தை, பயங்கரவாதத்தை-ஆளும்வர்க்க பாசிசத்தை"யுத்த அளவுகோல்" என்று விவாதிக்கிறார்கள். இதுபயங்கரவாதமில்லையாம்! மாறாக யுத்தநெறியாம்,(ஜேர்மனிய-அமெரிக்கப்பத்திரகையாளர், மற்றும் ஜேர்மனுக்கான அமெரிக்கத்துதுவர் கலந்துரையாடல்.டிசம்பர்2003,வுஏ:று னு சு.) அதாவதுஜரோப்பாவும்,அமெரிக்காவும் செய்வது யுத்தஅளவுகோல்'சமன்:யுத்தநெறி. அதையே மற்றய இனத்தவர்கள் செய்தால் பயங்கரவாதம்.

இதுதாம்" 'கவ்போய்' முதலாளிய "ஜனநாயகம்.

ஆளும்வர்க்கங்கள் தமது முரண்பாட்டை-ஆட்சிக்கு வரும் முரண்பாட்டை,நெருக்கடியை தீர்க்க எப்பவும் யுத்தத்தை நடாத்துவார்கள். உலக மேலாதிக்கத்திற்கேற்பட்ட நெருக்கடியைத்தீர்க்க றுழசடன வுசயனந ஊநவெசந தாக்குதல் பயன்பட அனைத்து தேசிய விடுதலை மற்றும் பொருளாதாரவாத எதிர்ப்புப் போராட்டங்களும் பயங்கரவாதப்பட்டியலில் போய் சேர இனவொடுக்குமுறை நிலவும் நாடுகளெல்லாம் ஜனநாயக நாடுகளாயின.

மூலதனம்-குவிப்பு -காத்தல் சமன்: ஜனநாயகம்!

மூலதனம் தன் கரங்களை நேற்றுவரை குருதியில் நனைத்தபடியே...இன்று ஈராக்கில் புதிதாய் குருதியாற்றைத் தோண்டவில்லை. என்றபோதும்,ஆளும்வர்க்கச் செயற்பாடுகள் கடந்த காலங்கள்போன்று இன்றில்லை.இது மிகவும் கவனத்தக்குரியது.

கடந்த காலத்தில்(இரண்டாம் மகாயுத்தத்திற்கு முன்) நிச்சியமாக,நிதர்சனமாக இனம் காணக்கூடிய "வர்க்கத்தோற்றம்" இன்று மிக மிக மங்கலாகக்கூட தோற்றமளிக்கவில்லை. இதனால், யார் இந்த ஆளும் வர்க்கமென வினாவத்தோன்றுகிறது! இந்தத்தோற்றப்பாடே ஏகாதிபத்தியத்தின் இன்றைய தர்க்காலிக வெற்றியுமாகும்(இதற்காக ஏகாதிபத்யம் கோடி கோடியாய் செலவு செய்து கருத்தியல் யுத்தம் நடத்தியபடி...)

இந்தத்தோற்றப்பாடு முழு மக்கள் சமூகத்தையும் தனக்குள் அமுக்கிவிட்டதாகப் பாசாங்கு செய்கிறது.சுரண்டுபவர்களாகவும்,சுரண்டப்படுபவர்களாகமுள்ள இந்த மக்கட் சமூகத்ள் இது வரைகாலமும் நிலவி வந்த வர்க்கவுணர்வு மழுங்கடிக்கப்பட்டு பாரிய மாற்றம் கண்டுள்ளது! இது கைத்தொலைபேசிக்குள்ளும்,கணீணி,இணைய வலை மற்றும் "வர்த்தகக் கழியாட்டகலைக்குள்ளும்" நாளைய சந்ததியைத் தள்ளி எதிலுமே பொறுப்பற்ற அதி தனிநபர் சுதந்திர- சுயநலமிகளாக்கி விட்டுள்ளது.

இதனால் வர்க்கவுணர்வுமழுங்கடிக்கப்பட்ட மக்களால் நாட்டு நிலைமை, வறுமை,வேலையில்லாத்திண்டாட்டம்,யுத்தமென நகர்வதை முழுமையாகப் புரிந்து கொள்ளப்போதிய திறன் இல்லை. இந்தப்போக்கால் சந்தைப்பொருளாதாரம் தற்காலிக வெற்றிபெற்றுள்ளதை நாம் ஒத்துக்கொண்டேயாகவேண்டும்!இந்த வெற்றியை மேற்குலக பல்கலைக்கழக மட்டம் மார்க்சிசத்தின் தோல்வியாகச்சித்தரிக்க முனைகிறது, இதை §ஜ ர்மனிய பல்கலைக்கழகப் பேராசிரியன் பீட்டர் சிமா இப்படிக்கூறுகிறான்:"மார்க்சியமென்பது இன்னும் சிலகாலம் புத்தக அலுமாரியிலிருக்கும் பின்பு பொருட்காட்சிக்கூடத்தில் ருக்கும்." இந்த நிகழ்வுப்போக்கானது திட்மிட்ட-மிக நுணுக்கமான ,விஞ்ஞானபூர்வ முதலாளியச் சுழற்சியால் நிகழ்கிறது. இன்றைய நாளில் நேரடியாய் மனித விரோதப்போக்கைக் காட்டிக்கொள்ள ஆளும் வர்க்கம் முயற்சிக்காது மிகத் தந்திரமாகச் செயற்படுவதை கடைப்பிடிக்கிறது.இதன் உள்ளார்ந்த தந்திரமானது முழு மக்களுக்குமான ஜனநாயகம் ,சமத்துவம், சுதந்திரம் என்ற அரசியற்கருத்தாங்களால் காப்பாற்றப்பட்டு வருகிறது.

மூலதனத்தைப் பெருக்கிட,சந்தைவாய்பை காத்திட, உலகப்பொதுச்சொத்தான மூலவளங்களைத் தாமே தொடர்ந்து கொள்ளையிட யுத்தம் செய்யும் இன்றைய சூழலுக்கு வேறு வகையான தந்திரங்களைக் கட்டவிழ்துவிடுகிறார்கள்.அமெரிக்க-ஜரோப்பிய கூட்டு நடாத்தும் இன்றைய அதிநவீன தாழ்அணுயுத்தங்களுக்கு"பயங்கரவாதத்திற்கெதிரான போர்" என்ற அரசியற்-சமூக உளவியற் கருத்தாக்கம் வலுவாக்கப்பட்டுள்ளது. இது சாரம்ஸமான "ஜனநாயகம்" என்ற கோட்பாட்டு உத்தியை மறைமுகமாகப் பிரதிநித்துவம் செய்கிறது ,முதலாளித்துவ உற்பத்திப்பொறிமுறை இதனாற்கட்டிக்காக்கப்படுகிற முகாந்திரம் வலுவாக்கப்பட்டுள்ளது. இதுநாள்வரையான "ஜனநாயகத்திற்கு எதிராகச் செயற்படும் நாடுகள்"எனும் கருத்தாக்கம் இப்போது "பயங்கர வாதத்திற்கு ஆதரவான நாடுகள்" என்பதில் போய்முடிந்துள்ளது.

நடப்பது மூன்றாவது உலகமகா யுத்தம்:

இன்று நடைபெற்று வரும் ஆப்கான்-ஈராக்கிய ஆக்கிரமிப்பும் யுத்தமும் மற்றும் நடைபெறப்போகும் சூடான்,சோமாலியா, லிபியா, ஈரான்-வடகொரியா யுத்தங்களும், இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின் நடைபெற்ற 184 பாரிய-சிறிய அளவிலான

யுத்தங்களும் பழைய முதலாம்,இரண்டாம் யுத்த வடிவத்தை தகர்த்து விட்டு புதிய மகாயுத்த வடிவத்தை எடுத்துள்ளது! ஆனால் உள்ளடக்கம் ஒன்றுதாம். தோற்றத்தில் இ·து உலக மகாயுத்தமாக இருக்காது, ஆனால் 1945 க்குப் பிறகு நடைபெறும் அனைத்து யுத்தங்களும் இந்த மூன்றாவது உலக மகாயுத்தத்தின் புதிய வடிவத்தைக்கொண்டே நடைபெறுகிறது. இதன் சாரம்மூலதனப்பாச்சலுக்கெதிரான அனைத்து நாடுகளையும்-இயக்கங்களையும்கொய்தெறிவதே.இந்த யுத்தங்களின் விருத்தி ”பயங்கர வாதத்திற்கெதிரான யுத்தக் கூட்டு” என்ற முக மூடியைத் தாங்கி உலக மகாயுத்தமாக நடைபெறுகிறது, இதுதாம் உண்மை!

ஏகாதிபத்திய ,நவகாலனித்துவ பல் தேசியக் கம்பனிகளுக்கெதிரான செயற்பாடுகள், போர்கள், தேசியயெழிச்சிகள்,இடைவிடாத தன்னெழிச்சியான எதிர்ப்புகள், உலக தழுவிய தன்னார்வக்குழுக்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகள், இவற்றுக்கும்பல் தேசியக்கம்பனிகளுக்கும் நேர்’எதிராகவும் பகை முரண்கள் நிறைந்திருப்பினும் இவ் எதிர்ப்பியக்கங்களுக்குள் ஊடுருவிய பல்தேசியக்கம்பனிகளின் புத்திஜீவிகள்-மாபியாக் குண்டர்படைகள் குறிப்பிட்ட எதிர்ப்பியக்கங்களை ”பயங்கரவாதிகளின் கூட்டு”வடிவமாச் சித்தரிப்பதில் வெற்றியீட்டி#ள்ளன. இது 11 செப்டம்பருக்கு பின் வெள்ளையின கவ்போய் மூலதனவாதிகளுக்காக உருவாக்கப்பட்ட விசவடிவிலான அராஜகக்கூட்டுணர்வுக்கப் பின் இன்னும் ஆளமாக அனைத்து தேசிய விடுதலைச் சக்திகளையும் முடக்கி அமெரிக்காவுக்கு கூஜா தூக்க வைத்துள்ளது!.

இறுதியாகச் சிலவற்றை தொகுப்பாகக் கூறுகிறோம்:
இன்றைய ஆளும்வர்க்கங்கள் தத்தமது கூடாரங்களுக்குள் (முதலாளிய கருத்தியில்) இருந்துகொண்டு பற்பல புதிய கூடாரங்களை (பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம்) உருவாக்கி விடுகிறார்கள். சுதந்திரம், ஜனநாயகம் எனும் பெயரால் மூன்றாமுலக ஆரியரற்ற மாற்று இனங்களை ’கலாச்சார, தேசிய அலகுகளை உருத்தெரியாது அழிக்கிறார்கள்.

ஒரு இனம் உற்பத்தியை கட்டுப்படுத்தி, தாமே தொழில் பேட்டையாளர்களாகவும் மற்ற இனங்கள் இவர்களது தயவில் தங்கி நுகர்வோராக இருக்கவைத்தல்! ஒரே மொழி(ஆங்கிலம்) ,ஒரே மதம்(கிறித்துவம்) ஒரே பண்பாடு(மேக் டொனால்ட் கலாச்சாரம்) உருவாக்கிக்கொள்ளல்! உலகத்தில் நிலவும் அனைத்து அரசுகளையும் மாநில அரசுகளின் நிலைக்குத்தள்ளி மத்திய அரசாக அமெரிக்கக்கூட்டணி பொறுப்பேற்றல்! சர்வதேசச் சட்டவாக்கத்தை உலக வங்கியிடம் கையழித்தல்! உலகப் பொலிசாக அமெரிக்காவை அனைவரும் ஏற்க வைத்தல்! இதுவே புதிய உலக ஒழுங்கு.இதிலிருந்து தப்பிக்க என்ன வழி? இதுவே முக்கியம் பெறும் கேள்வியாக இனிமேல் பேசப்படவேண்டும்!

srirangan@t-online.de பதிவுகள், ஜனவரி 2004.

26. ஹெரால்ட் பின்ட்டரின் அமெரிக்கக் கால்பந்து : தொகுப்பும் மொழியாக்கமும் ரா.பாலகிருஷ்ணன் மற்றும் யமுனா ராஜேந்திரன்! - யமுனா ராஜேந்திரன் -

1.பின்ட்டரின' படைப்பும் வாழ்வும் குறித்த அறிமுகம.; 2. பின்ட்டரின் மலை மொழி (mountain language) நாடகம் 3. பின்ட்டரின் ஆறு கவிதைகள். 4.பின்ட்டருடன் ஆனி மேரி கியூஸாக் நிகழ்த்திய உரையாடல் 4. பின்ட்டரின் நோபல் உரை போன்ற ஆககங்கள் அடங்கிய தொகுப்பு.;

88 பக்கங்கள
விலை: 50 இந்திய ரூபாய்கள்

வெளியீடு : நந்தினி பதிப்பகம்;
169-ஏ 6 வது வீதி நீட்சி
காந்திபுரம். கோவை : 641012 இந்தியா

பின்ட்டர் குறித்த அறிமுமகத்திலிருந்து சில பகுதிகள் :

ஹெரால்ட் பின்ட்டரின் அமெரிக்கக் கால்பந்து : தொகுப்பும் மொழியாக்கமும் ரா.பாலகிருஷ்ணன் மற்றும் யமுனா ராஜேந்திரன்!வெளியெனும் அளவில் ஒரு தனித்த அறையும் ஒரு தனிமனிதனும் சதா பதட்டத்திலும் பயத்திலும்; பாதுகாப்பின்மையிலும்தான் விட்டுவைக்கப்பட்டிருப்பதாகக் கருதுகிறார் பின்ட்டர். இரண்டு வெளிகளுமே பயங்கரத்தையும் பிறமனிதரின் அத்துமீறலுக்கான சாத்தியத்தையம் கொண்டிருப்பதாகப் பின்ட்டர் கருதுகிறார். அறைக்குள் நுழையும் மனிதனும் இன்னொரு மனிதனின் அகத்துள் நுழையும் மனிதனும் - மொழிவழியிலோ அல்லது சிந்தனை வகையிலோ நுழையும் மனிதன் - எப்போதுமே வன்முறையையே கொண்டு வருகிறான் என்கிறார் பின்ட்ட்டர். ஆண் பெண் பாலுறவு அதிகாரச் சமன்பாடு குறித்த அவரது முன்னைய நாடகங்களிலும், அரசியல் வன்முறையும் மேலாதிக்கமும் குறித்த அவரது பி;ன்னைய நாடகங்களிலும அறையென்பது ஒரு முக்கியமான உயிரியாக இடம் பெறுகிறது. வன்முறையின் சாட்சியமாக, அத்துமீறலின் சாட்சியமாக, அதற்கு எதிராக ஒடுக்கப்படும் மனிதரின் மௌன நம்பிக்கையின் சாட்சியமாக அறை இருக்கிறது.; பின்டரது சிறை எனும் அறை சதா விளையும் பயங்கரத்தை பார்வையாளரின் சிந்தைக்குள் ஆழ்மனதில் இருத்தி விடுகிறது. சுற்றிலும் இருக்கும் அரசு, அமைப்புகள் போன்ற பயங்கரத்தினுள் பார்வையாளன் இதனால ஆழ்த்தப்பட்டு விடுகிறான்.

மனிதர்கள் மீதான அவமானப்படுத்தலுக்கும் ஆதிக்கத்திற்கும்; பாலுறவு அதிகாரம் ஒரு முக்கியமான காரணியாக பின்டரது நாடகங்களில் இயங்குகிறது. பாசிசத்தை நேரடியாகவே

சில நாடகங்கள் கதைக் கருவாக எடுத்துக் கொண்ட போதிலும், சமகால அரசியலினதும் பாசிசத் தன்மைகளை, குறிப்பாக பிசாசு என பின்டர் குறிப்பிடும் அமெரிக்க மேலான்மை அரசியல் அமைப்பிலும்;, தேசிய அரசு பிற சிறபாமையினர் மீது திணிக்கும் அதிகார அமைப்பிலும் காண்கிறார் பினட்டர். புpன்டரது நாடகங்களில் அதிகமும் இடம்பெறும் பாலுறவு வசவுகளையும் மட்டுமிறிய சொற்களின் வனமுறையையும், சொற்களின் இடைவெளியில் மௌனம் அழைக்கும் உடலின் அத்துமீறலையும் இந்தப் பிண்ணனியில் ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.;

மொழியாக்கம் பெற்றிருக்கும் அவரது மலை மொழி (mountain language) நாடகம் முதன்முதலாக 1988 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் புத்தக உருவில் வெளியானது. 1989 ஆம் ஆண்டு அதனது முதல் மேடையேற்றத்தினை ‘ ஜூன் 20’ எனும் இடதுசாரி குர்திஸ் விடுதலை ஆதரவாளர்கள் நிகழத்தினர். பின்ட்டரே இந்த நாடகத்தின் முதல் மேடையேற்றத்தை நெறிப்படுத்தினார.; நாடகத்தின் ஒத்திகை நடந்துகொண்டிருந்த மண்டபத்தைச் சுற்றிலும் பிரித்தானிய அதிரடிப் படையினர் சூழ்ந்து கொண்டிருக்க, மேலே ஹெலிகாப்டர்கள் வட்டமிட்ட நிலையில் நாடகத்தின் ஒத்திகை நடந்ததாக அன்று அதனது ஏற்பாட்டளார்கள் தெரிவித்திருந்தமை பிரித்தானிய நாடக வட்டாரங்களில் ஒரு பிரசித்தமான செய்தி. மலை மொழி; எழுதப்பட்ட காலத்தில் பின்ட்டர் குர்திஸ் மக்கிளின்; விடுதலைக்காக மனித உரிமை அரங்குகளில் உரத்துக் குரலெழுப்பிக் கொண்டிருந்தார்.

துருக்கியில் குர்திஸ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதியாகச் சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லைலா ஜானா எனும் இளம் பெண் பாராளுமன்றத்தில் தனது தாய்மொழியான குர்திஸ் மொழியில் உறுதிமொழி எடுத்துக்கொண்டதற்காக சிறையில் அடைக்கப்பட்டார். காரணம் அப்போது துருக்கியில் குர்திஸ் மொழி தடை செய்யபட்டிருந்ததுதான். குர்திஸ் பிரதேசங்களில் கூட குர்திஸ் மககள் தமது சொந்த மொழியில் பேசமுடியாத ஒரு சூழல் அன்று நிலவியது. மலை மொழி நாடகம் உடனடியாக குர்திஸ் மக்களின் ஒடுக்குமறை சாரந்ததாகத் தோன்றினாலும், நாடகம் எழுப்பும் அனுபவம் இந்த ஒடுக்குமுறையை இனம், மதம், சாதி என நிகழும் ஒடுக்குமுறையினோடும்;, தமது நம்பி;க்கைகள், கலாச்சாரம் சார்நத ஒடுக்குமுறையினோடும் வைத்து ஒருவர் அனுபவம் கொள்ள முடியும். அடையாளமற்ற நாட்டிலும், குறிப்பான இடமற்ற சிறையிலும், குறிப்பிட்ட காலமற்ற காலத்திலும் நிகழும் இந்த நாடகத்தினை ஒருவர் தத்தமது பிரதேசத்தின் குறிப்பிட்ட ஒடுக்குமுறை சார்நத அனுபவமாக உணரந்துகொள்ள முடியும். இந்த நாடகம் தற்போது குண்டானமோ சிறையிலும் நடந்து கொண்டிருக்கும் நாடகம்தான். எந்தச் சிறுபான்மையினச் சமூகமும் ஒரு மத்தியத்துவப்படுத்தப்பட்ட தி;ட்டமுள்ள நாட்டிலும்; எதிர்கொள்ளும் அனுபவம்தான் பின்ட்டரது மலைமொழி எழுப்பும் அனுபவம். இந்த வகையிலேயே பிரபஞ்சத்தன்மையை எய்துகிறது.

மலை மொழி நாடகத்தை அமெரிக்காவில் மீள நிகழ்த்திய இயக்குனரான கேரி பெர்லோபின் (carey perloff) அனுபவத்தை இங்கு சுட்டுவது பின்ட்டரது நாடகம் பிறி பிரதேசங்களுக்குப் பெயர்க்கப்படும் போது எதிர்கொள்ளும் சிக்கலை விளக்குவதற்கான ஒரு சான்றாக அமையும். பின்ட்டரது மொழி பிரித்தானியவயமான ஆங்கில மொழி. ஆங்கில மொழிக்கே உரிய பல விளையாட்டுக்களை சாதுரியங்களை பின்ட்டர தமது நாடக மொழியில் பிரயோகிக்கிறார். இவ்வகையில் நாடகம் என்பது பிற பிரதேசவயமாக்கபபடும்போதோ அல்லது மொழியில் சொல்லப்படும்போதோ அந்தந்த நாடுகளுக்கு ஒப்ப கால இடக் குழப்பங்களையும், அர்த்த மயக்கங்களையும் உருவாக்கவல்லது. குறிப்பாக பிரதேச ரீதிலான மொழி ஒடுககுமுறை இல்லாத அமெரிக்க சமூகத்தில் குறிப்பிட்ட பிரதேசத்தைப் பேசும் நாடகம் எந்த விதமான உணர்வையோ அர்த்த i தையோ பார்வையாளரிடம் எழுப்பாது போகலாம். ஆனால் ஒரு மையப்படுத்தபட்ட அதிகாரம் எனும் அளவில் பிறமக்களின் மீதான ஆதிக்கத்தை அமெரிக்காவும் மேறகத்திய நாடுகளும் மொழியை மையான அதிகாரமாக வைத்து நிகழ்த்தி வருகிறது எனும் பொது உண்மையை குறிப்பிட்ட கால இடத்தில் நிகழாத இந்த நாடகம் உருவாக்க முடியும். ஆகவே நாடகத்தின் மொழியை அமெரிக்கவயப்படுத்துதல் எனும் நிலைபாட்டை பின்ட்டர் ஏற்றுக்கொள்ளவில்லை என்கிறார் கேரி பெர்லோப். ஆனால் மொழிசார்ந்;த ஒடுக்குமுறை நேரடியாக நிகழ்ந்துகொண்டிருக்கிற ஒரு சமூகத்திற்கு கால இடமற்ற வகையில் நிகழும் மலை மொழி நாடகம் புரிதலில் எந்தச் சங்கடததையும் உருவாக்குவதில்லை.

காலச்சாரத்தில் ஒழுக்கவாத மதிப்பீடுகளையும் படைப்பில் சுத்தத்தையும் வலியுறுத்தும் மொழிபெயரப்பாளர்களுக்கு பின்ட்டர் பாரதூரமான சங்கடத்தையே உருவாக்குகிறார். பின்ட்டரது மொழி நிறையப் பாலுறவுக் கொச்சைகளையும் பாலுறவு நிந்தனைகளையும் வன்முறையையும கொண்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் உடலின் மீதான அதிகாரம் செலுத்துவதில் பாலுறவு நிந்தனைகள் முக்கியமான பீதியூட்டும் பாத்திரம் வகிக்கிறது என்பது பின்ட்டரது நிலைபாடு. மனிதரெனும் அளவில் பாலுறவு நிந்தனைகள் மனித ஆன்மாவின் பெருமிதத்தை முற்றிலும் அழித்துவிடுகிறது என்கிறார் பினட்டர். பின்ட்டரது வன்முறையும் பாலுறவுக் கொச்சையும் அடர்நத மொழியை நிராகரித்துவிட்டு அவரை மொழியாக்கம் செய்வது என்பது சாத்தியமில்லை.

வாசகனாக ஹெரால்ட் பின்டரது கவிதைகளையும் அவரது பின்னைய அரசியல் சார்ந்த நாடகங்களையும் இலத்தினமெரிக்க நாவலாசிரியரும் கவிஞருமான ஆரியல் டோப்மெனின் படைப்புகளுடன் ஒப்பிட முடிகிறது. வன்முறையினிடையில் வாழத்தலைப்பட்டிருக்கம் இரண்டு மனிதர்களின் இடையிலான தொடர்பு மொழி எத்துணை வன்முறையம் வக்கிரமும் பழிவாங்கும் உணர்வம் கொண்டிருக்கும் என்பதற்கான நம் காலத்தின் மொழி சார்நத சாட்சியங்காளக பின்டரின் one for the road நாடகத்தையம் டாப்மெனின் death and the maiden நாடகத்தினையும் குறிப்பிட முடியம். அது போலவே காணாமல் போய் கண்டெடுகப்;பட்ட உடல்களை முன்வைத்து தொலைத்தவர்களால்

நடத்தபடும் உரையாடல்களாக வெளிப்படும் கவிதைகளை நிறைய ஆரியல் டாபமெனிடம் காணக் கிடைக்கும். பின்டரது போர் பற்றிய கவிதைகளும் அவரது இறுதக்காலக் கவிதைகளும் அதிகமும் மரணித்த உடல்கள் பற்றியதாகவும், மரணத்தின் கோரமுகம்; பற்றியதாகவுமே இருப்பதை அவரது வாசகர்கள் அறிந்து கொள்ள முடியம்

மொழியாக்கம் பெற்றிருக்கும் அவரது நோபல் பரிசு உரை ஒரு நாடகக் கலைஞன் எனும் அளவில் பின்ட்டரின் அனைத்து ஆளுமைக் கூறுகளையும் செரித்துத் கொண்டதாக இருக்கிறது. மிகுந்த நாடகத் தன்மையும், காடசி மாற்றங்களும், இளமையின கோபமும், நிலைத்த மௌனங்கள் எழுப்பும் அர்த்தங்களும், நையாண்டியும், வேஷங்கட்டுதலும் என ஒரு தனித்த காட்சி நடிப்புக்குரிய (monologue) அத்தனை அம்சங்களையும் இந்த உரை கொண்டிருக்கிறது. பின்னணியில் அவரது இளமைக் காலப்படம்.. சக்கர நாற்காலியில் அமர்ந்திருக்கும் பின்ட்டர் தற்போது தளர்ந்து காணப்பட்டாலும், அது அப்படியே மெய்ம்;மை இல்லை என்பதைத்தான் அவரது இளமை தளும்பும் படம் காண்பிக்கிறது. பின்ட்டர் முதலில் ஒரு நடிகர். அவருக்கு ஜோர்ஜ் புஸ்ஸைப் போலவும் மாறிப் பேசமுடியும். நடப்பையும் நடவாமையையும் ஒருவராகவே வேறுபடுத்திக் காட்ட அவரால் முடியும். நக்கலும் ¡நாயண்டியும் சோகமும் கோபமும் துயரும் நம்பி;க்கையும் என அவரது குரல் வேறு வேறு தளங்களில் சஞ்சரிக்கிறது. தன்னளவிலேயே ஒரு கலை அனுபவமாக அமையக் கூடியது அவரது நோபல் பரிசு உரை. ஒரு உக்கிரமான அரசியல் நாடகமாகவே அது அர்த்தம் கொள்கிறது.

கலைஞன் தார்மீக நெறிகளதும், பிரபஞ்ச மதிப்பீடுகளதும், மனித உரிமைகளதும், மனிதனின் பெருமிதத்தினதும் காவலன் எனும் பிம்பம்; சமீப ஆண்டுகளில் தகர்ந்து வருகிறது. இத்தகைய உலகச் சூழலில், அரசியல் மெய்மைகளை நேர்க்கி;ய நமது தேடலைக் கோரும் பின்ட்டரின் குரல் நம்; காலத்தின் தார்மீகத்தின் குரல். மனித பெருமிதத்தின் அழிவைக் கண்டு கலங்கும் சத்திய ஆவேசத்தின் குரல். அந்தக்குரல அவரது நோபல் பரிசு உரையில் மிகத் தெளிவாகவும்; தீரத்துடனும் கேட்;கிறது :.

"நிலவுகிற பெருமளவிலான சிரமங்கள் இருந்தபோதிலும் நான் நமபுபகிறேன் : அச்சமற்ற, நெறி திறம்பாத, உக்கிரமான அறிவுசார் கடப்பாடடுடன், ஒரு குடிமகனாக, நமது சமூகங்களிதும் எமது வாழ்வினதும் மெய்ம்மைகளை நாம் வரையறுக்க வேண்டியது நமக்கு ஒப்படைக்கப்படடுள்ள, நமக்கு முன்னுள்ள கடமையாகும். நிஜத்தில்; இது நமக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டளையாகும். "

ஆறு கவிதைகளிலிருந்து பின்ட்டரின் ஒரு கவிதை:

அமெரிக்கக் கால்பந்து
அல்லேலுயா

இது சரியாக வேலை செய்கிறது
மலம் வெளியேறும் வரை மிதியுங்கள்

மலம் மறுபடி அவர்களது மலக்குழியில்
திரும்ப ஏறும்வரை உதையுங்கள்
அவர்களது ஓழ்த்த செவிகளிலிருந்து மலம் வெளியாகட்டும்

இது சரியாக வேலை செய்கிறது
மலம் வெளியேறும் வரை மிதியுங்கள்
அவர்களது சொந்த மலத்தில் அவர்களுக்கு மூச்சுமுட்டட்டும்

அல்லேலுயா

எல்லா நல்லனவற்றுக்கும் கர்த்தரை வாழ்த்துங்கள்;

மலத்தில் அவர்களை உதைத்துத் தள்ளியாயிற்று
அவன்கள் சொந்த மலம் தின்கிறான்கள்.

அல்லேலுயா
எல்லா நல்லனவற்றுக்கும் கர்த்தரை வாழ்த்துங்கள்

அவர்களது விரைகளை நார்; நார்நாரறாக் கிழித்து நாம்
புழுதியில் கடாசிவிட்டோம்.;

நாம் செய்து காட்டியிருக்கிறோம்.

என் பக்கம் வந்து
என் உதட்டில் முத்தமிடும்படி
இப்போது
உன்னை நான் அழைக்கிறேன்…

rajrosa@gmail.com

27. சிங்கப்பூர் தமிழ் இலக்கியம்! - வெங்கட் சாமிநாதன் -

முதலில் என்னுடைய அறியாமையை ஒப்புக்கொள்ள வேண்டும். சிங்கப்பூர் பார்க்கப்போனால் ஒரு நகரமே.. அந்த நகரம் தான் ஒரு நாடாக, மலேயாவிலிருந்து பிரிந்த நாடாக, கொஞ்ச காலம் முன் தன் இருப்பை மேம்படுத்திக் கொண்டுள்ளது. லீ க்வான் யூ வின் தலைமை வழிகாட்டுதலில் வியக்கத் தக்க பொருளாதார வளர்ச்சி அடைந்து Asian Tiger-ல் ஒன்றாக ஆகியுள்ளது.. அந்த அரசில் ஒரு தமிழர் அயல்நாட்டு உறவு அமைச்சராகும் அளவிற்கு தமிழர்களின் இடம் அந்நாட்டில் சிறப்புப் பெற்றுள்ளது. தமிழ் அந்நாட்டின் அரசு மொழிகளில் ஒன்று. சரி. இதெல்லாம் சரி. ஆனால் இலக்கியம்?

தென் ஆப்பிரிக்கா, ·பிஜி, மாரிஷஸ், மலேசியா, கயானா இலங்கை, இப்படி பல நாடுகளுக்கு 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து, தமிழ் நாட்டின் தென்மாவட்டங்களிலிருந்து தமிழ் மக்கள் லக்ஷக்கணக்கில் கரும்பு, ரப்பர் தோட்டங்களில் கூலிகளாக தங்கள் வயிற்றுப் பாட்டிற்கு சென்றனர். அவர்கள் ஏழைகள். படிப்பற்றவர்கள். பல இடங்களில் அவர்கள் தம் தாய் மொழியையும் மறந்தவர்கள் தான். அப்படி இருக்க இலக்கியம் என்று அவர்களிடமிருந்து என்ன எதிர் பார்க்க முடியும்.? அதிகம் அவர்கள் ஒரு முருகன் கோயில் அல்லது மாரியம்மன் கோயில் எழுப்பி காவடி, தீமிதி என்று தம் தமிழ் அடையாளத்தை நினைவுறுத்திக் கொண்டிருக்கலாம். மலேசியாவில் இது வெகு சிறப்பாக நடை பெறுகிறது. தமிழ் சினிமாவில் நேற்றைய தீபாவளி ரிலீஸ் வரை அப்டுடேட்டாக இருக்கலாம். சரி. அதற்கு மேல்? ஒர் விதி விலக்கு. இலங்கை. ஆனால் அங்கு இலக்கியப் படைப்புகளில் ஆழ்பவர்கள், தேயிலை ரப்பர் தோட்ட தொழிலாளிகள் அல்ல. சரித்திர காலத்திலிருந்தே அங்கு வாழ்ந்து வரும் ஈழத் தமிழர் தான். 50 களிலோ என்னவோ கு. அழகிரிசாமி மலேயா சென்று சிறுகதை வகுப்புகள் நடத்தியதாக படித்த ஞாபகம். வகுப்பு நடத்தி, யாரும் சிறுகதைக்காரராகும் வாய்ப்பு இருக்கிறதா? யாரும் அந்த வகுப்பிலிருந்து சிறுகதைக்காரராக வெளியேறியிருக்கிறார்களா? தெரியாது.

ஆனால் முனைவர் எம்.எஸ் ஸ்ரீலக்ஷ்மி அவர்களின் சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் - ஆழமும் அகலமும் என்ற புத்தகம் அவ்வப்போது வாசித்த கருத்தரங்க கட்டுரைகளின் தொகுப்பு. அது பல புதிய சுவாரஸ்யமான செய்திகளைத் தருகிறது. அந்த செய்திகள் பலவும் நமக்குத் தெரிய வேண்டியவை. மகிழ்ச்சி அளிப்பவை. அவர் தரும் செய்திகள் சில நம்மில் பல கேள்விகளையும் எழுப்பி இன்னும் சற்று அதிகம் அறியத் தூண்டுகின்றன. அங்கு, மலேயாவிலோ, சிங்கப்பூரிலோ 19-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் குடியேறத்தொடங்கியவர்களில் பாதிப்பேரான ஆதி திராவிடர்களும் மற்றவர்களும் , வயிற்றுப் பிழைப்பிற்காக போனவர்கள் படிப்பறிவற்றவர்கள் என்றிருக்க, தமிழ் சிறுகதை வரலாற்றில் எழுதப்பட்ட முதல் சிறுகதை, விநோத சம்பாஷணை, மக்தூம் சாயபு என்பவரால் எழுதப்பட்டது. சிங்கப்பூர் மண்ணில் தோன்றியது. வருடம் 1888. வடிவச்

சோதனைக்கும் வட்டாரத் தமிழுக்கும் வாய்ப்பளித்த கதை என்று சொல்லப்படுகிறது. அதன் சிறுகதை வடிவம் பற்றி கேள்விகள் எழுந்தாலும், வ.வே.சு. ஐயரை அது முந்திக்கொண்டுள்ளது என்பது விசேஷம். மக்தூம் சாயபு யார், அவர் இதை எழுத வந்த பின்னணி என்ன, போன்ற விவரங்களைக் கேட்க தோன்றுகிறது நமக்கு. அதன் தொடர் நிகழ்வுகள் என்ன என்றும் கூட. இதன் இழையில் இன்னொரு சுவாரஸ்யமான விவரம் இத்தீவு மக்கள் 1825 லிருந்தே இலக்கியம் படைக்கத் தொடங்கி விட்டனர் என்பது. சி.ந.சதாசிவப் பண்டிதர் வண்ணை அந்தாதி என்று தொடங்கி நான்கு அந்தாதிகள் 1887 -ல் எழுதி அச்சிட்டிருக்கிறார் இலங்கையிலிருந்து வந்தவர் தன் யாழ்ப்பாண வண்ணை நகரைப் பற்றி இரண்டும் பின் சிங்கப்பூரில் வந்த இடத்தில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் பற்றியுமானவை அவை. இது தொடர்கிறது. 1893-ல் ந'.வ்.இரங்கசாமிதாசன் அதிவினோதக் குதிரைப் பந்தய லாவணி என்னும் லாவணி பாடியிருக்கிறார். ஒரு பயண நூல், மலாக்காவுக்கு கப்பலில் வந்த கதையை காவடிச் சிந்து வடிவில் ஆதியோடந்தமாகச் சொல்கிறது. அக்கால சிங்கப்பூர், கப்பல் பயணம், இத்யாதி பற்றிய வரலாற்றுப் பதிவு என்று இப்பயணக் கதையைச் சொல்லவேண்டும். இதை எழுதியவர் இதைத் தொடர்ந்து பல பயண நூல்கள் சிந்துக்களாகத் தொடர்கின்றன. 1907 -ல் சிங்கை நகர் பற்றியும், 1936- புத்தர் ஆலய வழி நடைச் சிந்து (பிரமன் ஆலயம் என்றும் வேறு ஒரு இடத்தில் சொல்லப்படுகிறது) என்றும் கடைசியாக 1937-ல் இந்தியக் கப்பல் பிரயாணம் பற்றி ஒரு வழி நடைச் சிந்து. இவை அவ்வளவும் மரப்பார்ந்த அந்தாதி, காவடிச் சிந்து என பா வடிவங்களிலேயேயானாலும் அவரவர் தம் அனுபவங்களையும் வாழ்க்கையையுமே சார்ந்து எழுதியுள்ளனர். இத் தமிழ் ஆசிரியர்கள் இலங்கையை விட்டு எதற்கு பயணமானார்கள், அங்கு சென்றது தமிழ் படிப்பிக்கவா, அக்கால குடியேறிகள் தமிழ் படிக்கும் தேவை இருந்ததா,? அதற்கும் மேல் இலக்கிய முயற்சிகளிலும் தம் அனுபவங்களையும் பதிவு செய்யும் ஆர்வமும் இவ்விலங்கை பண்டிதர்கள் அன்று கொண்டிருந்ததும் அந்த வசதிகள் அவ்வேழை குடியேறிகளின் சமூகத்தில் இருந்ததென்றால் ஆச்சரியப்படவேண்டிய ஒன்று. இன்று 70 வருட காலமாக தமிழ் பற்று பிரசாரம் செய்தவர்கள் அரசேறிய தமிழ் நாட்டில் தமிழ் படிக்காமலேயே இருந்து விடுவது சாத்தியமாகிறது. அப்படி ஒரு தலை முறை வளர்ந்துவிட்டது.

இன்னும் ஒரு சுவாரஸ்யமான விவரம். அக்கால சிங்கை மலேசிய குடியேறிகள் தம்முடன் தம் தமிழ் அடையாளங்களையும் சுமந்து தான் இருந்தனர். தமிழக தொடர்புகள் விடவில்லை. அது ஒரு சில விஷயங்களோடு நின்றது. தம் சாதி உணர்வு, பூசை வழிபாட்டு வழக்கங்கள், பழய சாதி உணர்வுகளுக்கும் மேல் ஆங்கிலம் அறிந்தவர்-அறியாதவர் என்று கூடுதலாக இன்னும் ஒரு புது சாதிப் பிரிவு, இத்யாதி. இத்தோடு, 1925-- ல் வருகை தந்த ஈ.வே.ரா பெரியாரின் தாக்கம். பிராமணர்களே இல்லாத, 50 விழுக்காடு ஆதி திராவிடர்களே ஆன பூசையையும் கோவிலையும் விடாத அந்த சமூகத்தில் வெறும் நாத்திகமும் பிராமண எதிர்ப்புமே எப்படி தாக்கம் பெற்றது என்பது

புரியவில்லை. இருப்பினும் 1932 தமிழர் சீர்திருத்த சங்கம் தொடங்கப்பட்டு தமிழ் முரசு, திராவிட முரசு என பத்திரிகைகள் வெளிவருகின்றன. . இவை பெரும் த'க்கத்தை ஏற்படுத்தின. இதன் விளைவாக ஈ.வே.ரா. வின் பகுத்தறிவுச் சிந்தனைகளே நாவல், சிறுகதைகளாக உருப்பெறத்தொடங்கின. ந.பழநிவேலு, பாத்தென்றல், வில்லிசை வேந்தர் என்றெல்லாம் அறியப்படும் முருகதாஸ் போன்றவர்கள் இதில் அடக்கம். ஆனால் பொதுவாக ஈ.வே.ரா.வின் தாக்கம் அச்சமூகத்தில் பரவலாக காணப்பட்டது. முருக தாஸ் ஈ.வே.ராவையும் சைவ சமயத்தையும் ஒருங்கே அரவணைத்துக் கொண்டவர். அனேகமாக அங்குள்ள பகுத்தறிவாளர் பெரும்பாலோர் முருகனுக்கு காவடி எடுப்பவராகவும் இருப்பார்கள் என்றே நினைக்கிறேன். 'எம்மதமும் சம்மதம்'.

அவ்வாரம்ப கால எழுத்தாளர்களும் தாம் அப்போது வாழும் இடம் வாழ்க்கை பிரச்சினை பற்றி எழுதியவரில்லை. அவர்கள் எழுத்தில் விட்டு வந்த தமிழ் நாடுதான் தொடர்ந்தது. இது முனைவர் லக்ஷ்மிக்கும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. அந்தாதி என்றும் காவடிச்சிந்து என்றும் எழுதிய முன்னவர்கள் தம் முன்னிருந்த அனுபவித்த வாழ்க்கைப் பிரச்சினையை எழுதினார்கள். ஆனால், பின் வந்தவர்கள் தாம் இருக்கும் நாட்டையும் எதிர்கொள்ளும் பிரச்சினையையும் விட்டு விட்டு ஏதே பழம் கற்பனைகளில் கதை அளந்தார்கள். என்கிறார் முனைவர் லக்ஷ்மி.

இதே போல் தான் கவிதையிலும். கவிதை எழுத வந்தவர்கள் பழம் யாப்பிலேயே வாய்ப்பாடாகிவிட்ட விஷயங்களையே அரைத்த மாவையே அரைப்பவர்கள், ஆனாலும் தம்மை கம்பனென்றும் காளிதாசன் என்றும் எண்ணி மயங்குகிறவர்கள் என்கிறார்., விதி விலக்காக புதுக்கவிதை எழுதுவோரில், இளங்கோவன், கனக லதா ,இக்பால் என மூவரை மாத்திரம் லக்ஷ்மி சிறப்பாகக் குறிப்பிடுகிறார். நாம் படித்திராவிட்டாலும் அவர் கருத்துக்களில் நம்பிக்கை விழுகிறது. லக்ஷ்மியிடம் நான் காணும் மிகவாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய குணம் தயக்கம் இல்லாமல், பயமின்றி, மனதில் பட்டதை பட்டவாறே சொல்கிறார். அதிலும் விசேஷமாக எதையும் பொதுப்படையாகச் சொல்லி எந்த ஒருவரையும் புண்படுத்தாது, தப்பித்துக் கொள்ளும் நோக்கம் அவரிடம் இல்லை. எழுத்தாளர்கள் பெயர் சொல்லி, விவரம் சொல்லி, இது திருட்டு, இது பேடித்தனம்,என்று சொல்கிறார். பொதுவாக சிங்கப்பூர் எழுத்தாளர்கள் பரிசுக்காகவும், பேட்டிக்காகவும் எழுதுபவர்கள், தம்மைப் பற்றி எதுவும் வெளிப்படுத்திக்கொள்வதில்லை, மூடி மறைக்கிறார்கள் என்கிறார். உதாரணமாக ஏ.பி.ஷண்முகம் பற்றி எழுதும்போது, எழுத்துச் செம்மல் என்று பட்டம் பெற்றவர், இவரெல்லாம் ஏன் எழுதுகிறார், குழப்பம் கொண்ட கிறுக்கல்கள் இவை என்கிறார். சீதாலட்சுமி என்பவரின் கதை அபத்தமாகவும் தத்து பித்தென்று உளறுவதாகவும் இருப்பதாக கருத்து தெரிவிக்கிறார். இவ்வளவு கடுமையாக தமிழ் நாட்டில் யாரும் எது பற்றியும் எழுதி தப்பி விடமுடியாது. தனி நாடாகிவிட்ட ஒரு நகரத்தில் இருந்து

கொண்டு அதில் வாழும் ஒரு பத்து சதவிகிதம் தமிழரிடையே வாழ்ந்து கொண்டு இப்படி ஒருவர் எழுத முடிகிறது. எழுதும் தைரியம் அவருக்கு இருக்கிறது. தமிழ் நாட்டில் இதை யாரும் கற்பனை கூட செய்யமுடியாது. காய்தல் உவத்தல் இன்றி எழுதுபவர் லக்ஷ்மி என்று பின் அட்டையில் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் லக்ஷ்மி காயவேண்டியவற்றை தயக்கமின்றி காய்ந்தும், உவக்கவேண்டியதையும் அதே உணர்வுடன் உவந்தும் எழுதியுள்ளார் என்றுதான் சொல்லவேண்டும். காய்தலைக் காரணங்களோடு படித்ததும், அவர் காரணங்களோடு உவந்தவற்றை நாம் படித்திராவிட்டாலும், நம்பத்தோன்றுகிறது.

இம்மாதிரி, ஒரு நகரப் பரப்பு அளவிலேயே அவரது களம் சிறுத்து விட்டதாலும், எழுதுபவர் எல்லோரும் நன்கு தெரியப்படுவதாலும், இன்னும் ஒருவகையான ஆரம்பக் கட்டத்திலேயே நடை பயிலும் இலக்கிய படைப்புலகம் இனி வரவிருக்கும் செழுமையை எதிர்நோக்கி இருப்பதாலும், சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் என்று எந்த வடிவிலும் வெளித் தெரிந்தவர் எல்லோரையும் பற்றி குறிப்பிடவும் வேண்டியிருக்கிறது. பொய்யாக புகழ்ந்துரைக்கவும் மனமில்லை. எதிர் கால வளமையில் இங்கு பேசப்படுபவர் பெரும்பாலோர் ஒதுக்கப்பட்டிருப்பர். கனமாகப் பேசப்பட்டிருப்பவர்களும் பின்னர் அவ்வளவு விசேஷமாகத் தெரியாமலும் போகலாம். நமது பேட்டையில் இருக்கும் ரௌடி தன்னை கட்டபொம்மனாகத் தான் நினைப்பான். அவன் நமக்கு வீரன் தான். நம்ம பள்ளிக்கூட தமிழ் வாத்தியார், புலவர் தான். நம்முர் சிவாஜி கணேசன் போல உலகத்திலேயே ஒரு நடிகன் இல்லை என்று நாம் கூரை உச்சி ஏறி கத்தவில்லையா? ஆனால் நம் உலகமும் களமும் விரிய விரிய நாம் பெருமைப்படுவனவற்றின் பரிமாணங்கள் சிறுக்கும் அல்லது பெருகும். முனைவர் லக்ஷ்மியின் நிர்ப்பந்தங்கள் நமக்கு இல்லை. ஒரு விவரமும் தெரியாத நமக்குச் செய்துள்ள உதவி இப்புத்தகம். இருப்பினும் அவர் நமக்காகச் சலித்தெடுத்துத் தந்துள்ளவற்றில், நாம் இன்னமும் நெருக்கமாகப் பரிச்சயம் கொள்ள வேண்டியவர்களை மாத்திரம் குறிப்பிடலாம். இவர்கள் படைப்புகள் நமக்குக் கிடைக்கவேண்டும். ஒரு கூட்டத்தில், பீர் முகம்மது என்னும் மலேசிய எழுத்தாளர், 'நாங்கள் உங்களைத் தெரிந்து கொள்ள பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறோம். ஆனால் தமிழ் நாட்டில் நாங்கள் அலட்சியப் படுத்தப் படுகிறோம்' என்று குமுறினார். உண்மை. அவர் குமுறல் நியாயமானது.

கவிதையில் இளங்கோவன், கனக லதா, இக்பால் என்ற பெயர்கள் தெரிகின்றன. லக்ஷ்மி போலவே, தயக்கமின்றி தன் அபிப்ராயங்களைச் சொல்லும் இளங்கோவன் தான் வாழும் தமிழ்ச் சூழலை கடுமையாகச் சாடுபவர். அதன் காரணமாகவே அவர் வக்கிர உணர்வு கொண்டவர் என்று புகழ் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. ஆச்சரியப்பட வேண்டியதில்லை. ஆங்கிலத்திலும், தமிழிலும் அவர் நாடகங்கள் எழுதுபவர். கவிதைகளும் சிறுகதைகளும் கூட எழுதுகிறார் என்று தெரிகிறது. அவர் இங்கு வந்திருந்த போது, இப்படி ஒரு மனிதர்

எப்படி உருவாக முடிந்தது என்று எனக்கு திகைப்பு. லக்ஷ்மி யும் நா.கோவிந்த சாமி என்று நமக்கு ஏற்கனவே அறிமுகமாகியுள்ளவர் (கணினியின் கீபோர்டை தமிழுக்கு இயைய வடிவமைத்தவர் என்று சொல்கிறார்கள். நான் computer illiterate. எனக்குத் தெரியாது). இப்போது சிறு கதை நாவல் எழுதுபவராகவும், தமிழ் பிரக்ஞையை, இளங்கோவன் போல தாம் வாழும் காலத்துக்கு இழுத்து வர முயற்சித்தவராகவும் தனி மனித வழிபாட்டைச் சாடுபவராகவும் இப்போது அறிகிறோம். இளங்கண்ணனின் நினைவுக் கோலங்கள்' வைகறைப் பூக்கள் போன்ற நாவல்கள் பேசப்படுகின்றன. இவை சிங்கப்பூர் வாழ்க்கையை, வரலாற்றினூடே சமூக மாற்றத்தைச் சொல்வதாகச் சொல்லப்படுகிறது. பால கிருஷ்ணன் இளங்கண்ணன் ஆவதில் சிரமமில்லை. ஆனால் அவர் எழுத்து தீவிர தனித் தமிழில் எழுதுவதாகச் சொல்லப்படுகிறது. பின்னர் எப்படி அவரது எழுத்தைப் படிப்பதும் ரசிப்பதும் சாத்தியம் என்பது தெரியவில்லை. ஈ.வே.ரா அண்ணாதுரையோ, கருணாநிதியே' தனித் தமிழில் பேசியதுமில்லை. எழுதியதுமில்லை.

கடைசியாக, எஸ். எஸ் சர்மா என்னும் ஒரு பன்முக இலக்கிய வாதியைப் பற்றிச் சொல்கிறார் லக்ஷ்மி. மிகவும் சுவாரஸ்யமான மனிதராக படைப்பாளியாகத் தோன்றுகிறார். கலை அரசு என்ற பட்டம், பெற்றவர். சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தவர். 1952 லிருந்து பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தவர். வானொலியில், தொலைக்காட்சியில், நாடக மேடையில் அவர் தொடர்ந்து எழுதி நடித்து வந்துள்ளார். தன் கலைக்குழுவோடும், தன் குடும்பத்தோடும், அனேக அயல் நாடுகளுக்கு கலைப் பயணமாக, ஆன்மீகப் பயணமாக, அறிவார்த்த தேடலாக பயணம் மேற்கொண்ட அவர் தன் பயண அனுபவங்களை ஒன்பது நூல்களில் பதிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. இவரும் ஒளிவு மறைவற்றவராகத் தெரிகிறது. ஒரு சில உதாரணங்கள்:. அருமை தெரியாது கல்வெட்டுக்களை படிக்கட்டுக்களாக தமிழ் நாட்டில் கண்ட அவரது சோகம், புதிதாகக் கோயில் கள் கட்டுவதற்குப் பதிலாக பாழடைந்துள்ளவற்றை நல்ல முறையில் பாதுகாக்கலாமே என்ற ஆதங்கம், திருவோட்டின் பிறப்பிடம் ஷெய்ச்சிலஸ் என்ற புதிய ஆச்சரியம் தரும் செய்திகள். அடுத்து பேசப்படவேண்டியவர் பி.கிருஷ்ணன். 350-க்கும் மேலாக வானொலிக்கும், தொலைக்காட்சிக்கும் எழுதியுள்ளவர். முக்கியமாக ஒரு ஆவணமாக 52 வாரங்கள் தொடர்ந்து ஒலி பரப்பப் பட்ட அடுக்கு வீட்டு அண்ணா சாமி என்ற நாடகத் தொகுப்பு. இது சிங்கப்பூரின் 35 ஆண்டு கால வரலாற்றை மாற்றங்களை படம் பிடித்துள்ளதாக சொல்லப்படுகிறது. இது இதன் முக்கியமான் பரிமாணம். இன்று சிங்கப்பூர் அதன் பொருளாதார வளத்தில், Asian Tigers-ல் ஒன்றாக பெருமை பெற்றுள்ளது. அந்த சிங்கப்பூரில் மாடு வளர்த்து வாழ்க்கை நடத்திய முத்தம்மாள் பற்றி ஒரு நாவல் பேசுகிறது. ஆச்சரியமாக இருந்தது.

சிங்கப்பூரில், மலேயாவில், வாழும் தமிழர் தமிழ் நாட்டின் தமிழரை விட வாழ்க்கை வசதிகள் பெற்றவர்கள், தமிழ் அரசு மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலமாக இவர்கள் சீன, மலாய் மொழி பேசும் பெரும்பான்மை

மக்களிடையே வாழ்ந்துள்ளனர். இப்பன்மொழி மக்களிடையே இலக்கிய, கலைத் துறைகளில் பரிமாறல் ஏதும் நிகழ்கிறதா, தமிழர் அவர்களுக்கு ஏதும் கொடுத்துள்ளனரா, அவர்கள் தமிழுக்கு ஏதும் கொடுத்துள்ளனரா என்பது தெரியவில்லை. ஒருவர் சீனச் சிறுகதைத் தொகுப்பு ஒன்று தந்துள்ளார் என்று தெரிகிறது. இளங்கோவன் மலாய் மொழி அறிந்தவர் என்று தெரிகிறது. அதற்கு மேல்? அங்கும் தனித் தீவாகத்தான், பொருள் வசதிகளோடு வாழ்கிறார்களா? சீனப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டு கலாச்சாரச் சிக்கலுக்கு ஆட்பட்டு அவள் மேல் சந்தேகம் கொள்வதும், தமிழ் நாடுவந்து பெண்தேடி அவளைக் கைவிடுவதும் சில கதைகளில் பேசப்படுகிறது. பரிமாற்றம் என்பது இத்தோடு தானா? தெரியவில்லை.

முனைவர் லக்ஷ்மி, இந்நூலில் இலக்கியம் மாத்திரமல்ல, வாழ்க்கையின், மனிதர்களின் மற்ற பரிமாணங்களைப் பற்றியும் ஆங்காங்கே பேசுகிறார். நகரத்தார் பற்றி பேசாமல் இருக்கமுடியுமா? அது பற்றி ஒரு அத்தியாயமே இருக்கிறது. இப்புத்தகத்தில் நான் அறிந்து கொண்டது நிறைய. அத்தோடு நான் வியந்தது, முனைவர் லக்ஷ்மி, இளங்கோவன், நா.கோவிந்தசாமி போன்றார் எப்படி அந்த சமூகத்தில் உருவானார்கள். இங்கு தமிழ் நாட்டில் அவர்கள் என்னவாயிருப்பார்கள் என்பதும் என் திகைப்பு. ஆனால் ஒன்று எப்படி உருவானார்களோ என்னவோ, இவர்கள் தம்மை ஆக்கிரமித்துள்ள சூழலுக்கு இரையாவதில்லை. தாம் காணும் சூழலை மாற்றி அமைப்பவர்கள்.

வெங்கட் சாமிநாதன்/2.11.05
swaminathan_venkat@rediffmail.com